

தென்றல்

பொங்கல் மலர்

கலைவானில் காவிய நிலவின் உதயம்!
கற்பனை ஓவியப் புதுமை!!
கன்னியின்
சபதம்
ஜூபிடர்
&
ஏ.எல்.எஸ் புரொடக்ஷன்ஸ்
தயாரிப்பு.....
பூரண உரிமையாளர்....
ராமநாதன் பிக்சர்ஸ்
12. லலிதாபுரம் தெரு...... சென்னை 14.
SOUTHERN Arts.

குரு மருந்துகள்

80 வருடங்களுக்கு மேலாகப் பெயரும் புகழும் பெற்றவை

குரு தைலம்

மிகச் சிறந்தது

தலைவலி ஜுரம்
ஜன்னி முதலிய சகலவித
வாய்வு வலிகளுக்கும் நிகரற்றது
210-வியாதிகளுக்கு
அரசன்

டாக்டர். ஏ. மதுரம் சன்ஸ்
குரு மருந்து சாலை............ திருச்சிராப்பள்ளி

Dr. A. MATHURAM SONS

GURU MEDICAL HALL, TIRUCHIRAPALLI

பொங்கல் பொன்னாளில் எங்கள் வாழ்த்து!

எதிர்பாருங்கள்!



விபரங்களுக்கு : சேகர்ஸ் கலா தியேட்டர்ஸ்

67. ஜெக்ரியா காலனி, சென்னை 24.

ஆரணி சில்க்
பட்டுப் புடவைகள்

★

லெ. கோவிந்தசாமி அவர்களின்
நூல் தொகுப்பு

சிறந்த முறையில் உயர்ந்த ரகத்தில்

கைத்தறியில் நெய்தது.

எல்லோரும் விரும்பக் கூடியது.

நாகரிக நங்கையர் விரும்பி அணிவது!

படித்த பெண்டிர் தேர்ந்து எடுப்பது!

ஆரணி சில்க் பட்டுப் புடவைகளே !

★

தயாரிப்பாளர் :

S. S. பொம்மண்ண செட்டியார் & சன்ஸ்

திருச்சி ரோட், :: குகை, சேலம்.



ஆபரணங்களுக்கு அழகு
அளித்து மதிப்புத் தருவது

மெஜஸ்டிக் வைரங்கள்

வைரம் போல் ஜொலிக்கும் தன்மையுடையது

Prop: A. பாபு சாகிப்
பாக்டரி நம். 1. மதுரை ரோடு
திருச்சி
,, நம், 2. புது ஐரோடு
திருச்சி.

தயாரிப்பாளர் :—

மெஜஸ்டிக் டைமண்டு ஒர்க்ஸ்
பெரிய கடைவீதி—திருச்சிராப்பள்ளி
S. INDIA

போலிகள் உலாவுகின்றன.

ரிஜிஸ்டர் நெ: 2655 ★ L. No. M. D. 240

உத்தியோகஸ்தர்கள், வியாபாரிகள், நண்பர்கள் எல்லோரும் தேர்ந்தெடுத்தது.

சுந்தர விலாஸ்

சர்பத்துக்களே !

விலாசத்தைக் கவனித்து வாங்கவும். தயாரிப்பவர்: **T.M. சுந்தரவேலு பிள்ளை**, பஸ்ஸ்டாண்டு, துறையூர்.
எங்களால் தயாரிக்கப்படும் இதர தயாரிப்புகள் பல நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்ற

வசந்தா கூந்தல் தைலம்

தலையில் உண்டாகும் புளு வெட்டு, சொட்டைகளை நீக்கி மயிரை வளரச் செய்யும்.

சுந்தா விலாஸ் போட்டோ மார்க் சந்தனாதி & அரைக்கீரை விதைத் தைலம், மற்றும் ஸ்டேஷனரி சாமான்களும் பிஸ்கட் பப்பர்மெண்டு வகைகளும் சரசமாய்க் கிடைக்கும்.

மேலே கண்ட தைல வகைகள் எங்கள் சொந்தப் பார்வையில் தயாரிக்கப்பட்டது.

வெளியூர் ஸ்டாக்கிஸ்டுகள் : **A.** காசிநாதன், ஜெனரல் மேர்ச்சென்ட், மண்ணச்சநல்லூர். **K.** பொன்னுசாமி, பஸ் ஸ்டாண்டு, நாமக்கல். **P.** காளியப்ப செட்டியார், மோகனூர். **G. N.** கோபால் நாயர், காட்டுப்புத்தூர். **K.** கோவிந்தசாமி, வெள்ளாளத் தெரு, அரியலூர். **M.** கஸ்தூரி நாயுடு, பேரம்பலூர். **T. V. N.** ராஜன், தொட்டியம். **S.** சந்திரகாசன், ஷாப், முசிரி. **P.** கந்தசாமி பிள்ளை, பவுத்திரம். **N. V.** பெரியசாமி, உப்புலியபுரம். **P.** கிருஷ்ணசாமி நாயுடு, தம்மபட்டி.

ரசிக நண்பரீர்! பொங்கி மகிழ்க!

சேர, சோழ, பாண்டிய மண்டலம் — ஒரு
சேர வந்து பார்த்து மகிழ்ந்தவை!

மங்கையர் திலகம்

கள்வனின் காதலி

"1956க்கு இது ஒன்றே......"
என நீங்கள் பாராட்ட, விரைவில் வரும்

தெனாலிராமன்

★ திருச்சி—தஞ்சை ஜில்லாக்களில் ★

திருச்சி பிக்சர்ஸ்

திருச்சி

நேயர்கட்கு எங்கள் பொங்கல் வாழ்த்து!

வெற்றி முழக்கமிட்டு சுற்றிச் சுழன்றுவரும்......

குலேபகாவலி

ஜெயசிம்ஹன்

நீதிபதி

கற்றோர்க்கும் கல்லார்க்கும் களிப்பூட்ட விரைவில் வரும்......

ஆசை
மதுரை வீரன்
வெறும் பேச்சல்ல
அமர தீபம் —அனைத்தையும்

திருச்சி - தஞ்சாவூர் ஜில்லாக்களில்
—★ நாங்கள் விநியோகிக்கிறோம் ★—

ராணி பிக்சர்ஸ்

திருச்சி

வண்ணக் காவியம்

கருநிறக் கூந்தல் கண்டேன் ;
கலையெழில் ஆடல் கண்டேன் !
ஒருகரம் கூந்தல் தாங்கி !
உவப்புறக் கண்டேன் கண்டேன் ;

செந்நிற அதரம் கண்டேன் ;
சித்திர வடிவம் கண்டேன் !
இன்னொரு உருவம் அந்த
இதழ்களை மூடக் கண்டேன் !

வெண்ணிறக் கழுத்தும் கண்டேன் ;
வியப்புறும் நகைகள் கண்டேன்
அண்ணலின் கைகள் அஃதை
அணைத்திடக் கண்டேன் !

சோலையில் இயற்கை காட்டும்
சுந்தர வர்ணம் கொண்டாள்
பாலையிற் பசுமை காட்டும்
பைங்கொடி ! வாழ்க ! வாழ்க !

எழிலோவியமாக உங்கள் இல்லம் விளங்க
எங்கள் இதய பூர்வமான இன்பநாள் வாழ்த்துக்கள்

SVA TRADE MARK

PHONE : 3085.

எஸ்.வி. அம்பாள் & கோ.,

உரிமையாளர்
எஸ்.எஸ்.பி.லிங்கம்.

ஸ்பிரிட்
&
வர்ண வியாபாரம்.

319 / 322 ராசப்ப செட்டி தெரு...... சென்னை 3.

மணத்திற்கும் மனதுக்கும் தொடர்பு உண்டு! நறுமணம் நுகர்வதால் நல்ல எண்ணம் பிறக்கிறது!

— பழமொழி.

★

திரு எஸ் சந்தப்ப அய்யர் அவர்களால் 1938-ம் ஆண்டு நிறுவப்பட்ட எங்கள் கம்பெனி உலகெங்கும் புகழ் மணம் வீசுகிறது !

★

சோப்புகள் - வாசனைத் திரவியங்கள் அனைத்துக்கும் எங்கள் கம்பெனித் தயாரிப்புகள் பயன்படுகின்றன !

★

உலகறிந்ததும், தலை சிறந்ததும், தென்னாட்டு முலதனத்தில் வெளி நாட்டைக் கவர்ந்ததும்......
'சில்'லென்னும் முல்லை மணம்-சிரித்து நிற்கும் வனப்பு-மிக்கதும்.........

எங்கள் தயாரிப்புகளே !

CABLES & TELEGRAMS: 'PERFUMERY'

இதுவே எங்கள் [M / M S Co / Co] வியாபாரக் குறி

THE METTUR SANDALWOOD OIL COMPANY.

METTUR DAM :: South India

N. P. V. குருசாமி நாடார்

"ஜெயபாரத் மெட்டல்ஸ்"

22, அருளானந்தபுரம்
மல்லிகைபுரம், பாலக்கரை, திருச்சி

உயர்ந்த ரகம்! நேர்த்தியான தயாரிப்பு!!

எங்களிடம் சுத்தமான முறையில் கைதேர்ந்த ஆட்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட இந்தியா மார்க்குள்ள தற்போது எல்லோரும் விரும்புகிற மாதிரியில் ரைஸ்தட்டு, பேசன், சூப்பிளேட், டம்லர், டிபன் பாக்ஸ், இனமல் டிபன், கறிதட்டு, சிங்கில் டிபன், சப்படம், ஜாடி, அண்டிவகை அன்றாட வாழ்க்கைக்கு வேண்டிய கரண்டி, கல்சட்டி மற்றும் எல்லாவித சாமான்களும் விலை சகாயமாய்க் கிடைக்கும்,

வியாபாரிகளுக்குத் தனிச் சலுகை உண்டு.

N. B. வெளியூர் ஆர்டர்களை உடனுக்குடன் கவனித்து குறித்த காலத்தில் சுத்தமாக பேக் செய்து அனுப்பப்படும்.

வேணுகோபால கிருஷ்ணா
சுருட்டுகள்

Trade Mark

Registered

எங்கும் கிடைக்கும்

— தயாரிப்போர் —

வேணுகோபால கிருஷ்ணா
சிகார் பேக்டரி,

போன் எண். 10 தந்தி :- "CIGARS"

தபால் பெட்டி எண் 4.

ஆத்தூர் : : சேலம் ஜில்லா.

பொங்கல் வாழ்த்து

★

திராவிடர் கல்லூரி

127, ஒப்பணக்காரர் வீதி, கோவை.

(தோற்றம் 1950)

நடத்தப்படும் வகுப்புக்கள்.

1. **S. S. L. C.** (அக்டோபர், மார்ச்) 2. மெட்ரிக்
3. இன்டர் 4. **E. S. L. C.** 5. தமிழ் வித்வான்.
6. இன்டர் **D.** க்ரூப் நுழைவுத் தேர்வு.
7. டைப் ரைட்டிங்.

சென்ற S. S. L. C ரிசல்ட் 93 சதவிகிதம்.

மாணவர்களுக்குத் தனி வகுப்பு.

ஹாஸ்டல் வசதி யுண்டு.

K. V. கிரி — செக்ரடடரி

K. G. பதி B. A. — பிரின்ஸ்பால்.

கந்தசாமி வீவிங் பேக்டரி

லிமிடெட்

கொமாரபாளையம் **P. O.** ஈரோடு **R. S.**

★

— தயாரிப்புகள் —

உயர்ந்த ரக பெட்ஷீட்டுகள், ஜமக்காளங்கள்
சில்க் ரிப்பன்கள், லினன் வேஸ்டிகள், சால்வைகள்,
சர்டிங்குகள், பட்டுச் சேலைகள் முதலியவை

★

எங்கள் டிரேட்மார்க் & முருகன் பிராண்டு & கேடெக்ஸ்

தென்றல்

மலர் 2 | 14—1—56 | இதழ் 30 & 31

தென்றல் பொங்கல் மலர் உங்கள் கையிலே இருக்கிறது. ஈடுகாட்ட முடியாத எழில்மலர் இது என்று நாங்கள் பெருமைப்படவில்லை. அதுபற்றிய கருத்துரை வழங்குதல் நண்பர்களாகிய உங்கள் பொறுப்பு. ஆனால் ஒன்று ! சென்ற மலரைக் காட்டிலும் சிறப்பான முறையில் இந்த மலரை வெளியிட எண்ணி பலப்பல முயற்சிகள் எடுத்துக்கொண்டோம். அவற்றில் பெரும் பல வெற்றிகரமாக நிறைவேறின என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறோம்.

முதலில், ஒரு மலரின் வெற்றிக்கு விளம்பரமே மூல காரணம் என்பதற்காக அண்ணன் ராம சுப்பையா அவர்கள் சுமார் நாற்பதுநாட்கள், திருச்சி, சேலம், கோவை மாவட்டங்களில் சுற்றுப் பயணம் நடத்தினார்கள். அந்த வெற்றியை மலர் உங்களுக்கு அறிமுகப்படுத்துகிறது.

அடுத்து, எங்கள் வேண்டுகோளுக்கிணங்கி அறிஞர் பெருமக்கள் பலரும் கருத்துரைகள் தந்து உதவினார்கள். இது இரண்டாவது வெற்றி. அறிஞர் அண்ணா அவர்களின் அன்பு இதயமும் ஒரு சிறு செய்தியும் இதில் வடித்திருக்கிறது.

பொதுவில் நீங்கள் எதிர்பார்த்ததற்கு அதிகமாகவும் நாங்கள் எதிர்பார்த்ததற்கு ஓரளவு குறைவாகவும் இந்த மலரின் சிறப்பு அமைந்திருக்கிறது.

சென்ற ஆண்டு எட்டணா மலர் ! இந்த ஆண்டு ஒரு ரூபாய் ! அடுத்த ஆண்டு இரண்டு ரூபாய் ! ‘‘அத்திம்பேர்க’ளைத் தாண்டி, அவர்கள் மலருக்கும் பாடம் கூற ஒரு ஐந்தாண்டுத் திட்டம் ! ஏன் முடியாதா? கொஞ்சம் திமிருடனே கூறுகின்றேன் ; முடியும் !

மலருக்கு விளம்பரம் கொடுத்தோர், அட்டையை அச்சிட்டுத் தந்தோர், ஒத்துழைத்தோர் அத்தனை பேருக்கும் எங்கள்

வணக்கம் — வாழ்த்து — நன்றி !

அன்பன்

கண்ணதாசன்

ஆசிரியர், வெளியிடுவோர்.

தென்றல் வீசட்டும்! மன்றம் மலரட்டும்!

தமிழகத்துத் தனிச் சிறப்புக்களில் ஒன்றான 'தென்றல்', புயல்வேகத்தில், புரட்சி பூத்திடும் நிலையில் பணியாற்றிக்கொண்டு வரும் நமது கழக ஏடு ஒன்றினுக்குப் பெயராக அமைந்தது!

வேடிக்கை அதைவிட வேறு எதில் என்றால், இதற்கு ஆசிரியராகப் பணியாற்றும் நண்பர், பழந்தமிழ்ப் பண்பாட்டினையும் புத்துலகக் கருத்துக்களையும் ஒரு சேரக் கெடுத்துவருவன நம் நாட்டுக்கென நச்சு நினைப்பினர் கட்டிவிட்ட புராண இதிகாசங்களே என்பதை எழுச்சியுடன் எடுத்துரைக்கும் பேச்சாளர்; எழுத்தாளர்; கவிஞர்; நடிகர்; என் தம்பிமார்களில் ஒருவர்-எனினும் அவருடைய பெயரோ, கண்ணதாசன்...பொருத்தமற்றதல்லவோ என்று எண்ணுவீர்கள்.

எங்கிருந்து கிளம்பி, திராவிட இளைஞன், எங்கு செல்கிறான் என்பதை எடுத்துக்காட்டும் வகையில் உள்ளது என்பேன், அவர் பெயர் அமைந்துள்ள தன்மை பற்றி.

பெரும்புயலோ, பேரிடியோ, உற்பாதமோ என்று மாற்றார்தான் மருள்கிறார்களே தவிர, நாங்கள் செய்துவரும் பணியின் தூய்மையினையும் பயனையும் எண்ணிப்பார்த்தால், எமது பணி 'தென்றல்' என சுவைதரும் என்று செப்புவதற்கே இச்செந்தமிழ் ஏடு, 'தென்றல்' என்ற பெயரினைக்கொண்டு உலவி வருகிறது என்று கூறுவேன்;

இவை கிடக்கட்டும் - சில்லறைப் பிரச்சினைகள். நம்முன் உள்ள பெரும் பிரச்னை, பெற்ற தாய்க்கு வந்துற்ற இழிநிலையைத் துடைத்திடும் ஆற்றலை, நித்த நித்தம், பல்வேறு வகையாலும் பெற்று அளிப்பதாகும். அந்தப் பணியில் ஈடுபடும், ஏடுகளும் எழுத்தாளர்களும் தாம் பெற்றுள்ள திறனை - என்றும் தாயகத்தின் ஏற்றத்துக்குச் செலவிடும் பண்பு பெறவேண்டும்.

பிறருக்கு ஈவதற்காகவே, பாடுபடுகிறோம் என்று கூறும் உழவர்களைக் காணும் நாளல்லவா, பொங்கற் புதுநாள்.

எவ்வளவு கட்டாந்தரையாகக் கிடந்த இடத்தில், "ஏ! அப்பா! எவ்வளவு பாடுபட்டிருந்தால், செந்நெலும் மணியும் சிங்கார நறுமலர்களும், நினைத்தாலே நாவூறச் செய்யும் பல்வேறு கனிகளும் உண்டாக்கித் தந்திருக்க முடியும், உழவர் பெருமக்களால்!"

அவர்கள் வாழ்விலே ஏற்றம்பெறச் செய்வது, நமது குறிக்கோள்; எனவேதான் அவர்கட்கு நன்றி நவிலும் நன்னாளாக இப் பொன்னாளைப் போற்றுகிறோம்.

நாட்டு நலிவெலாம் ஒழித்து, புதுப்பொலிவு பெற்று, எங்நாட்டவர் காணினும், "இந்நாட்டில் நல்லன யாவும் உள்ளன; அல்லனவற்றைக் காண்பதரிதாக உளது; மக்களெல்லாம் மாண்புடன் உளர்; மனைதோறும் விழாக்கோலம்; உளமெலாம் உவகை; ஊரெல்லாம் திருநாள்-" என்று மகிழ்ந்து பாராட்டத்தக்க நிலைபெற வேண்டும் நந்தம் நாடு! அதற்கேற்ற கருப்பொருள், தாயகத்தில் ஏராளம்.

அதைப் பயன்படுத்திடும் அறிவாற்றல், நம்மிடம் நிறம்ப.

வேண்டியதெல்லாம், தெளிவான திட்டம், வகைப்படுத்தப்பட்ட உழைப்பு, வளைவுகளைக் கண்டு ஒதுங்கிவிடும் திறமை, பயணத்தின் கடுமை கண்டு தளராத உள்ளம்.

இவ்வளவும் இதற்கு மேலும் ஏற்றம்தரும் நற்கருத்துக்களைத் தருவன போலத்தான், அதோ இஞ்சியும் மஞ்சளும் நமது உயிரோவியங்களிடம் கொஞ்சுகின்றன, நமது உள்ளத்திலே உவகை பொங்குமாறு!

வாழ்க திராவிடம்! வளர்க அவர்தம் பண்பு!

தென்றல் வீசட்டும்; மன்றம் மலரட்டும்!!

அன்பன்,

அண்ணாதுரை

உண்டாட்டு

பண்டைத் தமிழகத்தில் ஒரு அரசன் மற்றொரு அரசனோடு போர் தொடுக்கவேண்டி ஏற்பட்டு, அதற்கான முடிவு எடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டால், அரசன் தன் அரசியற் சுற்றத்தாரையும், படை வீரர்களையும் கலந்து முடிவு எடுப்பது வழக்கம்.

அரசியற் சுற்றத்தார், படைத் தலைவர்கள், படை வீரர்கள் ஆகியோரை ஒன்றுகூடச் செய்வதற்கு அரசன் பெருவிருந்து ஒன்றிற்கு ஏற்பாடு செய்வான். விருந்தில் போர்வீரர்கள் மகிழும் வகையில் கள்ளும், இறைச்சியுணவும் மிகுவாகப் பரிமாறப்படும். இதற்கு **உண்டாட்டு** என்று பெயர்.

உண்டாட்டு விழா ஒன்றைப் பார்த்துவிட்டு வந்த சங்க காலப் புலவர் ஒருவர், தாம் கண்ட காட்சியையும், கேட்ட செய்தியையும் நமக்கு அறிவிக்கிறார்.

அரசன் நடுவே வீற்றிருக்க, படை வீரரும் பிறரும் புடை சூழ்ந்திருக்க முதலில் போர் முடிவு எடுக்கப்பட்டதாம். பிறகு பெரு விருந்து நடைபெற்றதாம். இறைச்சி உணவை விலாப் புடைக்க உண்டு, இனிய கள்ளை மூக்குப்பிடிக்கஅருந்திப்பெருத்த ஆரவாரம் செய்யத் தொடங்கினராம். படைத் தலைவர்கள் கள்ளுண்ட மயக்கத்திலே ஏதேதோ பேசத் தொடங்கினராம். போர் முடிந்த பிறகு அரசன் செய்யப் போகும் சிறப்புகளைப் பற்றியும் அவற்றைப் பெற்றுக் கொள்ளும் விதம்பற்றியும் பேச்சுக்கள் நிகழ்ந்ததாம். அப்பொழுது ஒரு படைத் தலைவன் கூறினனாம். ''போரில் பகைவர் எறியும் வேல்கள் பல பாய்ந்து மட்டைகளோடு நிற்கும் பனைமரம்போல் சலியாது நின்று போரிட்டு வெல்லும் படைவீரர்க்குப் பசிய பயறு விளையும் சிறூர்களை இறையிலிப் புரவாக வழங்க முன் வருவானையின் அவற்றை நான் விரும்பி ஏற்றுக்கொள்ளமாட்டேன்; நெல்லும் கரும்பும் விளையும் மருத நிலத்து ஊர்களையே நான் விரும்புவேன்'' என்று கூறினனாம். அந்தப் படைத்தலைவன் மறப் புகழையே தன் குறிக்கோளாகக் கொண்டிருந்தான் என்றும், புகழோடு வேந்தன் அளிக்கும் ஊர்களைப் பெற்றுக் கொள்ளுவதில் அவன் விருப்பமுடையவனாக இருந்தான் என்றும் அப்பரிசு பெறும்போது உயர்வான நிலங்களையே பெற விரும்பியிருந்தான் என்றும், இது அவனது உள்ளப் பெருமையைக் காட்டுவதாகும் என்றும் பார்த்து வந்த



நாவலர்

நெடுஞ்செழியன், எம். ஏ.

புலவர் நமக்கு நேரிடையாகவும் குறிப்பாகவும் அறிவிக்கிறார்.

அவர் அறிவிக்கும் விதத்தைப் பாருங்கள் :

> பெருநீர் மேவற் றண்ணடை யெருமை
> இருமருப் புறமு நெடுமா னெற்றின்
> பைம்பய றுதிர்த்த கோதின் கோலணைக்
> கன்றுடை மரையாத் துஞ்சுஞ் சீறூர்க்
> கோளிவண் வேண்டேம் புரவே நாரரி
> நனைமுதிர் சாடி நறவின் வாழ்த்தித்
> துறைநணி கெழீஇக் கம்பு ளீனும்
> தண்ணடை பெறுதலு முரித்தே
> வைந்நுதி
> நெடுவேல் பாய்ந்த மார்பின்
> மடல்வன் போந்தையி னிற்கு மோர்க்கே.

(புறநானூறு-297)

[**பொழிப்புரை:** மிகுதியான நீரிலே இருக்க விரும்பும், மருத நிலத்து ஊர்களில் வாழும் தண்ணிய நடையினையுடைய எருமையின்பெரிய கொம்பைப்போலும், நெடிய முற்றிய நெற்றுக்களையுடைய பசிய பயற்றின் பயிறு நீக்கப்பட்ட கோதுகளின் திரட்சியைப் படுக்கையாகக்கொண்டு கன்றையுடைய காராம்பசு கிடக்கும் சிறிய முல்லை நிலத்து ஊர்களைப் புரவாகக் கொள்வதை இவ்விடத்து வேண்டேம்; நாரால் வடிக்கப்பட்டுப் பூக்களையிட்டு முதிர்வித்த சாடியிலுள்ள கள்ளை வாழ்த்தி, நீர்த்துறையிலிருக்கும் புதர்களைப் பொருத்திக் கம்புட் கோழி முட்டைகளை ஈனும் மருத நிலத்து ஊர்களைப் பெற்றால் பெறுவது உரியதாம்; மிகக்கூரிய நெடியவேல் தைத்து நிற்கும் மார்புடனே மடல் நிறைந்த வலிய பனைமரம்போல் நிற்கும் போர் வீரர்க்கு]

இந்த அழகிய செய்யுளை இயற்றிய புலவர் யார் என்று அறியக் கூடவில்லை. உண்டாட்டில் கலந்துகொண்ட மறவரின் மனப்பான்மையைப் புலவர் அழகுபட எடுத்துக் கூறுகிறார். ''உள்ளுவதெல்லாம் உயர் உள்ளல்'' என்பதற்கேற்ப அம்மறவன் தன் புகழுக்கேற்றபெருமை வேண்டி நிற்கிறான். அவனது உள்ளப் பெருமையை வியந்து கூறுவதையே புலவர் இச்செய்யுளில் சிறப்பாகக் கொண்டுள்ளார்.

பயற்றின் நெற்றுக்கு எருமையின் கொம்பையும், பல வேர்களை உடலில் தாங்கி நிற்கும் வீரனுக்கு, மடல்களை விரித்து நிற்கும் பனைமரத்தையும் உவமைகளாக்கியிருப்பது நினைந்து மகிழத்தக்கதாகும்.

கள்ளை நாரால் வடித்தலும், அதனோடு பூக்களைச் சேர்த்தலும் அதனைச் சாடியிலிட்டு வைத்தலும் ஆன பழக்கங்கள் இச்செய்யுளில் கூறப்பட்டுள்ளன.

புரவு - இறையிலி - முற்றூட்டு என்பன பண்டை அரசர்கள் சிறந்தவர்க்கு அளிக்கும் நன்கொடைகளாகும். புரவு என்பது விளைநிலம். இதற்கு அரச வரி உண்டேயொழிய நிலவரி என்பது இல்லை. இறையிலி என்றால் அரச வரியும் நிலவரியும் இல்லாமல் விடப்பட்ட நிலங்கள் என்று பொருள். முற்றூட்டு என்றால் அரசவரி, நிலவரி, பாடிக்காவல் வரி முதலியன இன்றி வழங்கப்படும் நிலம் என்று பொருள். முற்றூட்டு என்பது பண்டைக் காலத்தில் கற்றுவல்ல நல்லிசைச் சான்றோர்க்கே அளிக்கப்பட்டு வந்தது. ★

பொங்கல் வாழ்த்தினர்

நீள்மலை உச்சி குன்றுகள் சாரல்
நிலவிய மழைகுளிர் ஓட்டித்

தோளினைக் குலுக்கி வந்தது பரிதி
குளிர்மலைக் குறத்தியர் சொந்த

ஆளனைக் கண்ட அரிவையர் போல
ஆடினர்; மயிலினம் ஆடும்!



தோளரி குறவர் தேனடை பிழிந்து
கொடுத்தனர்; வாழ்த்தினர் பொங்கல்!

கண்நுழை யாத காடுகள் ஓடை
கருகிய முட்புதர் பூக்க

விண்ணிடை இன்று வந்தது பரிதி!
வேய்ங்குழல் இசைத்தனர் ஆயர்

வெண்ணெயைக் கடையும் ஆய்ச்சியர் கூந்தல்
மெய்யெலாம் புதுமெரு கேறும்

பண்ணொடு பொங்கல்! பாலிதம் நெய்மோர்
பகிர்ந்தனர்; வாழ்த்தினர் பொங்கல்!

இருள்மழை போக்கி எரிகதிர் தேக்கி
மலர்மிசை எழுந்தது பரிதி!

அரும்புகள் அலர்ந்தன; அடுப்பெலாம் பொங்கல்!
ஆடலும் பாடலும் கேட்கும்!

கரும்புகள் ஒடித்துக் கன்றுகள் அடித்துக்
களித்திடும் சிறுவரின் கண்ணில்

பெருகிடும் இன்பப் பொங்கலோ! பொங்கல்!
பிறர்நிலை கூறிடப் போமோ!

அலைகடல் தோய்ந்த இருட்பகை ஓட்டி
அழகுவான் எழுந்தது பரிதி

இலைபடர் புன்னை, தாழையும், தெங்கும்,
இடிகரைப் பெருமணல் மேடும்,

வலைபடர் முன்றில் சிறுகுடி நெய்தல்
மங்கையர் நீள்விழி எங்கும்

விலைபிட ஒண்ணு மகிழ்ச்சியின் கூத்தாம்!
வெளியெலாம் பொங்கலின் வாழ்த்தே!!

கவிஞர் வாணிதாசன்

ஒருலகில் தமிழன்

– பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரை M.A., L.T.

நாகரிகமற்ற மனிதன் தனி வாழ்வு வாழ்ந்தான். குறுகிய தன்னலம், சூழ்ச்சி அவன் பண்பாய் இருந்தது. அவன் வாழ்வு குடுவை வாழ்வு. இந்நிலையிலிருந்து குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு அவனை மீட்டது. குடி, ஊர், நாடு, நகர், பட்டினம், உலகம் என அவன் வாழ்வு விரிவடைந்தது. அவன் அறிவும் விரிவடைந்தது. பண்பும் உயர்வடைந்தது. அவன் பரவை வாழ்வு வாழத் தொடங்கினான். ஒருவகை நோக்கி வளரத் தலைப்பட்டான். வளர்ந்து வருகிறான்.

குடிவாழ்வில் தற்பண்பு உண்டு. பரவை வாழ்வில் ஒப்புரவு உண்டு. முன்னது பண்பாடு. பின்னது நாகரிகம். இரண்டும் சேர்ந்ததே பண்பாடுடைய நாகரிகம் அல்லது உயிர் நாகரிகம். ஒருவகை நோக்கி மனிதனை வளர்ப்பது அதுவே. நாகரிகமில்லாத தற்பண்பு வாழ்வு குடுவை வாழ்வாகும். தற்பண்பில்லாத நாகரிக வாழ்வு மிதவை வாழ்வாகும். அது உயிரற்ற நாகரிகம். நாகரிகம் வளர்க்காது. ஒருவகை நோக்கி வளராது.

குடும்ப வாழ்வில் தமிழன் வளர்த்த இல்லறம் போன்ற சிறந்த அறம் வேறெங்கும் கிடையாது. அவன் வகுத்த மக்களாட்சிக்கு அவன் கொடுத்த 'குடியாட்சி' என்ற பெயர் இதற்குச் சான்று. இதற்குரிய மேலை நாட்டுச் சொல்லும் (**Democracy**) சமஸ்கிருதச் சொல்லும் (ஜன நாயகம்) இதே வேர்ப்பொருள் சுட்டாதது குறிப்பிடத்தக்கது. அவன் ஊர், நாடு வகுத்தான். குடியாட்சியின் பகுதிகளுக்கு அவன் கொடுத்த பெயர்கள் இதை விளக்கும். அவை ஊராண்மை, நாட்டாண்மை என்பன. நாடு கடந்து அவன் நகர் கண்டான். அது நாட்டுக்கு ஒற்றுமை தந்தது. நாட்டு நாகரிகம் வளர்த்தது. நாகரிகம் என்ற பெயர் இதனைக் குறிக்கும். இத்துடன் அவன் அமையவில்லை. வெளி நாட்டுப் பரவைத் தொடர்பு தரும் துறைமுக நகர வாழ்வு அவன் உலக நோக்கை வளர்த்தது. துறைமுக நகரத்துக்குப் பட்டினம் என்ற பெயர் இன்றளவும் தமிழ் ஒன்றில்தான் உண்டு. மயிலைப் பட்டினத்தில் வாழ்ந்த ஒரு திருவள்ளுவர்தான் சாவா முழுமுதல் உலக நோக்கைத் தமிழனுக்கும் தமிழன் மூலம் உலகுக்கும் பண்டு அளித்தார். அணிமைக் காலத்தில் கூட தற்பற்று முற்றத் துறந்தும் தாய்ப்பற்றும் உலகப் பற்றும் துறவாத பட்டினத்தடிகள் நாகைப்பட்டினத்திலேயே வாழ்ந்து உலக அறம் கண்டார்.

கலைவானின் ஜோதி மின்னல்

விலை அணா 2

தென்றல்-திரை

ஆசிரியர்: ஜி. நாகராஜன்

1, 15 தேதிகளில் வெளிவரும்

★ பாடகர் வரிசை — புதிய அம்சம்
★ விட்டில் நடிகர்கள் படங்களுடன் — சுவை தரும் பேட்டி
★ பார்த்தோம், பட்டது, சொல்கிறோம் — விமர்சனம்
★ மின்மினிப் பூச்சிகள் — உதய தாரகைகளின் எதிர் காலம்

இன்னும் பல உண்டு

தென்றல்-திரை ★ சென்னை-6.

தமிழ் வாழ்வு தமிழகம் கடந்து தென்னாட்டிலும், தென்னாடு கடந்து இந்தியாவிலும், இந்தியா கடந்து உலகிலும் வரலாறு காணாக் காலத்திலேயே பரந்ததுண்டு. இதற்குச் சான்றுகள் பல காட்டலாம். பட்டினம் என்ற சொல், கடற்கரைத் துறைமுக நகரத்தின் பெயர்களாகத் தமிழகத்தில் மட்டுமன்றி, இந்தியா முழுவதும் இருப்பதே இதற்கு ஒரு விளக்கம் ஆகும். கிழ் கடற்கரையில் குலசேகரன் பட்டினம், காயல் பட்டினம், நாகபட்டினம், சென்னைப் பட்டினம், சதுரங்கப் பட்டினம் ஆகியவை தமிழகத்தில் உள்ளன. மசூலிபட்டினம், விசாகபட்டினம் ஆந்திரத்தில் உள்ளன. கங்கைக் கரையில் பாட்னா உண்மையில்பட்டினமே. மேல் கடற்கரையில் சோமநாதபுரத்தின் பழம் பெயர் பட்டினம் என்றே காணப்படுகிறது.

பண்டைத் தமிழர் உலகளாவிய கடல் வாணிகக் களமாக நிலவிய பல துறைமுகப் பட்டினங்களில் காவிரிப்பூம்பட்டினம் ஒன்று. இன்றைய பாண்டிச்சேரி அல்லது புதுச்சேரி பண்டு பொதுவு அல்லது எயிற் பட்டினம் என்று வழங்கிற்று. இன்றைய மகாபலிபுரம் அல்லது மாமல்லபுரம் மல்லைப்பட்டினம் என இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் விளங்கிற்று. வஞ்சி, முசிறி என்ற மேல்கரைப்பட்டினங்களிலும் காவிரிப்பூம்பட்டினத்திலும் எயிற் பட்டினத்திலும் கிரேக்க ரோமர் குடியிருப்புக்கள் இருந்து தமிழர் வாழ்வின் பொங்கலுடன் பொங்கின. நாகையில் சோழப் பேரரசர் ஆட்சிக்காலம் வரை சீனர் குடியிருப்புக்கள் இருந்தன. கடாரம் அல்லது மலாய் நாட்டுப் பேரரசாண்ட பேரரசரும் சீனப் பேரரசரும் அதில் புத்த கோயில்கள் எழுப்பி அவற்றுக்கு மானியம் விட்டிருந்தனர். அக்கோயிலிலுள்ள புத்தர் பொற்சிலை உலகப் புகழ் பெற்றது. தமிழ்ப் பட்டயங்களிலும் இலக்கியங்களிலும் குறிக்கப்பட்டுள்ளது.



இன்று இலண்டன் மாநகர்க் கண்காட்சியில் வைக்கப்பட்டிருக்கும் இலெய்டன் பட்டயங்கள் இதற்குச் சான்று பகர்கின்றன.

தமிழர் விழாவில் தழைக்கும் பண்புகள்

பொங்கல் தமிழ் விழா. தமிழர் விழா. போலிப் பழமைக்கு ஆட்பட்ட தமிழன் குடுவை வாழ்வை விட்டுப் பரவை வாழ்வின் உலக நோக்கைக் கொள்ளத் தூண்டுதலளிக்கவேண்டும் விழா அது. அதே சமயம் அது போலிப் புதுமையில் மிதந்தாடும் மிதவல் வாழ்க்கையைத் தமிழன் தமிழகத்தின் வேர்ப்பண்புணர்ந்து, தமிழ், தமிழர், தமிழினம், தமிழ்ப் பண்பு அடிப்படையாக ஒருலகில் இடம் பெறத் தூண்ட வேண்டும் விழாவும் அதுவே.

உலகின் மிகப் பழமையான இயற்கை விழாக்களுள் பொங்கல் விழா ஒன்று. அது உழவர் விழா. உழவின் எல்லாப் படி வளர்ச்சிகளையும் அது காட்டுகிறது. நெற்பயிர் தமிழர் நாகரிகத்துக்கும் சீன நாகரிகத்துக்கும் அடிப்படை. அரிசிப் பொங்கல் இதைக் குறிக்கிறது. கரும்பு சீனத்துக்கும் தமிழகத்துக்கும் தனி யுரிமையுடைய வேளாண்மைச் செல்வம். கரும்பிலிருந்து சருக்கரை ஆக்கிய முதலினம் தமிழினமே. தமிழன் கண்ட சருக்கரை, இன்று உலகெங்கும் தமிழ்ப் பெயருடனேயே வழங்கி எல்லா இனத்தவர் நாவுக்கும் இனிப்பூட்டுகிறது. சருக்கரைப் பொங்கல் இதைச் சுட்டுவது.

மேய்ச்சல்நில வாழ்வு அல்லதுமுல்லை நில வாழ்வில் மனிதன் எடுத்துப் பழக்கிய முதல் விலங்குகள் ஆடும் மாடுமே. இதுபோலப் புல் வெளிப்பாலை, மணற்பாலை, முட்புதர்ப்பாலை ஆகியவற்றில் மனிதன் எடுத்துப் பழக்கிய விலங்குகளே குதிரை, ஒட்டகை முதலியன. மலையாளக் கரை, பர்மா, இலங்கை, மலாயா போன்ற குறிஞ்சியும் முல்லையும் கலந்த நாடுகளில் மனிதன் பழக்கிய விலங்கே யானை. இவற்றுள் ஆட்டையும் குதிரையையும் பழக்கியவர் வடமேற்காசியப் புல்வெளியில்பண்டுவாழ்ந்தஆரியர்களே. குதிரையும் ஒட்டகையும் பழக்கியவர் அராபியர். மாடு அல்லது ஆவினத்தைப் பழக்கியவரும் யானையைப் பழக்கியவரும் இந்தியாவில் வாழ்ந்த தமிழினத்தவர்களே. எகிப்தியர் போன்ற பண்டை நாகரிக மக்கள் வழங்கிய பசு இன்றைய வெளியுலகப் பசுவன்று, தமிழினப் பசுவே என்பதை இந்தியப்பசுக்களுக்கு மட்டுமே உரிய சிறப்புப் பண்பான கூன் அல்லது திமில் எடுத்துக் காட்டுகிறது.

பால் பொங்கல் தமிழன் ஆவின் செல்வத்தை வளர்த்து முன்னேறிய முன்னேற்றப் படியைக் காட்டுகிறது.

பழங்களுக்குத் தமிழில் கனி என்றும் பழம் என்றும் இரண்டு பெயர்கள் உண்டு. பழத்தைத் தெலுங்கர் 'பண்டு' என்பர். கனி, இயற்கை மனிதனுக்குத் தருவது. பழம், மனிதன் பழக்கி ஆக்குவது. முன்னதற்குக் கொட்டை இருக்கும். சுவை சிறிதாயிருக்கும். எட்டாக்கொம்பில் வளரும். பலவற்றில் முள்

மிகுதி இருக்கும். மனிதன் அவற்றைப் பழக்கிப் பண்படுத்தினான். கொட்டை நீக்கினான். அல்லது சிறுகவைத்தான். சுவை பெருக்கினான். கொம்பின் உயரம் குறைத்தான். முள் நீக்கினான். அல்லது குறைத்தான். இவ்வகையில் மேலையுலகம் படைத்த பழங்கள் ஆரஞ்சும் ஆப்பிளும். தமிழன் படைத்த பழங்கள் மா, கதலி, பலா. இவற்றையே அவன் முப்பழம் என்றான். மூன்றுக்கும் இயற்கை தந்த இயற்கைக் குணங்களும் உண்டு. தமிழன் கொடுத்த தீந்தமிழ்ப் பண்பும் உண்டு. கதலியில் அவன் ஒட்டை நீக்கினான். காட்டுக் கதலி அல்லது கல்வாழை இதைச் சுட்டிக் காட்டுகிறது. பலாவில் முள் நீக்கினான். சுவையூட்டினான். மலைப்பலாவென்றும் இமைப்பலாவென்றும் ஈரப்பலாவென்றும் வழங்கும் இயற்கைப் பலாக்கள் இதைக் குறித்துக் காட்டுகின்றன. மாவில் கொட்டை சிறுத்துச் சுவை பெருக்கப் பெற்ற மாவே தேமா. ஏனையது புளிமா. காட்டிலந்தையில் மாவின் சுவையேற்றி இடைக்காலத்தில் தமிழன் ஆக்கிய கனியே முந்திரி. இது இன்றும் தென் தமிழகத்தில் 'கொல்லா மா' என்று குறிக்கப்படுகிறது. மலை நாட்டில் அதற்கு வழங்கிய 'காசுக் கொட்டை' என்ற அதன் பெயரே அதன் இன்றைய ஆங்கிலப் பெயர்(**Cashunut**) ஆயிற்று.

தமிழகம் உட்பட இன்று உலகம் வழங்கும் மா, பலா, கதலி வேறு. தமிழன் வளர்த்த பண்புடை முப்பழம் வேறு. தான் வளர்த்துப் பழக்கிப் பேணியவற்றையே தமிழன் தேமா, தேம்பலா, தேங்கதலி என அழைத்தான். இந்த அடை தமிழிலக்கியத்தில் வேறெப்பழத்துக்கும் கிடையாது.

தமிழன் தொழிலில் முன்னேறியபோது உற்றுக் கவனித்துப் பயன்படுத்திய பொருள்களில் ஒன்று தேன். கனிச்சாற்றுடன் போட்டியிடும் அதன் இனிமையை அவன் கண்டு வியந்தான். கனிச்சாறு கெடும். தேன் கெடாது. தேனிலூறிய கனியும் உப்பில் ஊறிய காய்போல் கெடுவதில்லை. புளிக்காடியிலும் இப்பண்பு உண்டு. தமிழன் இவற்றின் பண்பைக் கனிகளுக்கு ஊட்டி, பழங்களுக்கு ஊட்டித் தேம்பழங்கள் உண்டு பண்ணினான். **வெட்டி வைத்தாலும், ஈ எறும்பு மொய்த்தாலும் கெடாத பழங்கள் அவை.** இவற்றையே தமிழன் தேமா,தேங்கதலி, தேம்பலா என்றான். இன்னும் இவை தமிழகத்தில் உண்டு. ஆனால் தமிழ்ப் பண்பின் உயர்வேபோல தமிழனும் முற்றிலும் அறியாது, உலகமும் ஒரு சிறிதும் காணாமல், அது தமிழகத்தில் மட்டும் காட்டுப் பயிராக மேற்குமலைத் தொடருக்கு அருகாமையில், குமரி முனையின் அருகில் தமுறிக் கிடக்கின்றன. அவற்றில் பண்பறிந்து மீட்டும் உலகுக்களிக்கப் புத்தார்வத் தமிழர் இனித்தான் முன் வரவேண்டும்!

தமிழர் இன்று தமிழகத்தில் மட்டுமன்றி, தென்னுலகெங்கும் பரந்துள்ளனர். அவர்கள் இன்று ஆள்பவராக இல்லை. ஆனால் இன்னும் ஆக்குபவரக, பயிர் வளம், தொழில் வளம், வாணிக வளம், வளர்ப்பவராகவே உள்ளனர் தென்னுலகிலிருந்து கீழுலகிலிருந்து மீட்டும் 'சமனொளி' பரப்பும் கடப்பாடுடையவர் அவர்களே. உலக நடுவிடமான இலங்கையின் உச்சிமலைக்குத் தமிழர் 'சமனொளி' என்று இதனாலேயே பெயர் கொடுத்தனர் என்னலாம்.

சாயா முழு நிறை ஒருலகைத் தமிழன் வகுக்க, அதில் தனக்கும் ஒரு இடம் பெறத் தமிழன் அவாவும் அவாவித் திட்டமிடும் புத்தாண்டு நாளாக இலங்குக பொங்கல் புதுநாள்! வள்ளுவர் வாழ்வு மீண்டும் வளம்பெற வேண்டும் நாளாக மலர்க புது வாழ்வு. ★

அன்பளிப்பு !

இன்று புகழ்பெற்று விளங்கும் அரசியல் தலைவர் ஒருவருக்கு, இருபதாண்டுகளுக்கு முன்பு மோட்டார் சைக்கிள் ஓட்ட வேண்டுமென்று ஆசை ஏற்பட்டது. பழக ஆரம்பித்து ஓரளவு ஓட்டவும் செய்தார். ஒருநாள் அவர் மோட்டார் சைக்கிளில் ஊரைத் தாண்டி நான்கு மைல் தூரம் போய் விட்டார். திடீரென்று மோட்டார் சைக்கிளில் ஏதோ கோளாறு ஏற்பட்டுவிட்டது. எவ்வளவு முயன்றும் ஓட்டிச் சென்ற தலைவருக்கு அதைச் சரிப்படுத்த முடியவில்லை. இருட்டாகிவிட்டபடியால், மோட்டார் சைக்கிளை அந்த இடத்திலேயே போட்டுவிட்டு, வீட்டுக்கு வந்து வேறொரு நண்பரிடம் செய்தியைச் சொன்னார். நண்பர் விரைந்து சென்று மோட்டார் சைக்கிளை எடுத்து வந்தார். தலைவர் விளையாட்டுக்குச் சொல்வதைப்போல, "அதை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள்" என்றார். அந்த நண்பர் முதலில் நம்பவில்லை. தலைவர் மீண்டும் வலியுறுத்தினார். அதன் பிறகுதான் அந்த நண்பர் தலைவர் உண்மையாகத்தான் சொல்கிறார் என்று தெரிந்துகொண்டார்.

மோட்டார் சைக்கிளை அன்பளிப்பாகத் தந்த அந்தத் தலைவர் யார்தெரியுமா?

நம் அறிஞர் அண்ணா அவர்கள்தான்.

புவனமுழுதுடையாள்
Anand

கண்ணதாசன்

முன்னுரை

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்து ஆராய்ச்சித்துறை விரிவுரையாளர், திரு. டி. வி சதாசிவப் பண்டாரத்தார் அவர்களின் ‘பிற்காலச் சோழர் சரித்திர’த்தைப் படித்துக் கொண்டே வந்தேன். அதன் இரணடாம் பகுதியில் மூன்றாம் குலோத்துங்கனைப் பற்றிப் படிக்கும்போது, ஆசிரியர், எடுத்துக்காட்டியிருந்த, மெய்க்கீர்த்தியின் ஒரு பகுதி என் கருத்தைக் கவர்ந்தது.

....

சக்கரமுஞ் செங் கோலுந்
திக்கனைத்துஞ் செல்லக்
கற்பகாலம் புவிகாப்பப்
பொற்பமைந்த மூடிசூடி
விக்ரம பாண்டியன்
வேண்ட விட்ட தண்டால்
வீர பாண்டியன் மகன்
படஏழகம் படமறப்
படைபடச் சிங்களப்
படைமூக் கறுப்புண்டு
அலைகடல் புகவீர
பாண்டியனை முதுகிடும் படிதாக்கி
மதுரையும் அரசுங்கொண்டு
ஐயஸ்தம்பம் நட்டு
அம் மதுரையும் அரசும் நாடும்
அடைந்த பாண்டியர்க்
களித்தருளி
மெய்ம் மலர்ந்த
வீரக்கொடியுடன்
தியாகக் கொடி எடுத்துச்
செம்பொன் வீர சிங்காதனத்துப்
‘புவன முழுதுடையா’ளோடும்
வீற்றிருந் தருளிய
கோப்பர கேசரி வர்மரான
திரிபுவனச் சக்கரவர்த்திகள்
ஸ்ரீ குலோத்துங்க சோழ
தேவர்க்குயாண்டு :—

—இந்த மெய்க்கீர்த்தி, ஒரு நாடகத்துக்கு உதவுவதாக எனக்குத் தோன்றிற்று. சாதாரணமாக சரித்திர நாடகம் என்கிற பெயரில் எழுதப்படும் எதுவுமே, பாதி சரித்திரமும் பாதிக் கற்பனையுமாகத்தான் இயங்குவது வழக்கம். “அதைப் பிடித்தான்; இதைப் பிடித்தான்- மணம் முடித்தான்; மாண்டான்” என்று ஒரே சக்கரத்தில் சுழலும் வரட்டுச் சரித்திரம், தானே தனிக் கதையாய், நாடகமாய் இயங்க முடியாது. ஆகவே, கற்பனைக் கலப்பின்றி சரித்திர நாடகத்தில் சுவை பிறக்க வழியே இல்லை. மேற்கண்ட மெய்க்கீர்த்தியில் எனக்குக்கிடைத்த வரலாற்றுப் பிடிப்பெல்லாம், அம்பிகாபதி கதையில் சம்பந்தப்படுத்தப்படும் குலோத்துங்கன், குமரனாக இருந்தபோது நடந்ததாக ஒரு செய்தியை எழுதுவதற்கு, அவனது மனைவியின் பெயர் கிடைத்ததுதான். சாதாரணமாக, சோழன் மனைவி சோழமாதேவி, சேரன் மனைவி சேரமா தேவி, பாண்டியன் மனைவி பாண்டிமாதேவி எனறே போய்விட விரும்பும் சரித்திர நாடக ஆசிரியனுக்கு, அசற் பெயரும் கிடைத்துவிட்டால் வழக்கமாகப் பிறக்கும் மகிழ்ச்சி எனக்கும் பிறந்தது-நிற்க.

குலோத்துங்கனின் மனையாளான புவனமுழுதுடையாள், யார் மகள் என்பதற்கு வரலாற்றில் பிடிப்பில்லை. ஆனால், சமகாலத்தில் மதுரையை ஆண்டதாகக் கூறப்படும் பராக்கிரம பாண்டியனின் குமாரியை, குலோத்துங்கன் மணந்ததாகவும், அப்போது தரப்பட்ட சீதனப் ‘பொருள்’களில் புகழேந்திப் புலவன் ஒருவன் எனவும் வழககில் ஒரு செய்தி இருக்கிறது. அந்த மங்கைதான் புவனமுழுதுடையாளா என்பதற்கும் சரியான சான்று இல்லை. எனினும் வழக்குச் செய்திக்கும் வரலாற்றுக்கும் முடிபோட்டு, வீரபாண்டியன் மகளே புவனமுழுதுடையாள் என நான் நடக்கிறேன். “இது வரலாறல்ல” எனச் சாதிக்க விழைவார், கற்பனை என்றே கொள்ளலாம்! மெய்க்கீர்த்தியில, “மதுரையும் அரசுங்கொண்டு...அம் மதுரையும் அரசும் நாடும், அடைந்த பாண்டியர்க்களித்தருளி” என வருவது, எனது கற்பனைக்குக்கூடநல்ல வரலாற்றுத் தொடர்பூட்ட நியாயம் உண்டு.

தமிழ்ப்புலவர் அ நடராச பிள்ளை அவர்கள் எழுதிய புகழேந்தி நாடகத்தில், பராக்கிரமன் மகளும் குலோத்துங்கன் மனையாளுமாகிய மங்கை கற்பகவல்லி எனக் குறிக்கப் பெறுகிறாள். இவளும் கற்பனை வல்லியாகவே இருக்கலாம்! ஆகவே. இந்த நாடகத்துச் செய்திகளில் எதனையும் வரலாறு என்று ஆணியடிக்காமல், வரலாற்றுத் தொடர்புடைய கற்பனை என்றே சொல்லி வைக்கிறேன், ஆம்-இது கற்பனைதான்!

காட்சி : 1

இடம் : மதுரை அரண்மனை.

நேரம் : மாலை.

[அரண்மனைக்குள் அமைதியின்றி உலாவிக்கொண்டிருக்கிறான் வீரபாண்டியன. அவன் குமாரி புவனமுழுதுடையாளும் தோழி பைங்கிளியும அருகே இருக்கின்றனர். ஒரு வீரன் வேகமாக வருகிறான்.]

வீரன் : (பணிந்து) மீனக்கொடி வாழ்க! மனனவ! ஈழத்து முதல் அணியைப பிளநதுவிடடது சோழர் படை!

பாண் : எங்கு நிற்கிறது இப்போது?

வீரன் : இரண்டாவது அணியை நோக்கி வருகிறது. சேரர்படையும் நமது படையும ஒருங்குகூடி நிற்கின்றன இரண்டாவது அணியிலே.

பாண் : நன்று! படைகளுக்கு உணர்ச்சியூட்டச் சொல்!

[மற்றொரு வீரன் வருகிறான்.]

வீரன்-2 : மன்னவர் வாழ்க! இரண்டாவது அணியையும் பிளந்துவிட்டது சோழபபடை! எல்லையை நோக்கிப் பாய்கிறது!

பாண் : தளபதி கரியங்கண்ணர்...?

வீரன்-2 : எல்லையில் நிற்கிறார். எல்லையணியைப் பிளகக எவராலும் முடியாது!

பாண் : நல்லது விரைந்து செல்லுங்கள! தெரிந்து வாருங்கள

[பெரும் முரசு முழக்கம் கேட்கிறது. கொம்புகள் - வாத்திய ஒலிகள்! சாளரத்து அருகே நின்று பார்க்கிறான்வீரபாண்டியன் தோழி பைங்கிளி மெதுவாக புவனமுழுதுடையாளின் தோளைத்தட்டி அந்தப் புரத்திற்கு அழைத்துச் செல்கிறாள்.]

காட்சி : 2

இடம் : அந்தப்புரம்.

நேரம் : மாலை.

[அந்தப்புரத்திற்கு வந்ததும் பைங்கிளி புவனமுழுதுடையாளைப் பார்த்து]

பைங் : வந்துவிடுவார் குமார குலோத்துங்கர்.

புவன : (சோகமாக) வாழ்த்துப் பாடி வரவேற்கவா?

பைங் : வேறென்ன! காணாமலே காதல்கொண்டு கருகிறாய்! ஓவியமாய்த் தீட்டித் தீட்டி உருகிறாய்! உள்ளத்திருந்து உணர்ச்சிக்கு விருந்தளித்த தெள்ளு தமிழ்ச் செல்வர் கண்நிறைய வருகிறார்..கதவைத்திற...காற்று வரவிடு...பதம்பாடு...

புவ : வாயை மூடு! பறிபடப் போகிறது, பாண்டியன் முடி; பதம்பாடச் சொல்கிறாய் பாண்டிய குமாரியை! வழக்கங் கெட்டவளே! விழுந்த மலரைக் கொழுந்தை அணைத்துவிரைந்து செல்லும் காவேரி அருகே விருந்துண்ண நினைத்தாள் மீனவன் குலக்கொடி...ஆனால்..வளத்தைக் குலத்தை வளர்த்த வைகையின் மருங்கே பறக்கிறது சோழன் புலிக்கொடி! எண்ணியதில்லை, இதனை! என் இதயத்தைப் பிளக்கிறது, வேதனை! ஆர்கொண்ட சோழன், வேப்பந்தார் கொள்ளப்போகிறான்! பாண்டியன் பேர் சொல்லும் பாவைக்கு இப்போதென்ன தேவை! மானமிகு மறக்குலத்தின் மாண்பு!......ஆம்! கூடல்நகர் முழுதும் சோழன் கொடி பறக்கலாம்! ஆனால், நான் குடியிருக்கும் அந்தப்புரம் வாள்கொண்டு எதிர்க்கும்!

பைங் : புவனா! எண்ணிப் பேசு! வருபவர், காதலர்!

புவ : காதலர்......புவனமுழுதுடையாளுக்கு! பகைவர்...பாண்டிய குமாரிக்கு! அரசுகட்டுக்கு ஆபத்து! அதிலே புவனமுழுதுடையாளின் சொந்த எண்ணங்களுக்கு இடமில்லை. இப்போது நான் பாண்டியகுமாரி!

பைங் : நாடே பறிபோகும்போது, உன் வாளும் வலிமையும் மான உணர்ச்சியும் எதைக் காக்கும்?

புவ : எங்கள் மரியாதையைக் காக்கும்! மறவர்குடியில் அணுத்தோறும் தேங்கி நிற்கும் வீரத்தைக் காக்கும்!

பைங் : செல்லா இடத்துச் சினந்தீது!

புவ : பொல்லா இடத்துச் சரண்தீது!

பைங் : முடிவு நன்றாயிருக்காது!

புவ : இருக்காது! தெரியும்! ஆனால், வரலாறு வாழ்த்துப் பாடும்!

['வாழிய சோழமண்டலம்' என ஓர் குரல் கேட்கிறது. இருவரும் திரும்பிப் பார்க்க புகழேந்தி வருதல்]

புக : வாழிய மீனவன் செல்வி!

புவ : வாருங்கள் அண்ணா!

புக ; வாட்டம் தெரிகிறது...புவனா! நீந்தத் தெரியாத புலி மீனைப் பிடித்துவிட்டது...

புவ : (பதறி) பிடித்துவிட்டதா! எப்போது?

புக : இப்போது! ஆடுங்கடை மணி அறுந்து கிடக்கிறது! தலைவாசலில் புலிக்கொடி பறக்கிறது! சோழன் படை ஊர்வலம் நடத்துகிறது! வருந்திப் பயனில்லை. முந்நாடும், ஒரு சேரத்தன்னுடையாய்க் கொண்டுவிட்டான் சோழன்!

புவ : தந்தை...?

புக : சிந்தை நொந்து செயலற்றுத் திகைக்கிறார்! தளபதி கரியங்கண்ணர், சவமாகச் சாய்ந்துவிட்டார்!

புவ : இனி வழி...?

புக : ஒன்றுண்டு! இன்னும் சிறிது நேரத்தில் அரண்மனையைச் சூழ்ந்துவிடும் பகைவன் படை.... எனினும் உன் மானத்திற்கு மாசு நேராது...காரணம், வந்திருப்பது செந்தமிழ் பாடும் சோழன் படைதான்! வழி இது கேள்...

[என, பைங்கிளி அறியாமல் ரகசியமாக அவள் காதில் ஏதோ கூறுகிறான், புகழேந்தி. புவனமுழுதுடையாள், அவனை வணங்கிவிட்டு, பைங்கிளியை அழைத்துக் கொண்டு வேறுபுறம் செல்கிறாள்.]

காட்சி : 3

இடம் : எல்லைப்புறம்.

நேரம் : இரவு.

[எல்லைப்புறத்திலே குலோத்துங்க சோழனும் வீரர்களும் கூடாரமிட்டிருக்கிறார்கள். தீவட்டிகள் எரிந்துகொண்டிருக்கின்றன. நடன மாதர் நடனமாடுகின்றனர். குயிலுவர் இசை முழக்குகின்றனர். ஒரு வீரன் ஓடிவந்து அரண்மனை வளைக்கப்பட்ட செய்தியைக் கூறுகிறான். குலோத்துங்கன், "சரி, இந்த விழாவை அங்கு சென்று கொண்டாடலாம்" என்று கூறி புறப்படக் கட்டளை இடுகிறான். திடீரென மின்னல் வேகத்தில் மற்றொரு வீரன் தோன்றுகிறான்]

வீரன் : புலிக்கொடி தழைக்க! மன்னா ஒரு செய்தி.

குலோ : என்ன?

வீரன் : வரும் வழியில் ஒரு சிதை. ஆறு பாண்டியநாட்டு மங்கையர் தீக்குளிக்கப் போகின்றனர்.

குலோ : (திடுக்கிட்டு) ஏன்?

வீரன் : நமது படைகளால் அவர்களின் மானத்துக்கு ஆபத்து நேரிடுமென்று அஞ்சுகிறார்கள்.

குலோ : மானத்திற்கு ஆபத்து! மறவன் நினைக்காத ஒன்று. வாருங்கள் அவர்களைத் தடுத்து நிறுத்துவோம்.

[எல்லோரும் புறப்படுகின்றனர், குதிரையேறி.]

காட்சி : 4

இடம் : வயல் வெளி.

நேரம் : இரவு.

[சிதை எரிந்துகொண்டிருக்கிறது. புவனமுழுதுடையாள், பைங்கிளி உட்பட ஆறு பெண்கள் வெள்ளுடை அணிந்து தீயை வலம் வருகின்றனர். ஒவ்வொருவரும் சோழன்படை வருகிறதா வருகிறதா எனப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். வருவது தெரிந்தவுடன், பைங்கிளி, தான் விழப் போவதுபோல் ஜாடை காட்டுகிறாள். 'நில்' என்றபடியே குலோத்துங்கனும் படை வீரர்களும் அருகில் வருகிறார்கள்.]

குலோ : யார் நீங்கள்?

பைங் : கதியற்ற பெண்கள்!

குலோ : தீக்குளிக்கக் காரணம்?

பைங் : மானத்தைக் காக்க!

குலோ : ஆபத்து யாரால்?

பைங் : சோழன் படைகளால்! ஏன், குலோத்துங்க சோழரால் கூட!

குலோ : முறையற்ற வார்த்தை! குலோத்துங்கன் கொடியவனல்ல! அவனும் மறவன் தான்.

பைங் : குலோத்துங்கரால் கொல்லப்பட்ட படை வீரர்கள் யார்?

குலோ : பாண்டியநாட்டார்.

பைங் : அவர்களும் தமிழர்கள் தானே!

குலோ : ஆம்!

பைங் : அவர்களைக் கொன்ற குலோத்துங்கர், அவர்தம் பெண்டிரைக் கற்பழிக்காமல் விடுவாரா ?

குலோ : தவறு. போர் ஒருமுறை! அதில் கொலை ஒரு கலை. போர் புரியும் எல்லோருமே நெறி யழிக்கும் முறையற்றவர்களல்ல. மானத்தை மதிக்கும் மறவர் களிலே குலோத்துங்கனும் ஒரு வன்.

புவ : சான்று ?

குலோ : இதைச் சொல்பவன் அவ னாகவே இருப்பதுதான்.

புவ : (பயந்தவள்போல) ஆ! நீங்களா ? நீங்களா குமார குலோத்துங்கர் ?

குலோ : ஆம்; அண்டினோர்க்கு ஆதரவு தந்து, தள்ளுவோரின் துடுக்கடக்குவதைக் கொள்கை யாகக்கொண்ட குலோத்துங்கன். நல்லார்க்கு நல்லான், இல் லார்க்கு இல்லான்.

புவ : நாங்கள் மகிழ்ச்சியடை கிறோம். தோல்வியுற்ற நாட்டின் மங்கையர் வெற்றிபெற்ற வீரர்க்கு முன்னால் வீரமரண மெய்துகிற சந்தர்ப்பம் கிடைத்த தற்கு நாங்கள் பெருமகிழ்ச்சி யடைகிறோம். மன்னர் பெரும! சாவதற்கென்றே நாங்கள் வந்து விட்டோம். எங்களைத் தடுக்க வேண்டாம்.

[என்று தீக்குள்பாயப்போகிறாள். படாரென்று அவள் கையைப் பிடித்துக்கொள்கிறான் குலோத் துங்கன்.]

குலோ : முடியாது. உங்களைச் சாக விடமாட்டேன். சிறிதுகூட உங் களுக்குக் களங்கமேற்படாமல் பாதுகாப்பது என் பொறுப்பு. எங்களோடு வாருங்கள். மறக் குலத்தின் மாண்புக்கு நானே வழி கோலுகிறேன்.

பைங் : சோழநாட்டின் சாகசங் களிலே இதுவும் ஒன்று ?

குலோ : நான் பெண்ணல்ல, சாக சம் புரிய. நீ ஆணல்ல, அப்படிக் கேட்க. என் வாள்மீது ஆணை! உங்கள் மானம் காப்பேன் வாருங் கள்.

[புவனமுழுதுடையாளும் மற்ற வர்களும் சம்மதித்து ஒரு ரதத்தில் ஏறிக்கொள்கிறார்கள். ரதங்களும் புரவிகளும் புறப்படுகின்றன.]

காட்சி : 5

இடம் : பாண்டியன் அரண்மனை.

நேரம் : இரவு.

[வீரபாண்டியன் கைது செய்யப் பட்டுச் சிறையிலிருக்கிறான். அரண் மனையிலே சோழநாட்டுப் படை கொட்டமடிக்கிறது. ஆணும் பெண் ணுமாக ஆனந்தக் கூத்தாடுகிறார் கள். திடீரென மன்னன் வரவு கூறும் வாத்திய ஒலி கேட்கிறது. ஆடினோர் எல்லோரும் ஒரு பகுதிக் குப் போய்விடுகிறார்கள். காவலர் கள் தங்களைச் செம்மை செய்து கொள்கிறார்கள். குலோத்துங் கனும் படைகளும் புவனமுழுதுடை யாள் உட்பட ஆறு பெண்களும் உள்ளே நுழைகிறார்கள். சோழ நாட்டுத் தளபதி, குலோத்துங்கனை எதிர்கொண்டு மரியாதை செலுத்து கிறான்.]

குலோ : வீரபாண்டியர் எங்கே ?

தளபதி : சிறையிலிருக்கிறார்.

குலோ : மணிமகுடம் ?

தளபதி : தங்களைத் தேடுகிறது.

குலோ : இளவரசி ?

தளபதி : எங்கோ ஓடிவிட்டாராம் !

குலோ : பாவம்! குலோத்துங் கனின் இதயத்தை அறியாத பேதை !

[இப்போது குபுக்கென அழும் சத்தம் கேட்கிறது. எல்லோரும் திரும்பிப் பார்க்கிறார்கள். புவன முழுதுடையாள் வேகமாக அரண் மனையின் பின்கட்டுக்குச் செல் கிறாள். விம்மி, விம்மி அழுகிறாள். பின்னாலேயே குலோத்துங்கன் வரு கிறான்.]

குலோ : அம்மா, ஏன் அழுகிறாய் ? இளவரசியைப் பற்றிச் சொன்ன தும் நீ கலங்குவானேன். அவர் களுக்கு நீ...?

புவ : (சமாளித்துக் கொண்டு) தோழி !

குலோ : தெரிகிறது. அந்தப் பாசம் தான் உன் இதயத்தை வேக வைத்திருக்கிறது. அம்மா, மாதர் குலத்திற்கு மாசு நினைக்காத வன் குலோத்துங்கன். அதை உங்கள் இளவரசி உட்பட ஒரு வரும் அறிந்துகொள்ள வில்லையே என்றுதான் நான் கலங்குகிறேன். எனக்குக் கோபம் வீரபாண்டியன் மீதே தவிர, அவர் மகள் மீதல்ல. ஈழப்படை யின் துணைகொண்டு எங்களுக்கு அடிக்கடி தொல்லை விளைத்த காரணத்தால்தான் வீரபாண் டியன்மீது கோபம் பிறந்தது. இன்று இளவரசி மட்டும் இங்கு இருந்திருப்பாளானால் இந்த நாட்டையும் முடியையும் அவ ளுக்கே தந்து நான் விடைபெற் றுக்கொண்டிருப்பேன்.

புவ : (திகைத்து-ஆச்சரியத்தோடு) நிச்சயமாகவா ?

குலோ : (மெள்ளச் சிரித்து) விளை யாட்டுக்குப் பேசும்போதுகூட நான் நிச்சயமில்லாமல் பேச மாட்டேன்.

புவ : (சோகமாக) அய்யோ ! இள வரசி எங்கே போனாளோ தெரியவில்லையே! குலோத்துங்கன் உயர்ந்த பண்புகள் கொண் டவர் என்று அடிக்கடி சொல்லு வாள். இருந்தும், தோல்வியில் கலக்கமுற்று எங்கேயோ போய் விட்டாளே !

குலோ: (குலோத்துங்கன் ஆச்சரியத் தோடு) என்னைப் பற்றிச் சொல்லு வாளா ?

புவ : சொல்வதுமட்டுமல்ல, ஓவியம் தீட்டுவாள். அதில் உங்கள் உரு வத்தைப் பிரதிபலிப்பாள்.

குலோ : இருந்துமா மறைந்து விட்டாள் ?

புவ : இருங்கள். அவள் எங்கிருந் தாலும் தேடி நான் அழைத்து வருகிறேன்.

[என்று போகிறுள். குலோத்துங்கன் அமைதியின்றி முன்னும் பின்னும் உலவுகிருன். அங்கு மாட்டியிருந்த புவனுவின் படத்தை நிமிர்ந்து பார்க்கிருன். அதைக் கையில் எடுத்துக்கொள்கிருன். திருப்பித் திருப்பிப் பார்க்கிருன். உயிரோடு வந்துவிடமாட்டாளா என்று நினைக்கிருன். நிமிர்ந்து பார்க்கிருன். அங்கே ஆடை ஆபரணங்களணிந்த புவனமுழுதுடையாள் நிற்கிருள்.]

குலோ: வாழ்க இளவரசி!

புவ : இல்லை, உங்கள் கைதி.

குலோ : பெண்ணுக்கு ஆண் கைதி என்பதுதான் பேச்சும் நடப்பும். மண்ணுக்குள் இல்லாத புதுமை. இளவரசியார்வாய்மலர்ந்தருளிய வார்த்தைகள். இளவரசியாரே, இந்த நாடும், முடியும், இனி உங்களுக்கே சொந்தம். நான் என் நாடு திரும்பப் போகிறேன். நாடு பிடித்ததற்கு ஈடாக என்னையே உங்கள் கைதியாகச் சிறைப் பிடித்து வைத்தாலும் சிந்தை குளிர்ந்து சம்மதிப்பேன். இளவரசி! மானம் ஒன்றே பெரிதெனக் கொண்டு வாழ்ந்த நம் மறவேந்த ; பூனைகளல்லர்அவர் வழிவந்தோர் புலிநிகர் தமிழ் மாந்தர். உந்தப் பரம்பரை தான் நீங்களும் நானும். வெற்றி பெற்றது உறுதி. அதுபோதும்! சேர்த்தாளும் ஆசையில்லை, வருகிறேன்.

[என்று திரும்ப]

புவ : நில்லுங்கள்!

குலோ : (திரும்பி) ஏன்?

புவ : எப்படி விடை கொடுப்பேன்?

குலோ : சொற்படி நடக்கிறேன், சொல்லுங்கள்.

புவ : நான்.........

[என்று அவன் கால்களில் போய் விழுகிருன். விழாமல் தூக்கிக் கொள்கிருன் குலோத்துங்கன். இருவரும் மெய்மறந்து நிற்கிறார்கள்.]

குலோ : இளவரசி!

புவ : இல்லை! புவனு!

குலோ : புவனு, இன்றுதான் என் வாழ்வு ஈடேறியது. மதுரைப் புலவர்கள் பலரும் வந்து, உன் எழில் பற்றிக் கூறும்போதெல்லாம், எப்போது காண்போம் என்று ஏங்குவேன். இடையில் குறுக்கிட்டது பகை. இங்கு வந்ததும் நீ இல்லை என்றறிந்து என் மனம் என்ன பாடுபட்டது தெரியுமா? உன் தோழி அழுதாள். என்னால் அழ முடியவில்லை அவ்வளவுதான்.

புவ : பெரும, எனக்கும் அப்படித்தான். பக்குவப்பட்ட பின்பு, பாவை என் உயிரும் உடலும் உங்களையே தேடி நின்றன.

குலோ : இருந்துமா நான் வந்ததும் மறைந்தாய்?

புவ : கண்ணுக்கு முன்தான் இருந்தேன்; காணமுடியவில்லை உங்களால்.

குலோ : அப்படியென்றால்...?

[புவனு, 'நில்லுங்கள் வருகிறேன்' என்று சொல்லி உள்ளே சென்று பழைய வெள்ளுடை அணிந்து வருகிருள். குலோத்துங்கன் திகைத்து மேலும் கீழும் பார்க்கிருன். 'ஆ! புவனு' என்று கட்டிக் கொள்கிருன்.]

புவ : வாருங்கள்! அப்பாவைப் பார்த்துவிட்டு வருவோம்.

குலோ : பார்ப்பதென்ன? விடுதலை செய்து மீண்டும் மகுடம் சூடி மனம்குளிரக் காண்போம். வா!

[என்று அணைத்தபடி அழைத்துச் செல்கிருன்]

காட்சி : 6

இடம் : சிறைச்சாலை.

நேரம் : இரவு.

[அமைதியின்றி சிறைக்குள் முன்னும் பின்னும் உலவிக்கொண்டிருக்கிருன் வீரபாண்டியன். 'அப்பா' என்று புவனுவின் குரல் கேட்கிறது. 'புவனு' என்று சொல்லிக்கொண்டே கதவருகில் வருகிருன். அங்கே குலோத்துங்கனும் புவனுவும் நிற்கிருர்கள். பாண்டியன் திகைக்கிருன், துடிக்கிருன். கதவு திறக்கப்படுகிறது]

குலோ : அம்மான்! திகைக்காதீர்கள்! நடக்கவேண்டியது நடந்திருக்கிறது. அடுத்ததைக் கவனிப்போம். மதுரையையும், அரசையும் உங்களுக்கே திருப்பித் தரப் போகிறேன்.

பாண்டி : (ஆச்சரியத்தோடு) ஆ! குலோத்துங்கா!

குலோ : நான் நாடு திரும்பப் போகிறேன்.

பாண் : (மகிழ்ச்சியோடு) தனியாகவா?

குலோ : (புவனுவைப் பார்த்தபடி) அப்படித்தான் நினைக்கிறேன்.

பாண் : இல்லை! நீ தனியாகப் போகமுடியாது.

[என்று புவனுவின் கைகளைப் பிடித்து அவன் கைகளில் வைத்து]

பாண் : உனக்கென்று வாழ்பவள். துணைக்கு வருவாள்.

[குலோத்துங்கனும் புவனுவும் பாண்டியன் காலில் விழுந்து வணங்குகிருர்கள்.]

காட்சி : 7

இடம் : பாண்டியன் அரண்மனை.

நேரம் : காலை.

[நகரெங்கும் திருமணக் கொண்டாட்டம். அரண்மனையில் உற்சாகம். குமார குலோத்துங்கன் புவன முழுதுடையாள் திருமணம் நடந்தேறுகிறது.

மீனக்கொடி வாழ்க!

புலிக்கொடி தழைக்க!

என்ற குரல்கள் விண்ணைமுட்டுகின்றன.] ★

“செல்லப்பிள்ளையாகவே இருக்கட்டுமே இந்த வெள்ளி நிலவு. அதற்காகப் பல்லாயிரம் பணிப்பெண்களா வேண்டும் அந்தப் பிள்ளையைப் பாதுகாக்க? வானத் தந்தையின் மூளை குழம்பித்தான் போயிருக்கவேண்டும்.” - என்றெல்லாம் அந்த நல்லவர் எண்ணுவார். நகைக்கும் விண்மீன்களுக்கிடையே நகரும் வெண்ணிலவைப் பார்க்கும் போதெல்லாம் அந்த நல்லவர் இப்படித்தான் எண்ணுவார்.

நான்கு பிள்ளைகள் அந்த நல்லவருக்கு. அந்தப் பிள்ளைகளின் வளர்ப்பைப் பற்றி நாளொன்றுக்கு நாலாயிரம் எண்ணங்கள் எழும் அவர் மனதில்.

கண்ணைப்போல அவர் தன் பிள்ளைகளைக் காத்துவந்தார். கண், கண்ணிற்கருவிழி, கருவிழியிலுள்ள கருமணி, மணியாடு பாவை- இவைகளைப்போல்தான் அவர் தன் பிள்ளைகளை எண்ணிப் போற்றிக் காத்து வளர்த்துவந்தார்.

ஓராண்டு ஈராண்டு வயதில் வேறுபாடு உள்ளவர்கள் அந்த நால்வரும்.

செதுக்கிய சலவைக்கல் சிலை - பார்த்துப் பார்த்துத் தீட்டிய பல வண்ண ஓவியம் - வார்த்தெடுக்கப் பெற்ற பொன் விக்ரகம் - இவைகளில் இருக்கும் அழகெல்லாம் ஒன்று கலந்து ஒருருவாகி உடலும் உயிரும் பெற்று அந்த நல்லவரின் பிள்ளைகளாகத் துள்ளி விளையாடின. விளையாடும் அந்தக் குழந்தைகளைக் கண்ட ஊரார் அப்படித்தான் உரையாடினர்.

மான்பிள்ளைகள் என்பர் ஊரார்.

நல்லவரின் உள்ளமோ தேன் பிள்ளைகள் ன்று சொல்லும்.

நல்லவரின் அந்த நான்கு பிள்ளைகளும் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தனர்.

நாட்டிய மங்கையைப் போல் காலம் குதித்துக்கொண்டே நகர்ந்தது ஜதி சொல்லுவதிலேயே கண்ணுங்கருத்துமாக இருக்கும் நட்டுவனரைப்போல் தன் குழந்தைகளின் வளர்ச்சியிலேயே எண்ணமும் செயலுமாக இருந்தார் நல்லவர்.

அவர் வீட்டுத் தோட்டத்திலே நடப்பெற்ற ஒட்டுமாங்கன்று, செடியாகி வளர்ந்து மரமாகி நின்று கிளையில் கனி தொங்க் கண்டு இலைகள் சலசலக்கச் சிரித்தது.

அரசியல்

அவர் வீட்டுத் தொழுவத்திலே துள்ளி விளையாடிய கன்று பசுவாகி நின்று மாலைநேரம் வந்ததும் பால் தருவதற்காக அம்மா என்று அலறி அழைத்தது.

தங்கப் பதுமைகளாகக் காத்து வந்த அவர் சிங்கக் குழந்தைகள் இப்போது சிறுவர்களானதால் வீட்டில் ஒருவரிடமும் சொல்லாமல் விளையாடுவதற்காக ஒருபக்கத்தில் நீரோடும் ஆற்றின் மறுபக்கம் மணல்மேட்டை நோக்கி ஓடினர். குறிப்பிட்ட இடத்தில் கூடினர். நெடுநேரம் விளையாடினர்.

ஆற்றின் படுகையில் குடியான வன் வளர்த்து வந்த ஓர் அழகிய மயில் படுகையிலிருந்து ஓடும் நீரைப் பறந்த வண்ணம் கடந்து மணல்மேட்டில் வந்து நின்றது.

சிறுவர்களின் விளையாட்டு நின்றது.

வியப்போடு மயிலையே சூழ்ந்து நின்றனர். மயில் அடியெடுத் வைத்து நடக்கும்போது அஞ்சி விலகி நின்றனர். அதன் தொண்டையின் இடைவிடாத அசைவு அவர்களுக்குக் கண்டறியாப் புதுமையாக இருந்தது.

முதல் பையன் முறுவல் தவழும் முகத்தினனாகி “எனக்கு மயிலை நினைத்தாலே மகிழ்ச்சி. ஏனென்றால் மனிதனைக் கொல்லும் பாம்பை அது கொத்திக் கொன்று தின்று விடுகிறதல்லவா?” என்று கூறி விட்டுத் திரும்பினான்.

இரண்டாவது பையன் அங்கே கிடந்த களிமண் உருண்டையிலிருந்து சிறிது பெயர்த்து உருட்டிக்கொண்டிருந்தான்.

மூன்றாவது பையனுக்கு ஒரே சிரிப்பு. ‘அழகிய மயிலே - அழகிய மயிலே!’ என்று பாடத் தொடங்கி விட்டான்.

நான்காவது பையன் - அவனைக் காணாது மூவரும் திடுக்கிட்டனர். மயிலைக் காண்பதிலேயே தங்களை இழந்திருந்த வேளைபார்த்துக்

நா. பாண்டுரங்கன், எம். ஏ.

கடைசிச் சிறுவன் எங்கோ நடையைக் கட்டிவிட்டிருந்தான்.

மூவரும் திடுக்கிட்டுத் திகைத்து நின்றனர். நல்லவேளை கரையிலிருந்த தோட்டத்து மரக்கிளையிலிருந்து குதித்துக் கூவிக் கொண்டே ஓடிவந்தான் கடைசித் தம்பி! அவனுடைய இடதுகையின் விரல்களில் சிக்கிய ஒரு வண்ணத்திப்பூச்சி துடித்துக்கொண்டிருந்தது. வலதுகையில் ஒரு மாங்காயை வைத்துக் கடித்துத் துப்பிக் கொண்டிருந்தான் அவன். வளைந்து சென்ற ஆற்றின் தொலைவில் வளர்ந்து கிடந்த நாணற் காட்டிலிருந்து-சாப்பாட்டை முடித்துவிட்டதாலோ என்னவோ மேலெல்லாம் சந்தனத்தைப் பூசிக்கொண்டு - வெளியே கிளம்பிக்கொண்டிருந்தான் சந்திரன், வானத்தை நோக்கி! ‘ஐயோ! இருட்டிவிட்டதே!’ என்றான் முதல் பையன். நால்வரும் ஓட்டமும் நடையுமாகக் கிளம்பினர். ‘அதோ! அப்பா டோய் - அப்பா!’ என்றான் கடைசிப்பையன். நடுநடுங்கி நின்றனர். பிள்ளைகளைத் தேடிக்கொண்டுவந்த நல்லவர் அவர்களைக் கண்டதும் பெருமூச்சு விட்டு நின்றார். “அப்பா! இனிமேல் இப்படிச் செய்யமாட்டோம். தப்பு-தப்பு!” என்று ஒரே குரலில் நால்வரும் கூறினர். “என்னடா குழந்தாய் இப்படித்தானா கையெல்லாம் ஒரே மண்! இப்படித்தானா விளையாட்டு?” என்று இரண்டாவது பையனைப் பார்த்துச் சொன்னார் நல்லவர். “மண் அல்ல அப்பா. இதோ, பாருங்கள்” என்று சொல்லித் திரும்பியவாறு ஒரு பொருளை எடுத்துக்காட்டினான். களிமண்ணால் செய்யப்பெற்ற கலாப மயில் அது! “படிக்கும் நேரம் ஆயிற்றே-பிள்ளைகளே, இப்படித்தானா விளையாட்டிலேயே காலத்தைப் பாழ் செய்வது?” என்று துடிப்போடு கூறினார் நல்லவர். “காலத்தை நீங்கள் பாழ்செய்தால் காலம் உங்களைப் பாழ்படுத்திவிடுமே” என்று சற்றுக் கடுமையான குரலிலேயே கூறினார். நாம் நிகழ்காலத்தைக் கவனித்தால் தான் வருங்காலம் நம்மைக் கவனிக்கும் என்று அடிக்கடி தம் குழந்தைகளுக்கு எடுத்துக் கூறுவார். அப்போதும் கூறினார்.

காலம் தேரிலே பூட்டப்பெற்ற குதிரைகளைப்போல் ஓடியது. அந்தக் குதிரைகளின் கடிவாளக்கயிற்றில் கருத்தும், எதிரே, பாதையில் கண்

ணும் வைத்தவாறே தேரைச் செலுத்தும் பாகனைப்போல நல்லவர் தம் பிள்ளைகளின் ஒழுக்க வளர்ச்சியிலும் கல்வி மலர்ச்சியிலும் கண்ணுங்கருத்துமாக இருந்தார்! பொன்னையும் பொருளையும் பிள்ளைகளின் அந்த வளர்ச்சிக்காக அள்ளிச் செலவிட்டார்.

பத்துப் பதினைந்து மழைக்காலங்கள் வந்து மறைந்தன.

முதல் பையனுடைய உயர்கல்விப் பயிற்சி முடிந்ததும் அவனுடைய அறிவாற்றலைக் கண்டு அவன் பயின்ற கல்லூரியிலேயே பேராசிரியர் பதவியில் அமர்த்திக்கொண்டனர்.

முதல் மாதச் சம்பளத்தைத் தந்தையின் பாதங்களிலே வைத்து அதன்மீது தன்னுடைய சிரத்தைக் குவித்து வணங்கினான் முதல் பையன். நல்லவரின் உள்ளம் மகிழ்ச்சியினால் நிறைந்தது; உடல் அதனால் சிலிர்த்தது!

இரண்டாவது பையன் போதிய கல்வியோடு நின்று கொண்டு வேறு துறையிலே பயின்றான். பலன்?... இப்போது அவன் ஒரு சிற்பக் கலைஞன்! அவன் கையிலிருக்கும் உளி, கல்லிலே பட்டால் அது உடல் பெற்று உருப்பெற்று உயிர்பெற்றுக் களுக்கெனச் சிரிக்கும்; கதை சொல்லும்; கவி பாடும்! நாட்டின் அமைச்சர் வரையில் அவன் புகழ் எட்டியது. கலைக்கூடத்தின் தலைவர் நிலையை அமைச்சர் இரண்டாவது பையனின் தலையிலே சுமத்தினர்.

தங்க நாணயங்களை நல்லவரின் பாதங்களிலே கொட்டி அவைகளின்மீது தன் சிரத்தைக்குவித்து இரண்டாவது பையன் வணங்கினான். தந்தை அவனை மார்போடு அணைத்துக்கொண்டார்!

மூன்றாவது பையன் போதிய கல்வியோடு தன் கல்விப் பயிற்சியை முடித்துக்கொண்டு இசைப்பயிற்சியைத் தொடங்கி முடித்தான்.

அவன் கண்டத்திலிருந்து கிளம்பிய குரல் அரண்மனை வரையிலும் சென்று அரியணையிலிருந்த மன்னன் செவிகளிலே நுழைந்து அவன் உள்ளத்திலே இழைந்தது. ஒரு புன்னகை - சிறு புன்னகை புரிந்து மன்னன் மூன்றாவது பையனைப் பார்த்து "இன்று முதல் நீ நம் பேரவை இசைவாணன்!" என்றான்.

நவரத்தினங்களை நல்லவரின் பாதங்களிலே இரு கைகளினாலும் அள்ளிக் குவித்து அவற்றில் தன் சிரத்தைக் குவித்து வணங்கினான் மூன்றாவது பையன்.

வணங்கிவிட்டுத் தன் முகத்தை மேலே தூக்கியபோது அவன் தோள்களிலே தந்தையின் கரங்கள் பதிந்திருந்தன; அவன் முகத்தில் 'டப் டப்' என்று நீர்த்துளிகள் பட்டுத் தெறித்தன. மூடியிருந்த அவன் இமைகள் திறந்தன. விழிகள் நோக்கின. நல்லவரின் கண்களிலிருந்து கண்ணீர் பெருக்கெடுத்து வழிந்தது - ஆனந்தக் கண்ணீர்! தந்தை மகற்காற்றும் உதவியைத் தக்கவாறு ஆற்றி முடித்தார் நல்லவர் என்று ஊரெல்லாம் சொல்லி மகிழ்ந்தது.

★ ★ ★

இங்கே 'அரசிய'லைப் படைத்திருக்கும் நண்பர் நா. பாண்டுரங்கன் எம். ஏ., அவர்கள் தமிழிலே புலமை பெற்றவர். ஆராய்ச்சித் திறன் படைத்தவர். அழியாத சிறுகதை இலக்கியங்களைத் தந்து தமிழகத்து எழுத்துலகில் தனி இடத்தைப் பெற்றவர்.

★ ★ ★

நல்லவரும் மகிழ்ந்தார். ஆனால்... கறையுள்ள நிலவைப்போல் குறையுள்ள மகிழ்ச்சியே அது. கண்ணில்லாத குழந்தையைப் பெற்றெடுத்த அன்னையைப் போலவே அந்த மகிழ்ச்சியை அவர் பெற்றெடுத்திருப்பதாக எண்ணினர்!

நான்காவது பையன்...அவனுக்குப் படிப்பும் சரியாக வரவில்லை, வேறு எந்தக் கலையும் அவனுக்குப் பிடிக்கவில்லை.

நல்லவர் எவ்வளவோ முயன்றும் பலனில்லாமல் போயிற்று. நான்காவது பையன் அவர் எண்ணியவாறு வரவில்லை. தான் எண்ணியவாறே அவன் நடந்தான். "ஐந்து விரல்களும் சரியாகவா அமைந்திருக்கின்றன?" என்று கூறி மனநிறைவு பெறுவார் நல்லவர். ஆனால்...

முதல் பையன்-அவனைப் பேராசிரியன் என்றே ஊரார் அழைத்தனர். அந்தப் பேராசிரியன் கல்லூரிக்கே தலைவராகவும் ஆகிவிட்டான் என்ற செய்தி நல்லவருக்குக் கிடைத்தது. "உங்கள் கடைசிப் பிள்ளை தெருவிலே விழுந்துகிடக்கிறான்-கிட்டே சென்று பார்த்தோம். ஒரே நெடி-குடி மயக்கத்திலே ஊறிக்கொண்டிருக்கிறான்!" என்ற செய்தியும் அப்போதே நல்லவருக்குக் கிடைத்தது! தலையைத் தொங்கவிட்டுக் கொண்டார்! கடைசி மகனைக் கண்டித்தார் தந்தை. அதைக் கருதவே இல்லை மகன்!

இரண்டாவது பையன்—அவனைக் கலைஞன் என்றே அழைத்தனர் ஊரார். அந்தக் கலைஞனின் ஒரு சிலையைத் தலைநகரில் காணும் வாய்ப்பு பெற்ற மன்னன் வியந்து அந்தக் கலைஞனை அழைத்திருந்தான்.

வைரத்திலே ஒரு சிற்றுளிசெய்து கலைஞனுக்கு மன்னன் வழங்கினான் என்ற செய்தி நல்லவருக்குக் கிடைத்தது. அப்போது கையிலே கட்டாரியுடன் கண்ணிலே கனல் பறக்க ஒரு வாலிபன் ஓடிவந்து நல்லவரின் முன்னே நின்று எங்கே உன் கடைசிப் பையன்? அந்தக் காதகன் எங்கே? என் விதவைத் தங்கையைத் தாயாக்கியதால் அவன் தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொள்ளக் காரணமாயிருந்த அந்தப் பாவி எங்கே? அவன் மடிந்தால்தான் என் துன்பம் மடியும். எங்கே அவன்?" என்று கேட்டுத் துடித்தான்!

நல்லவர் 'ஐயோ! ஐயோ!' என்று தலையிலடித்துக் கொண்டு அழுதார் மகனின் வாழ்வுக்கு ஊறு வராமல் அரும்பாடுபட்டு நிலையை அமைதியாக்கினர். இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு எப்பொழுதாவது கடைசி மகன் வீட்டில் தனக்கு எதிரே வந்துவிட்டால் முகத்தை வேறு பக்கம் திருப்பிக்கொண்டு போய் விடுவார் நல்லவர்.

நீண்ட நேரம் இசை மழை பொழிந்து கொண்டிருந்த அந்த

இசைவாணனின் இசையில் மயங்கிய மன்னன், அவனை வியப்போடு நோக்கி "இசைவாணா! நீ எவ்வளவு நேரம் இப்படியே பாடிக்கொண்டிருப்பாய்?" என்று கேட்டான். "அரசே! தங்களால் எத்தனை நாட்கள் என் எதிரே இப்படியே அமர்ந்து கேட்டுக்கொண்டிருக்க இயலும்?..." என்று இசைவாணன் பதிலிறுக்க "அப்படியா! என்று வாய்பிளந்த மன்னன் இசைவாணனுக்கு ஒரு சிற்றூரைப் பரிசாக வழங்கினான்.

இந்தச் செய்தி நல்லவரின் காதில் விழுந்தது. "கொலை நடந்து விட்டது! உன் கடைசிப் பையனைப் பிடித்துக்கொண்டு போகிறார்கள்" என்ற செய்தியை ஓடிவந்து ஒருவன் சொன்னான். மதுக்கடையில் கொள்ளைப் பொருள்களைப் பங்கு போட்டுக்கொள்ளும் போது சிலருடன் விளைந்த சண்டையில் கடைசிப் பையனும் கலந்திருந்தான் என்பதைக் கேள்வியுற்ற போது, "அவன் என் மகன் அல்லன்! எக்கேடாவது கெட்டுப் போகட்டும்!" என்று நல்லவர் கூறினார். அப்படிச் சொன்னாரே தவிர அப்படியே வாளாவிருக்க முடியவில்லை அவரால். எப்படியோ அவனை அந்த வழக்கிலிருந்து விடுவித்து அழைத்துவந்தார். அவனைத் தன் எதிரே நிறுத்திச் சொல்லத் தொடங்கினார்.

"களவு - கற்பழித்தல் - குடி - கொலை...உன்மீது இல்லாத பழி இல்லை! நீ என் மகனா? இல்லை!... முதல் மூன்று பிள்ளைகளைப் பாரடா! ஊர் புகழ்கிறது. மன்னனே புகழ்கிறான். அவர்களன்றோ பிள்ளைகள்! அவர்களுடைய கால்தூசிக்குக்கூட இணையாக உனக்கு அருகதையில்லை. நீ என் பிள்ளையா? நீ ஒரு மனிதனா? என் உள்ளத்தில்தான் கருணையின் கடைசி எல்லை இருக்கிறது. அந்த எல்லையில்கூட உனக்கு இடம் இனி இல்லை. இந்த உலகில் எங்கும் உனக்கு இடமில்லை. ஓடிப்போ! கண்காணாத இடத்தில் எங்கள் பெயரைச் சொல்லாது செத்து மடிந்துபோ!"...நல்லவர் கனலைக் கக்கினார். அதைக் கேட்டுக் கொண்டிருந்த கடைசிப் பையன் அவருக்குமுன் நிற்காது அன்று போனவன்தான் .எங்கே போனானோ ...வீட்டுக்குத் திரும்பவேயில்லை!

காலம், பாடிவரும் அலையைப் போல் ஓடிக்கொண்டிருந்தது. அந்த அலையைப் பார்த்துக்கொண்டு கரையிலே அமர்ந்திருப்பவனின் உள்ளம்போல் நல்லவரின் நாட்கள் அமைந்து கழிந்துகொண்டிருந்தன.

நாட்டுமக்களுக்கு அவர்களின் தன்மானம் இப்போதுதான் கொழுந்துவிட்டெரியத் தொடங்கியது. "வேற்று நாட்டைச் சேர்ந்த மன்னன் வேண்டாம் எங்களுக்கு" என்று குரல் உயர்த்தினர்; கொடி உயர்த்தினர்; படை நடத்தினர்! படை என்றால் போர்ப்படையல்ல, மக்கள்படை-குரலே வாள்-உடலே கேடயம்!

மன்னன் அடக்கு முறையை அவிழ்த்துவிட்டான்.

மக்கள் கொதித்து எழுந்தனர். கொதித்து எழுந்த மக்களுக்குத் தலைமை தாங்கியவர் சிறையிலடைக்கப்பட்டுத் தூக்கிலே ஏற்றப்பட்டார். புரட்சி பொசுங்கி விடுமோ என்று மக்கள் புழுவாய்த் துடித்தனர். அப்போது வீரன் ஒருவன் தோன்றி வழிகாட்டினான். மன்னன் நாட்டை விட்டு ஓடி மறைந்தான்.

புரட்சி வென்றது. புது வாழ்வு பூத்தது. வேற்று நாட்டான் ஓடிவிட்டான். சொந்த நாட்டான் நாட்டை ஆளவேண்டும். யார் ஆள்வது? புதிய வீரனையே மன்னனாக புரட்சிக்குழு முடிவு செய்தது. அந்த முடிவுநாள் மன்னன் முடிசூட்டுவிழா நாள் என்று முரசறைந்து நாடெல்லாம் அறிவிக்கப்பட்டது.

நல்லவரின் முதல் பையன் பேராசிரியனை அழைத்துப் புது வேந்தனுக்கு வரவேற்பிதழ் எழுதச்சொல்லி அதைப் பொன்னேட்டிலே தீட்டினர். நல்லவரின் இரண்டாவது பையன் கலைஞனை அழைத்துப் புதிய மணிமண்டபம் அமைக்கக் கட்டளையிட்டனர், அதிலே தான் முடிசூட்டு விழா நடைபெற இருந்தது. நல்லவரின் மூன்றாவது பையன் இசைவாணனை அழைத்து மங்கல விழாப் பாட்டு இசைக்கத் தயாராகுமாறு கட்டளையிட்டனர்.

இந்த ஏற்பாடுகளெல்லாம் ஆட்சிக்குழு அமைத்தவை. விழா நாள் வந்தது.

மக்கள் புதிய மன்னனைப் பார்க்கக் கடலெனத் திரண்டனர். விழா தொடங்கியது. அரியணையில் புதிய மன்னன் அமர்ந்தான்.

மக்கள் வாழ்த்தொலி வானைப் பிளந்தது.

கலைஞனின் மணிமண்டபத்தின் விளிம்புகள் மக்களின் நெருக்கத்தால் இடிந்து சிதறின.

இசைவாணன் பாடிக்கொண்டிருந்த மங்கல வாழ்த்துப் பாடலுக்கு எவருமே செவிசாய்க்கவில்லை.

மக்கள் கூட்டம் கட்டுக்கடங்காததாயிற்று.

நவரத்தினம் இழைத்த முடியை மன்னனின் தலையிலே வழக்கத்திற்கேற்றவாறு ஓர் உழவன் சூட்டினான்.

அவையிலிருந்த நல்லவர் அப்பொழுதுதான் மன்னனின் முகத்தை நன்கு பார்த்தார். உற்று உற்றுப் பார்த்தார். கண்களைக் கசக்கிக்கொண்டு பார்த்தார். அரியணையில் இருந்த மன்னன் அவர் விரட்டியடித்த அவருடைய நான்காவது பிள்ளைதான்! நல்லவர் மூர்ச்சையாகிக் கீழே சாய்ந்தார்!

★



உள்ளத்தாற் பொய்யாத உயர்வுநிலை ஒன்று
ஊர்வாழத் தான்தேயும் உணர்ச்சியதி ரண்டு
வெள்ளத்தோ டுறவாடும் அன்புமனம் மூன்று
வெறும்வார்த்தை இல்லாத சொற்செட்டு நான்கு
கள்ளத்தாற் றளர்வோர்க்கு அறிவூட்டல் ஐந்து
கலைக்கூடம் எழில்காண வளந்தேக்கல் ஆறு
அள்ளத்தான் குறையாத கருத்தோட்டம் ஏழு
அறிஞர்க்கோர் வழியென்னும் மெய்வாழ்வு எட்டு

ஒழுக்கத்தாற் பிறர்போற்றும் உயர்வாழ்வு ஒன்ப(து)
உள்ளன்பிற் குலஞ்சேர்க்கும் நற்பண்பு பத்து
பழக்கத்திற் கினிதான தன்மைபதி னென்று
பணிவுக்கோர் நாணலெனும் நிலைமைபனி ரெண்டு
கலக்கச்சோர் வறியாத ஆண்மைபதின் மூன்று
கண்மறைந்த பின்பேசாப் பெருந்தன்மை யோடு
விளக்கத்தாற் பலர்நெஞ்சை வெற்றிபெறு செம்மல்
வீரத்தின் இடம்என்று கூட்டுபதி னாறு

அங்கத்தின் அசைவுக்குள் அரசியலின் தேக்கம்
அணுவுக்குள் அணுத்தேடும் ஆராய்ச்சிப் பாக்கம்
சிங்கத்தைக் கொல்லாமை நோன்புபெறச் செய்து
திருநாட்டின் வாழ்வுக்குப் புதுப்பாடம் கண்டு
தங்கத்தில் வைரத்தின் நீரோட்டம் பார்க்கும்
தன்மைத்தாய்த் தமிழ்கற்ற பேராளன் எங்கள்
அங்கத்தாற் றலையான அண்ணாவின் பெருமை
அறிவுக்கோர் வீடாக இருபத்தி நான்கு !

வைவாரின் முன்தோன்றி வாழ்த்துக்கள் பெற்றும்
வாலாட்டும் பலபேரைத் தலையாட்ட வைத்தும்
நைவாரின் வறுமைக்கு 'நம'னாக நின்றும்
நடிப்பாரை உலகோடு சமமாகச் செய்தும்
மைவாங்கும் விழியாரை மாதாவென் றழைக்கும்
மாண்புக்கு வழிகோலிப் பண்பாடு காத்தும்
தைவார்க்கும் பொங்கற்குத் தனித்தன்மை தந்தும்
தமிழ்காக்கும் செயலோடு முப்பத்தி ரண்டு !

முகம்பார்த்து அகங்காணும் மூடாத விழிகள்
முதலாளி கண்டஞ்சும் நிறங்கொண்ட இதழ்கள்
செகங்கண்டு சிலிர்ப்பெறும் சீரான கைகள்
தென்னாட்டு அன்பெல்லாம் துயில்கொள்ளும் நெற்றி
அகம்பற்றி உரைத்தற்கோர் அழகான வார்த்தை
அய்யய்யோ உலகத்தில் இனும்தோன்ற வில்லை.
யுகம்தேய்ந்து போனாலும் பெயர்நிற்கு மென்றால்
ஒருவர்க்கே அண்ணாவென் றுரைநாற்ப தன்ப !

தமிழுக்கு முதல் இடம்

ஒரு நாட்டில் பெரும்பாலான மக்கள் என்ன மொழி பேசுகின்றனர்களோ அந்த மொழியிலேயே ஆட்சி முதல் ஆடல் பாடல்வரை எல்லாம் நடைபெறுதல் வேண்டும். அப்படி இல்லையானால் அது அந்த நாட்டிற்கே தீமையாக விளையும். அந்த நாட்டு மொழி பல வகையிலும் குறைபாடு உடைய மொழியாகவும் இருக்கலாம். வேறு நாட்டு மொழி அதைவிடச் சிறப்பு உடையதாகவும் இருக்கலாம் ஆனாலும் அந்த நாட்டின் வாழ்வில் நாட்டு மொழிக்கே முதன்மையான இடம் இருக்கவேண்டும். ஓர் இரு துறைகளில் மட்டும் அல்ல. பல துறைகளிலும் முதல் இடம் இருக்க வேண்டும். வேற்று நாட்டு மொழி எவ்வளவு சிறப்பு உடையதாக இருந்தாலும் முதல் இடம் பெறக்கூடாது. அதனால் விளையும் பயன் கருதி அதற்கு இரண்டாம் இடம் தேவையானால் தரலாம். அவ்வாறு செய்தால்தான் அந்த நாட்டு மக்களின் வாழ்வு உட்பகையும் பிளவும் குழப்பமும் இல்லாததாக இருக்க முடியும். குறிப்பிட்ட சில பயன் கருதி வேற்று மொழிக்கு இடம் கொடுத்தால் நிகழ் காலத்தில் தீமையற்ற நன்மை விளைவதுபோல் தோன்றும். ஆனால் காலப் போக்கில் நன்மையும் தீமையாக மாறி விளைந்து விடும். ஆகையால் அப்போதைக்கு ஏற்படும் பயனைமட்டும் கருதாமல் நாட்டின் எதிர்கால வாழ்வையும் கருதி நிலையான நன்மைக்கே வழி வகுக்க வேண்டும். பல நூற்றாண்டுகளுக்கு முன்னே தமிழ் நாட்டில் கோவில்களில் தமிழ் மொழிக்கு இடம் தராமல் வட மொழியை அங்கு விளங்க வைத்தார்கள். அதனால் அன்று ஒரு தீமையும் ஏற்படவில்லை. அந்த விதை காலப் போக்கில் முளைத்து வளர்ந்து இன்று தீமையை விளைத்து வருகின்றது. தமிழ் நாட்டில் இன்று உள்ள வகுப்புப் பூசலுக்கும் வட மொழி - தென்மொழி போராட்டத்திற்கும் அன்று செய்த அந்தத் தவறே காரணம் எனலாம். அன்று விதையாக இருந்தது இன்று மரமாக வளர்ந்துள்ளது. இன்று காணும் இந்தப் பெரிய மரத்திற்கு அன்று கண்ட அந்த விதை காரணம் அல்ல என்று சிலர் கருதலாம். வேறு காரணமும் கூற முயலலாம். அந்த முயற்சியால் பயன் இல்லை. உண்மையை உணர்ந்தால் தான் பயன் உண்டு. ஆழ்வார்களும் நாயன்மார்களும் தமிழ் பாடி வளர்த்த அந்தக் கோயில்களில் தமிழுக்கு முதல் இடம் அளித்திருந்தால் இன்று எத்தனையோ வம்புகள் விளையாமல் தடுத்திருக்க முடியும். கோயில்களில் தமிழ் முழக்கம் வேண்டும் என்ற கிளர்ச்சிக்கே இடம் இல்லாமல், அதை ஒட்டி வளரும் பூசலுக்கும் இடம் இல்லாமல் அமைதி நிலவியிருக்கும்.

அன்று செய்த தவறு போலவே நேற்றும் ஒரு தவறு செய்தோம். இசைத் துறையில் தலைமுறை தலைமுறையாகத் தமிழ்நாடு வளர்த்து வந்த பண்கள் பல. அந்தத் தமிழ் இசை கருநாடக சங்கீதம் என்ற பெயரால் இன்றும் போற்றப்பட்டு வருகின்றது. ஆனால் பழைய பெயர்கள் இல்லை. ஆனால் புதியதொரு கலைபோல் பலர் மருள்கின்றனர்கள். பழைய பண்களின் இலக்கணம் இன்று விளங்கவில்லை. அவற்றின் பெயர்களும் கேட்டறியாத பெயர்கள்போல் உள்ளன. இங்குள்ள ராகங்களின் பெயர்களோ தமிழுக்குத் தொடர்பு இல்லாதவைகளாக உள்ளன. கருநாடக சங்கீதத்தைக் கண்டு பலர் மருளுதலுக்குக் காரணம் அதுதான். இவ்வளவு மாறுதலும் ஏற்பட்டதற்குக் காரணம் இசைக் கலையில் தமிழ் மொழிக்கு முதல் இடம் இல்லாமல் போன குறைதான். அன்று நேர்ந்த அந்தக் குறையே இன்று தமிழ் இசைப் போராட்டம் நடக்கக் காரணம் ஆயிற்று அதன் தொடர்பாக ஏற்பட்டு இன்றும் அங்கங்கே இருந்து வரும் பூசல்களுக்கும் அதுவே காரணம் ஆகும். ராகங்களின பெயர் மாறியது ஒருபுறம் நிற்க; அந்த ராகங்களுக்கு உரிய பாட்டு, தமிழர் பொருள் உணரக் கூடிய தமிழ்ப் பாட்டாக இல்லாமல் போனதுதான் குறை. கருநாடக சங்கீதத்தில் எல்லாப் பாட்டும் தமிழாக இருக்க வேண்டும் என்பது கருத்து அல்ல. கருநாடக சங்கீதம் தெலுங்கு நாட்டில் வளரும்போது தெலுங்குப் பாட்டுக்களின் துணை தேடலாம். மைசூரில் வளரும்போது கன்னடப் பாட்டுக்களின் துணையைத் தேடலாம். வங்காள மாகாணத்தில் வளர்வதாக இருந்தால் வங்காளிப் பாட்டுக்களின் துணையைத் தேடலாம். தமிழ்நாட்டில் வளரும்போது தமிழ்ப் பாட்டுக்களின் துணையைத் தேடவேண்டும் என்பதுதான் கருத்து ஆகும். கல்யாணி ராகத்தைத் தமிழர்கள் தமிழ்ப்பாட்டின் துணை கொண்டு அனுபவிக்க வேண்டும் அதே ராகத்தைக் கன்னடத்தார் அனுபவிக்கும்போது கன்னட மொழிப் பாட்டுத்தான் துணை செய்யும். அதுபோலவே தெலுங்கு மக்கள் அனுபவிப்பதற்குத் தியாகராயர் பாடல் முதலான தெலுங்குப் பாட்டுக்கள் மிகுந்த நன்மை பயக்கும். இந்த அளவிற்குத் தெளிவும் உரிமையும் வளரவிட்டிருந்தால் இன்று இசைத் துறையில் மொழிப் போராட்டம் தலை எடுத்திருக்காது. போராட்டம் வளரும்போது போராடும் மக்களைப் பார்த்துக் குறை கூறுவதனால் பயன் இல்லை. அதற்குக் காரணமான தவறு முன்னமே நேர்ந்துவிட்டதை எண்ணி வருந்த

டாக்டர்
மு. வரதராசனார்

வேண்டும். விதைத்தது விளைந்தே தீரும். விளையும்போது அங்கு இருப்பவர்களை நோக்கி நோவதனால் பயன் இல்லை. விதைத்த காலத்தை எண்ணியே வருந்த வேண்டும்.

அதற்குப் பிறகு நேர்ந்த தவறு ஆட்சித் துறையில் தமிழுக்கு முதல் இடம் அளிக்காமல் போனது ஆகும். அதற்காக நாம் யாரை நொந்து கொள்வது? ஆங்கிலேயரிடம் அடிமைப்பட்டுக் கிடந்த நம் அடிமைத் தனத்தையே நொந்துகொள்ள வேண்டும். அடிமை வாழ்வு நீங்கி உரிமை வாழ்வு பெற்றுள்ள நாம் இனியேனும் அந்தக் குறை தீர வழி வகுக்க வேண்டும. உரிமைபெற்ற எந்த நாட்டிலும் அன்னிய மொழி ஆட்சி மொழியாக இருப்பது இல்லை. ஆகவே இங்கும இருக்க முடியாது.

ஆட்சி மொழிக்கு எப்போதும் செல்வாக்கு மிகுதி. ஒரு மொழி ஆட்சித் துறையைக் கைப்பற்றிவிட்டால் மற்றத்துறைகள் தாமே வந்து அதனிடம் சேரும். ஒலியிலும் இலக்கணத்திலும் சொல் வகையிலும் மிக்க குறைபாடுள்ள மொழியாக இருந்தும், ஆங்கிலம் உலக மொழியாக வளர்ந்துள்ளதற்குக் காரணம் அதுதான். 'அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி' என்ற பழமொழி மொழித் துறைகளுக்கும் பொருந்தும். ஆட்சித் துறையில் உள்ளது எந்த மொழியோ அந்த மொழியே கல்வி, தொழில், வாணிபம், கலை, பொழுது போக்கு முதலான எல்லாத் துறைகளிலும் செல்வாக்குப்பெற்றுவிடும். நாடோடிகளாய்த் திரியும் குருவிக்காரர் மொழியாக இருந்தாலும் அதை ஆட்சி மொழி ஆக்கிவிட்டால் ஒரு நூற்றாண்டு அளவில் அதுவே பல துறைகளிலும் வளர்ந்த ஒரு மொழியாகிவிடும். அவ்வாறே எவ்வளவு சிறப்புடைய மொழியாகஇருந்தாலும் ஆட்சித் துறையில் அதற்கு இடம் இல்லையென்றால் மற்றத் துறைகளில் அதன் வாழ்வு தானாகவே மங்கி விடும். இது இயற்கை.

தமிழ் நாட்டில் பத்திரிகைத் துறையில், தமிழ், நேற்று வரையில் பிற்போக்காக இருந்ததற்குக் காரணம், ஆட்சி மொழியான ஆங்கிலத்திற்கு இருந்த செல்வாக்கே ஆகும். இவ்வாறு பத்திரிகைத் துறையில்தமிழ் செல்வாக்குடன் விளங்க முடியாமல் இருந்ததனாலும் நாட்டிற்குத் தீமை விளைந்தது; இன்னும் விளைந்து வருகின்றது. என்ன தீமை? தமிழ் நாட்டில் ஆங்கிலப் பத்திரிகைகள்தான் மிகச் செம்மையாக வளர்ந்துள்ளன. பெரிய அளவில் விற்பனையும் ஆகின்றன. அந்தப் பத்திரிகைகள் நாட்டு மொழித் தொடர்பு இல்லாத காரணத்தால் நாட்டு மக்களின் உள்ளத்தொடர்பை இழந்துவிட்டன. அதனால் தமிழ்நாட்டுச் செய்திகளை விட வெளி உலகச் செய்திகளுக்கே சிறப்பிடம் தருகின்றன: நாட்டில் நெருக்கடியான போராட்டம் நடக்கும்பொழுதும் தமிழ் மக்களின் நன்மையைப் பெரிதாகக் கருதாமல் வெளியுலகத்து மதிப்பையே பெரிதாகக் கருதி வாய்மூடிக் கிடக்கின்றன அந்தப் பத்திரிகைகள் வாழ்வது தமிழ் நாட்டில்; ஆனால் தமிழ் மக்களின் போராட்டங்களில் அவை தீண்டாமையைமேற்கொள்கின்றன. மனைவி மக்களோடு வாழும் ஒரு குடும்பத்தில் விருந்துண்டு அந்தக் குடும்பத் தலைவனுக்குத் துறவறம் போதிக்கும் அமாவாசைச் சாமியார்கள்போல் தமிழ்நாட்டு ஆங்கிலப் பத்திரிகைகள் சில வேளைகளில் தமிழ் மக்களுக்குப் பரங்க நோக்கம் போதிக்கின்றன. மொழி வழியாகத் தமிழ் நாடு அமைக்கும் முயற்சி, சென்னை தமிழருக்கு ஆக்கிய போராட்டம். வடக்கெல்லையாகிய சித்தூர் மாவட்டத் தமிழர்களின் கூக்குரல். தெற்கே நாஞ்சில் நாட்டுத் தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் கொடுமை, தமிழைக் கல்வி மொழியாக்கச் செய்யப்படும் முயற்சி முதலிய பலவற்றிலும் இந்த ஆங்கிலப் பத்திரிகைகள் அமாவாசைச் சாமியார்களாகவே நடந்து கொண்டன; நடந்துகொண்டு வருகின்றன. இதன் பயனாக இன்று தமிழ் மக்கள் பெரும்பாலர் உள்ளத்தில் அந்தப் பத்திரிகைகளைப் பற்றி நல்ல எண்ணம் இல்லாமல் போயிற்று. இரத்தத்தை உறிஞ்சி வாழும் உண்ணியைப் போலவே அவற்றைச் சிலர் வெறுக்கவும் வெறுக்கின்றார்கள். இவ்வளவிற்கும் காரணம் என்ன? பத்திரிகைத் துறையில் தமிழுக்கு முதல் இடம் இல்லாமல்போன குறைதான். தமிழ்ப் பத்திரிகைகள் ஒரு லட்சம் இரு லட்சம் பிரதிகள் பரவுகின்றன என்றும், ஆங்கிலப் பத்திரிகைகள் ஏழாயிரம் எட்டாயிரம் பரவுகின்றன என்றும் சொல்லக்கூடிய நிலைமை வந்துவிட்டால், இந்த ஆங்கிலப் பத்திரிகைகள் அப்போதுதான் தமிழ் மக்களைப் பற்றிச் சிந்தனை செய்யத் தொடங்கும். ஆனால் இன்றைய நிலைமை நேர்மாறாக உள்ளது. சில தமிழ்ப் பத்திரிகைகளும் ஆங்கிலப் பத்திரிகைகளுக்குப் பின்பாட்டுப்பாடி அமாவாசைச் சாமியார்களாக வாழமுயல்கின்றன. இந்த நிலைமை நீடிக்காது என்பதை விரைவில் காண்போம். தமிழ் நாட்டில் தமிழ் ஆட்சி மொழி ஆகிவிட்டால் பத்திரிகைத் துறையிலும் தமிழ் முதல் இடம் பெற்றுவிடும். மேலே சொன்ன குறையும் கசப்பும் குழப்பமும் நீங்குவதற்கு வழி அதுதான். ★



க. நாராயணன்

நானும் என்னுடைய நண்பர்கள் சிலரும் திருவனந்தபுரம் போயிருந்தோம். என்னுடன் வந்தவர்களில் சிலர் குமரிமுனையைப் பார்க்க வேண்டுமென்று ஆசைப்பட்டார்கள். ஆனால் குமரிமுனையை நினைக்கும்போது என்னுள்ளத்திலே இன்பக்கனவுகள் தோன்றி மறைவதுபோல, துன்பச்சுமையும் தாக்குகிறது. முதலில் நான் வர மறுத்தேன். நண்பர்களின் வற்புறுத்தலை மறுக்கமுடியாமல் கடைசியாக அவர்களுடன் புறப்பட்டேன்.

எல்லோரும் குமரியை அடைந்தோம். தமிழகத்தின் தெற்கெல்லை குமரி. முக்கடலும் சந்திக்குமிடம் அது. பக்தர்களின் கூட்டமும் அங்கு வருவதுண்டு. அதைப் பார்த்த என் நண்பர்களின் உற்சாகம் எல்லை கடந்துவிட்டது. ஆனால் குமரியை அடைந்த பிறகு பழைய நினைவுகள் என்னைச் சித்திரவதை செய்ய ஆரம்பித்தன. அந்த முகம் முதன் முதல் என்னைக் காதலித்த அந்த அழகியின் உருவம் நினைவில் எழுந்தது. நானும் என் வாழ்வில் அந்தப் பெண்ணைத்தான் கண்டதும் காதலித்தேன். அவள் இப்போது எங்கே இருப்பாள்? எப்படியிருப்பாள்? இதே குமரிக்கரைதான் எங்கள் சந்திப்பை உருவாக்கியது. எங்கள் காதலை வளர்த்தது. ஆனால் பல ஆண்டுகள் கழித்து, அன்று பார்க்கும்போது மங்கிப்போன நினைவுகள் மீண்டும் தலைதூக்கின.

என் நண்பர்கள் ஆனந்தத்துடன் கடலில் இறங்கிக் குளித்தனர். அப்போது கடல அலைகள கரையில் மோதி மோதித் திரும்பின. என் உள்ளத்திலும் அந்தப் பழைய இன்பநினைவுகள் மோதி மோதி எழுந்தன. கடலில் இறங்கிக் குளிக்க வேண்டுமென்றுதான் நினைத்தேன். ஆனால் என் மனம் தனிமையை நாடியது. கால்கள் தானாகவே நடந்தன. தனிமையான இடத்தில் போய் உட்கார்ந்தேன். அந்த அழகியுடன்-அவள் பெயர் கல்யாணி-பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு அதே இடத்தில் அமர்ந்துதான் இனிக்க இனிக்கப் பேசிக்கொண்டிருந்தேன். எங்கள் எதிர்கால இன்பவாழ்வுக்கு அஸ்திவாரம் போட்டுக்கொண்டிருந்தோம். இப்போது அவள் எங்கேயிருக்கிறாளோ?

கோடை விடுமுறைக்கா அப்போது கல்லூரி மூடப்பட்ட சமயம் என் நண்பன் மணிவர்மன் சுசீந்திரத்தில் விடுமுறையைக் கழிக்கலாமென்று என்னை அழைத்தான். எனக்கும் குமரிமுனையைப் பார்க்க ஆவல். அதனால் அவன் அழைப்பை உடனே ஏற்றுக்கொண்டேன்.

சுசீந்திரத்தில் ஒருவாரம் பொழுதுபோக்கினோம். அப்போதெல்லாம் காலையிலோ அல்லது மாலையிலோ கன்னியாகுமரிக்கு இருவரும் சென்று வருவோம். என் நண்பன் கடவுள் பக்தியுள்ளவன். கன்னியாகுமரிக்குச் சென்றால் கோயிலுக்குப் போகாமல் திரும்பமாட்டான். கோயிலுக்குள் சென்றால் திரும்பிவர ஒருமணி நேரம் பிடிக்கும். அதுவரையில் நான் கடற்கரையில் அமர்ந்து, மோதும் அலைகளையும், கடலில் ஆங்காங்கே தலைதூக்கி நிற்கும் குன்றுகளையும், குளிப்பதற்கு வந்து போகும் மக்களையும் பார்த்தவாறு அமர்ந்திருப்பேன். அப்போதுதான் கல்யாணி என் பார்வையில் அகப்பட்டாள்.

அவள் மலையாளப் பெண். இடையில் நான்கு முழத்துண்டும், உடம்பில் ரவிக்கையும் அணிந்திருப்பாள். கழுத்திலே கருகமணி. இதைத் தவிர அவள் உடலில் வேறு ஆபரணங்களில்லை. பார்ப்பதற்கு எளிமையாகத் தோன்றினாலும் அவள் அழகு பார்ப்பவர்களைக் கவர்ந்துவிடும் சக்தி வாய்ந்தது. பருவத்தால் பூரித்துநிற்கும் அவளுடைய அவயவங்கள் வாலிபர்களின் மனதிலே போதையை ஏற்றும். சாந்தம் தவழும் முகம். அந்தப் பொல்லாத கண்கள்!- அடேயப்பா!- அதை எப்படி வர்ணிப்பது? அந்தக் கண்கள் எந்த ஆடவனையாவது பார்த்துவிட்டால், பிறகு அந்த ஆடவன் அவளைப் பின்தொடர்ந்து செல்வதைவிட வேறு வழியில்லை. அந்தக் கண்களின் பார்வையில்தான் நானும் அகப்பட்டுக்கொண்டேன்.

அவள் கடலில் இறங்கிக் குளித்தாள். நான் சிலைபோல அமர்ந்து அவளையே பார்த்துக்கொண்டிருந்

— 22-ம் பக்கம் —

கண்ணியத்தை இழந்தவன்—கடமையை மறந்தவன், மனிதாபிமானத்தைச் சிறிதும் மதிக்காதவன்—இவன் மன்னவனேயாயினும், அல்லது மகான் என்று கூறப்பட்டாலும், மேற்கண்ட நெறியிலிருந்து தவறுவானேயானுல், அவனை மக்கள் சமுதாயமும் வெறுத்து ஒதுக்கும். அதுமட்டுமல்லாமல், அவனது போக்கினை எடுத்துக்காட்டுமளவுக்கு கொடியோனெனச் சித்தரித்துக் காட்டப்படும்.

இம்முறையை மேல்நாடு கடைப்பிடித்து வருகிறது. ஆனுல் நம் நாட்டிலோ, அதற்கு நேர்மாருக நேர்மையிலிருந்து எவ்வளவு அதிகப்படியாகத் தவறி நடக்கிருர்களோ அவர்களுக்குத்தான் மகான், ரிஷி, முனிவர் என்றெல்லாம் பட்டத்தையும் சூட்டி அவர்களின் பாதங்களைத் தாங்கி நின்று வருவர் மக்கள். அந்த அவல நிலைக்கு மக்கள் சமுதாயத்தை மடமையிலாழ்த்தி வைக்கப்பட்டிருக்கிறது இங்கே!

இன்னும் விசித்திரம் என்னவென்ருல், கண்ணியம், கடமை ஆகியவைகளிலிருந்து தவறுபவர்கள் ஆண்டவன் பேரால் தங்களின் சேஷ்டைகளைச் செய்வார்களேயானுல், அவர்களுக்குக் கிடைக்கும் கீர்த்தியும் பேசப்படும் தத்துவார்த்தமும் அலாதியாகயிருக்கும்! இது நம்நாட்டில் கண்டுவரும் கோமாளிக் கூத்துகள்! இதனை விளக்க ஓர் சம்பவத்தை எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

★

ரோம் நகரம் தீப்பற்றிக்கொண்டு எரிந்தபோது, நீரோ மன்னன் வயலின் வாசித்துக் கொண்டிருந்தான். நீரோ மன்னனின் கொடுங்கோன்மையையும், மனிதாபிமானமற்ற நிலையையும் விளக்க நீரோ மன்னனின் செய்கையை வரலாற்று ஆசிரியர்கள் ஓர் படப் பிடிப்பாகக் கொண்டனர். அதனை நம் நாட்டிலுள்ள வைதீகர்களிலிருந்து வையத்தை வாழவைக்கும் பணியில் ஈடுபட்டுள்ள பொது நலத் தலைவர்கள்வரை மேற்கோளாகக் கொண்டு, அக்ரமத்திற்கு நீரோ மன்னனின் பிற்போக்கினை எடுத்துக் கூறுவர். இந்த விளக்கத்தையும் நாம் காதாரக் கேட்டிருக்கிறோம்.

நீரோ மன்னன் மனம் இரும்பாதுருப்பிடித்துப் போயிற்று, தலைநகரம் தீப்பிடித்து மக்கள் தத்தளிக்கும் வேளையிலே, அக்கொடியோன் சிறிதும் கவலையின்றி, பொறுப்பின்றி வீணை வாசித்துக்கொண்டிருந்தானே என்று கடாவுவர்—கண்டிப்பர்.

மக்களுக்குச் சமயத்தில் செய்ய வேண்டிய உதவியை மறந்த நீரோ மன்னனுக்கு அந்நாட்டு மக்களும், பொதுவாக சரித்திராசிரியர்களும் சூட்டிய பட்டம் இதயமற்றவன—கொடுங்கோலன்—மனிதப் பண்பற்றவன் என்பவைகளே.

★

ஒருசமயம் மிதுலாபுரி தீப்பிடித்துக்கொண்டிருந்தது. அந்நாட்டு மன்னனுகிய ஜனகன, என்ன செய்தான் தெரியுமா? ஓடோடியும் குடி மக்களுக்குத் தொண்டு புரிந்தார், ஆபத்திலிருந்து விடுவித்தார்; அபயம் அளித்தார் என்றுதானே எண்ணுவீர்கள்—அதுதான் இல்லை.

[அந்தச் சமயம், மிதுலாபுரி தீப்பிடித்துக்கொண்டு எரிந்த சமயம்,

ஜனக மகாராஜா அரண்மனையில், வேதாந்தம் படித்துக்கொண்டிருந்தார்! மக்களின் உயிருக்கும் உடமைக்கும் பெருஞ்சேதம். நகரின் நாற்புறமும் நெருப்புச் சூழ்ந்து கொண்டதால், உற்றுர் உறவினர், தாங்கள் பெற்றெடுத்த செல்வச் சிருர்கள், அனைவரையும் இழந்து மக்கள் தவித்துக்கொண்டிருந்த நேரத்தில், மக்களின் துயரைத் துடைக்க வேண்டிய பொறுப்பையேற்றுள்ள ஜனக மகாராசன், சிறிதும் மனம் குழம்பாமல், மனச்சாந்தி கொண்டு வேதாந்த விசாரணையில் ஈடுபட்டிருந்தார்! அவரின் எண்ணம் எவ்வளவு உரமானது! ஞானமும் எவ்வளவு உறுதியானது, அரண்மனையைத் தீச்சுடர் கவ்விக்கொண்டாலும் அந்தக் **'கண்ணியவான்'**—ஜனக மகாராஜன்-ஆண்டவன் அடி வணங்கி ஆத்மார்த்திக விசாரணையில் ஈடுபடும் தாம் காரியத்தை மறக்கவில்லையே, அவனல்லவோ மன்னன் என்று வாயார வாழ்த்தினராம் வைதிகபுரியினரும்! வாழ்த்தியது மட்டுமா--அந்த ஜனக மன்னனுக்கு ராஜரிஷி என்ற பட்டமும் சூட்டப்பட்டது!

ரோம்-பெரு நெருப்பில் சிக்கிய போது வயலின் வாசித்து மக்களின் கண்டனத்தையும் சரித்தத்தில் இழிவிடத்தையும் பெற்ருன்-நீரோ!

மிதுலாபுரி தீப்பிடித்தெரியும் போது மன்னன் ஜனகன், வேதாந்தம் படித்து, பாராட்டுதலையும் புகழையும், ராஜரிஷி என்ற பட்டத்தையும் பெற்ருன்!

இந்த இருவரின் செயலும் ஒரே தன்மையானதுதான் — எனினும் அங்கே அநீதிக்கு ஏற்ற தீர்ப்பு.

இங்கே-வைதிகபுரியினரின் பித்தலாட்டத்தினுல், கடமையிலிருந்து

என். வி. நடராசன்

தவறியவனுக்கு — மனிதாபிமானத்தை இழந்த மடமையிலாழ்ந்திருந்தவனுக்கு புகழ்—பட்டம்!

★

ஜனகன் மட்டுந்தானு — மக்களின் உடமையைத் தமது விவேகமற்ற விளையாட்டுகளுக்கு--சூதாட்டத்திற்கு பணயம் வைதத பஞ்ச பாண்டவர்களுக்கும், அவர்களின் மூத்தவனுககும் இந்நாட்டு வைதிகபுரியினர் சூட்டியுள்ள பட்டம், தர்மராசர்—உத்தமர்!



கிண்டி குதிரைப் பந்தயத்தில், தான் உழைத்துப் பெறும் ஊதியத்தைக் கொண்டுபோய்த் தொலைத்துவிட்டு, மனச் சோர்வுடன் திரும்பும் ஏமாளிகளுக்குச் சூட்டப்பட்டுள்ள பெயர் சூதாடி! இவர்களின் போக்கினை நாம் ஆதரிப்பதாகக் கருதக் கூடாது. கிண்டி குதிரைப் பந்தயத்திற்குச் செல்பவர்களாகிலும் தங்களின் சொந்தப் பணத்தைக் கொண்டு செல்கின்றனர். (அதுவும் அரசியலார் வகுத்துள்ள சட்டப்படி) ஆனுல் பஞ்ச பாண்டவர்கள் என்ற அந்த மகா புண்ணியவான்கள் தங்களுக்கெனயிருக்கும் தனிப்பட்ட பொருளை வைத்து சூதாட்டத்தில் ஈடுபட்டிருப்பின் தொலைந்தது எனலாம். ஆனுல் மக்கள் அனைவருக்கும் உடமையாகிய நாட்டையே பணயம் வைத்துச் சூதாட்டத்தில் ஈடுபட்டுத் தோல்வியுற்றவர்களுக்கு இந்நாடு அளித்த பட்டம் தர்ம புத்திரர்கள்!

இதுபோன்றே குரு பத்தினியைக் கெடுத்தவன் தேவன் என்றும், கற்பிலிருந்து தவறியவர்கள் தேவிகள் என்றும் போற்றும்படியான அர்த்தமற்ற சம்பவங்கள் இங்கே தலைவிரித்தாடச் செய்திருக்கிறது!

இதனுல்தான் போலும் ரிஷி மூலம், நதி-மூலம் விசாரிக்காதே-அது மகாபாபம் என்று வைதீகம் கட்டளையிட்டு மக்களின் சிந்தனைக்கு வழிவிட்டு விலகாமல் குறுக்கே நின்று வந்திருக்கிறது.

அந்தகைய மடமையிலிருந்து மக்களைத் தட்டி எழுப்பிய பெருமை தென்னகத்தைப் பொறுத்தவரை சுயமரியாதை இயக்கம், திராவிட முன்னேற்றக் கழகம் ஆகியவைகளின் தீவிர பணியேயாகும்.

ராஜரிஷி-மகான் என்றெல்லாம் நம்நாட்டில் பெயர் சூட்டப்பட்டுள்ளவர்களின் நடவடிக்கைகள் அனைத்தும் மூலாம் பூசப்பட்ட பொருளின் அவலட்சணத்தைப் போன்றதாயிருக்கிறதென்பதை அறிவியக்கத்தின் பிரச்சாரத்தின் வாயிலாக தெற்றென விளக்கப்பட்டு, இன்று ஓரளவு விழிப்புணர்ச்சியும் ஏற்பட்டு வருகிறது.

அந்தத் தன்மான உணர்ச்சி மேலும் வளர்ந்து நம்நாடு இனிதே வாழ திராவிடர் திருநாளாகிய இன்று-தென்றலின் மூலமாக தரப்படும் சிறந்த விருந்தினைச் சுவைத்துக்கொண்டு உறுதி கொள்வீராக.

★

- 19-ம் பக்கத் தொடர்ச்சி -

தேன். அவளுடைய கண்களும் என்னை அடிக்கடி கவனிக்கத் தவறவில்லை. சிறிது நேரத்தில் குளித்துவிட்டு, ஈரப்புடவையுடன் எழுந்து வெளியே வந்தாள். உலகத்திலுள்ள அழகு முழுவதையும் பெண்ணிடம் காணலாம் என்று சிலர் சொன்னதை அதுவரை நான் நம்பாமலிருந்தேன். ஆனால் உடலுடன் ஒட்டிய ஈரத்துணியுடன் கல்யாணி கரையேறிச் செல்லும்போது, அது பேருண்மையாக எனக்கு விளங்கிற்று. அவள் என்னையும் தாண்டிச் சென்றுவிட்டாள். போகும்போதுகூட, சற்றுத் திரும்பி என்னை ஒருமுறை அந்தப் பொல்லாத விழிகளால் பார்த்துவிட்டுத் தான் சென்றாள்.

என் நண்பன் எப்போது கோயிலிலிருந்து திரும்பிவந்தான் என்பது எனக்குத் தெரியாது. என் மனதை அவளிடம் பறிகொடுத்துவிட்டு, நான் மட்டும்தான் அங்கேயிருந்தேன். அவன் இருமுறை என்னை அழைத்துப் பார்த்துவிட்டு என் உடலைப்பிடித்து உலுக்கினான். அதற்குப் பிறகுதான் நான் சுய உணர்வு பெற்றேன். ஆனால், இந்தச் சந்திப்பை மணிவர்மனிடம் நான் சொல்லவேயில்லை.

அதன் பிறகு மாலை நேரங்களில் கூட குமரிக்கரையை நான் நாடி வருவதுண்டு. சில சமயங்களில் காலையிலும் மாலையிலும் வருவேன். நான் அடிக்கடி வருவதை கல்யாணியும் அறிந்துகொண்டாள். சில நாட்கள் ஒருவரையொருவர் பார்ப்பதுடன் பிரிந்துவிடுவோம்.

பிறகு, பார்த்துப் புன்முறுவல் பூத்தோம். ஒருநாள் அவள் கடலில் குளித்துக் கொண்டிருந்தாள். நானும் தைரியத்தை வரவழைத்துக்கொண்டு கடலில் இறங்கினேன். என்னைப் பார்த்தாள். வழக்கம் போல் புன்சிரிப்பை உதிர்த்தாள்.

'நீங்கள் எந்த ஊர்?" என்று இனிய குரலில் கேட்டாள். மலையாளப் பெண்ணாக இருந்தும் தமிழ் அழகாகப் பேசினாள். இந்தச் சந்தர்ப்பத்தை நான் எப்படி இழக்கமுடியும்? பதில் சொன்னேன். நானும் அவளை விசாரித்தேன். கன்னியாகுமரிக் கோயிலில் அவள் தந்தை வேலை பார்க்கிறாராம். அவருக்கு கல்யாணி ஒரே மகளாம். எங்கள் பேச்சுக்கு இடையூறாக பலர் அங்கு வந்து குளிக்க ஆரம்பித்தனர். அவர்களைப் பார்த்ததும் கல்யாணி கரையேறிச்சென்றுவிட்டாள்.

எங்கள் சந்திப்பு காலையிலும், மாலையிலும், சில நாட்களில் இரவிலும்கூட நடைபெற்று வந்தது. கடற்கரை மணலிலே, பூரணச்சந்திரனின் ஒளி வெள்ளத்திற்குக் கீழே, கடல் அலைகள் பேரிரைச்சலுடன் மோத, இரண்டு நாட்கள் நாங்கள் இருவரும் தனித்துப் பேசிக்கொண்டிருந்திருக்கிறோம். முடிவில் ஒருவரையொருவர் விட்டுப் பிரியமுடியாத அளவிற்கு காதல்கொண்டோம். உண்மையாகவே காதல் என்ற பொருளுக்கு அர்த்தம் இதுதான். வெறும் உடலுணர்ச்சியை மட்டும் காதலாக நினைப்பது வெறும் கானல் நீராகத் தானிருக்கும். உள்ளம், உடல் அனைத்தையும் வசப்படுத்தும் கல்யாணிமீது நான் கொண்ட அன்புதான் காதல் என்று இன்றும் நான் நினைக்கிறேன்.

என்னுடைய கலலூரிப் படிப்பு முடிய இன்னும் ஓராண்டு பாக்கியிருந்தது. அதை முடித்துக்கொண்டு, மறு ஆண்டில் கன்னியாகுமரிக்கு வந்து அவளை மணந்து கொள்வதாக அவளிடம் உறுதி கூறினேன். அந்த அபலை என்னைப் பூரணமாக நம்பினாள். என்னுடைய விடுமுறையும் முடிந்தது. சுருக்கமாகச் சொன்னால், என்னுள்ளத்தை அவளிடம் விட்டு, அவள் உள்ளத்தை நான் எடுத்துக்கொண்டு சென்னை திரும்பினேன். இந்த விவகாரம் எதுவும் மணிவர்மனுக்குத் தெரியாது.

அதன் பிறகு நான் சந்தித்த பல பெண்களை கல்யாணியுடன்தான் ஒப்பிட்டுப் பார்ப்பேன். அடேயப்பா! அவளுடைய அழகுக்கும், அன்புக்கும், கவர்ச்சிக்கும் இவர்கள் எந்த மூலை? என் கல்யாணிக்கு ஈடு என் கல்யாணியேதான்.

கல்லூரிப் படிப்பு முடிந்தது. இந்த ஓராண்டில், பலமுறை, கல்யாணியை ஒரு தடவையாவது பார்த்துத் திரும்பிவிடத் திட்டம் போட்டேன். சூழ்நிலையும் வசதியும் இடம்தரவில்லை. ஆனால் என் மனம் கல்யாணியைச் சுற்றியே அலைபாய்ந்து கொண்டிருந்தது. கல்லூரித் தேர்வு முடிந்ததும் மணிவர்மனுக்கு ஒரு கடிதம் எழுதினேன். அதில் நான் சுசீந்திரத்திற்கு வரப்போவதாகத் தெரிவித்திருந்தேன். அங்கேதான் என் வாழ்க்கையில் நான் பெரிய தவறு செய்தேன். அவனுக்கு என்னுடைய வருகையைத் தெரிவிக்காமல் புறப்பட்டிருந்தால் நிச்சயமாகக் கல்யாணியைச் சந்தித்திருப்பேன். கல்யாணியும் என்னுடையவளாகி இருப்பாள். ஆனால், மணிவர்மன் எனக்கு ஒரு தந்தி அனுப்பினான். அவன் மறுநாள் சென்னைக்கு வருவதாகவும், சென்னையில் சந்திக்கும்படியும் குறிப்பிட்டிருந்தான். அவனுக்காக இரண்டு நாட்கள் தாமதித்தேன்.

அவனும் வந்தான். சென்னையில் இருவரும் ஒருவாரம் தங்கிய பிறகு, என் சொந்த ஊராகிய திருச்சிக்குச் சென்றோம். அங்கே எங்கள் வருகையை எதிர்நோக்கி பெரிய செய்தி காத்திருந்தது. என் தாய் மரணப்

போட்டோக்களுக்குச் சிறந்த இடம்!
மதிக்குடி அனந்தர்
போட்டோ ஸ்டூடியோ
உறையூர் (P. O.) திருச்சி.
எங்களிடம் புரோமைடு என்லார்ஜ்மெண்டுகளும் பழைய போட்டோக்களைப் புதுப்பிக்கும் வேலைகளும் விளம்பரத்திற்குரிய சினிமா சிலைடுகளும், லைட், ஆப்டோன் பிளாக்குகளும் சுத்தமாகவும் துரிதமாகவும் குறித்த காலத்திலும் செய்து கொடுக்கப்படும்.
எல்லோரும் விரும்பி வருவது
மதிக்குடி அனந்தர் போட்டோ கலை ஸ்டுடியோவிற்கே!

படுக்கையில் இருப்பதாகச் சொன்னார்கள். கல்யாணியைப் பார்க்கச் செல்லும் திட்டம் தவிடுபொடியாகியது.

சில நாட்களில் என் தாய் இறந்துவிட்டாள். என் தந்தை எனக்கு மணமுடிக்க விரும்பினர். முதலில் கல்யாணியின் உருவம் எதிரே நின்று என்னைத் திருமணத்திற்கு இசையாதிருக்கும்படி வற்புறுத்தியது. நானும் மறுத்தேன். இதனால் எனக்கும் என் தந்தைக்கும் மனக்கசப்பு வளர்ந்தது. கல்யாணியைப் பார்க்கச் செல்லும் திட்டமும் முறிந்தது.

ஆறு மாதங்கள் சென்றன. கல்யாணியைப் பார்த்துவரத் திட்டமிட்டேன். மணிவர்மனுக்குத் தெரிவிக்காமல் புறப்பட்டேன். நாகர்கோயிலிலிருந்து சுசீந்திரத்தில் இறங்காமல் நேராகக் கன்னியாகுமரிக்குச் சென்றேன். ஆனால் நான் அவளைச் சந்திக்கமுடியவில்லை. இன்ப அலைகள் என் நெஞ்சில் மோதிப் புரள, கல்யாணியின் வீடு நோக்கிச் சென்றேன். அங்கே நான் கேள்வியுற்ற செய்தி என் இதயத்தைச் சுட்டுப் பொசுக்கியது. அவளுக்குச் சென்ற மாதம்தான் திருமணம் முடிந்ததாம். கணவனுடன் டெல்லிக்குப் போய்விட்டாளாம். சுக்குநூருகிய இதயத்துடன் ஊருக்குத் திரும்பினேன் கல்யாணி வேறொருவனுக்கு மனைவியாகிவிட்டாள். ஆனல், என் உள்ளத்திலே அவள் நீங்காத நிழல்போல வாழ ஆரம்பித்துவிட்டாள். அவளை நான் மறக்க முயற்சிப்பேன். அது முடிவதில்லை. தாமரை மலர் இதழ் விரித்துச் சிரிக்கும்போது வண்டு வந்து அதன் தேனைப் பருகுகிறது. தேன் பருகிய மயக்கத்தில் தன்னை மறந்து, பறந்து செல்லாமல், மருக்குள் படுத்து உறங்கிவிடுகிறது. இரவு நேரமானதும் இதழ்கள் சுருங்கி தன்னை மூடிக்கொள்கிறது மலர். உணர்ச்சி பெற்ற வண்டு பறந்து செல்லத் துடிக்கிறது. எப்படி அதனால் பறந்துசெல்ல முடியும்? வழியின்றி, மலரைக் குடைகிறது. இந்த நிலையில்தான் என் இதயத்தில் அமர்ந்த கல்யாணியின் உருவமும் என்னைக் குடைந்தது.

ஆண்டுகள் பல கடந்துவிட்டன. என் வாழ்க்கையில் எத்தனையோ பெண்கள் வந்து போனார்கள். சிலர் என்னை முழு மனதுடன் காதலித்தார்கள். ஆனால் எல்லோரும், கல்யாணிக்குக் குறைந்தவர்கள் என்றே என் மனம் எடைபோட்டது. கல்யாணி, குமரிக்கரையில் ஈரப்புடவையுடன் முதன் முதல் சந்தித்த அந்த அழகிய உருவம் இன்னும் என் மனதில், கல்லில் செதுக்கிய சிலைபோலக் காட்சியளிக்கிறது.

அதனால்தான் என் நண்பர்கள் என்னை கன்னியாகுமரிக்கு அழைத்தபோது முதலில் நான் வர மறுத்தேன். பழைய நினைவுகள் மனதிற்கு இன்பமளிக்கும் என்பார்கள். என்னைப் பொறுத்த வரையில் அது துன்பமாகவே தோன்றியது. இன்றுகூட நான் பல அழகிய பெண்களைச் சந்திக்கிறேன். ஆயினும் கல்யாணிக்கு இவர்கள் எப்படி ஈடாக முடியும்? இதே எண்ணத்தில் குமரிக்கரையில் அமர்ந்திருந்த என்னை நண்பர்கள் வந்து அழைத்தனர். சில ஆண்டுகளுக்கு முன்பு என் நண்பன் மணிவர்மனும் இதே இடத்தில் வந்துதான் என்னை அழைத்தான். அன்று என் இதயம், தூவிய மலர்கள்மீது துள்ளிக் குதித்து ஓடிக்கொண்டிருந்தது. இன்று அதே இடத்தில் கிடந்த முட்கள்மீது நடந்து இரத்தக்கண்ணீர் வடித்தது.

நண்பர்களுடன் நானும் புறப்பட்டேன். எல்லோரும் பேசிச் சிரித்துக்கொண்டு முன்னால் சென்றார்கள். நான் மௌனத்துடன் அவர்கள் பின்னால் சென்றேன். எங்கள் எதிரே ஒரு பெண் கையில் ஒரு குழந்தையுடன் வந்துகொண்டிருந்தாள். இரண்டு சிறுவர்கள் அவளுக்கு முன்னால் ஓடிவந்து கொண்டிருந்தார்கள். தூரத்தில் வரும்போதே அவளைக் கூர்ந்து பார்த்தேன். அவளும் என்னையே பார்த்தாள். கல்யாணியின் முகச் சாயல்! அதே கண்கள்! ஆம்! கல்யாணியேதான்! ஆனல், கண்கள் மட்டும்தான் கல்யாணி என் பதை எடுத்துக் கூறின. அந்த அழகிய முகத்தில் சுருக்கம் விழுந்திருந்தது அவள் என்னையே ஆச்சரியத்துடன் பார்த்தாள் நானும்தான் பார்த்தேன். இருவர் உதடுகளும் பேசத் துடித்தன. ஆனல் என் நண்பர்களிடையே நான் எப்படி அவளிடம் பேசுவது? திரும்பித் திரும்பிப் பார்த்தாள். நானும் திரும்பிப் பார்த்தேன். பிறகு நடந்துசென்று மறைந்துவிட்டாள்.

இவள் யாரோ ஒருவனுடைய கல்யாணி. வயதானவள். மூன்று குழந்தைகளுக்குத் தாய். இவளுடன் நான் எப்படிப் பேசமுடியும்? என்னுடைய கல்யாணி மாருத இளமை வாய்ந்தவள். குமரிக் கரையில் முதலில் பார்த்த கன்னிதான் என் இதயத்தில் அழியாமல் வீற்றிருக்கிருள். அவள்தான் என் இன்பக்காதலி கல்யாணி, குமரிக் கரைக்குமரி. கன்னியாகுமரிக் கன்னி! அழியாத ஓவியம்!

★

காரும் காதலும்

கருமை கவிந்துகொண்ட வானம். யானைக் கூட்டம் முண்டி நெருங்கிச்செல்வதுபோல் அம்மேகக் கூட்டம் நகர்ந்துகொண்டிருந்தது. அதே சமயம் பூமியில் குளிர்ந்த காற்று மெல்லெனத் தவழ்ந்து வந்தது. பசுமை கொழிக்கின்ற முல்லைக்காட்டிலே-மரங்களை மெல்ல ஆட்டியும், கொடிகளை மெல்லென அசைத்தும் உறவுபாராட்டி உல்லாசமாய்ச் சென்றுகொண்டிருந்தது. வானம் உறுமுகிறதா? சுமுறுகிறதா? என்று நினைத்துக்கொண்டிருந்த சமயத்தில் கொடிய மின்னல் தோன்றி மறைந்தது. பின் 'சோ' என மழை கொட்டிக்கொண்டிருந்தது. வேனில் காலத்தால் வரண்டுபோன நிலமகளுக்கு வானமகன் இப்பொழுது இரக்கம் காட்டுகிருன். ஆலங்கட்டிகளை அளவின்றி வீசி வழங்கினுன். நிலமகள் உடலும் குளிர்ந்தது. பெருமழையும் நின்றது. அதன் ஆரவாரங்களும் அடங்கின.

குளுமையும் அமைதியும் கலந்த அதே நேரத்தில், ஆயிரம் ஆயிரம் பொற்காசுகளை அள்ளி வீசியதுபோல மயில்கள் தோகைகளை விரித்து ஆடின. அசோக மரத்தின் தளிரிடையே அமர்ந்த குயிலினங்கள் இனிமை பெருகக் கூவின. குருந்த மரங்களில்-மலர்ந்த பூக்களில்-அமர்ந்த வண்டுகள் 'இளி' என்னும் பண்ணை எற்ப இசைத்துப் பாடின. பொற்காசுகளைப் பரிசாக வழங்குவதுபோல, கொன்றை மரங்கள் பொன்மெருகிட்ட பூக்களை, மயில் எனும் ஆடல் மங்கையின் மீது மெல்லச் சொரிந்தன. பல நிறங்கொண்ட வானவில் வளைந்த நிலையிலும் மேகம் இழந்த அழகை வழங்கிக்கொண்டிருந்தது. பவளத்தை அள்ளிச்சிந்த-அது நிலமெல்லாம் உருண்டு ஓடுவதுபோல-பட்டுப் பூச்சிகள் ஊர்ந்துகொண்டிருந்தன. வேனில் காலத்தில் பூத்துக் குலுங்கிய பாதிரிப் பூக்கள் வாடிக்கிடந்தன. பாம்பு படம் விரித்ததோ என்னும்படி வெண்காந்தள் மலர்கள் இதழ் விரிந்து அசைந்தன. இத்தகைய காட்சிகளை அள்ளி வழங்கும் கார்காலத்தை இயற்கை அன்னையின் குதூகலக் கொலுவிழா என்றே கூறலாம்.

இப்பருவகாலத்தில் தலைவியைப் பிரிந்து செல்ல நினைக்கும் தலைமகன் அவளது வண்ணத்திலும், வடிவிலும் குணம் செயல் அனைத்திலுமே கலந்துநின்ற தன் உள்ளத்தைப் பிரித்துணர முடியாத இயல்பினை அடைகிருன். காதலிபால் வைத்துள்ள அன்புரிமையையும், காலத்தால் செய்தாக வேண்டிய கடமையையும் பலபடியாக அவன் எண்ணிப் பார்க்கின்ருன். போர் காரணமாகவோ, பொருள் காரணமாகவோ—இவற்ருல் வரவிருக்கும் புகழ்காரணமாகவோ, தலைவியைப் பிரிந்து செல்வது தலைவனுக்கு அவசியமாகிவிடுகிறது. கொன்றையும் முல்லையும் மலர்ந்து மணம் பரப்புகின்ற கார்காலத்தைச் சுட்டி அது வருதற்கு முன்பே நான் வந்துவிடுகின்றேன். நீ வருந்தாதே என்று கூறி விடைபெற்றுச் சென்றுவிட்டான் தலைமகன்.

விசு. திருநாவுக்கரசு

> வித்வான் திருநாவுக்கரசு அவர்கள் புரட்சி இலக்கியங்களைப் படைக்க வேண்டுமென்ற பேரவாக் கொண்டவர். 'பொன்னி'யின் செல்வர்களில் முக்கியமானவர்.

தலைவனைப் பிரிந்து-தனித்திருந்து அறியாத தலைமகள் அந்நாட்கள் எப்படிப்பட்ட கசப்பானவை என்பதையும் இப்பொழுது உணர்ந்து வருந்துகிருள். ஏக்கத்தோடு அந்தக் கார்காலத்தையே எதிர்பார்த்துக் கிடக்கிருள். 'கார்காலமே நீ எப்பொழுது வருவாய்? எனக்கினியாரை எப்பொழுது கொணர்வாய்! காட்டுவாய்!' என்று ஓயாது எண்ணிக் கண்ணீர் வடிப்பாள். இத்தகைய நாட்கள் பலபல ஓடின. விடிகின்ற பகலும் மடிகின்ற இரவும் மாறி மாறி வந்தாலும் அவள் நிலையில் அவளுக்கு அவை ஒரே விதமாகவே இருந்தன.

அவள் காதலன் வரவுக்காகக் கார்காலம் காத்திருக்குமா? அக்காலத்தின் முன்னணித் தூதாக மழை முகில்கள்—முகில் முழக்கங்கள்—மின்னல்கள்—இவையெல்லாம் இல்லத்தினுள்ளே புகுந்து தலைவன் வராத இயல்பைச் சுட்டி இடித்துரைப்பதுபோல முழக்கிக் காட்டின.

இல்லத்தின் வெளியே வந்தாலோ மழையும் மலர்ந்த கொன்றையும் கார்காலம் வந்துவிட்டதைக் காட்டுகின்றன. இல்லத்தின் உள்ளே கிடந்தாலோ பருவம் வந்துவிட்டதை இடிமுழக்கி உணர்த்துகிறது. உள்ளே இருக்க முடியாமலும்,

வெளியே வந்துநிற்க இயலாமலும் மனமழிந்து வருகிறாள். பிரிவு எனும் வெம்மையில் அவள் புழு வெனத் துடித்து நலிகிறாள். துன் பங் கரைகடந்தால் ஆற்றுவது எப்படி? வெம்மை மூச்சு விடுகிறாள். வழிந்த கண்ணீர் உலர்ந்து போயிற்று. தலைவனைப் பற்றிய எண்ணம் அடுத்தடுத்துத் தோன்றிக் கொண்டே இருப்பதால் அவள் உயிர் இன்னும் அவளைவிட்டு அகலா மல் இருக்கிறது.

வந்த கார்காலத்தைக் கண்டு வருந்துகின்ற மற்றொருத்தி அங்கே இருக்கிறாள். அவள்தான் தோழி. கார்காலம் வருவதற்குமுன்பே தலைவியை ஆற்றுவிப்பதில் துயருழந்த தோழி இப்பொழுது யாது செய்வேன் எனக் கை பிசைந்து நிற்கிறாள். அவ்விதம் அவள் வருந்த இடம் எதுவுமின்றி இதோ தலைவி புத்துணர்வு பெற்று விட்டாள். அவள் சொல்லுகிறாள்.

......புதுப்பூங் கொன்றைக்
கானம் காரெனக் கூறினும்
யானோ தேறேன்அவர்
பொய்வழங் கலரே!

[குறுந்தொகை 21 முல்லை.]

கொன்றை மரங்கள். அவை யடர்ந்த கானம் கார் காலத்தைத் தலைவியின் கண்ணெதிரே காட்டிக் கொண்டு நிற்கிறது. அவள் அதைக் கார்காலந்தான் என்று தன் உள் ளத்தால் கொள்ள மறுக்கிறாள். அது கார்காலமே அல்ல என்று துணிகிறாள். கண்ணெதிரே காணும் உண்மையை—உண்மையே அல்ல என்கிறாள். இவ்வாறு சொல்ல ஒரு காரணம் வேண்டு மல்லவா? அதிசயமான ஒரு கார ணத்தை அச்சமின்றிச் சொல்லு கிறாள். அவள் காதலன் பொய்யே சொல்லமாட்டானாம்! அப்படி யானால்? ஆம். அவன் உண்மையே சொல்லுவானாம்! உத்தமனாம்! காதலனைப்பற்றி அவள் கொண்ட நம்பிக்கை அசைக்க முடியாத உறுதிவசப்பட்டதாய் வேர்விட்டு நிற் கிறது. இது கார்காலமாக இருக்கு மானால் காதலர் வந்தே இருப்பார். காதலர் வாராத காரணத்தால் இது கார்காலமே அல்ல என்று முடிவு கொள்கின்றாள். காதலர்பால் காணவேண்டிய பொய்மையை— கார்காலத்தின்பால் ஏற்றிக் காணு கிறாள், வாய்மை தவறாத தலை வனைத் தன் காதலனை கூறு கிறாள்.

‘கானம் கார் எனக் கூறினும்’- என்னும் வரியிலமைந்த நயப்பாட் டினை இனிக் காண்போம். ‘காடு இதைக் கார்காலம் என்று சொன்னா லும்’—என்பதே இதன் பொருள். இந்த வரியைச் சிறிது மாற்றிப் பார்த்தால்தான் இதன் பொருள் நயம் நமக்குப் புலப்படும். அதாவது ‘கானம் காரெனக் காட்டினும்’ என்று கூறுவமேயானால் யாப்பு வகையில் முற்றுமோனை என்னும் அழகு புலனாகக் காணலாம். கார் காலத்தைக் காட்டத்தான் முடியுமே யன்றி அதனால் (கானத்தால்) கூற முடியாது எனத்தோன்றும். சொல் லும் திறம் அதற்கு இல்லை. இல்லாத அத்திறம் ஏற்பட்டு—அக் கானம் இதைக் கார்காலம் என வாய்விட்டுச் சொன்னாலும்கூட நான் அதை நம்பத் தயாராக இல்லை என் கிறாள் தலைவி-இத்தகைய பொருள் நயம் தோன்றவே ‘கானம் காரெனக் காட்டினும்’ என்று கொள்ளாது ‘கானம் காரெனக் கூறினும்’ எனக் கொண்ட கவிஞ னின் புலமைத்திறம் காணுந் தொறும் வியப்பிடை ஆழ்த்து கிறது. ★

பொங்கல் பொன்னாளில்
எங்கள் வாழ்த்து
★



எம். வாசன் கேன் ஒர்க்ஸ்,
2-146, மவுண்ட் ரோடு, சென்னை-6.

பொங்கல் புது நாளில் எங்கள் வாழ்த்து!

S. S. நடராஜன் நாடகக் குழுவினர் அளிக்கும்

ரூ ப வா ணி

தமிழ் சமூக நாடகம்

கதையிலே ஓர் புரட்சி!
கபடதாரிகளுக்கு ஓர் மருட்சி!

கதை வசனம் : தஞ்சை நாலாபதி
பாடல்கள் : நா. புகழேந்தி
பயிற்சி : S. C. சேகர்

S.M.W.

SIVAJI BRAND PURE ALUMINIUM

சிவாஜி பிராண்டு

எங்கள் கம்பெனியில் சுத்தமான
அலுமினியத் தகட்டினல் தயாராகும்

★ **சிவாஜி பிராண்டு, S. M. W.** ★

முத்திரையுள்ள பாத்திரங்களை உபயோகிக்கும்படி வியாபாரிகளுக்கும்
பொது மக்களுக்கும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

தேவையான சாமான்கள் ஆர்டரின் பேரில் குறித்த காலத்தில்
தயார் செய்து கொடுக்கப்படும்.

— வியாபாரிகளுக்கு தனிச் சலுகை உண்டு —

தொழிற்சாலை : சங்கிலியாண்டவர்புரம், செங்குளம் P. O., திருச்சி.

உற்பத்தியாளர்

T. R. சண்முகசுந்தரம் பிள்ளை

அலுமினிய வியாபாரம்

பெரியகடை வீதி. :: திருச்சிராப்பள்ளி.

மெய்யறிவு

அறிவென்பது யாது? அது யாரிடத்து அமைந்துள்ளது? அதனால் உண்டாகும் பயன் யாது? அது பெற்றார் எவ்வாறு வாழ்வர்? என்பன போன்ற சில கேள்விகளுக்கு விடைகாணல் ஒருவாறு மெய்யறிவை விளக்குவதாகும்.

அறிவென்றால் தேர்வில் 100க்கு 100 வாங்குவது என்றுதான் பலர் நினைக்கின்றனர். பள்ளியிலோ கல்லூரியிலோ படித்து ஒவ்வொரு தேர்விலும் நிறைய 'மார்க்கு' வாங்குகின்றவனே அறிவுள்ள பையன் என்று பெரியவர்கள் கூறக் கேட்டிருக்கின்றோம். அதிக மார்க்கு வாங்குபவர்களை அறிவுடையவர் எனப் பாராட்டி அரசாங்கமும் பிறவும் பதக்கம் முதலியனவும் வழங்குகின்றன. நூலை அப்படியே பயின்றோ, நெட்டுருப் போட்டோ, தேர்வில் அதிக எண் வாங்குவதைத்தான் அறிவு என்று எண்ணும் நிலை இன்று நாட்டில் இருந்தாலும், தமிழர் அது ஒன்றைத்தான் அறிவு என்று கொள்ளவில்லை.

அறிவு கற்றனைத்து அதிகமாகும் என்பது உண்மைதான். வள்ளுவர் 'தொட்டனைத்தூறும் மணற்கேணி, மாந்தர்க்குக் கற்றனைத்தூறும் அறிவு, என்று அழகாக உவமை வகையால் விளக்குகின்றார். ஆனால் அந்த உவமைவழி கல்வியோ அல்லது அதில் பெறும் மார்க்குகளையோ அறிவு என்று கூறவில்லை. நீர் உள்ளே நெளிந்து செல்லுகின்றது. அதைத் தோண்டுபவன் தன் தோண்டும் நிலைக்கேற்ப வளர்க்கின்றான். அது போன்றே அறிவு ஒருவருடைய தனிப்பட்ட சொத்தாக அமையாது, எல்லார் உள்ளத்திலேயும் உள்ள ஒரு பொருள். அது கல்வியால் விளக்கம் பெறுகின்றது. இதைத்தான் வள்ளுவர் உவமைமூலம் விளக்குகின்றார்.

உலகில் கற்றும் அறிவற்ற மக்கள் பலரைக் காண்கின்றோம். இன்றைய உலகில் நடக்கும் கொடுமைகளுக்கும் கொள்ளைகளுக்கும்-ஏன்-பெரும் போர்களுக்குங்கூடக் காரணமானவர் யார்? படித்தவர்களா படிக்காதவர்களா? படித்தவர் என்பது பாரறிந்த உண்மையன்றோ! அவர்கள் அறிவுடையவர் என்று சொல்லலாமா? அன்றி அறிவற்றவர் என்று அழைக்கலாமா? என எண்ணிப்பார்த்தால் அவர்கள் படித்தும் அறிவற்றவர்கள் என்ற முடிவுக்குத்தான் வரவேண்டியிருக்கும்.

உலகில் மூடரைக் கல்லாமூடர் கற்றமூடர் என இருவகையாகப் பிரிப்பர். கல்லாதமூடரைக் காட்டிலும் கற்றமூடரால்தான் நாட்டுக்கும் உலகுக்கும் பெருந்துன்பங்கள் நேர்கின்றன. கல்லாத மூடன் தன் அறியாமையினாலே அடங்கி ஒதுங்கி மற்றவரை வருத்தா வகையில் தன் வாழ்வு செல்லும் வழியே செல்வான். ஏற்றமோ குறைவோ எதுவரினும் அது அவன் ஒருவன் வாழ்வினை மட்டும்தான் பாதிக்கும். ஆனால், கற்றறிமூடமோ தன் அறிவின் மதிப்பை அதிகமாகக் கணக்கிட்டு ஆற்றும் கொடுமையினாலே அவனியே அல்லல் உறுவதைக் காண்கின்றோம். தமிழ்நாட்டில் மட்டுமன்றி பிறநாடுகளிலும் இத்தகைய கற்றறிமூடர்கள் (Educated fools) உள்ளனர். அவர்களால் நாடும் உலகமும் அல்லல் உறுகின்றது. இதை எல்லாம் எண்ணித்தான் போலும் சமரச ஞானியாகிய தாயுமானவர் 'கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள், கற்றுமறிவில்லாத என் ஆன்மத்தை என் சொல்லுகேன், என்று வருந்திப் பாடுகின்றார். எனவே கல்வியால்தான் அறிவு நிரம்புகின்றது என்பது சரியல்ல.

பேராசிரியர்
அ. மு. பரமசிவானந்தம்

பின் அறிவு என்பது தான் என்ன? அனைத்தையும் விளக்க வந்த வள்ளுவர் அறிவைப்பற்றியும் கூறத் தவறவில்லை. மனிதன் மனிதனாக வாழ வழிகாட்டுவதே உண்மையில் அறிவாகும். அறிவைப் பலவாறு பகுத்துக் காண்கின்றார் அவர். நூல் அறிவு ஒரு பகுதிதான் ஆனால் அதுவே முடிந்த அறிவன்று. உலக அறிவு மற்றொன்று. நூலறிவு மட்டும் பெற்று, உலக அறிவு இல்லாதிருப்பின் அதனால் பயனில்லை என்பதை வள்ளுவர் 'உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பல கற்றும் கல்லார் அறிவிலாதார்' என்று விளக்குகின்றார். கல்வி கற்றும், 'எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு அவ்வது உறைவது அறிவு' என்ற உண்மையை உணராது, உலகம் வாழினும் வீழினும் வாடினும் சாவினும் கவலையற்றுத் தான்தோன்றித் தம்பிரான்களாகத் திரிவோர் கற்றும் அறிவில்லாதவரே என்பதைத் திட்டமாகக் கூறுகின்றார். எனவே நூலறிவினும் மேம்பட்ட அறிவு உண்டு என்று தேற்றம். அந்த மேலான மெய்யறிவுக்கு வழிகாட்டியாகவும் கீழ்ப்படிகளாகவும் அமைவனவே நூலறிவும் உலகறிவும். இந்த உண்மையை உணராது கல்வி ஆங்காரமும் பிற செல்வம் முதலியவற்றின் செருக்கும் பெற்ற தனி மனிதரும் சர்வாதிகார அரசாங்கங்களும் ஆற்றும் கொடுமையாலன்றோ உலகம் ஒரு தலைமுறையில் இரு பெரும் போரைக் கண்டு, மூன்றாவது போரையும் காணுவோமோ என்று அஞ்சத்தக்க நிலையில் செல்லுகின்றது. இக்கொடுமை நீங்க மெய்யறிவைக் காண்பது தேவையன்றோ! ஆம்! காணல்வேண்டும்? யாது மெய்யறிவு!

அறிவினைப் பலவகைகளில் ஆய்ந்து காணும் அறிஞர் திருவள்ளுவர் அறிவின் உச்சியில் ஒரு உயர்ந்த மெய்யறிவை வைத்துப் போற்றுகின்றார். அதுதான் முன் கூறியபடி மனிதனை மனிதனாக வாழ வைப்பது மனிதன் மனிதனாக வாழ வழி என்ன? இப்போது வாழ்கின்றவர்கள் மனிதராக இல்லாமலா வாழ்கின்றார்? பலகோடி மக்கள் வாழும் இந்த உலகில்,

மனிதன் செயலளவில் அன்றிப் பெயரளவில்தானா வாழ்கின்றான்? இக்கேள்விகள் எழுவது இயல்பு. உலக நிலையை நோக்கின் சுருக்கமாக 'ஆம்' என்று விடையிறுக்கலாம். அதை உலகப்போக்கு வலியுறுத்துகின்றதே!

மனிதனையும் விலங்கினையும் அறிவால் வேறுபடுத்த நினைத்த தொல்காப்பியன் நன்கு அவ் வேறுபாட்டைப் புலப்படுத்துகின்றான். 'நல்லதன் நலனும் தீயதன் தீமையும்' ஆராய்ந்தறிந்து நல்லாற்றில் ஒழுகி வையகம் வாழத் தான்வாழும் பகுத்தறிவாகிய ஆறாவது அறிவைப் பெற்றவனே மனிதன் என்பது தொல்காப்பியன் முடிவு. மனித உடம்போடு கூடினும் அந்த ஆராயும் பகுத்தறிவும் அதன் வழி உலக உயிர்களை ஒத்து நோக்கும் பண்பாடும் இன்றேல், அவன் மானுட உடலொடு வாழினும் மிருகமாகவே மதிக்கப்படுவான் என்பதைத் தொல்காப்பியன் திட்டமாகத் தெரிவிக்கின்றான்.

'மக்கள் தாமே ஆறறிவுயிரே'
'மாவும் மாக்களும் ஐயறிவுயிரே
பிறவும் உளவே அக்கிளையிறப்பே'

என்று பாகுபடுத்திக் காட்டும் திறன் பாராட்டற்குரியதன்றோ! நலக்கேடுகளை ஆராய்ந்து 'நாடெங்கும் வாழக் கேடொன்றும் இல்லை' என்ற மெய்யறிவில் வாழ்பவனை மக்கள் இனத்தவன் என்றும், அஃதற்ற மனித உடலோடு காட்சியளிப்பவனை விலங்கினத்தவனென்றும் பிரித்துக் காட்டித் தொல்காப்பியன் உண்மை அறிவு எது என்பதை ஒருவகையால் விளக்கிவிட்டான்.

ஆம்! உலகில் மனிதராகப் பிறந்தார் மக்களாக வாழவேண்டும். அவ்வாறு வாழ்வதற்குப் பல பேரறிஞர்கள் வழிகாட்டியுள்ளார்கள். நம் திருவள்ளுவரே அறிவினுள் எல்லாம் தலையாய அறிவை நமக்குக் காட்டத் தவறவில்லை. மேலே கண்டபடி, அறிவை பல கூறுகளாக நுணித்தறிந்த அவ் வள்ளுவர் மேலாய அறிவினை வாய்விட்டுப் பேசி விளக்குகின்றார். 'அறிவினுள் எல்லாம் தலை என்ப' தீய செயலார்க்கும் செய்யாவிடல், என்ற அவர் வாக்கு மெய்யறிவை நமக்குக் காட்டுகின்றது. நூலறிவும், உலக அறிவும், பிற எல்லா அறிவுகளும் இந்த மெய்யறிவுக்கு மனிதனை அழைத்துச்சென்றால்தான் அவன் உண்மையில் மனிதனாக வாழமுடியும். இன்றேல் விலங்கினும் கீழாகத் தள்ளப்படுவான் என்பது உறுதி.

இன்று உலகில் பகை எத்தனையோ கோணங்களில் வளர்ந்து வருகின்றது. தனி மனிதனுக்கும் பகை வளர்ந்துள்ளதை நாட்டிலும் உலகிலும் வளர்ந்துள்ள நீதிமன்றங்களின் எண்ணிக்கை எடுத்துக் காட்டுகின்றது. சிறுசிறு பொருளுக்கெல்லாம் பெருஞ் சண்டையிட்டு, நீதிமன்றம் ஏறி உள்ள பொருளையும் கொள்ளை கொடுக்கும் வழக்கத்தை நாம் அறியோமா? எத்தனை எத்தனை நீதிமன்றங்கள் புதிது புதிதாகத்தோன்றுகின்றன? பாவம். தோன்றிய அத்தனையும் வரும் வழக்குகளில் எண்ணிக்கையைக் கண்டு செயலாற்ற முடியாமல் திகைக்கின்றன. ஏன் இந்தக் கொடுமை? தனி மனிதர் பகைமையன்றோ!

தனி மனிதன்தான் அவ்வாறு என்றால், வீட்டுக்கு வீடும் நாட்டுக்கு நாடும் பகைமையற்று வாழ்கின்றனவா இல்லையே! இப்போராட்டமும், மொழிப்போராட்டமும், சமயப்போராட்டமும், சாதிப்போராட்டமும், இந்த இருபதாம் நூற்றாண்டின் இடைப்பட்ட நாகரிக உலகில் இன்று நாம் காண்கின்றவை தானே! இக்கொடுமைகள் எதனால் நிகழ்கின்றன. இதை நடத்துகின்றவர் யார்? படிக்காதவர்களா? படித்தவர்கள் தானே! எனினும் அறிவற்றவர்கள் என்றுதானே கூறமுடியும்!

உலக அரங்கம்தான் என்ன வாழ்கின்றது. இந்திய நாட்டுக்கு ரஷ்யத்தலைவர்கள் வந்து சென்றால் அமெரிக்காவும் பிற மேற்கத்திய நாடுகளும் குலை நடுங்கச் சீறுவானேன். நான்கில் ஒருபகுதி மக்கட் தொகையுள்ள ஒருநாட்டுக்கு உலக அரங்கில் இடமில்லாதிருப்பானேன்? ஆம்! ஒரே காரணம்தான்! வள்ளுவன் காட்டிய மெய்யறிவை, கற்றவரெனத் தம்மைப் போற்றிக் கொள்ளும் உலகத்தவர் அறியாமையேதான்.

ஆம்! உலகம் வாழ வேண்டுமாயின் வள்ளுவன் காட்டிய அம் மெய்யறிவை மேற்கொள்ளுவதன்றி வேறு வழியில்லை. மனிதனை மட்டும் ஒத்துநோக்கி வாழ்வதோடு நம் வாழ்வு அமையாது என்பதை வள்ளுவர் மற்றொரு குறளில் விளக்குகின்றார். எல்லா உயிரையும் ஒத்துநோக்க வேண்டிய கடப்பாட்டில் நாம் வாழ வேண்டுமென்பதை, 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்று கூறுகின்றார். எனவே உலகில் உயிர்பெற்று வாழும் அத்தனைப் பொருளும் துன்பமற்று வாழ வழிகாட்டுவதே உண்மை அறிவாகும். அந்த அறிவினைப் பெற்றவர் தாம் வாடினும் கவலையுறார். உற்றாரையும் பகைவரையும் ஒத்தே நோக்குவர். அதனால்தான் 'தீயசெயலார்க்கும் செய்யாவிடல்' என்கின்றார் வள்ளுவர். பகைவன் - நமக்கு ஊறு இழைத்தவன்-என்ற எண்ணத்தையும்விட்டு, அவனுக்குப் பதிலாகத் தீமை செய்யாதது எதுவோ அதுவே அறிவினுள் எல்லாம் தலையாய அறிவானது என்பதை வள்ளுவரை விட வேறு யார் தெள்ளத்தெளியக் காட்டமுடியும்?

அத்தகைய மெய்யறிவு - 'பகைவனுக்கருள்வாய்' என்று பாடுவதோடு செயலிலும் அச்செய்கையைக் காட்டும் செம்மை அறிவு- இன்று நாட்டிலும் உலகிலும் இல்லைதான். எனினும் தமிழினம் வாழும் வரையில், வள்ளுவன் வாய்மொழி வாழும் வரையில், அக்கொள்கையை - மெய்யறிவை- உலகில் வாழவைக்கமுடியும் என்ற உறுதி நம் உள்ளத்திலிருந்து நீங்கவில்லை என்பது நன்கு புலப்படுகின்றது. சென்ற போக! இனியாவது அம்மெய்யறிவாகிய ஒருமை உணர்வை வளர்க்கத் தமிழராகிய நாம் முன் நிற்கவேண்டும். தமிழர் திருநாளாகிய தனிப்பெரும் பொங்கல் நாள் அந்த நல்ல அறிவின் அடிப்படையினாலேயே ஆக்கப்பட்டதாகும். 'பெற்றது கொண்டும் சுற்றம் அருத்தி, மற்றவரையும் ஓம்பும்' ஒரு பெருவிழா அன்றோ தமிழனது தனிப்பெரும் பொங்கல் நாள்! அந்த நாளிலே தமிழராகிய நாம் சொல்லும் செயலும் சிறக்க, சிந்தை திறக்க, வள்ளுவன் கண்ட மெய்யறிவை வையகம் முழுதும் மேற்கொள்ள வழிகாட்டிகளாக அமையும் நம் வாழ்வை வளமாக்குவோமாக! ★

சங்ககாலத் தமிழர் பண்பாடு

டா.மா.இராசமாணிக்கனார்
M.A.M.O.L.Ph.D

முன்னுரை

ஒரு நாட்டு மக்களின் பண்பாட்டுக்கு அறிவுவளர்ச்சி இன்றியமையாதது. அவ்வறிவு தோண்டத் தோண்ட வளரும் நீரூற்றைப்போல படிக்கப் படிக்க வளருவதாகும். எனவே, கல்வியே பண்பாட்டுக்கு அடிப்படை என்பது எளிதில் விளங்கும். இதனால் கல்வியிற் சிறந்த நாடு பண்பாட்டிற் சிறந்துவிளங்கும் என்பது ஒருதலை.

சங்ககாலக் கல்வி

தமிழகத்தில் ஏறத்தாழ 1700 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலமே சங்க காலம் என்பது. அக்காலத்தில் வாழ்ந்த தமிழ்க் குடிகளைப் பற்றியும் தமிழரசரைப் பற்றியும் கூறும் விவரங்களைக் கொண்ட நூல்களே சங்க நூல்கள் என்பன. அவை, தொல்காப்பியம், புறநானூறு முதலிய எட்டுத்தொகை நூல்கள், பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம், மணிமேகலை, திருக்குறள் என்பன. எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான புறநானூற்றில் கல்வியின் தேவையை நெடுஞ்செழியன் என்ற பாண்டிய மன்னன் கீழ் வருமாறு கூறியுள்ளான்:—

"தான் பெற்ற பிள்ளைகள் பலருள்ளும் படித்துப் பண்பாடுற்ற ஒருவனையே தாய் விரும்புவாள். குடும்பத்தில் மூத்தவன் யோசனையைக் கேளாது அக்குடும்பத்தில் படித்தவன் யோசனையையே அரசனும் விரும்பிக் கேட்பான். சமுதாயத்தின் அடிமட்டத்திலிருக்கும் ஒருவன் கற்றவனாயிருப்பின் அவனிடமே மேல் மட்டத்தாரும் அறிவுரை கேட்பர். எனவே, எப்பாடு பட்டாயினும் கற்க வேண்டுவது ஒவ்வொருவரின் கடமையாகும்."

இங்ஙனம் 1700 ஆண்டுகட்கு முன்னரே கல்வியின் இன்றியமையாமை தமிழகத்தில் வற்புறுத்தப்பட்டிருந்தது எனின், அக்காலத் தமிழகம் எந்நிலையில் இருந்திருத்தல் வேண்டும்! அக்காலம் யாவரும் கல்வி கற்றிருந்தனர். இன்று தாழ்ந்தவராகக் கருதப்படும் குறவர், பாணர் முதலியோர் ஆண்-பெண் வேறுபாடின்றி அக்காலத்தில் கல்வி கற்றனர். அவருள் சிலர் கவிபாடும் ஆற்றல் பெற்று அரசரால் மதிக்கப் பெற்றனர். மருத்துவம் கொல்லத் தொழில், முதலிய பல துறைகளில் வேலை செய்திருந்த மக்களும் கவிபாடும் ஆற்றல் பெற்றிருந்தனர். மருத்துவன் தாமோதரனார், கூல வாணிகன் சாத்தனார், கொல்லன் அழிசி முதலிய பெயர்களும் அவர்தம் பாடல்களும் இந்த உண்மையை விளக்கும். குறமகள் இளஎயினி, அவ்வையார், முதலிய பெயர்களும் அவர் தம் பாடல்களும் குறப் பெண்களும் பாணர் மரபுப் பெண்களும் தமிழிலக்கியத்தில் அழியாது இடம் பெற்றனர் என்பதைத் தெளிவுறுத்தும். வளமனையைக் காவல் காத்த காவற் பெண்டும் இந்நாட்டிற் கவிபாடினர் என்றால், சங்க காலக் கல்வி நிலையின் உயர்வை என்னென்பது!

புறநானூற்றில் தாயின் கடமையையும், தந்தையின் கடமையையும், மன்னன் கடமையையும் மைந்தன் கடமையையும் ஒரு தாய் விளக்கிப் பாடும் திறன் கவனிக்கத்தக்கது.

"மகனைப் பெற்று வெளி உலகுக்குத் தருதல் எனது கடமை. கல்வி கேள்வி ஒழுக்கம் ஆகிய மூன்றாலும் அவனைச் சிறக்கச் செய்வது தந்தையின் கடமை. அவனை நாட்டுக்கும் சமுதாயத்திற்கும் ஏற்றவனாகச் செய்வது வேந்தனது கடமை. அவனுக்குப் போர்க் கருவிகளை வழங்குவது கொல்லனது கடமை, போரில் யானையைக் கொன்று வீரம் காட்டுதல் மைந்தனது கடமை"

இக்கருத்து கொண்ட பாடல் புறநானூற்றில் காணப்படுகின்றது. இதனைப் பாடியவர் ஒரு பெண்மணி என்பதை எண்ணும் போது அவளது நுண்ணறிவு வியத்தற்கு உரியதன்றோ!

சங்க காலத்தில் ஆடவரும் பெண்டிரும் பைந்தமிழைப் பழுதறக் கற்றனர். மகளிருள் அரசமாதேவியர் முதல் குறத்தி ஈறாக இருந்த பெண்பாலர் கல்வி கற்றுக் கவிபாடி அரசரோடு அரியாசனத்தில் அமரும் தகுதி பெற்றிருந்தனர் என்பதை எண்ணிறந்த பாடல்கள் தெரிவிக்கின்றன.

"என் மகனையா தேடுகின்றாய்? புலியிருந்து சென்ற

குகைபோல அவனைப் பெற்ற வயிறு இதுதான். அம்மைந்தன் இப்பொழுது போர்க் களத்தில் இருக்கின்றான். சென்று காண்''

என்பது ஒரு பாடலின் கருத்து. இப்பாடலைப் பாடியவர் ஒரு வளமனையைக் காத்துவந்த பெண் என்றால், அவளது புலமையையும் அறிவு மேம்பாட்டையும் என்னென்பது.

''உன் வேல்கள் நெய் பூசப் பெற்று, மயிற்பீலி அணியப் பெற்று அழகாகக் காட்சியளிக்கின்றன. என் தலைவனை மலையமானுடைய வேலைகள் கங்கும் நுனியும் மழுங்கிக் கொல்லனது உலைக் கூடத்தில் உள்ளன.''

என்று அவ்வையார் தொண்டைமானிடம் கூறினார். இதன் கருத்தென்ன! நீ போர்க் கருவிகளைச் செய்திருக்கின்றாயே தவிர இதுவரைப் போர் புரிந்ததில்லை. அதனால் உன் போர்க் கருவிகள் செய்யப்பட்டவாறே அழகாக இருக்கின்றன. என் தலைவன் அதியமான் அடிக்கடி போர் செய்கின்றான். அதனால் அவனுடைய கருவிகள் அடிக்கடி பழுதுபார்க்கும் நிலையை அடைகின்றன. அதாவது, அவன் போரில் அனுபவம் உடையவன். போரில் அனுபவம் உடைய அவனைபோர்அனுபவம்இல்லாத போரிட நினைத்தல் தவறாகும்''

என்னும் அறிவுரையும் இடிப்புரையும் அவ்வையார் கூற்றில் அடங்கியிருத்தல் காண்க. காஞ்சிக் காவலனிடம் தகடூரிலிருந்து அரசியல் தூதுவராகச் சென்ற அவ்வையார் இவ்வளவுநயமாகப் பேசினாரென்றால் அவரது புலமைச் சிறப்பையும் அரசியல் அறிவையும் எண்ணிப் பார்மின்.

சூளுரை

தமிழ் வேந்தர் சூளுரைகளிலிருந்து அரசர் பண்பாட்டையும் நன்குணரலாம். பூத பாண்டியன் தனது சூளுரையில், 'பகைவரை யான் வேல்லேனாயின் என் மனைவியினின்று யான் பிரிவேனாக, குடிகளைக்காக்கும் அரச மரபிலிருந்து யான் மாறிப் பிறப்பேனாகுக' என்றுகூறியுள்ளான். இக்கூற்று ஆழ்ந்து கவனிக்கத் தக்கது. கணவனும் மனைவியும் கருத்தொருமித்து வாழ்வதே இல்லற இன்பத்தின் முகடாகும். அத்தகைய நிலையில் வாழ்ந்தவனாதல் பற்றியே இப் பாண்டியன், ''பகைவரை வெல்லேனாயின்என் மனைவியை விட்டுப் பிரிந்தவனாவேன்'' என்று கூறினான்.

எனவே மனையை விட்டுப் பிரிதல் கணவன் ஒழுக்கத்துக்கு மாறானது என்பதைப் பாண்டியன் கூற்றால் உணரலாம். குடிகளைக்காக்கும் அரச மரபில் பிறப்பது விரும்பத்தக்கது-பாராட்டத் தக்கது என்பது இப்பாண்டியன் கருத்து. அதனாற்றான் பகைவரை வெல்லேனாயின்குடிகளைக் காக்கும் பாண்டியர்'மரபிலிருந்து யான் மாறிப் பிறப்பேனாகுக' என்று சூளுரை புகன்றான். இதிலிருந்து அவனது சிறந்த ஒழுக்கமும் ஆட்சி நேர்மையும், அரசன் என்ற பொறுப்புணர்ச்சியும் நன்கு விளங்குகின்றன அல்லவா?



நெடுஞ்செழியன் என்ற பாண்டி மன்னன் இவ்வாறே சூளுரைக்கின்றான்; ''என்மீது வந்த பகைவரை யான் வெல்லேனாயின் மாங்குடி மருதன் போன்ற புலவர் பெருமக்கள் என் நாட்டைப் பாடா தொழிவராக. எம் அரசன் கொடியவன் என்று குடிகள் இகழத்தக்க கொடுங்கோலன் ஆவேனாக.!'

கல்வி, கேள்வி, ஒழுக்கம் இவற்றால் சிறந்த புலவர் பெருமக்கள் செங்கோல் அரசரையும், வளம் சிறந்த நாட்டையும்தான் பாடுவார்கள். புலவர் பாராட்டைப் பெறுவதே மன்னன் பெறத்தக்க பேறு. அப்பாராட்டு இல்லையெனில், மன்னன் ஆட்சி பயனற்றது என்று பண்டை வேந்தர் கருதினர் என்பதைப் பாண்டியன் சூளுரை தெளிவாகத் தெரிவிக்கின்றது. மன்னன் குடிகளைக் காத்தலாற்றான் காவலன் என்ற பெயர் பெற்றான். அக்காவல் சிதையுமாயின் கொடுங்கோலாட்சி தலை தூக்கும். அப்போதுதான் மக்கள் 'எம்மரசன கொடுங்கோலன்' என்பர். பகைவரை வெல்லாவிடின் இவ்விழிவுகள் எனக்கு வரட்டும் என்று பாண்டியன் கூறுகின்றான் எனின் அவன் ஒழுக்கம் மிகுந்தவன் என்பதும் செங்கோல் வேந்தன் என்பதும் புலனாதல் காண்க. சிறந்த பண்பாட்டின் அடிப்படையில் பிறந்த இச் சொற்களை எண்ணி எண்ணி மகிழ்தல் வேண்டும்.

புலவர் ஒழுக்கம்

'பண்டிதர் காய்ச்சல்' என்பது பழங் காலத்தில் இல்லை. எல்லாப் புலவரும் ஒருவரை ஒருவர் மதித்து வாழ்ந்து வந்தனர். ''இனி பாடுவார்க்கு இடமில்லாதபடி பரணன் உன்னைப் பாடினான். கபிலன் உன்னைப் பாடிவிட்டான். யான் உன்னை என்னவென்றுபாடுவது'' என்று பிற புலவர்கள் வள்ளலிடம் பாடுவதைக் காணப் புலவர் ஒருவரையொருவர் எங்ஙனம் பாராட்டி வாழ்ந்தனர் என்பதை அறியலாம். ஒரு புலவர்க்குத் துன்பம் நேரின் மற்றொரு புலவர் அவரது துன்பம் துடைக்கும் திறத்தையும் சங்கப் பாடல்களில் காணலாம். வள்ளலிடம் பரிசு

பெற்று மீளும் புலவன் வறுமையால் வாடிக் கிடப்பவனை அவ்வள்ளல்பால் ஆற்றுப்படுத்துவது மிக உயர்ந்த பண்பாடன்றோ? இதுவே ‘ ‘ஆற்றுப்படை’ என்று தமிழ் நூல்கள் கூறும். புலவரைப் புலவர் ஆற்றுப்படுத்தும் ‘புலவராற்றுப்படை’, பொருநனைப் பொருநன் ஆற்றுப்படுத்தும் “பொருநராற்றுப் படை,” பாணனைப் பாணன் ஆற்றுப்படுத்தும் “பாணராற்றுப்படை” என்னும் பாடல்கள் இவ்வுண்மையை நன்கு தெளிவுறுத்தும். அரச பங்காளிகள் தம்முள் போரிடும்போது அவரைச் சந்து செய்வித்தலையே புலவர் தம் கடமையாகக் கொண்டிருந்தனர்.

“எல்லோரும் இன்புற்றிருக்க
நினைப்பதுவே அல்லாமல்
வேறொன்றறியேன்பராபரமே”

என்ற தாயுமானவர் கருத்தையே நினைவாக்கச் சங்கப் புலவர்கள் முயன்றனர். சோழனும் பாண்டியனும் அளவளாவிக் கொண்டிருந்த காட்சியைக் கண்ட புலவர் ஒருவர், அக மகிழ்ந்து, ‘நீங்கள் இன்றிருப்பதுபோலவே என்றும் இருப்பீராக’ என்று வாழ்த்துதலைக் காண அப்புலவரின் சமாதான விருப்பம் நன்கு விளங்குகிறதன்றோ?

முடிவுரை

இங்ஙனம் கல்வியால் உயர்ந்த தமிழ் மக்கள் கல்வியின் முதிர்ச்சியாகிய பண்பாட்டை நன்கு பரப்பி நாடு நலமுற சமுதாயம் செம்மையுறச் சீரிய முறையில் வாழ்ந்தனர் என்பது சங்க நூல்களால் அறியப்படும் சிறந்த செய்தியாகும். அப்பண்பாடு பிற்காலத்தில் அழிந்துவிட்டது. அழிந்த அப்பண்பாடு மீண்டும் தலையெடுத்து வாழின், தமிழ்ச் சமுதாயம் தலை நிமிர்ந்து வாழ முடியும்!

★



பொங்கல் திருவிழா நாளன்று எங்கள் வாடிக்கைக்காரர்களுக்கும், தி. மு. க. தோழர்களுக்கும் நன்றி கலந்த வணக்கமும் வாழ்த்துதலும் உரித்தாகுக.

இப்படிக்கு
A. S. Raman

வாராய் இங்கு!

— வா. செ. பழனிசாமி, பி. ஏ. —

தெங்குதரும் இன்சுவையே, தேனே, பாகே,
தெவிட்டாத இசையொலியே, உயிரே, இன்பம்,
பொங்கியொளிர் கலையழகே, புனிதக் காதல்
பூத்துமிளிர் பூங்காவே, புதுமை காட்டும்
திங்கள்தரும் இன்னுணர்வே, அன்பே, என்றன்
சிந்தைதனில் வாழ்திருவே, கனியே உன்றன்
மங்காத கற்கண்டு அதரந் தன்னில்
மழைமுத்தம் பெய்திடுவேன் வாராய் இங்கு !

பள்ளிக்குப் புள்ளிநிறை மான்போ லோடப்
பார்க்கின்றேன், மாலையிலே திரும்புங் காலை
துள்ளிடும்நல் கெண்டைவிழி என்னைக் காணச்
சுற்றிவரும் கள்வன்போல், சுடரே! இன்பத்
தெள்ளுதமிழ்ச் சுவையூற்றே, துன்பம் நீக்கும்
தூமருந்தே, கண்மணியே. நிலவு காயும்
கள்ளவிழும் மலர்க்காட்டில் ஒன்ருய்க் கூடிக்
களித்திடுவோம் ஓடோடி வாராய் இங்கு !

கண்மூடித் தூங்கையிலே கனவு நீதான்,
காலையிலே விழித்தெழுங்கால் காட்சி நீதான்,
பண்பாடும் போதெல்லாம் உன்றன் பாட்டே,
படிப்பதெலாம் உன்னுருவப் படங்க ளிங்கே,
தண்ணெளிசேர் வெண்ணிலவில் காண்ப தெல்லாம்,
தமிழ்ப்பாவாய், உன்முகமே, மாலை வானின்
வண்ணத்தில் உன்னழகே காணு கின்றேன்;
மருவிடவே எனைநாடி வாராய் இங்கு !

சிந்திசைக்கும் சிற்றருவி, தென்றல் வீசும்
தென்பொதிகை மலர்க்காட்டில் களிகொள் மஞ்சை
அந்தியினில் எழிலாக ஆடுங் காலை
அதற்கொப்பக் கருங்குயிலும் பாடும் வேளை
சிந்தைகவர் என்னரசி படகு ஓட்டித்
தேனெழுகக் கவிபாடிச் செல்வோம், பின்னர்
எந்நாளும் ஒருடலாய்ப் பிணைந்து கூடி
இன்புறுவோம், ஓடோடி வாராய் இங்கு!

ரெங்க விலாஸ்

மா. தங்கவேலர்

Anand

நிலா தலைநீட்டியது! அந்த ஒளி வெள்ளத்திலே 'ரேங்கவிலாஸ்' தன் முழுப்பொலிவையும் காட்டி நின்றது. மும்தாஜ் பேகத்தின்மீது ஷாஜஹானுக்கு இருந்த அன்பை அகிலத்துக்கு விளக்கிக் காட்டுவதற்காக எழுந்ததுதான் தாஜ்மஹாலென்று சரித்திரம் சொல்லுகிறது. உண்மையிலேயே மும்தாஜ்மீது ஷாஜஹானுக்கு அன்பிருந்ததோ என்னவோ......ஆனல், சித்தையா பிள்ளையைப் பொருத்த அளவில்-அவரது அருமைத் துணைவி 'கனகத்தின்' மீது உயிரை வைத்துத்தான்... ரேங்க விலாசைக் கட்டிமுடித்தார்!

கனகம்...சித்தையாவின் நிழலாக இருந்த காலத்திலேதான் 'ரேங்க விலாஸ்'கட்டிமுடிக்கப்பட்டது.பூத்த புதுமலர் கசங்காமலிருப்பதில்லையே' களிப்புக்கடலிலே நீந்தவைத்த கனகமும் சித்தையாவுக்குக் கசக்கத்தான் செய்தாள்! கனகத்தின் சொல்லாடலும், இன்பமூச்சும் வெறுப்பைத் தந்தது சித்தையாவுக்கு. எப்போதும் கனகத்தின் நிழலாகியிருந்த அவர், அவளின் நிழலைக் கண்டாலே நடுங்கினர். மொத்தத்தில் அவளைக் கண்டாலே அவர் ஒதுங்க நினைத்தார். ஏன் இந்த மாற்றம்? சித்தையாவின் உள்ளத்துக்கே இது புரியவில்லை ஆனல், சில நேரங்களிலே மட்டும் தெளிவாகப் புரிந்துகொள்வார்...... தனது சிருங்காரத்துக்குப் புதிய பாதை தேவையென்று!

அவரோ-பணமாளிகையின் சொந்தக்காரர். ஊரே சித்தையாவின் புகழ் பாடியது. 'தர்மிஷ்டர்,' 'குணவான்,' 'ஆஸ்திக பூபதி'...என்ற பட்டங்களை-கோயில் கலசத்தைத் தங்கத்தால் செய்துவைத்த அன்றே பெற்றுவிட்டார். திருவண்ணுமலை தேவஸ்தான டிரஸ்டியிலிருந்து... தில்லைவாழ் தீட்சதர் வரை அவருக்கு நேரடி அறிமுகம். வேலை இருக்கிறதோ இல்லையோ நாளெல்லாம் நகர்முழுதும்அவரது பெரிய'வானும்' பாண்டியாக்கும் வலம் வந்து கொண்டேதானிருக்கும். அதிலே ஏனே தானேக்களும், 'சில்லரை' விரும்பிகளும் ஜாம் - ஜாமென்று சாய்ந்து செல்வதைப் பார்த்தால் நல்லவர்களுக்கு வயிறு எரியத்தான் செய்யும். ஆனலும், அப்படி நடித்தால்தான் அந்த உலகத்திலே வாழ முடியுமென நம்பிவிட்ட அந்த இடந்தேடிகள் தங்களது சேட்டைகளைக் குறைத்துக் கொள்ளாமலேதான் வாழ்ந்தனர்.

இந்த நாசநேசர்களின் மூலமாகத்தான் சில நாளாகவே சித்தையாவுக்குச் சங்கீதப் பைத்தியம் பிடித்திருந்தது. தனது ரேங்க விலாஸிலேயே ஒரு சங்கீதக் குழுவே வைத்திருந்தார். அதன் பயனுக... காம்போதி பாடும்போது ராகமாலிகை என்றும், ராகமாலிகையைக் காம்போதி என்றும் கூறுகிற அளவுக்கு அவரின் சங்கீத ஞானம் வளர்ந்திருந்தது. எங்காவது இசைக் கச்சேரி என்ருல் சித்தையாதான் அதை முன் நின்று நடத்துவார். அதே கைங்கரியத்தில்தான் இன்றும் ஈடுபட்டிருந்தார்.

......ஊர்க்கோயிலிலே மாயவரம் ரேவதியின் சங்கீதக்கச்சேரி. கச்சேரியின் இடையிடையே வைரக் கடுக்கன்கள் மின்ன சித்தையா காட்சி தந்தார். கச்சேரியின் முடிவிலே..."ஆட்டம்; பாட்டு; கூத்து ஆகிய கலைகளையெல்லாம் மக்களின் சௌகரியத்துக்காகவே ஆண்டவன் படைத்தான். இந்தக் கலைகளைப் பரப்புகிறவர்களிடம் 'சரஸ்வதி' குடிபுகுந்து தானிருக்கிருள். பிறர் இன்புற்றிருக்கச்சேவைபுரியும் மாயவரம் ரேவதியும் அம்பாளின் கருணையால் நீடுழி வாழவேண்டுமென்று வாழ்த்துகிறேன்"...என்று சித்தையா கூறிக்கொண்டே பூமாலையை ரேவதியிடம் தந்தபோது பணிந்து, குனிந்து மாலையை வாங்கிக்கொண்டாள். பிரசாதத்துக்காகக் காத்திருந்த பக்தர் கூட்டமும்...கடமையை நினைத்து 'கரகோஷம்' கிளப்பியது. அந்தச் சந்தடியில் அரைகுறையாகத் தூங்கி விழுந்து கொண்டிருந்தவர்களும் விழித்து எழுந்தனர்!

கச்சேரி முடிந்ததும் கோகிலவாணி ரேவதியைத் தாங்கிக்கொண்டு சித்தையாவின் 'வேன்' பறந்தது.

★

புத்தம் புதுப் பட்டாடைகளை அணிந்துகொண்டு. கைவிரலிலுள்ள மோதிரத்தை ஜரிகைத்துண்டால் துடைத்துக்கொண்டே 'ரெங்க விலா'ஸின் கண்ணடி மாளிகைக்குள்ளே சித்தையா வெகுநேரமாகக் காத்துக்கிடந்தார். அறைக்கு வெளியே அவர் தலை நீட்டிப் பார்த்தபோது நிலா தலைக்கு மேலே ஊஞ்சலாடிக்கொண்டிருந்தது. அவரது பார்வையெல்லாம் பாதையிலேயே லயித்துக் கிடந்தது. பாதையிலே 'பாண்டியாக்' உருண்டு வந்து கொண்டிருந்ததைப் பார்த்ததும், நெஞ்சிலே மகிழ்ச்சி துள்ள சோபாவை விட்டு எழுந்து நின்ருர். பாண்டியாக்கிலிருந்தபடியே தலையை மட்டும் வெளியே நீட்டி...'வாங்கோ எல்லாம் ஆச்சு' என்று கூறி தன் காவி ஏறிய பற்களைக் காட்டிச் சிரித்தான் அம்பாள் கோவில் அர்ச்சகன்!

தன் அலங்காரத்தைப் பத்தாவது முறையாக மீண்டும் கண்ணடியிலே பார்த்து ரசித்துவிட்டு, பாண்டியாக்குக்குள்ளே சித்தையா சாய்ந்து

கொண்டார். வந்த பாதையை நோக்கியே வண்டியும் திரும்ப ஓடியது.

ஊர்க்கோடியிலிருந்த சித்தையா வின் சிறு பங்களாவின் அருகே கார் நின்றது. பங்களாவுக்குள்ளே சித்தையா மட்டும் நுழைந்து கொண்டு கதவைச் சாத்திக்கொண் டார்!

...பூச்சரந் தொங்கிய கட்டிலிலே அமர்ந்திருந்தகோகிலவாணி ரேவதி, முத்துப் பற்கள் மின்ன சிரித்துக் கொண்டே எழுந்து நின்றாள். உட் காரும்படி கூறிக்கொண்டே அவ ளுக்குப் பக்கத்திலே சித்தையா அமர்ந்தார்.

பன்னீர் தெளித்த ரோஜா மலரை அவரிடம் தந்துகொண்டே...,'இன்று என் பாட்டு எப்படி?'- என்ற கேள்வி யைப் போட்டுவிட்டு - பதிலுக்காகக் காத்திருந்தாள் ரேவதி. அந்த மலரை முத்தமிட்டுக்கொண்டே...'' அகிலத் தின் சங்கீதவாணி நீ...உன் இசை கேட்டு மயங்காதாருண்டோ? உண்மையாகச் சொல்லுகிறேன். உன் கச்சேரி முடிவதற்குள் எத்தனை முறை மயங்கி விழுந்திருப் பேன் தெரியுமா?...அது அந்த அம்பாளுக்குத்தான் தெரியும்'' என்று பேசிய சித்தையாவின் தேன் மொழிகளைக் கேட்டதும் மகிழ்ச்சி யால் துள்ளி ஓடி...பால் கிண் ணத்தை எடுத்து வந்து சித்தையா வின் உதட்டருகே நீட்டினாள் ரேவதி!

காய்ச்சிய பாலைப் பருகிமுடிந்த தும் 'ரேவதி' என்று சித்தையா அழைத்தார். 'சுவாமி' என்று வார்த்தைகளை வீசிக்கொண்டே அவரின் மார்பிலே சாய்ந்தாள். பன்னீர் தெளித்த மலரை முத்த மிடத் தெரிந்த சித்தையாவுக்கு மார் பிலே புரண்ட பூங்கொடியை முத்த மிடவா தெரியாது?...கன்னங்கள் சிவந்தன அந்தக் கட்டழகிக்கு...... சித்தையாவுக்கு 'அது' பற்றிய எண்ணங்கள் கசக்கவேயில்லை!

★

நிலவு இன்னும் தனது ஆட்சியைச் செலுத்திக்கொண்டே தானிருந்தது. ரேங்க விலாஸிலே... கனகத்தின் உள்ளம் போராடிக்கொண்டிருந் தது. மாடிக்குப் போகும் படிக்கட்டு களின் அருகேயுள்ள அறையிலே இன்னும் மின்சார விளக்கு எரிந்து கொண்டு தானிருந்தது. நெஞ்சத் தைத் திடப்படுத்திக் கொண்டு மாடியை விட்டுக் கீழிறங்கி வந்தாள் கனகம். மெதுவாக நகர்ந்து அறை யினருகிலே சென்றாள். ஓய்வுக்காகக் குற்றாலம் சென்றிருந்த 'ரேங்க விலாஸ்' மானேஜருக்குப் பதிலாக தற்காலிகமாக நியமிக்கப்பட்ட சேகர்......அங்கே அறைக்குள்ளே மலைபோலக் குவிந்திருந்த 'பைல்' களுக்குள்ளே சிக்கிக் கிடந்தான். சிகரெட்டை ஊதுவதும்-பைல்களைப் புரட்டுவதுமாக இருந்தான் சேகர். காகிதங்களின் சலசலத்த சப்தங் களுக்கிடையே வளையல்களின் ஒலியைக் கேட்டு......திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான்.

கனகா நின்றுகொண்டிருந்தாள்! சிகரெட்டைக் கீழே போட்டுவிட்டு பூட்ஸ் காலால் மிதித்து மறைத் தான். அதைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே, ''மிஸ்டர் சேகர்...நீங் களும் புகை பிடிப்பீர்களா?''என்று ஆச்சரியத்தோடு கேட்டாள்கனகம்.

''...ஒரே குளிர்: அதுதான்...'' என்று இழுத்தான் சேகர்.

''எனக்கும் மாடியிலே ஒரே வாடை-தூக்கமே வரவில்லை''என்று ஏக்கத்தோடு சேகரையே கனகம் உற்றுப்பார்த்தாள்.

''உள் அறையிலே படுத்துக் கொள்ளுங்களேன்'' என்று சேகர் கூறினான். ''இல்லை...இங்கே தான் கதகதப்பாக இருக்கிறது''...என்ற கூறிக்கொண்டே அவனருகே சோபாவிலே சாய்ந்தாள். கனகத் தின் கூந்தலிலிருந்த மல்லிகை மணம் பரப்பியது. சேகர் லயித்துக் கிடந்தான்.

...அவனது மார்பிலே கனகம் சாய்ந்ததுகூட அவனுக்குத் தெரிய வில்லை. மெல்லிய குரலிலே அவனது காதோடு காதாக-'சேகர்' என்று அவள்குரல் கொடுக்கவுந்தான் இந்த உலகத்துக்குத் திரும்பி வந்தான்!

...''கனகா! யாராவது...பார்த்து விட்டால்...!''

''யாரும் வரமாட்டார்கள் சேகர்!'' வலிய வந்து விழுந்த கனியை சேகர் வீசியெறியவில்லை - அணைத் துக்கொண்டான்!

★

காலை மலர்ந்தது. பள பளக்கும் பாண்டியாக்கிலே ரேங்க விலாஸில் வந்திறங்கினார் சித்தையா. கசங்கிய மலரின் காய்ந்துபோன இதழ்கள் சித்தையாவின் பட்டுச்சட்டையோடு ஒட்டிக் கிடந்தன. அதைத் தட்டி விட்டுக்கொண்டே உள்ளே நுழைந் தார்.

...வாயிலிலே காத்திருந்து வர வேற்றாள் 'தர்மபத்தினி' கனகம். தான் செய்த 'தவறை' கனகத்துக் குத் தெரியாமலே மறைத்துவிட்ட திலே சித்தையாவுக்கு ஒரு திருப்தி. நகைமுகங் காட்டிக்கொண்டே உள்ளே நுழைந்தார். 'பாண்டு ரங்கா! பாண்டுரங்கா!' என்று கூறிக் கொண்டே சோபாவில் சாய்ந்தார். கனகமும் எதையோ நினைத்து 'களுக்'கெனச் சிரித்துக்கொண்டு உள்ளே போனாள்!

போட்டோ மார்க் பீடி

C.G.M
தொழிலாளர் பீடி

C. GHOUS BEEDI FACTORY
Rasipuram Salem Dt.

சி. கௌஸ் பீடி பாக்டரி
ராசிபுரம், சேலம் ஜில்லா

ஆத்தூர் ரோடு, ராசிபுரம்.

இதயக்கோயில்

வி. சிவப்பிரகாசம், பி. ஏ.

அவளுக்கு நன்ருக நினைவிருக்கிறது. அன்று வீடு முழுவதிலும் மகிழ்ச்சி நிரம்பி வழிந்தது. அவள் வாழ்விலே அன்று ஒரு பொன்னுள். 'செல்லம்' அதுதான் அந்த நங்கையின் பெயர். செல்லமாக அவள் தந்தை தனது அருமை மகளை வளர்த்தார். பருவம் வந்துவிட்டது. அழகு, செல்லத்தின் உடலில் குடிகொண்டு விட்டது. தந்தையோ பக்திமான். காலாகாலத்தில் எதையும் செய்யவேண்டுமென்ற எண்ணம் உடையவர். தாயற்ற தனது மகளை அழகும் பணமும் நிரம்பப்பெற்ற வாலிபன் ஒருவனுக்கு மணம் செய்து பார்த்து மகிழ எண்ணினுர். ராஜமகேந்திரபுரத்தில் சுந்தரம் என்று ஒரு வாலிபன் இருந்தான். சுயஜாதிக்காரன் எல்லாரையும்விட அவன் பணக்காரன். செல்லத்தின் தந்தை ஜாதகம் பார்த்தார் — திருப்பதி வெங்கடாஜலபதியிடம் சென்ருர். சுந்தரத்திற்கும் செல்லத்திற்கும் மணம் செய்யலாமா என்று "பூ" வைத்துப் பார்த்தார். திருமணம் நடைபெற்றது. அன்று கணவனும் மனைவியும் முதலில் சந்திக்கும் நாள்.

செல்லம் தனது எதிர்காலத்தை எண்ணி மகிழ்ந்தவளாய் மாடிக்குச் சென்ருள். தனது மனைவியைக் கண்டதும் சுந்தரம் அவளை ஒரு முறை நன்ருக கண்ணுல் பார்த்துப் பூரித்துப் போனுன். நீண்ட நேரமாக உணர்ச்சி வசப்பட்ட அவன் எதை எதையோ நினைத்து ஏங்கியிருந்தான். தன் எதிரே ஒரு அழகு ஓவியம் நிற்பதைக் கண்டதும் கட்டிலிலிருந்து எழுந்து நின்ருன். அவன் உடலெல்லாம் நடுங்கியது. "செல்லம்! ஏன் அங்கே நிற்கிருய்? இப்படி வா!" என்று கூறிய வண்ணம் ஒரு அடி முன்னே சென்ருன். ஆனுல் அந்தோ பரிதாபம்! 'திடீர்' என்று அடியற்ற மரம்போல் சாய்ந்து விட்டான். இந்தக் காட்சியைக் கண்ட செல்லம் 'ஓ' என்று அலறினுள். அவள் கையிலிருந்த பழத்தட்டு கீழே விழுந்து விட்டது. அதில் இருந்த பழங்கள் கீழே சிதறி மூலைக்கு ஒன்ருக ஓடிற்று. அவள் வாழ்வும் சிதறிப் போய்விட்டது. ஆம்! கீழே விழுந்த சுந்தரம் எழுந்திருக்கவில்லை.

அப்போது நடு நிசி. அந்தத் தெருவே திரண்டு வந்துவிட்டது இந்தக் கோரக் காட்சியைக் காண. டாக்டர் ஒருவர் வந்தார். சுந்தரத்தின் பிணத்தைப் பார்த்தார். நீண்டகாலமாக இரத்தக் கொதிப்பு நோயினுல் சுந்தரம் தொல்லைப் பட்டான். அந்த ரத்தக் கொதிப்பு சுந்தரத்தின் உள்ளத்திலே ஏற்பட்ட உணர்ச்சிகளினுல் அதிகமாகி இருதயத்தில் அதிக அளவு இரத்தம் சென்றதால் இருதயம் வெடித்து சுந்தரம் மாண்டுபோனுன் என்று டாக்டர் கூறினுர்.

செல்லத்தின் தந்தை கதறினுர். வெங்கடாஜலபதியின் மேல் சாய்ந்தார். "தெய்வமே இது உனக்கு அடுக்குமா" என்று புலம்பினுர். பயன் ஏற்பட முடியுமா? மறுநாள் தனது மகளை அழைத்துக்கொண்டு தனது கிராமத்திற்கு வந்தார். நான்கு நாட்களுக்கு முன்தான் செல்லம் அந்த ஊரை விட்டுப் போனுள். அப்போது அவள் மணப்பெண். கன்னி. இப்போது அவள் விதவை. வாழ்விழந்தவள்.

காலம் சென்றது. தந்தையின் கண்ணீர் மறைந்தது. ஆனுல் செல்லமோ இன்னமும் அழுது கொண்டே இருந்தாள். கடும் போரில் வெற்றி பெறுகிருன் ஒரு வீரன். அடிமைப்படுத்திய நாட்டின் சிம்மாசனத்தின்மீது அமரப் போகிருன். எதிரே ஆயிரக்கணக்கான வீரர்கள் வெற்றிகீதம் பாடுகிருர்கள். வீரன் சிம்மாசனத்தின் மீது உட்காருகிருன். ஆனுல் சிம்மாசனம் சிலந்திக்கூடாக மாறியது. அவன் சிறைபிடிக்கப்படுகிருன். அக்காட்சியைக் கண்டு எதிரே மக்கள் கூட்டம் கேலிச் சிரிப்புச் சிரிக்கிறது. வீரன் எப்படி வேதனைப் படுவான்! அதுபோன்ற நிலைதான் செல்லத்திற்கு. அவள் தோழிகள் அவளைப் பார்த்துச் சிரிக்கும்போது அவர்கள் தன்னைக் கேலி செய்வதாகவே அவள் உணர்கிருள். வாழ்க்கை அவளுக்கு வேம்பாகியது. ஆனுல் இளமை அவளை வாட்டியது.

இந்த நிலையில்தான் சந்திரன் அவளைத் திருமணம் செய்துகொள்

சிரிக்க முடியவில்லை !

அரைச் செவிடர் ஒருவர் நீண்ட நாட்களாக நோய்வாய்ப் பட்டுக் கிடக்கும் நோயாளியான தம் நண்பரைப் பார்க்கச் சென்றார். அப்பொழுது அவர்கள் பேசிக் கொண்டதன் சுருக்கம்.

அ. செவிடர் :— இப்பொழுது உடம்பு கொஞ்சம் தேவலையா ?

நோயாளி :—அதையேன் கேக்கிறே ! வரவர, படுமோசமாகிக் கொண்டே வருகிறது.

அ. செவிடர்;—(தேவலை என்று சொன்னதாக நினைத்து) கடவுள் கிருபையால் அப்படியே ஆகிக் கொண்டு வரட்டும்.

நோயாளி :—(கொஞ்சம் மெதுவாக) அட படு பாவி !

அ. செவிடர் :—(வேறு என்னமோ பேசுகிறார் என்று நினைத்துக் கொண்டு) ஆமாம், அது கிடக்கட்டும ! இப்பொழுது ஆகாரம், என்ன சாபபிடுகிறீர்கள் ?

நோயாளி :—(சற்றுக் கோபமாக) மண்ணைத் திங்கறது தான் பாக்கி !

அ. செவிடர் :—(கஞ்சி என்று நினைத்து) பரவாயில்லை ! அதைய மனசு பிடித்துச் சாப்பிட்டுக் கொண்டு வாருங்கள். அது நல்ல ஆகாரம் தான.

நோயாளிககு இன்னும் கொஞ்சம் ஆத்திரம வருகிறது.

அ. செவிடர் :—தற்சமயம் எந்த டாகடரிடம் மருநது சாப்பிடுகிறீர்கள.

நோயாளி :—(சற்று வெறுப்பாக) எமனே வநது மருநது கொடுத்தாலும் பரவாயில்லை எனறு தோணுகிறது !

அ. செவிடர் :—(மிக மகிழ்ச்சியாக) பரவாயில்லையே ! நீங்களும் டாக்டரைத் தேர்ந்தெடுத்துத தான மருந்து சாப்பிடுகிறீாகள! சரி சரி, அவரை விடாதீாகள். இனி அவரிடமே மருந்து சாப்பிடுங்கள். ஏன் சொல்றேண்ணு, அவா ரொமபக் கெட்டிக்காரா, அதனால் தான் சொல்கிறேன்.

நோயாளி இதைக் கேட்டுச் சிரிக்க முயனறார். ஆனால் முடியவில்லை.

கிறேன் என்று முன் வந்தான். சந்திரன் அதே கிராமத்துவாசி தான். நிலம் கொஞ்சம் உண்டு. படித்தவன்: ஆனால் பட்டதாரியல்ல. செல்லத்தைத் திருமணம் செய்து கொள்ளவேண்டுமென்று அவன் எண்ணித்தான் இருந்தான். ஆனால் அவன் தந்தையோ உள்ளூரில் பெண் கொடுக்க முடியாது--கூடாது என்று இருப்பவர். இப்போது செல்லம் விதவை. சந்திரனின் கோரிக்கையைக் கேட்டதும் செல்லத்தின் தந்தை திடுக்கிட்டார். விதவைக்குத் திருமணம் செய்வது தகாது, பாபகாரியம் என்று கூறினார். சந்திரனே வாதம் புரிந்தான், செல்லம் வாழ்வை இழக்கவில்லையென்று. அவள் இழந்துவிட்டது வெறும் 'மாங்கல்யம்' தான் என்றும் எடுத்துச் சொன்னான். சந்திரனின் கட்சியை ஆதரிக்க அந்த ஊரில் சிலர் இருந்தனர். மீண்டும் திருமணம் செய்து கொள்ள செல்லம் மறுக்கவில்லை. அவளோ பெண். தந்தை யோசித்தார். வாழ்நாள் முழுதும் தன் மகள் விதவையாக இருப்பது சரியல்ல, அது மனித தர்மத்திற்கு அடுக்காது என்று தன் நண்பர்கள் சிலர் சொல்வது நியாயமானது என்று கருதினார். விதவைத் திருமணத்திற்கு ஏற்பாடாயிற்று.

இச்செய்தியைக் கேட்டதும் ஊரில் விஷ வித்து ஊன்றப்படுகிறது என்று கொக்கரித்தனர் சிலர்.

'விதவைக்குத் திருமணமா !—வேடிக்கை ! விந்தை !' என்றனர் ஊர்ப் பெண்கள்.

''அய்யோ 'பாபம்' அவள் கலியாணம்தான் செய்துகொள்ளட்டுமே'' என்றனர் சில கிழவிகள்.

'நாட்டிற்கு நாசகாலம் ! நாம் எப்படியாவது இதைத் தடுக்க வேண்டும்' என்றனர் பழம் பெருச்சாளிகள்.

'அடி பாபி உனக்கு எப்படியடி மனம் துணிஞ்சுது'' என்று தங்களுக்குள் 'பெருமூச்சு' விட்டனர் சில விதவைகள்.

'அறுத்துப்போனவளையா கட்டிக்கப் போகிறான் ! பார்க்கிறேன் ஒரு கை' என்றார் கோவில் தர்மகர்த்தா தர்மலிங்கம் பிள்ளை.

'விநாசகாலே விபரீத புத்தி' என்றார் கோயில் குருக்கள் பஞ்சாபகேச அய்யர்.

இந்தத் திருமணத்திற்கு ஊரில் எதிர்ப்பு ஏற்பட்டது கண்டு சந்திரன் அஞ்சவில்லை. திருமண நாளன்று வீட்டிற்குள் காலிகளை ஏவி விட்டுக் கலகம் செய்யப் போகிறார்கள் பழமைவாதிகள் என்று அவன் கேள்விப்பட்டான்.

செல்லத்தின் தந்தையோ நடுங்கிப் போனார். இந்தத் திருமணமும் ஒரு 'வானவில் போன்றதா' என்று செல்லம் கண்ணீர் சிந்தினாள்.

சந்திரன் அந்த ஊர் கலெக்டர் துரையைச் சந்தித்தான். செல்லத்தின் வாழ்வை எடுத்துச் சொன்னான். தனது முயற்சிக்கு ஊரில் இருக்கும் எதிர்ப்பையும் எடுத்துச் சொன்னான். கலெக்டர் ஆங்கிலேயர். சந்திரனைப் பாராட்டினார். விதவைத் திருமணத்திற்கு எதிர்ப்பு என்று கேட்டதும் எள்ளி நகையாடினார். திருமண நாள் அன்று பத்துப் போலீஸ்காரர்களை அனுப்புவதாகவும், பயம் தேவையில்லை என்றும் சொல்லிச் சந்திரனை அனுப்பிவிட்டார்.

விதவைத் திருமணம் நடைபெற்றது. மணவீட்டு வாயிலில் போலீசார் நிற்பதைக் கண்டதும் எதிர்ப்பாளர்கள் யாரும் தலை காட்டவில்லை. போலீசார் வருகிறார்கள் என்றதும் கோவில் குருக்கள் பஞ்சாபகேசய்யர் கோவிலுக்குள்ளேயே தங்கிவிட்டார். தர்மகர்த்தா தர்மலிங்கம் தன் வீட்டுக் கதவை அன்று பூராவும் திறக்கவேயில்லை. திருமணத்திற்குப் பத்துப் பதினைந்து பேர்தா ா வந்திருந்தனர். எத்தனைபேர் வந்தால் என்ன ? செல்லம் மீண்டும் சுமங்கலியானாள். திருமணம் முடிந்ததும் போலீசார் போய்விட்டனர். ஆனால் ஊரில் தோன்றிய பகை மறையவில்லை.

சந்திரன்-செல்லம் வாழ்வு ஆரம்பமாயிற்று. திருமணம் நடந்து பதினைந்து நாட்கள் இருக்கும்—செல்லத்தின் தந்தை ஒரு நாள் காலை கோதாவரியில் குளிக்கச் சென்றார் வழக்கம்போல். பகல் பன்னிரெண்டு மணி ஆகியும் அவர் திரும்பவில்லை. செல்லத்திற்கு

என்ன செய்வது என்று தோன்றவில்லை. வயலுக்குச் சென்றிருந்த தன் கணவனிடம் ஓடினாள். சந்திரனுக்குச் சந்தேகம் தோன்றியது. யாராவது எதிரிகள் அவரைக் கொலை செய்திருப்பார்களோ என்று நினைத்தான். அவசரம் அவசரமாக ஆற்றங்கரைக்குச் சென்றனர் இருவரும். எதிரே ஒரு பையன் ஓடிவந்து செல்லத்தின் தந்தை மணல் மேட்டில் செத்துக் கிடப்பதாகக் கூறினான். செல்லம் 'அய்யோ அப்பா' என்று கதறிய வண்ணம் ஓடினாள். சந்திரனின் மாமனார் பிணமாகக் கிடந்தார். ஆற்றில் மூழ்கி மாண்டுபோனவர் போல் தோன்றினார்.

"பாப காரியம் செய்தானோ இல்லையோ அதுதான் அன்னை கோதாவரி அவனை விழுங்கிவிட்டாள்!' என்றார் பஞ்சாபகேசய்யர்.

'விதவைக்குத் திருமணம் செய்த விளைவு' என்றனர் பழமைவாதிகள்.

"அப்பா என்னை விட்டுப் போய் விட்டீர்களே என்று அலறினாள் செல்லம்."

சந்திரன் உண்மையைப் புரிந்து கொண்டான். தனது மாமனார் கொலை செய்யப்பட்டார் என்பது அவனுக்குப் புரிந்து விட்டது. சவ அடக்கத்திற்கு ஏற்பாடுகள் நடைபெற்றன

தனக்கு மீண்டும் திருமணம் செய்ததால்தான் தனது தந்தை மாண்டு போனார் என்று நினைத்த பேதைப் பெண் செல்லம் அன்று முதல் நோய்க்கு இரையானாள். விதவைத் திருமணம் கடவுளுக்கு விரோதமான செயல் அல்லவென்று சந்திரன் அவளுக்கு ஆறுதல் சொன்னான். அவள் ஒப்பவில்லை. "இதோ பார் செல்லம்! உன்னை நான் திருமணம் செய்து கொண்டதைக் கடவுள் எதிர்க்கமாட்டார். உனது மனநோய்தான் உன் நோய்க்குக் காரணம். நீ எப்படியாகினும் பிழைத்து விடுவாய். நீ சுகம் அடைவது நம்முடைய முயற்சியில்தான் இருக்கிறது. உனக்காக வேண்டுமென்றால் நான் இப்போது ஒரு பிரதிக்கினை எடுத்துக் கொள்கிறேன். நோய் தீர்ந்து நீ எழுந்ததும் நாம் இருவரும் நமது ஊர்க்கோயிலுக்குச் சென்று 'லட்சார்ச்சனை' ஒன்று செய்வோம். விதவையாக இருந்த உன்னை நான் திருமணம் செய்து கொண்டது கடவுளுக்குப் பிடித்தமானது என்றால் நீ சுகம் பெறுவாய். உன்னுடைய புது வாழ்வு கடவுளுக்குப் பிடித்தமானதில்லை என்றால் நீ மாண்டு போவாய். இது கடவுள் மேல் ஆணை" என்று சந்திரன் செல்லத்திடம் கூறினான். செல்லம் சாந்தமடைந்தாள். டாக்டர் வந்தார். சில நாட்களில் நோய் போயிற்று. செல்லத்திற்குக் குதூகலம். 'கடவுளே' தனது புது வாழ்வை ஒப்புக்கொண்டு விட்டார் என்று நினைத்து மகிழ்ந்தாள்.

★ ★

மூத்தோர் மொழி

சமுதாயம் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒரு பிரிவினர் பசி ஏப்பக்காரர்கள்; மற்றொரு பிரிவினர் புளியேப்பக்காரர்கள்.

—சாம்.

★ ★

இருவரும் வேண்டுதலையின் பேரில் மறுநாள் கோவிலுக்குச் சென்று 'அர்ச்சனை' செய்வது என்று தீர்மானித்தனர். தேங்காய் பழம் வாங்க சந்திரன் கடைத்தெரு சென்றான். நூறு தேங்காய் வாங்கினான். 'எதுக்கப்பா இவ்வளவு தேங்காய்' என்று கடைக்காரன் கேட்கவே, சந்திரன் தனது வேண்டுதலை பற்றியும் தானும் செல்லமும் மறுநாள் கோவிலுக்குச் சென்று 'அய்யனை' வணங்கப்போவதுபற்றியும் சொன்னான்.

தேங்காய்க் கடைக்காரன் இச்செய்தியைக் கேட்டதும் திடுக்கிட்டான். சமுதாயப் பழக்கத்திற்கு எதிராக நடந்துகொண்ட சந்திரனும், செல்லமும் கோவிலுக்குள் செல்வது சரியா என்று யோசித்தான். உடனே கோவில் குருக்கள் பஞ்சாபகேசய்யரிடம் சென்றான். 'தாலி கட்டிக்கொண்ட கம்மனாட்டி பகவானைப்பார்ப்பதா?" பஞ்சாபகேசய்யர் பதறிப் போனார். "கூடாது—கூடாது. பாபம்—விடமாட்டேன். அந்தப் பாபாத்மாக்களை கோவிலுக்குள் நுழைய விடமாட்டேன் என்று கூச்சலிட்டார். தர்மகர்த்தா தர்மலிங்கம் பிள்ளைக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. அன்றிரவு தர்மலிங்கம் பிள்ளை வீட்டில் பலர் கூடிப் பேசினார்கள்.

காலை பத்துமணியிருக்கும். சந்திரனும் செல்லமும், புது ஆடைகளுடன் கையில் பழம், மலர் ஏந்திக் கோவிலுக்குச் சென்றனர். இவர்கள் புறப்பட்டுச் செல்வதைக் கண்ட தெரு மக்கள் தெருவில் காறி உமிழ்ந்தனர். சந்திரன் இதை லட்சியம் செய்யாது நடந்தான். கோபுர வாயிலில் ஒரே கூட்டம். இவர்கள் வருவதைக் கண்டதும் கூட்டத்தில் அமைதி ஏற்பட்டது. மக்கள் ஒதுங்கி வழி விட்டனர். ஆனால் வாயிற்படியில், பஞ்சாபகேசய்யர், கண்களில் கோபம் கொப்பளிக்க நின்றுகொண்டிருந்தார்.

'சாமி நமஸ்காரம்' என்றான் சந்திரன்.

"எங்கேடா வந்தே" என்றார் ஐயர்.

"பிரார்த்தனை செலுத்தனும் உள்ளே போகலாம் வாங்க" என்றான் சந்திரன்.

"பிரார்த்தனை செலுத்தக் கோவிலுக்கு எண்டா வந்தாய்? சுடுகாட்டுக்குப் போடா!" இது தர்மலிங்கம் பிள்ளையின் குரல்.

'ஏன்? இது என்ன குழப்பம்' சந்திரன் கேட்டான்.

கோவிலுக்குள் போகாதே!

'நீசப்பயனுக்குச் சாமி ஏதுடா'

'திரும்பிப் போகிறாயா' உதை வேண்டுமா!

கூட்டத்தில் இப்படிப் பல குரல்கள்.

'டேய் சந்திரா உன்னைக் கோவிலுக்குள் விடமாட்டோம். நீ ஜாதி கெட்டவன். விதவையைக் கட்டிக் கொண்டவன். உன்னைக் கோவிலுக்குள் விட்டால் கோவில் இடிந்து

போகும்: அத்தனை பாபம்' என்றார் பஞ்சாபகேசய்யர்.

இதையெல்லாம் கேட்ட செல்லத்திற்கு அழுகை வந்துவிட்டது. "வாருங்கள் நாம் வீட்டுக்குப் போகலாம்" என்றாள்.

'நீ சும்மாயிரு. இந்தக் கோவில் ஊரின் பொதுக் கோவில். நமக்கு உள்ளே போக உரிமை இருக்கிறது' என்றான் சந்திரன்.

"உரிமை எதுடா உனக்கு உலுத்தனே" என்றார் தர்மலிங்கம்.

உரிமை வேண்டுமாமே! கோர்ட்டுக்குப் போடா! அங்கேதாண்டா உரிமை கிடைக்கும். இது ஐயரின் அதிகாரக் குரல்.

'கோர்ட்டுக்குப் போகத்தான் போகிறேன்! உங்களை ஒரு கை பார்க்கிறேன்' என்று கூறியவண்ணம் சந்திரன் செல்லத்தை அழைத்துக் கொண்டு திரும்பினான்.

அவன் சொன்னதுபோலவே நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தான். கோவில், இந்துக்கள் அனைவருக்கும் பொதுவென்றும் தன்னை உள்ளே விட மறுப்பது நியாய விரோதமானது என்றும், தன்னைக் கோவிலுக்குள் அனுமதிக்குமாறு பஞ்சாபகேசய்யருக்குக் கோர்ட்டார் உத்தரவிட வேண்டுமென்றும் வழக்குத் தொடர்ந்தான்.

வழக்கு விசாரணையின் போது நீதிமன்றத்தில் ஒரே கூட்டம். விசித்திரமான வழக்கு அல்லவா!

இடம் நீதிமன்றம்

நீதிபதி அமர்ந்திருக்கிறார். சந்திரன், செல்லம், பஞ்சாபகேசய்யர் நின்றுகொண்டுள்ளனர்.

சந்திரன் தன் வழக்கை எடுத்துச் சொல்கிறான்.

"கனம் கோர்ட்டார் அவர்களே! நான் இந்த ஊரில் பிறந்தவன். இந்து மதத்தைச் சேர்ந்தவன். இதோ உங்கள் முன் நிற்கும் விதவையான செல்லத்தை நான் மணந்து கொண்டேன். நான் விதவையை மணந்து கொண்டதால் நீசன் ஆகிவிட்டேனாம். என்னையும் என் மனைவியையும் கோவிலுக்குள் விட முடியாது என்று கோவில் குருக்கள் பஞ்சாபகேசய்யர் தடுக்கிறார்.

சந்திரன் தனது கட்சியை எடுத்துரைத்ததும் கோவில் குருக்கள் தனது கட்சியை எடுத்துரைத்தார்.

"கனம் நீதிபதி அவர்களே நான் இந்த ஊர்க் கோவிலின் குருக்கள். பகவானுக்குப் பூசை செய்து பக்தர்களின் பாபம் போக புத்திகூறக் கடமைப்பட்டவன். அத்துடன் பகவானின் பெயருக்கு இழுக்கு நேராதவாறு பார்த்துக் கொள்ளக் கடமைப் பட்டவன். இப்போது வழக்குத் தொடர்ந்திருக்கும் சந்திரன், விதவை ஒருத்தியைத் திருமணம் செய்து கொண்டவன். இதன் மூலம் அவன் நீசன் ஆகிவிட்டான். என் கோவிலில் பக்தர்களுக்குத்தான் இடம்: பாபாத்மாக்களுக்கு இடமில்லை. சந்திரன் போன்ற பாபியையும், செல்லம் போன்ற வழுக்கி விழுந்தவளையும் கோவிலுக்குள் அனுமதித்தால் கோவிலின் புனிதம் கெட்டுவிடும். அது பகவானுக்கே அடுக்காது. இவர்களைக் கோவிலுக்குள் அனுமதித்தால் ஊருக்கே தீங்கு நேரிடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்."

★

இருதரப்பினரும் வழக்குரைத்த பின்னர் நீதிபதி தீர்ப்புக் கூறினார்:

நான் இங்கே நீதிக்கும், நேர்மைக்கும் பாதுகாவலன் என்பது உண்மை. என்றாலும் நாட்டிலே இருந்து வரும் நடைமுறைகளை மாற்ற எனக்கு அதிகாரமில்லை. அதற்கான சட்டமும் இல்லை. ஆகவே சந்திரனும் செல்லமும் கோவிலுக்குள் நுழைவது அவர்கள் வாழும் சமுதாயத்தினைப் பொறுத்தது. அந்தச் சமூகம் இச்செய்கையை எதிர்க்கும்போது என்னால் எதும் செய்ய முடியாது. ஜாதி முறைக்கு மாறுபட்டு வாழும் மனிதன் இந்த நாட்டில் கோவிலுக்குள் நுழையலாம் என்று என்னால் உத்தரவு தரமுடியாது.

★

நீதிமன்றத்திலே தோல்வி கண்டதும் சந்திரன் கலக்கமடையவில்லை. நீதிமன்றத்திற்கு வெளியில் பஞ்சாபகேசய்யருக்கு மாலை, மரியாதைகள். "பாபிகள் ஒழிக! பஞ்சாபகேசய்யர் வாழ்க!" என்று கோஷம்.

சந்திரன் செல்லத்திடம் கூறினான். "செல்லம் நமக்கு நீதிமன்றமே எதிராக இருக்கிறது. வருந்தாதே. கடவுள் என்பவர் கோவிலுக்குள் இல்லை. நமது மனதில்தான் அவர் குடிகொண்டிருக்கிறார். அந்த இதயக் கோவிலில் நாம் அவரை வணங்குவோம். நாம் இந்த ஊரை விட்டுப் போய்விடுவோம். கற்கோவிலே இல்லாத ஊரில் சென்று வாழ்வோம்."

(இருபந்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற உண்மை நிகழ்ச்சிகள். கதை போன்று எழுதப்பட்டிருக்கிறது.)

★ கண்ணைக் கவரும் கலர்கள்
★ நாகரீகமான டிசைன்கள்
★ நேர்த்தியான நெசவு

100 நெ. கைத்தறிப் புடவைகள்

கிடைக்குமிடம் :—

S. M. S. R. பாலசுந்தரம் செட்டியார் சன்ஸ்,
கைத்தறி ஜவுளி வியாபாரம்,
36, பஞ்சவர்ண சுவாமி கோயில் தெரு, உறையூர், திருச்சி.

Tel : 'ESEMESARABE' P. B. 211 Phone : 256

"உலகம் பிரமிக்கத்தக்க அளவிற்கு முன்னேறி விட்டது."

இப்படிக் கூறுகிறவர் நாட்டு வளப்பமறியாத கிணற்றுத்தவளையின் போக்குக் கொண்டவரல்ல. எவரெஸ்டுப் புகழும், வால்காநதி அளவு வரவேற்பும் கொண்ட இந்திய அரசியலின் கதாநாயகன்! சொந்த நாட்டின் சுக துக்கங்களைப் பற்றிக் கவலைப்படாமல், உலக நாடுகளின் கவனத்தை ஈர்க்க பஞ்சசீலக் கொள்கையை ஒரு கரத்திலேயும், சமாதான வெண்புருவை மறுகரத்திலேயும் ஏந்தி ஏரோப்ளேனில் ஏறி பார் முழுவதும் சுற்றியலையும் பண்டிதநேரு தான் கூறி இருக்கிறார்.

உலகம் முன்னேறிவிட்டதாம், சாதாரணமாகக்கூட அல்லவாம் பிரமிக்கத்தக்க விதத்தில். உண்மைதான்! உலகத்தின் ஒரு கோடியை மறுகோடியுடன் இணைக்கக் கடல் வழியாலும் வானவழியாலும், தரைவழியாலும் முறையே கப்பல், விமானம், புகைவண்டி முதலிய விஞ்ஞான சாதனங்களால் முடிகிறது. இன்னும் சுருக்கமாகவும், விளக்கமாகவும் கூறவேண்டுமானால் அறிஞர் அண்ணா சொல்வது போல 'பார் முழுவதும் பாக்கட் சைஸ் ரேடியோவுக்குள் அடங்கிவிட்டது' என்று தான் நவில வேண்டும்.

ஆம்! விஞ்ஞானத்தின் இந்த விநோதங்களால் விரிந்தும் பரந்தும் கிடந்த இவ்வையம் மிகமிகச்சுருங்கி விட்டது. உட்கார்ந்த இடத்திலேயே உலகச் செய்திகளை அறிய ரேடியோவும், இருந்த இடத்திலேயே இரண்டு மைலுக்கப்பால் உள்ளவன் உரையாடுவதைக் காதருகே கொண்டுவந்து சேர்க்கும் டெலிபோனும், பேசுபவனையே நேரில் பார்க்கவைக்கும் டெலிவிஷனும், இம்மென்றால் இங்கிலாந்தையும், உம்மென்றால் உலகத்தையும் கண்டு களிக்கும்படிச் செய்யும் ஆகாயக்கப்பலும் கொண்டுள்ள இப்பூவுலகம் உண்மையிலேயே முன்னேறிவிட்டிருக்கிறது என்று பாமரரும் கூறுவர். ஏனென்றால் எவரும் அறிந்த ஒரு உண்மையாகும் அது. அப்படி இருக்கும் போது பண்டிதநேரு போன்ற பெரிய மனிதர்களா சாமான்யர்களுக்குத் தெரிந்த ஒன்றைப் பேசுவது? இதைவிட சராசரி அறிவுள்ளவர்களுக்குத் தெரியாததை, படித்தவர்கள் பார்த்தறியாததை, விவேகிகளால் பாராட்டக்கூடியதை, முற்போக்கு வாதிகளால் வரவேற்கக் கூடியதை அல்லவா நேரு போன்றவர்கள் பேசியிருக்க வேண்டும் என்பீர்கள். உண்மையில் நேரு எதையும் தகுந்த காரணமின்றிச் சாதாரணமாக உபயோகிக்கக்கூடியவரல்ல. பின்னதுக்கு ஊஸ்திவாரமாக முன்னது இருக்கவேண்டும் என்பதற்காக உலக முன்னேற்றத்தைப்பற்றிப் பேசியிருக்கிறார். இதோ நேருவின் வார்த்தையே அதைத் தெளிவாக்கிக் காட்டுகிறது: "ஆனால் மக்கள் மனம்தான் இன்னமும் முழுமையாக முன்னேற்றப் பாதை நோக்கி மாறவில்லை" என்று. இப்பொழுது புரிகிறதா அலகாபாத் அறிஞர் உலக முன்னேற்றத்தை அடித்தளமாகக் கொண்டு மக்கள் முன்னேற்றத்தை அலசுகிறார் என்று!

உலகம்தான் முன்னேறிவிட்டது. ஆனால் மக்கள் மனம்தான் இன்னும் முன்னேறவில்லை. காரணம் என்ன, மக்களின் மனம் முன்னேறாததற்கு? காரணம் கூறாமல் பண்டிதரின் பேச்சு பூரணத்துவம் பெறுமா என்ன? அவர் என்ன நுனிப்புல் மேயும் வெட்டுக்கிளி போன்றவரா மேலெழுந்தவாரியாகப் பேசிவிடுவதற்கு? ஆய்ந்த அறிவாளர் அல்லவா அவனி போற்றும் ஆசியாவின் ஜோதி! எனவே பண்டிதர் தான் ஊடுருவிக் கண்ட உண்மையை, சிந்தனையில் முளைத்த சீரிய நற்கருத்தினைக் காரணமாக எடுத்துக் கூறுகிறார் 'பழைய பத்தாம் பசலிக்கொள்கை தான்' என்று.

பத்தாம் பசலிக் கொள்கை என்றால் என்ன? 'மனுவிலிருந்தும், யாக்ஞவல்கியரிலிருந்தும் கடைப்பிடிக்கும் கொள்கையாம்! பல நூற்றாண்டுகளுக்கு முன் இருந்துவந்ததாம். ஆனால் தற்காலத்திற்குக் கொஞ்சமும் ஒத்துவராததாம்'-யாரோ சுயமரியாதைப் பிரச்சாரகர் கூறுவதுபோல் இருக்கிறதல்லவா! ஆனால் உண்மையில் இது சுயமரியாதைப் பள்ளியில் பயின்ற சூரரின் பேச்சல்ல, விடுதலையை வாங்கித் தந்த வீரரின் விவேகத்தோடு கூடிய விளக்கம்.

இந்த விளக்கத்தோடு நின்றுவிடக்கூடியவரா பண்டிதர்? இல்லை. இதோ பழைய பத்தாம் பசலிகள் எத்தன்மை வாய்ந்தவர்கள் என்பதை, "சமுதாயச் சீர்திருத்தங்களை எதிர்க்கின்றவர்கள்" என்று கூறுவதன்மூலம் படம் பிடித்துக்காட்டுகிறார். அல்ப சொல்பமாகக்கூட அல்லவாம், ஆதாரங்களை அடுக்கடுக்காகக் காட்டி எதிர்க்கின்றனராம்.

எதிலிருந்து இந்த ஆதாரங்களைக் காட்டுகின்றனர் என்றால் மனுவிலிருந்தும், யாக்ஞவல்கியரிலிருந்துமாம்! யார் இந்த மனுவும் யாக்ஞவல்கியரும்? இன்றைக்கு இந்தியாவில் இருக்கின்ற சமுதாயக் கொள்கைகளின் தந்தைகள். நாலு வர்ணத்தை ஏற்படுத்தி, மேல் வர்ணம் உழைக்காமல் வாழ வழிவகை செய்த பார்ப்பனீயத்தின் பெற்றோர்கள்! அறிவுக்கு முறிவு தேடி, ஆக்கத்துக்கு அழிவு தேடி,

ஆண்டாண்டு காலமாக மானிடவர்க்கத்தை மூடத்தனத்தின் ஊளைச் சேற்றில் சிக்கவைத்திருக்கும் சீராளர்கள்! வைதீகமெனும் வாள் ஏந்தி, வர்ணாஸ்ரமம் எனும் கோல் ஏந்தி, பிறப்பால் உயர்வு தாழ்வு கற்பித்துப் பிறரைத் தங்கள் பரம்பரையின் காலடியில் கிடத்திவைத்திருக்கும் ஆரிய குலச்சிரேஷ்டர்கள்! எனவே தான் நேரு ஆணித்தரமாக அறைகிறார், மக்களின் மனம் முன்னேறாததற்குக் காரணமாக இருப்பது, இவர்கள் ஏற்படுத்திய பழைய பத்தாம் பசலிக் கொள்கை தான் என்று.

புதியதோர் சமுதாயம் அமைக்க இங்கு சுயமரியாதைப் பிரசாரத்தில் ஈடுபட்டிருக்கிறோம். சமுதாயப்புரட்சி தேவை என்று அதற்கான சேவை பல புரிகிறோம். அது ஒன்றினால் தான் அலங்கோலமாகிக் கிடக்கும் இன்றைய சமுதாயம் சீர்படுத்தப்பட்டு, பேர்பெற்று இந்த நவீன உலகில் நல்லதோர் சமுதாயமாகத் திகழும் என்று முழக்கமிடுகிறோம். அதற்கான அவசரமும் அவசியமுமான முதற்பணிதான் சமுதாயச் சீர்திருத்தம் என்று சொல்லி வருகிறோம். அதை நேரு உணர்ந்திருக்கிறார். உணர்ந்ததால்தான் உரைத்திருக்கிறார் என்றறியும்போது நம் உளமும் அப்பணியினால் ஏற்பட்ட உற்பாதத்தை மறந்து உவகை கொள்கிறது. உவகையோடு உத்வேகம் கொள்ளத் தக்க வகையில் அந்தப் பழைய கோட்பாடுகள் அர்த்தமற்றவை என்பதை, பல நூறு ஆண்டுகளுக்கு முன்னர் யாக்ஞவல்கியரும், மனுவும், மாந்தாதாவும் சொன்ன யோசனைகளும், நீதியும் தற்காலத்திற்கு எவ்வாறு பொருந்திவரும் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை" என்று இடித்துக் கூறுவதன் மூலமாக விளக்குகிறார்.

முற்காலத்துச் சட்டதிட்டங்கள், சாஸ்திர சம்பிரதாயங்கள் தற்காலத்திற்கு ஏன் ஒத்துவராது என்பதை நேரு விளக்கப் புகுகையில், "கடந்த 2000 ஆண்டுகளில் இந்தியா பெரும் மாற்றங்களுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறது. மனுவின் காலத்தில் இந்தியாவின் மக்கள்தொகை இரண்டரைக்கோடிதான். ஆனால், இப்போது இரண்டரைக் கோடி அல்ல-முப்பத்தேழு கோடி" என்று இரண்டரைக்கும் முப்பத்தேழுக்கும் உள்ள வித்தியாசத்தையும் வளர்ச்சியின் அளவையும் எடுத்துக் காட்டுகிறார். "எனவே தற்போதுள்ள மாறிவிட்ட நிலையில் முற்றிலும் கர்நாடகமாகிவிட்ட பழக்கவழக்கங்களை எப்படிப் பற்றிக்கொண்டிருப்பது? என்று கேள்வி கேட்கிறார்.

இரண்டரைக் கோடியாக இருக்கும் பொழுது சமுதாயம் குழந்தையாக இருந்ததென்றும், முப்பத்தேழு கோடியாக இருக்கும் தற்போது சமுதாயம் குழந்தை நிலையிலிருந்து வளர்ச்சி அடைந்துள்ளதென்றும், அப்போது மனுமாந்தாதா ஏற்படுத்திய சட்டதிட்டங்கள் என்ற சட்டை, தற்போது குழந்தை நிலையிலிருந்து வளர்ச்சியடைந்துள்ள சமுதாயத்திற்குப் பிடிப்பாக இருக்கும் என்றும், அதனால் பிடிப்பான அந்த 'பழைய சட்டையைக்' களைந்து



விட்டு அதாவது சமுதாய சீர்திருத்தம் என்ற புதிய சட்டையை அணிந்துகொள்ள வேண்டும் என்றும் பிரதமர் நேரு அறிவுரை வழங்கியுள்ளார்.

இப்படி எங்கே, எப்பொழுது பேசினார் என்று நீங்கள் வினவ ஆசைப்படுவீர்கள். புது டில்லியில்-மேதின விழாவின்போது மேதினி போற்றும் மோதிலாலின் மைந்தர் பேசியிருக்கிறார். பாட்டாளிகளின் கூட்டத்திலேதான் மக்கள் மனவளம் பெறுவதற்குச் சமுதாய சீர்திருத்தத்தின் அவசியத்தை வலியுறுத்திக் கூறியிருக்கிறார் நேரு. ஆனால், இங்கே நாம் இதுபோல் பேசினால் கிடைக்கக்கூடிய பரிசு, கிடைத்துள்ள பட்டம் வேதநிந்தகன், நிரீஸ்வர வாதி என்பன போன்ற நிந்தாஸ்துதிகள் தான். பார்ப்பன துவேஷிகள் என்று இங்குள்ளோரால் பறைசாற்றப்படுகிறது. ஒருமுகமாக நின்று ஒரு சிலர் எதிர்ப்பை எழுப்புகிறார்கள். படை திரட்டுகிறார்கள். போர் தொடுக்கிறார்கள். உண்மையைக் காணவொட்டாமல் மக்களின் கவனத்தை வேறுபக்கம் இழுப்பதற்காக இம்முறையைக் கையாளுகிறார்கள். ஏன் இத்தகு இழிந்த முறையைக் கையாளுகிறார்கள்? அத்தகு இழிதகைக் குணம்கொண்டோர் யார்? அதனால் அவர்களுக்கென்ன இலாபம்? என்பதைப் பற்றி நாம் விளக்கமுரைத்தால் நீங்கள் யாரும் ஆச்சரியப்படமாட்டீர்கள். ஏனெனில், வழக்கமாக, ஆனால் நியாயமாக திராவிட இயக்கத்தினரால் இதுகாறும் எடுத்தியம்பி வருகின்ற கருத்துத்தான் அது. அதை நேருவே சொல்லியிருக்கின்றார் என்றால் உங்களோடு சேர்ந்து நாமும் ஆச்சரியப்படுகிறோம். அதனால், அந்த ஒரு சிலர் அந்த ஒரு சிலருக்குத் துதிபாடுகின்ற நம்மவர்கள் இதுவரை அலட்சியப்படுத்தி அதிருப்தி தெரிவித்து வந்ததைப்போல் இனிமேலும் நடந்துகொள்ள மாட்டார்கள்; நடந்துகொள்ளக்கூடாது என்பது தான் நம் விருப்பமுமாகும். எனவே தான் அண்மையில் நேரு அவர்கள் சென்னை வந்தபோது பெரம்பூர் முழு இணைப்பு இரயில் பெட்டிகள் தொழிற்சாலையின் உற்பத்தியைத் துவக்கி வைக்கும்போது, கூடியிருந்த தொழிலாளருக்கு மத்தியில், நவஇந்தியாவை சிருஷ்டிக்கும் சிற்பிகளுக்கிடையில் பேசிய பேச்சை உங்கள் பார்வைக்கு வைக்கிறோம்.

"இந்தியாவில் வேறெந்த நாட்டைக் காட்டிலும், உடலுழைப்பு செய்யாமல் நாற்காலியில் உட்கார்ந்துகொண்டிருப்போர் உயர்ந்தவர் என்றெண்ணுகிற மனப்பாங்கு, பழக்கம் இருக்கிறது."

இதிலிருந்து உடலுழைப்புச் செய்யாதவர்கள் யார்? நாற்காலியில் அமர்ந்திருப்போர் யார்? உயர்ந்தோர் என்ற மனப்பாங்கும், பழக்கமும் கொண்டோர் யார்? என்று தெரிகிறதா! இந்த மூன்று அம்சங்களும் பொருந்தியவர்கள் பார்ப்பனர்களே என்று யாரும் எளிதாகச் சொல்லிவிடமுடியும்! ஏனென்றால் இன்று சர்க்கார் பணிமனைகளிலே அதிகாரிகளாய், சமுதாயத்திலே உயர்ந்தவர்களாய் வீற்றிருப்போர் அவர்கள் தான். அதனால் தான் சமுதாய மாற்றத்திற்குச் சம்மதிக்க மாட்டேன் என்கிறார்கள். சீர்திருத்தம் என்றால் சீறிப்பாய்கிறார்கள். வகுப்புரிமை கோரினால் எதிர் வழக்காடுகிறார்கள். அவர்கள்

எதிர்ப்பதிலாவது அர்த்தம் இருக்கிறது, அவர்களுடைய இனநலன் பாதுகாக்கப்படும் என்பதால். ஆனால், நம்மவர்கள் அவர்கள் முகாமிலிருந்து கொண்டு நம்மையே எதிர்ப்பதில் அறியாமை இருள்தவிர வேறு பொருள் இருக்கிறதா? நேரு அடுத்துக் கூறுகிறார். "இந்தப் பாகுபாடுகளை-தடைகளை ஒழித்தாக வேண்டும்" என்று எந்தப். பாகுபாடுகளை? சாதிகளை, உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்ற பிளவுகளை, பேதங்களை, இந்த ஏற்றத்தாழ்வுகளை, மேடுபள்ளங்களை உண்டாக்கியது எது? மனுவும், மாந்தாதாவும், யாக்ஞவல்கியரும், பராசரரும் ஏற்படுத்திய சாஸ்திரங்கள் அல்லவா! இந்த சாஸ்திர சம்பிரதாயங்களை அரணாகக்கொண்டு எழுப்பப்பட்டதுதானே இதிகாசக் குப்பைகளும் புராணப் புளுகுகளும், மதமூட நம்பிக்கைகளும். இவைகளை ஒழித்தால்தானே, இந்த ஆணிவேரைக் கல்லியெறிந்தால் தானே மக்கள் மனவளமும், மதிவளமும் பெறுவர்! உலக முன்னேற்றத்தோடு ஒன்றிப் போவர். இதென்ன ஒரு நாளில் தீரக்கூடிய பிரச்சனையா? அல்லது நேருபோன்றவர்கள் எப்பொழுதாவது, சமயங்கிடைத்தபோது ஓரிரண்டு தடவை பேசிவிடுவதனால் ஒழியக்கூடிய பணியா? முப்பதாண்டுகளுக்கு மேலாக சுயமரியாதை இயக்கம் பாடுபட்டு வந்தும்கூட இன்னும் முழு வெற்றியை அடையவில்லையே! அப்படி இருக்கும்போது நேரு நவ இந்தியாவை உருவாக்குங்கள் என்று கூப்பாடு போடுவது எப்படிச் சாத்தியமாகும்? எனவேதான் நேரு சில சமயம் மதவாதிகளைக் கண்டு சீறுகிறார், இப்பொழுது நடப்பது சாணியுகம் என்று. மேலைநாடுகளோ அணுயுகத்தில் இருக்கிறது. நேருவின் இந்தியாவோ சாணியுகத்தில் இருக்கிறது. ஏன் அவருக்குக் கோபம் வராது, சலிப்பேற்படாது? பின் தங்கியுள்ள இந்தியா முன்னேற வேண்டுமானால், தேசீய பாணியில் கூறுவதாயிருந்தால்- நவஇந்தியா உருவாக வேண்டுமானால், மனித உழைப்பு அதிகரிக்க வேண்டும் என்று நேரு விரும்புகிறார். அதனால்தான் அந்த மனித உழைப்புக்குத் தடையாக உள்ள சமூக இயல்களை அவர் சாடுகிறார். இந்த சமூக அமைப்புகளின் பயனாய் உருவாகியுள்ள உழைக்காது உண்ணும் திருமேனிகளை அவர் எச்சரிக்கிறார், உடலால் உழைக்கவேண்டும் என்று. சொல்லிலே கடுமையும் காரமும் தொனிக்க சோம்பித் திரியும் சோற்றுத்துருத்திகளைப் புல்லுருவிகள் என்கிறார். சமூக விரோதிகள் என்று குற்றம் சாட்டுகிறார். மனித உழைப்பு குறைவாக இருப்பதற்குக் காரணமான இந்த சமூக விரோதிகளின் தொகை இந்தியாவில் ஐம்பத்தைந்து லட்சம் என்று புள்ளி விவரத்துடன் கூறுகிறார். இவர்களில் பத்துப் பதினைந்தாயிரம்பேர்தான் உண்மையான சந்நியாசிகளாம். மற்றவர்கள் எல்லாம் சமூகத்தை அரிக்கும் கரையான்கள், புற்றெடுத்திருக்கும் பாம்புக் கூட்டம் என்பதுபோல் இருக்கிறது அவரது வாசகம்.

இவ்வளவு காரசாரமாகவும் கடிந்துரைத்தும் என்ன பயன்? விழலுக்கிறைத்த நீர்போல். அது கூடவல்ல பொருத்தம். வேலியே பயிரை மேய்கிறது என்பதுபோல நேருவின் சீடரான பம்பாய் கவர்னர் ஹரிகிருஷ்ண மகதாப் தலைமையில் உலக சமாதானம் ஓங்க வாசபேயயாகம் நடைபெறுவதும், இந்தியக் குடியரசின் தலைவரான பாபு ராசேந்திரபிரசாத் காசிப் பார்ப்பனர்களின் காலடியில் விழுந்து காணிக்கை செலுத்துவதும், தீண்டாமை ஒழிப்பு மசோதாவை விளக்கும் போஸ்டர்களை சென்னை சர்க்கார் வாபஸ் வாங்குவதும், கும்பமேளாக்களை நடத்துவதுமாக இருந்தால் நேருவின் இந்த அரிய உபதேசங்களுக்கும், பகுத்தறிவுக் கருத்துக்கும் என்ன தான் பொருள் என்று நம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை. இவ்வளவு பேசுகின்ற நேரு எப்படிப் பட்டவர் என்பதைப் பத்திரிகைச் செய்தியொன்று அண்மையில் அவர் ராமலீலாவைக் கண்டுகளித்தார் என்று தெரிவிக்கிறது. இப்படி இருக்கும்பொழுது நம்மால் அவரைச் சந்தேகிக்காமல் இருக்கமுடியவில்லை. குழப்பமே ஏற்படுகிறது. நேரு ஒரு சந்தர்ப்ப வாதியா, வாய்ச் சொல் வீரரா? அல்லது பைத்தியக்காரத்தனத்தை எள்ளி நகையாடி விட்டு, தானே பைத்தியமாகும் நிலையற்ற போக்கினரா என்றெல்லாம் அவரைப் பற்றி நினைக்கும்படி நேரிடுகிறது. இப்படிப்பட்ட குழப்பவாதிகளால் சமூகத்திற்கோ, அல்லது மக்களுக்கோ விளையப் போகின்ற நன்மை என்ன? உண்மையான மருந்துக்குப் பதிலாக போலி மருந்தைத் தயாரித்து விற்பதால் யாருக்கு நன்மை? போலி என்று மக்களுக்குத் தெரியாத வரைக்கும் விற்பவனுக்கு லாபம். அதுபோலத் தான் இன்று இப்படிப்பட்ட சீரிய கருத்துக்களை சீசனுக்காகவும் பேஷனுக்காகவும் பேசுவதினால் நேருவுக்குப் புகழும், பாராட்டுரையும் குவியலாமே தவிர, புழுத்துப்போன சமுதாயத்தை உயர்த்த உதவுமா என்று சிந்திக்கவேண்டும். எப்படி போலி மருந்தினால் நோய் நீங்குவதற்குப் பதிலாக நோய் அதிகரித்து ஆளை வீழ்த்திவிடும் அபாயம் ஏற்படுமோ, அதுபோலவே சீர்கெட்டிருக்கும் சமுதாயம் நேரு போன்ற உள்ளொன்றும் புறமொன்றுமாக நடக்கின்றவர்களால் மேலும் கேவல நிலைக்கு இழுத்துச் செல்லப்படும் என்பதால் நமக்கு அச்சமும் ஆபாசமும் மேலிடுகிறது. எனவேதான் சமுதாய நலனில் அக்கறை கொண்டுழைக்கும் நாம், உத்தரவாதமுள்ள, உண்மையான சுயமரியாதைச் சூரணத்தை, சமுதாயத்தைப் பீடித்திருக்கும் மதமூட நோய்களை நீக்குவதற்கு உபயோகப்படுத்தி வருகின்ற நாம் நேருவின் சொல்லையும் செயலையும் பாருக்கு எடுத்துக்காட்டி போலிகளைக்கண்டு ஏமாறுதீர்கள் என்று எச்சரிக்கிறோம். ★

அறிஞர் பா. வே. மா.

மாணிக்கப் பாயிரம்!

திராவிட நாட்டு முதற் பட்டதாரியெனவும் தொல்காப்பியம் முதலான நூல்களின் முதல் பதிப்பாசிரியரெனவும் புகழப்படும் சி. வை. தாமோதரம் பிள்ளை போன்றும், சரித்திர-இலக்கிய ஆராய்ச்சிகளில் துறைபோயவர்கள் எனக் கொண்டாடப்படும் சுந்தரம் பிள்ளை, கனக சபைப் பிள்ளை, மறைமலை அடிகளார் போன்றும், பொறி இயற்றுறையினும் வல்லுநரென ஒருங்கே புகழப் படுபவராகும் **பா. வே. மாணிக்க நாயக்கர்** எனும் **சேலம், பாகற்பட்டி** அறிஞர்!

மாணிக்க நாயக்கரது பொறி இயற்றுறை ஆற்றலுக்கு மேட்டூர் காவிரி அணை ஒரு சான்றாகும். மாணிக்க நாயக்கரது அறிவாற்றல் மேட்டூர் அணையாகத் திகழ்கின்றது எனின் மிகையாகாது.

மாணிக்க நாயக்கர் பொறிஇயல் வல்லுநர் மட்டுமன்று: கணித நிபுணரும்-ஆராய்ச்சி அறிஞரும்-மொழி இயல் வல்லுநரும்-பேச்சுக் கலைஞரும் ஆவார்! ஐயா அவர்கட்கு-திராவிடத் தந்தை பெரியார் இராமசாமி அவர்கட்கு-மாணிக்க நாயக்கர் ஓர் அகராதி-ஓர் நிகண்டு-ஓர் கலைக்களஞ்சியமாக நின்றார். இக்கூற்றை ஐயா அவர்களின் பேச்சுக்களில் இன்றும் கண்டு தெளியலாம்.

பாகற்பட்டி-மாணிக்கக்கட்டி!

முத்தம்மாள் ஏழைக் குடும்பத்தில் பிறந்த பெண்; பட்டிக்காட்டில் வளர்ந்த பெண்; எழுதப் படிக்கத் தெரியாத தற்குறிப் பெண். இப்படிப்பட்ட பெண்ணிற்கு பாவாடை உடுத்தும் பருவத்திலேயே-பன்னிரண்டாவது வயதிலேயே திருமணம் நடந்தேறி விட்டது! கணவனோ நாகரிக புருடன்; பெருஞ்சீமான்; அழகன்; ஆண்மையாளன்; வேங்கடசாமி எனும் பெயர் தாங்கிய நெடியோன்; பழம் பெருமையும் செல்வச் சிறப்பும் வாய்ந்த பாகற்பட்டி நாயக்கர் குடும்பத்தின் தோன்றல்! இவ்வர்ணனைகளைக் கேட்கும் போது தம்பதிகள் இருவரிடையேயும் இரு துருவங்கட்கும் இடைப்பட்ட தூரம் போலும் என்று தானே எண்ணுகின்றீர்கள்! அது தானில்லை! காந்த சக்தி போன்று ஈர்க்கப்பட்ட இவர்களது இல்வாழ்க்கை, ஒற்றுமை ஒளி வீசிப் பிரகாசித்தது! மணவினை முடிந்த சில

திராவிடப்பித்தன்

> தமிழறிஞர் மாணிக்க நாயக்கரின் வாழ்க்கைச் சரிதத்தை இங்கே கண்ணாடி யாக்கிக் காட்டியிருக்கிறார் கட்டுரையாளர். தோழர் திராவிடப்பித்தன் அவர்கள் நல்ல தமிழ் எழுத்தாளர் வரிசையிலே இடம் பெற்றவர். 'திராவிட நாடு திராவிடருக்கே' என்ற தொடர் கட்டுரையை எழுதி திராவிடத்தின் நல் வாழ்த்தைப்பெற்றவர்.

வாண்டிற்குள் முத்தம்மாள் சங்க கால ஒளவை மரபினள் ஆயினள். கவி பாடும் ஆற்றலைப் பெற்றனள். எனின் வாழ்க்கைத் துணைவர்களாகிய முத்தம்மாள்-வேங்கடசாமி என்போரின் தீஞ்சுவைத் தமிழ் வாழ்க்கையை வருணிக்கவும் வேண்டுமோ? இத்தகு தமிழ் மணம் மண்ணிய முத்தம்மாளின் வயிற்றில்தான் மாணிக்க நாயக்கர் என்ற மாணிக்கக் கட்டி பிறந்தது; அன்று தான் 1871ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் இரண்டாவது நாளும் பிறந்தது.

மாணிக்கனாருக்கு முற்பிறந்தார் பா. வே. பொன்னுசாமி நாயக்கர்; பிற்பிறந்தார் சொர்ணம்மையார்.

துவக்க - உயர்நிலைப் பள்ளிகளைக் கடந்து கல்லூரியில் காலடி எடுத்து வைத்த போதே மாணிக்கனாரின் குடும்பமும் வறுமையிற் சூழ்ந்தது! பாட நூல்கள் வாங்குதற்கும் வகையற்ற மாணிக்கனாருக்குத்துணை மாணவர்களின் நூல்களைப் படி யெடுத்துப் படித்து வருவதைத் தவிர வேறுவழி இல்லாதிருந்தது. எப்படியோ வறுமையுடன் போராடி கல்லூரி இடைநிலைத் தேர்வு தேறிய மாணிக்கனார் தானொரு எஞ்சினியர் ஆகவேண்டும் என்று அவாவுற்றார். இந்த அவா எழுந்ததற்கு அடிப்படைக் காரணம் மாணிக்கனார் கணிதத்தில் நிபுணராக இருந்ததும் கைத்தொழில்களில் வல்லாளராக இருந்ததுமேயாகும்! எஞ்சினியர் படிப்பை விரும்பிய மாணிக்கனார் சென்னை எஞ்சினியரிங் கல்லூரிக்கு மனுச் செய்து கொண்டார்; சேர்த்துக் கொள்வதாகக் கல்லூரி இசைவும் கிடைத்தது, ஆனால் எஞ்சினியரிங் படிப்பிற்கு ஆகும் நான்காண்டுப் பொருட்செலவைக் கொடுப்பார் யார்? கடன்பட்டுக் கலங்கும் பெற்றோரால் மாணிக்கனாருக்கு எப்படி உதவ முடியும்?

இந்த அவல நிலையில் மாணிக்கனாரின் உதவிக்கு ஒன்று ஓடோடியும் வந்தது! எது ஓடி வந்தது என்று தானே கேட்கின்றீர்கள்? தன்னை

விரும்பிக் கற்றுரைக் கைவிடா அத் தீந்தமிழ்தான் ஓடி வந்தது! அலை முத்தம்மாள் ஊட்டிய அந்தப் பைந்தமிழ்ப் பாலின் உரந்தான் உதவிக்கு ஓடி வந்தது! மாணிக்கனாரிடம் அமைந்திருந்த மற்றத் திறமைகள் போலவே கவி பாடும் திறமும் அமைந்திருந்தது. புலி வயிற்றில் பிறந்தது பூனையாகுமா? வாழ்க்கையில் நிகழும் நிகழ்ச்சிகளைக் கவியாகப் பாடுவதும், நண்பர்கட்குக் கவிதைகளாகக் கடிதங்கள் எழுதுவதும் மாணிக்கத்தின் அன்றாடப் பொழுது போக்காகும். இவ்வழக்கம் பழக்கமாகி பண்பாடாந்திருந்தது மாணிக்கனாரிடம்.

சங்கப் புலவர்கள் வறுமையை உடன் பிறப்பாகக் கொண்டவர்களன்றோ! அத்தகு சங்கப் புலவர்களில் ஒருவராகத் தன்னை நினைத்துக் கொண்டார் போலும் மாணவ மாணிக்கப் புலவர்! பாகற்பட்டி ஊரின் உரிமையாளரும் பெரும் செல்வந்தருமான மிட்டாதாரை அணுகினார். அம்மிட்டாதாரின்மீது சில கவிகள் பாடினார். கவியினூடே கவிஞரின் தொழிலாகிய வறுமைப் பாட்டையும் செருகியிருந்தார்! மாணிக்கப் புலவரின் கவித் திறமையையும் கல்வி நாட்டத்தையும் கண்டு மகிழ்ந்து அவரது எஞ்சினியரிங் கல்லூரிப் படிப்பிற்காகும் தொகையை ஏற்றுக்கொண்டார் அப்புரவலர்!

எஞ்சினியரிங் கல்லூரியில் நன்கு கற்று, முதல் மாணவராக வெற்றி பெற்ற மாணிக்கனார், ஆறு பவுன் தங்கப் பதக்கமும் கைக்கடிகாரமும் பரிசாகக் கொடுக்கப்பட்டு கௌரவப் படுத்தப்பட்டார். பட்டம் பெற்றதும் அரசாங்க எஞ்சினியராக உத்தியோகமும் கிடைத்தது. எஞ்சினியர் மாணிக்க நாயக்கர் தம் வேலையைத் திறம்படச்செய்து பேரும் புகழும் பெற்றார்.

பார்-அட்-லா!

அக்காலத்தில் மேனாட்டுப் படிப்புக்குப் பெரும் மதிப்பிருந்தது. மாணிக்க நாயக்கருக்கும் மேனாடு சென்று படித்துப் பெரும் பட்டங்கள் பெற்று வரவேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. பெரும் பட்டங்கள் பெறுவதில் யாருக்குத்தான் விருப்பம் இருக்காது? 1911-ல் நாயக்கர் இங்கிலாந்துக்குச் சென்றார். அங்கு படிப்பதோடு மட்டும் நிற்கவில்லை; தான் கண்டறிந்த புதிய கணிதம் கணிக்கும் முறைகளைப் போட்டுக் காட்டினார். கணக்கில் வல்லவரான மேனாட்டு அறிஞர்களெல்லாம் நாயக்கரின் நுண்ணறிவை மெச்சினார்கள். கணக்குத் திறமைக்காக நாயக்கர் பல பரிசுகள் பெற்றார். நாயக்கர் படித்துப் பட்டம்பெற்று (பார்-அட்-லா) வெற்றியுடன் மீண்டார். நாயக்கருக்கு வேலையுயர்வு கிடைத்தது; மதிப்பும் உயர்ந்தது. (புலவர் குழந்தை எழுதிய 'கொங்குக் குலமணிகள்' எனும் நூலில்)

கணக்குப் புலி!

இளமையிலிருந்தே மாணிக்கனாருக்குக் கணக்கில் விருப்பம் அதிகம். மற்ற பாடங்களை அவ்வளவு கவனித்துப் படியாமல் எப்போதும் கணக்குப் போட்டுக்கொண்டே இருப்பார்; கணக்குப்போடும் முறையிலும் புதிய புதிய முறைகளைக் கையாளுவார்; குறுக்கு வழிகளையும் சுலப வழிகளையும் துணை மாணவர்கட்கு எடுத்துச் சொல்லுவார். இவரது கணித அறிவை ஆசிரியர் யாவரும் கண்டு வியப் பெய்துவர். இப்படிப்பட்ட பிறவிக் கணித மாணவர் கணித மேதையாக விளங்கியதில் வியப்பென்ன இருக்கமுடியும்! சில விஞ்ஞான ரீதியான வழிகளையும் யுக்திகளையும் கையாளுவதால் எஞ்சினியரிங் துறைக் கணிதங்களை மிக மிகச் சுலபமாகக் கணித்துவிட முடியும் என்பதுதான் மாணிக்க நாயக்கர் கண்டு பிடித்த கணிதக் கண்டுபிடிப்பாகும். இப் புதிய கண்டுபிடிப்பானது கணித உலகில் **"கணிக்கும் யுக்தி" (Calculograph)** என்று பிரசித்தி பெற்றது! மாணிக்கனார் தம் யுக்தியைத் தன் நுண்ணறிவு கொண்டு மிக அழகாகவும்—எளிமையாகவும் விளக்கிக் காட்டினார் பேரறிஞர்கட்கு. இந்நவீன கணிதம் கணிக்கும் முறையைப் பெரிதும் போற்றிய ஆங்கில அறிஞர் உலகமும், எஞ்சினியரிங் உலகமும் நாயக்கருக்குப் பற்பல பரிசுகளும்பட்டங்களும் வழங்கித் தம் அன்பையும் பாராட்டையும் தெரிவித்துக் கொண்டன. மாணிக்க நாயக்கரது கணித அறிவுத் திறமை ஒளிவிட்டுப் பிரகாசிப்பது கண்ட பிரிட்டிஷ் ஆட்சியினர் நாயக்கரை 1917ம் ஆண்டில் தம் நாடான இங்கிலாந்திற்கு வரவழைத்து அவரது எஞ்சினியரிங்

— 46ம் பக்கம் —

மனிதரிலும் நானுண்டு!

மனிதனுக்கும் மார்க்கம்

வளர்ந்துகொண்டிருக்கும் மனிதன் மேலும்மேலும் தன் இனம் வளருவதற்கு, எத்தனை எத்தனையோ புதிய மார்க்கங்களைக் கண்டு பிடித்துக் கொண்டிருக்கிறான்; ஆனால், அதே நேரத்தில், தனக்கு அறிமுகமாகியிருக்கும் அருமையான ஒரு மார்க்கத்தை மட்டும் மறந்தே விடுகிறான்!

இதைப் பற்றிச் சிறிது எண்ணலாம்.

“மனிதன் என்பவன், தன் வாழ்வில் ஏதாவது ஒரு பெரிய காரியத்தைச் செய்தாக வேண்டும். கலை-சமூகம் - அரசியல் - விஞ்ஞானம் இவைகளில் எந்தத் துறையானாலும் சரி, முன்னேறி வளரவேண்டியது அவசியம்-” இதெல்லாம், மனிதன் மனிதனாக மார்க்கம் சொல்வோர் அடிக்கடி உதிர்த்துக் கொண்டிருக்கும் பொன் மொழிகள்!

இன்றைய உலகில்...?

எத்தனையோ பெரிய விஞ்ஞானிகளைக் காண்கிறோம் - எத்தனையோ நெப்போலியன்களை, ஹிட்லர்களைக் காண்கிறோம் - ஆப்ரகாம் லிங்கன்களைக்கூடக் காணமுடிகிறது. உமர் கய்யாம் கோஷ்டிகளோ, ஊர் எங்கும் பெருத்து வருகிறார்கள். பட்டிணத்தார்களின் பட்டியலோ, நாளுக்குநாள் பெருகி வருகிறது. தாயுமானவப் பரம்பரையும் அப்படியே!

ஆனால்...!

புத்தரைப்போல...

இயேசுவைப்போல...

காந்தியைப்போல......

இல்லை.......இல்லை...... யாருமே இல்லை.

இவர்கட்கு நிகர் இவர்களே!

காரணம் என்ன?

சாஸ்திரம் படித்தவனிடம் போய்க் கேட்டால், “அது அவர்களது பூர்வ ஜென்ம ப்ராப்தம் ஓய்! பேச்சை விடும்” என்கிறான்! வெறும் சரித்திரம் படித்தவனிடம் போய்க் கேட்டால், அது அவரவர்கள் உலகில் பிறந்த சந்தர்ப்பம், சூழ்நிலை அப்படி. அதனால்தான் அவர்கள் அப்படி ஆகமுடிந்தது” என்று சொல்கிறான். மேலும் ஏதாவது கேட்டால், சரித்திரப் புத்தகத்தைக் கையில் தூக்கி நம்மிடம் தந்துவிடுகிறான் - போய்விடுகிறான்.

இப்படியெல்லாம் பதில் சொல்வது கெட்டிக்காரத்தனமல்ல; ஒரு பகுத்தறிவு வாதி இப்படிப் பேச மாட்டான்;

புத்தர் - இயேசு - காந்தி இவர்களிடம், மற்றவர்கட்கு இல்லாத சிறப்பு என்ன இருந்தது?

அவர்கள்...!

பூரணமான அன்பின் உருவமாகத் திகழ்ந்தார்கள்-அவ்வளவு தான்.

“தளர்ந்தவரைத் தாங்குவதே தருமம் ஆகும்”-என்று அழகாகச் சொன்னாரே, கவிமணி, அந்தத் தருமம்தான், அந்த மூவரின் வாழ்க்கை மூலதனமாக இருந்திருக்கிறது; யாரேனும், மனித இனம் அல்லாத வேறு எந்த உயிராயினும் சரி, கஷ்டப்படுவதைக் காணும்போது, அவர்கள் தானாகவே கண்ணீர் உகுத்திருக்கிறார்கள். உலகச் சரித்திரத்தில், அவர்களைத் தவிர, பாக்கி வாழ்ந்தவர்கள் எல்லாம் கஷ்டப்படுபவனை நோக்கி பொன்மொழிகளைத் தான் அள்ளி அள்ளி வீசி எறிந்திருக்கிறார்கள்.

பாரதி சொன்னானே, வெறியும் நெறியும் கலந்து, “காக்கை குருவி எங்கள் சாதி” என்று! அதுதான் பண்பு. அந்தப் பண்பில்தான் அந்த மூவரும் மூழ்கித் திளைத்திருக்கிறார்கள்.

இவர்களைப் பார்த்துப் படித்து உணர்ந்து வருகிற இந்த இருபதாம் நூற்றாண்டு மக்களின் போக்கை நினைந்தால்...அந்தப் பாடலையே

கலைவாணர்
என்.எஸ்.கிருஷ்ணன்

இலட்சுமணன்

இலட்சுமணனைப்பற்றி ஆராய்ந்து பார்த்தால், இவனிடம் குறிப்பிடத் தக்க மேலான விஷயமாக ஒன்றுகூடக் கிடைப்பதில்லை. இராமனுடன் கூடவே இருக்கிறான் என்கின்ற ஒரு விஷயத்தினால்தான் இலட்சுமணன் பெயர் இராமாயணத்தில் அடிபடுகிறது. இலட்சுமணன் பொதுவாக சராசரி மனிதத்தன்மைக்கு மேம்பட்டவனாக எங்கும் காணக்கிடைப்பதில்லை. இவன் எப்படித்தான் இளையாழ்வார் ஆனானோ தெரியவில்லை.

—பெரியார்.

பாடிவிடத் தோன்றுகிறது! அது தான் "நெஞ்சு பொறுக்கு தில்லையே!"

நெஞ்சில் இரக்கம், காந்தியின் அளவுக்கு வேண்டாம், கடுகளவா வது வேண்டாமா? அப்படி இரக்க உணர்ச்சியின்றி, தான் மட்டும் உலகில் வாழ்ந்துகொண்டிருப்பவன் மனிதனா? அவனை மன்னிப்பவர்கள்தான் என்ன மனிதர்களா?

சக மனிதர்கள் படும் கஷ்டத்தைக் கண்டும், கோவிலில் கற்சிலையிருப்பதுபோல இருக்கிறானே; அவனே கோவிலில் உள்ள கற்சிலையை பூஜிக்காதே என்று அறிவு பேசுகிறானே, அவனுக்கு ஏது இப்படியெல்லாம் பேச உரிமை என்று கேட்கத் தோன்றுகிறது!

கலையிலே - அரசியலிலே - விஞ்ஞானத்திலே - சமுதாயப் பணிகளிலே - ஒருவன், இமயப்புகழ் பெற்று விளங்கினாலும் சரி, அவன் நெஞ்சில் ஏழைகளுக்கு உடனடியாக உதவும் பண்பு இல்லாவிட்டால் அவன் மனிதனே அல்ல; நடமாடும் கல்கடவுள்!

இரக்கம் என்ற பண்புக்கு மேலான பண்பு, எங்குமே இருக்க முடியாது. அதுதான் மூலப் பொருள்.

"ஈதல் இசைபட வாழ்தல்
அதுவல்ல(து)
ஊதிய மில்லை உயிர்க்கு"

இது வள்ளுவர் உள்ளம்!

காளிதாசனைப் போன்ற மகா கவிஞர்கள் எல்லாம், கஷ்டப்பட்டுப் பொய்யை மெய்போலாக்கி மெய்யைப் பொய்போலாக்கிக் காவியம் எழுதித்தான் மக்களைக் கவர வேண்டும். அதுவும் காலவெள்ளத்தில் எப்படி எப்படியோ?

காந்தியாரோ அப்படியில்லை! பெருநோயால் பீடிக்கப்பட்ட ஒருவனை, தொட்டுப் பணி செய்வார்- ஒரே ஒரு நிமிடத்தில் உலகையே கவர்ந்துவிடுவார், அதுவும் நிரந்தரமாக!

தாஜ்மகாலை எத்தனை எத்தனையோ அழகான கோணங்களில் படம் பிடித்தார்கள்- புகழ்பெற்றார்கள். அதன் அழகைப்பற்றிப் பக்கம் பக்கமாக எழுதினார்கள். பாராட்டைப் பெற்றார்கள். ஆனால், அண்மையில் வந்த உலகப் பெரியார்களான புல்கானின், குருஷ்சேவ் அவர்கள் தாஜ்மகாலைக் கண்டு என்ன சொன்னார்கள்! அழகைக் கண்டு வியந்து அப்படியே நின்றார்களா? இல்லை. ஷாஜஹான் துதி பாடினார்களா? - ஊஹூம், அதுவும் இல்லை. இந்தத் தாஜ்மகாலை அன்று வியர்வை சிந்திக் கஷ்டப் பாடுபட்டுக் கட்டி முடித்த ஏழைத் தொழிலாளர்களுக்கு இரங்கி, அவர்களை வாழ்த்தினார்கள். உலக உள்ளங்களில் ஒரே ஒரு நொடிக்குள், ஒரே ஒரு வாக்கியத்தின்மூலம், குடியேறி விட்டார்கள்! காரணம், அவர்களது நெஞ்சில், வார்த்தையில், பொதிந்திருந்த இரக்கப் பண்பே!

அன்பர்கட்கு உரிமையால் எச்சரிக்கிறேன். தளர்ந்தவர்களுக்காக இரங்கி உடனடியாக உதவுங்கள். அப்புறம், தமிழ், தமிழ்ப்பண்பு, தமிழ்நாடு எல்லாம் தானாகவே வாழும்!

அதுதான்...

மனிதனுக்கும் மார்க்கமும்கூட!

★

அன்புத் தொல்லை!

விடுதலை இயக்கத்தைச்சார்ந்த ஒருவர் நான்காண்டுகளுக்கு முன்பு இராமநாதபுர மாவட்டத்தைச் சார்ந்த ஓர் ஊரில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசிவிட்டு, காரில் திரும்பிக் கொண்டிருந்தார்.

இரவு நேரம்! நடுக்காட்டில் திடீரென்று கார் நிறுத்தப்பட்டது! அவர் திடுக்கிட்டு விழித்தார். பத்துப் பதினைந்து நபர்கள் வழியை மறித்துக் கொண்டிருப்பது கார் விளக்கின் வெளிச்சத்தில் தெரிந்தது. வழிமறித்த அந்தக் கூட்டத்தார் டிரைவரை மிரட்டினர்: 'இறங்கு கீழே' என்றனர். டிரைவர் நடுக்கத்துடனே காரை விட்டிறங்கினார். 'காருக்குள்ளே இருப்பவரையும் இறங்கச் சொல்' என்றனர். அதற்குள்ளாக அந்தக் கூட்டத்தார், காரின் பின் சீட்டை நெருங்கினர். எதிரிகளாலேயே வளர்க்கப்பட்ட இயக்கத்தைச் சார்ந்த் அவர் சிறிதுகூடக் கலங்கவில்லை.

"நாங்களெல்லாம் யார் தெரியுமா? பக்கத்து ஊரைச் சார்ந்த கழகத் தொண்டர்கள். இரண்டு ஆண்டுகளாகக் கூட்டத்திற்கு வரச் சொல்லி உங்களுக்குக் கடிதம் எழுதிக்கொண்டிருக்கிறோம். நீங்களும் வருகிறேன் வருகிறேன் என்று எழுதி வருகிறீர்களே தவிர, தேதி கொடுக்கவில்லை. ஆகவே எங்களூரில் பேசுவதற்குத் தேதி கொடுத்தால்தான் காருக்கு வழிவிடுவோம்" என்று அன்புக் கட்டளை இட்டனர். காரில் இருந்தவர் தோழர்களின் இலட்சிய ஆர்வத்தை மனதிற்குள்ளேயே பாராட்டிக் கொண்டார். பக்கத்திலே இருந்த டைரியை எடுத்துப் புரட்டினார். ஒரு ஞாயிற்றுக் கிழமை 'காலி'யாக இருந்தது. அந்தத் தேதியை அவர்களுக்குக் கொடுத்தார். வழி மறித்தவர்கள், 'வாழ்க' என்றனர். அந்தக் கார் காரிருளைக் கிழித்துக்கொண்டு புறப்பட்டது.

தோழர்களின் அன்புத் தொல்லைக்கு இலக்கானவர் யார் தெரியுமா?

கலைஞர் கருணாநிதி அவர்களே!

—43ம் பக்கத் தொடர்ச்சி—

கணித பரிசோதனைகளின் நவீன கண்டுபிடிப்புகளை உலக கணித அறிஞர்கள் ஒப்பும்படிச் செய்து பெரும பரிசுகள் அளித்துக் கௌரவித்தனர். நம் நாட்டிலும் உயர் நீதி மன்றத்தலைவர் திவானபகதூர் டி. சதாசிவ அய்யர் போன்ற 'அவாளாலும்' நீதிக்கட்சித் தலைவர்களாம் டாக்டர் நாயர்—சர் தியாகராயர்—பனகல் அரசர் போன்றோர்களாலும் கணக்குப்புலி என்று புகழப்பட்டார் என்றால் மாணிக்க நாயக்கரின் கணித அறிவின் மேன்மையை நன்கு தெரிந்து கொள்ளலாமல்லவா?

தொல்காப்பியமே! நீயே துணை!

வேறெம்மொழிகளிலும், இலக்கணப் பகுதிகளில் ஒன்றாகக் காணப்படாத பொருளதிகாரம் தொல்காப்பியத்துள் ஓர் பகுதியாய் அமையப் பெற்றிருத்தல் தமிழிற்கே தனிச் சிறப்பைத் தருவதொன்றாகும். அப்படிப்பட்ட புகழமைந்த பொருளதிகாரத்தை ஆய்ந்து யாவரும் ஒப்பும் முடிவு காண்பதற்கான தகுமுறைகளை வகுத்துத் தந்தவர் அறிஞர் பா.வே. மாணிக்க நாயக்கர் அவர்களேயாம். பொருளதிகார ஆராய்ச்சியில் ஈடுபடுவோர் இன்னின்ன முறைகளைக் கையாள வேண்டுமென அறிஞர் நாயக்கர் வகுத்துத் தந்துள்ள வழிமுறைகளை ஆராய்ச்சித் துறையில் விருப்போர் பெரிதும் பின்பற்றிப் பயன் காண்பரேல் பல வியத்தகு உண்மைகள் உலகுக்கு வெளிச்சமாகும் என்பதில் ஐயமின்றெனப் பெரும்புகழ்ப் புலவர் உயர்திரு ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள் கூறிப்போந்தார்.

"தொல்காப்பியத்தின் உண்மைப் பொருளறிவதற்கு அதற்கு முற்பட்டனவும் ஒத்த காலத்தனவுமாய சான்றுகள்தாம் துணையாமேயன்றி பிற்காலத்துச் சான்றுகள் ஐயமறப் பொருள் கோடற்குத் துணையாகா. பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, திவாகரம், நிகண்டு முதலான பிற்கால நூல்களை அளந்தறிவதற்குத் தொல்காப்பியத்தை அளவு கருவியாகக் கோடல் அமையுமேயன்றி, தொல்காப்பியத்தை அளந்தறிய முற்கூறியவைகள் பெரும் பயன் தாராதென்பது மட்டுமன்று; தவறு வழிகளிற் செலுத்தி விடவும் கூடுவனவாக இருக்கின்றன".

தொல்காப்பிய ஆராய்ச்சி பற்றிய அறிஞர் மாணிக்க நாயக்கரின் இத்தெள்ளிய கருத்தைப் பின்பற்றி ஆராய்ச்சியில் ஈடுபடுவோர் யார் உளர்? திருவாளர்கள் மு. இராகவயங்கார், இரா. இராகவையங்கார் போன்றோர், தொல்காப்பிய ஆராய்ச்சியிலும் சங்க இலக்கிய ஆராய்ச்சிகளிலும் ஈடுபட்டுத் தலைதடுமாறி முடிவு காண்பது இன்றும் நீடித்தே வருகின்றது.

மேட்டூர் அணையே! நீயே சான்று!

ஆற்றின் குறுக்கே அணைகட்டுவது திறமையான வேலை. அணை கட்டுவதற்கேற்ற இடத்தைத் தேர்ந்தெடுப்பதும், அணை கட்டும் இடத்தை அளந்து வரையறுப்பதும் அதைவிடத் திறமையான வேலை. மேட்டூர் அணைகட்ட இடத்தைத் தேர்ந்தெடுத்து அளந்து கொடுத்தவர் நம் நாயக்கரேயாவர்!

மாணிக்கத் தொண்டு!

தம் அலுவலினின்றும் அடுத்தடுத்து நீண்ட விடுமுறைகள் பெற்றும், அவ்விடுமுறைக் காலங்களைப் பயணம் போதலினும் அறிவு நூலாராய்ச்சிகளிலும் அவைகளைச் சார்ந்த சொற்பொழிவுகளிலும் செலவிட்டுத் தமதாளுமைத் தமிழ் மொழிக்குப் பெருந்தொண்டாற்றிய தமிழ்த் தொண்டராவர் அறிஞர் மாணிக்க நாயக்கர். 1911ம் ஆண்டின் இறுதியிலிருந்து 1919ம் ஆண்டின் மூன்றாம் திங்கள் துவக்கம் வரையில் அடிக்கடி விடுமுறைகள் பெற்றுத் தமிழ் வளர்த்துவந்த மாணிக்கத் தொண்டின் பெருமையை எவ்வளவு வேண்டுமானாலும் புகழலாம்! ★

தமிழ்வேரிற் கிளைமொழிகள் பல உதித்த
சங்கதியைச் சொல்வதற்கோ உருவெடுத்தாய்?

தமிழணங்கு கனவில் தோன்றி, தன் தாழ்வுற்ற நிலையைச் சொல்லி வருந்துகிறாள். கவிஞர் முடியரசன் அவர்களின் கற்பனைத்திறன் கவிதையிலே ஒளி விடுகிறது.



தமிழ்தான் என்பேர்

தேனினும் இனிய என்றன் தெளிதமிழ் தாழ்ந்த தேனோ ?
மீன்புலி வில்லால் காத்த வேந்தர்தம் மரபில் வந்தோர்
ஊனின்நல் உயிரின் மானம் உயர்வெனுங் குறிக்கோள் கொண்டோர்
ஏனினும் ஊமை போல இருக்கின்றார் என்ற எண்ணம்

உள்ளத்தைக் கொள்ளை கொள்ள உடலினை நீவி இன்ப
வெள்ளத்தில் தென்றல் தள்ளி மெல்லெனச் செல்ல, திங்கள்
கள்ளனை நிகர்த்து மேகக் காவினுள் நுழைந்து செல்ல,
நள்ளிராப் போதில் தூக்கம் நண்ணிடக் கனவிற் சென்றேன்.

சென்றஎன் முன்ஓர் நங்கை செயல்மறந் தழுதல் கண்டு
கன்றின முகத்தாய்! ஏனோ கலங்கிய முகத்தோ டிங்கே
நின்றிடு கின்றாய் ? அம்மா! நிலைஎனக் குரைப்பாய் நீயார் ?
என்றலும் அவளும் ஒப்பி இயம்பினள் கண்ணீர் வார:-

''வேங்கடம் குமரி நாப்பண் வெற்றியின் கொடிப றக்க
யாங்கணும் பகையே யின்றி யானர சோச்சி வந்தேன்
தீங்கென எவரும் செய்யின் தீயென வெகுண் டெழுந்து
பாங்குடன் வேந்தர் காக்கப் புலவர்கள் பாட வாழ்ந்தேன்.

மலைகடல் ஆறு வானம் மாலையில் கதிரோன் காட்சி
அலைவுறும் மேகம் காதல் அகப்பொருள் அஞ்சா வீரம்
கலைமதி என்னும் இன்ன காசினி இயற்கை எல்லாம்
நிலைபுகழ்ப் பாட லாக்கி நின்றடி பணிய வாழ்ந்தேன்

இவ்வணம் வாழ்ந்த என்னை ஏளனப் பொருளாய் வைத்தார்
உய்வகை உண்டோ என்ற நினைவெனை உறுத்த லாலே
செய்வகை யின்றிக் கண்ணீர் சிந்தினேன் தமிழ்தான் என்பேர்
வெவ்வினை மாக்கள் என்ன விளைப்பரோ அறியேன்'' என்றாள்.

''அரசியல் மன்றில் ஏற ஆண்டவன் திருமுன் நிற்க
உரிமையோ சற்று மில்லேன் உணர்வொரு சிறிது மின்றி
வருபவள் தனக்கே வாழ்வு வழங்கினர் என்றன் மக்கள்;
எரிஎனக் குமுற நெஞ்சம் ஏங்கினேன்'' என்றாள் அன்னை.

முடியரசன்

தமிழ் மரபும் விழாக்களும்

சங்க கால இலக்கியங்களை ஆராயும் பொழுது பண்டைக் காலத்தில் தமிழ் மரபு எவ்வாறு இருந்தது, சமுதாய அமைப்பு எங்ஙனம் சிறந்திருந்தது என்பன போன்ற உண்மைகள் தெரியவருகின்றன. அக்காலத்தில் மக்கள் மிக்க இன்பத்துடன் வாழ்வதற்குரிய ஒழுக்கங்களைச் சிறந்த முறையில் வகுத்திருந்தார்கள். இதற்கு, அவர்கள் உலகிற்கு அளித்த அகப்பொருள் நூல்களே சான்றாகும். தமிழ் மரபினர் உண்மைக்குப் புறம்பான கொள்கைகளைத் தம் மனத்தில் கொண்டதில்லை. அவர்கள் வாழ்ந்த நிலத்திற்கும் பண்பாட்டிற்கும் தக்கவாறு கடவுள் வழிபாடு மேற்கொண்டிருந்தனர். நில வாழ்விற்கு ஏற்ப இறைவன் பெயரை அமைத்து வழிபாடாற்றினர். பிற்காலத்தோர் எல்லா நிலங்களின் தெய்வங்களையும் ஓரிடத்தே தொகுத்து, கோயில் அமைத்து வழிபடத் தொடங்கினர். இதன் விளைவாகச் சிறுதெய்வ வழிபாடு நம் நாட்டில் மிகுவதாயிற்று. இதனால் இயற்கையோடு இயைந்த வாழ்வினர் மேற்கொண்ட ஒரு கடவுட் கொள்கை மறைந்து போயிற்று. இப்பழைய நெறி புதிய தமிழகத்தில் மீண்டும் தழைக்க வேண்டும் என்ற பெருவிருப்பங் கொண்ட இக்காலப் புலவர் ஒருவர்,

'ஒரு கடவுட் பழையநெறி
தமிழ்நாட்டில் பண்டுபோல்
உயர்ந்தோங்க நாட்ட வேண்டும்
ஓராயிரத்திற்கு மேலான
சிறுதெய்வம்
ஊரைவிட்டு ஓட்ட வேண்டும்'

என்று பாடுவாராயினர்.

காலம் செல்லச் செல்ல வேற்று நாட்டவர் பலரது வரவும் பைந்தமிழ் நாட்டில் மிகுந்தது இதனால் பல்கலைகளும் பண்பாடுகளும் தமிழ் மரபோடு கலக்கத் தலைப்பட்டன. தனித்தன்மை இழக்கத் தொடங்கியது தமிழ் மரபு. இதற்கு ஆதரவு தருவனவாய் இடைக்காலத்து எழுந்த புராணங்களும் இதிகாசங்களும் அமைந்தன. கடவுளர் பெயரால் கட்டிவிடப்பட்ட கதைகளும் நிகழ்ச்சிகளும் சமுதாய வாழ்வில் சம இடம்பெறத் தலைப்பட்டன. வாழ்க்கைக்கு ஒத்து வராத, இயற்கைக்கு முரணான தத்துவ ஆறுகள் தமிழ் மரபு என்னும் திருப்பாற் கடலில் கலக்கத் தொடங்கின. இதனால் உண்மை மரபு என்னும் முத்தெடுத்தல் அரிதாகப் போய்விட்டது.

இந்தக் கதைகளின் அடிப்படையில் விழாக்கள் கொண்டாடத் தொடங்கினர். கண்ணுக்குத் தெரியாத கற்பனையுலகில் மட்டும் வாழக் கூடியவைகளுக்கு விழாக்கள் நாட்டில் பெருகின. உலகத்தை மேல், கீழ், நடு என்றும், அங்கு வாழ்வோரை தேவர், நரகர், மக்கள் என்றும், தெய்வங்களைச் சிறுதெய்வம் பெருந்தெய்வம் என்றும் பாகுபாடு செய்தனர். இங்ஙனம் சமுதாய மண்ணில் முளைத்துவிட்ட இக்களைகள் ஆல்போல் தழைத்து அருகு போல் வேரோடி மூங்கில்போல் சுற்றம் முசியாமல் வாழ்ந்தன. இதன் பயனாகத் தெய்வங்களின் குடும்பங்களும் உறவு முறைகளும் பெருகின. அவைகளின் பெயரால் கதைகள் புனையப்பட்டன. அக்கதைகள் மக்கள் மனத்தில் படியும் பொருட்டு விழாக்கள் கொண்டாட ஏற்பாடு செய்தனர். இக்கொண்டாட்ட முரசொலியில் உண்மையின் மணியொலி மக்கள் செவிகளில் கேட்கவில்லை. வேண்டப்படும் விழா எதுவென்று மக்கள் சிந்தித்துச் செயலாற்ற முற்படவில்லை.

இப்பொங்கல் விழா, மக்கள் வாழ்வோடு பின்னிக்கொண்டும் மின்னிக்கொண்டும் பிணைந்து விளங்குவதாகும். உழைத்த உள்ளம் உவகை கொண்டு தழைக்கும் தமிழர் திருநாள். மகிழ்ச்சியால் பொங்கும் உள்ளத்தை மாநிலத்திற்கு எடுத்து விளக்கும் விழாவே பொங்கல். ஆண்டுக்கு வேண்டிய பயனை அறுவடை செய்து அதனைப் பலருக்கும் பகுத்துக் கொடுத்துப் பண்பு சிறக்க மகிழ்வுறும் நாள். 'உழுவார் உலகத்தார்க்கு ஆணி' என்ற பேருண்மையை நாடறியச் செய்யும் நன்னாள். ஒத்துழைத்த காளைகளைச் சிறப்பிக்கவும், நன்றி செலுத்தவும் 'ஏறுதழுவுதல்' என்ற விழா எடுத்து மக்கள், மாக்கள் இவர்களின் வெற்றி, தோல்விகளைக் கணக்கிடும் கன்னித்தமிழ்த் திருநாள். நிலமெனும் நல்லாள் நலனுற வாழியர் என வயல் வளத்தை வாயாரப் பாராட்டும் வளமிகு திருநாள்.

இவ்விழா, இயற்கையோடியைந்த, இயற்கையினின்றும் பிரிக்க முடியாத ஒரு இனிய விழா. தமிழர் இயற்கை வாழ்வினர் என்பதைச் சங்க நூல்கள் சாற்றுகின்றன. 'கைபுனைந்து இயற்றாக் கவின்பெறு வனப்பு' என்று இயற்கை பெருமிதத்துடன் பேசப்படுகிறது. இந்த இயற்கையின் மடியில் வளர்வது தான் இப்பொங்கல் குழவி. இத் தமிழர் திருநாள், ஏனையவை போன்று, முழுநிலவில் வந்து, மூவா இளநலம் காட்டி மக்களை மகிழச் செய்கிறது. செந்தமிழ் மரபு காக்குஞ் செம்மை விழாவாம் இதனைத் தமிழராயினோர் சிறப்புறக் கொண்டாடி மகிழ்தல் தலையாய கடன். இதனால் மரபும் மாண்புறும்; மொழியும் வளம்பெறும். ★

தி. சுந்தரம் பி.காம்.



வாத்தியாரம்மா

வாத்தியாரம்மா !

அவளைப்பற்றிச் சிலசொல்வதற்கு முன்னால்...

'தென்றல்' மலருக்குக் காத்திருந்து, மலர் கிடைத்ததும் ஏடுகளைத் தள்ளி, எதைப் படிப்பது என்று திணறும் லட்சம் வாசகர்களுக்காக நான் இதை எழுதவில்லை.

இதிலென்ன ரகசியம் வேண்டிக் கிடக்கிறது? யாருக்காக எழுதுகிறேன் என்பதை வெளிப்படையாகவே சொல்லி விடுகிறேன். ஒளித்து வைத்தால் கண்டுபிடிக்க மாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்!

வாத்தியாரம்மா!

என்னுடைய எழுத்தை ரசிப்பாள் என்பது எனக்குத் தெரியும். என்னை விட்டு எங்கோ இருக்கும் அவள், என்னுடைய இந்த எழுத்தை என்றாவது ஒரு நாள் படிப்பாள்; ஆனந்தப்படுவாள்; அவளுடைய ஆனந்தம் போதும் எனக்கு! மற்றவர்கள் எதுவோ நினைக்கட்டும் எனக்கென்ன?

இனி, அவளைப்பற்றி.........அது தான் கதை!

வானத்திற்கு அழகூட்டும் மேகக் கூட்டத்தையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள். அடிவானத்திற்கு அப்பால் தெரிந்த சூனியப் பிரதேசத்தையும் தாண்டிப் போய்க் கொண்டிருந்தது அவள் எண்ணம்!

வளர்ந்த எண்ணம் வளர்ந்தபடி வாழ்ந்தது. தூங்கிப்போன மனதைக் கூடத் தொட்டு எழுப்பியது. பாடாத பாட்டை எல்லாம் பாட வைத்தது. உலவி வந்த தென்றல்கூட உறவு கொண்டாடியது. எண்ணத்துள் எண்ணமாகப் பதிந்து உட்கார்ந்திருந்தாள்.

'என்ன டாக்டர்' என்று தன்னை எல்லோரும் கூப்பிட வேண்டும் என்பதுதான் அவள் லட்சியமாக இருந்தது. என்ன செய்யலாம்? கடைசியில் 'வாத்தியாரம்மா' என்றுதான் கூப்பிட வேண்டி வந்தது. அது ஒரு தனிக்கதை! அந்தக் கதை கிடக்கட்டும்.

இதற்கு முன் ஒரு நாள், இதே மாதிரி, வானத்து நட்சத்திரங்களை எண்ணிக்கொண்டு, மேகக் கூட்டங்களில் மனத்தைத் திரியவிட்டு, எண்ணத்தை அவன் நினைவில் தேக்கி நிறுத்தி உட்கார்ந்திருந்தாள்.

அன்று!

'நிர்மலா கல்லூரி'யில் உனக்கு 'வாத்தியாரம்மா' வேலை காத்திருக்கிறது. உடனே வந்து ஒப்புக்கொள்!' என்ற கடிதம் அவள் கையில் இருந்தது. கல்லூரி ஆசிரியையாகப் போகிறோமே என்ற ஆனந்தம் ஒரு பக்கம்! அவனை விட்டுத் தூரப் போகிறோமே என்ற ஏக்கம் ஒரு பக்கம்!

அவனா!

மலரோடு மணமாகச் சேர்ந்து வந்து அவளை மகிழ்வித்தான். அவள் பாடிய பாட்டிலெல்லாம் பதிந்து வந்து ஒளிவிட்டான். அவள் எண்ணிய எண்ணத்திலெல்லாம் இனித்து வந்து நின்றான். புத்தகத்தின் ஒவ்வொரு பக்கத்திலும் சிரித்து நின்று வேடிக்கை காட்டினான். அவள் தனித்திருந்த போதெல்லாம் தோள் தழுவி நின்றான். அவள் பார்த்து நின்ற இடமெல்லாம் எதிர்ப்பட்டுப் போனான்.

நீ எனக்கு, நான் உனக்கு என்ற எண்ணம் வளர்ந்தது. உயிர் இல்லை என்றாலும் வாழ்ந்துவிடலாம்: உன் உறவு இல்லை என்றால் வாழ்வேது? வையம் ஏது? உயிருக்கு உயிரான உனை விட்டுப் பிரியும் ஒருநாளும் திருநாளாய் வந்தின்று வாய்த்ததே! என்று நீல வானத்தையே பார்த்திருந்தாள்.

இன்று மறுபடியும் —

காணாத காட்சிஎன்ன கண்டாள்? மனம் கலங்கிப் போய் ஏன் இன்று நின்றாள்?

காலையில் —

வழக்கம்போல் வகுப்பு அறையில் நுழைந்தாள். மாணவிகளுக்குப் பாடத்தைச் சொல்லிக்கொண்டு வந்தாள். அன்று புதிதாகச் சேர்ந்த மாணவி அவள் பார்வையில் பட்டாள். அந்த முகம் எங்கோ பார்த்த முகம். காற்றிலே மிதந்து வந்து கதை பேசிய முகத்தின் சாயல்! பாடும் வண்டுகளின் ரீங்கார ஒலியில்நின்று விளையாடும் குரலின் பிம்பம்! ஆசையை எல்லாம் தேக்கி நிறுத்தி ஆனந்தத்தோடு பார்க்கும் பார்வையின் எதிரொலி!

பாடம் நடந்து கொண்டிருந்தது. வாத்தியாரம்மா பாடத்தைச் சொல்லிக் கொடுத்துக் கொண்டு வந்தாள். வினாடிக்கு வினாடி புதிய மாணவியைப் பார்த்துக்கொண்டாள். அன்றைய பாடமும் அதுவாகவே இருந்தது. 'தலைவன் வரவுக்காக அவள் ஏங்கித் தவிக்கிறாள். தூரத்தில் தென்படும் ஒவ்வொருவரும் அவனைப்போலவே அவளுக்குப் படுகிறது. எங்கோ கேட்கும் குதிரையின் குளம்படி ஓசை அவன்

— 56-ம் பக்கம் —

திரை நாகராஜன்

பொங்கல் தமிழர் திருநாள். வேறு எந்தத் திருநாள் பற்றியும் கருத்து வேற்றுமையுண்டு; என்றாலும் இவ்விழாவைப் பொறுத்த வரையில் நாட்டிலே ஒற்றுமை நிலவுகிறது.

வானத்திலிருந்து மழை பொழிகிறது. மக்கள் உழைக்கின்றனர். நிலம் என்னும் நல்லாள் மக்களின் மனங்குளிர உண்ண உணவும், உடுக்கும் உடைக்குப் பஞ்சும் தருகிறாள். அதைத் தொடர்ந்துதான் பிற தொழில்கள் எல்லாம் செல்லுகின்றன. இந்தத் தத்துவத்தின் அடிப்படையில் எழுந்த திருநாள் "பொங்கல்."

உழுதுண்டு வாழ்ந்த தமிழினம் அதனோடு நின்றுவிடவில்லை; தொழிலியல், உள்நாட்டு வாணிபம், முதலியவற்றில் ஈடுபட்டுத் தாழ்விலாச் செல்வர் வாழும் நாடாகத் தமிழ்நாட்டை உருவாக்கியது. செல்வப் பெருக்கத்தினால் கலையும், இலக்கியமும், வளரத் தொடங்கின. இதைத் தொடர்ந்து தனக்கென ஒரு பண்பாட்டையும், நாகரிகத்தையும் அமைத்துக்கொண்டது தமிழகம். அவைகளை நாம் பெரும்பாலும் ஏடுகளில்தான் இன்று காணலாம். தமிழர் திருநாளாகிய இந்நாளிலே அவைகளை அறிந்துகொள்வது சிறப்பாகும்.

தமிழரினம் தன்மானம் உள்ள இனம் என்று ஏடுகளிலும், மேடைகளிலும் பேசப்படுகிறது. தனக்கென ஒரு வழி வகுத்துக்கொண்டு அதன்படி நடப்பவன்தான் தமிழன். தன் வாழ்விற்காகப் பிறரை நம்பி வாழ்பவனல்லன். தந்தையின் கடமை மகனுக்கு நல்ல கல்வியைக் கொடுத்து அவனை முன்னுக்குக் கொண்டுவருவதுடன் முடிந்துவிடுகிறது. வயதாகி, திருமணப் பருவம் வருங்காலத்திலே அவனே பொருள் தேடி, தனக்கு விருப்பமான பெண்ணைக் காதலித்து வாழ்க்கைத் துணையாக மணம் செய்துகொள்ளுவான். தந்தையின் புகழை நம்பி வாழ்பவன் தமிழன் அல்லன். ஆங்கில நாட்டில் ஒருவரைச் கூறும்போது தந்தையின் மகன் என்று கூறுவது வழக்கம். ஆனால் தமிழ்நாட்டில் இவர் இன்னாருடைய தந்தை என்று கூறுகிற வழக்கம் அமைந்திருந்ததென்றால், அந்நாட்டினுடைய பெருமை எத்துணைப் பெருமை என்று கூறவும் வேண்டுமா? ஆதன் தந்தை ஆந்தை என்றும், கீரன் தந்தை கீரந்தை என்றும் காணப்படும் பெயர்களே தக்க சான்றாகும்.

ஒருவனும் ஒருத்தியும் காதலித்துக் கடிமணம் புரிந்துகொள்ளும் முறையில் வழிவழி வந்த சமுதாயம், பெண்களை அடிமைப்படுத்தி வாழவில்லை என்பதையும் அறிகிறோம். ஒரே வீட்டில் தந்தையும் மகனும் வாழ்ந்தால், மகனுக்கு வாழ்க்கைத் துணையாகப் புகுந்த பெண், பிறருக்கு அடிமையாகி விடுவாளோ என அஞ்சி, வேறு ஒரு இல்லத்திலே மகன் வாழ்ந்து வர வேண்டும் என்று பழந்தமிழர் இனம் ஏற்பாடு செய்தது. இதனை இளங்கோவடிகள் மிக அழகாகக் கூறுகின்றார்.

"விருந்து புறந்தரூஉம்
பெருந்தண் வாழ்க்கையும்
வேறுபடு திருவின்
வீறுபெறக் காண"

என்பது.

தமிழர்களுடைய சிறப்பு, வந்தவர்களுக்கு விருந்தளித்து உண்ணுவதுதான். அந்த வாழ்வைப் பண்புற நடத்துவதற்காக, வேறு வைப்பது என்ற முறையைக் கண்டவர்கள் தமிழர்கள். இந்த வழக்கத்தைச் செட்டிநாட்டுத் தனவணிகரிடையே இன்றும் காணலாம்.

இல்லாள் என்பது மனைவிக்குக் கொடுத்த பெயர். இதற்கு எதிர்ப்பதம்கூறு என ஆசிரியர் மாணவனைக் கேட்க, அதற்கு இல்லான் என்று பதிலுரைத்தான். இல்லான் என்னும் எதிர்ப்பதம் இலக்கணத்திலே இல்லை. ஆசிரியருக்கு மிகவும் கோபம் வந்துவிட்டது. இதனைக் கண்ட மாணவன், "திருமணம் செய்துகொண்டபின், தனக்குள்ளவற்றை யெல்லாம் மனைவிக்குத் தந்துவிடுவதனாலே, இல்லானாகிவிடுகின்றான்" என்று சொன்னான். இதற்கு இலக்கியத்தில் சான்றுகள் இருக்கின்றன. ஒருநாள், வேறு பெண்ணுடன் நட்புகொண்ட கணவனுடன் இனிது வாழ்ந்து வந்த பெண்ணிடம், தோழி சென்று, "அம்மையே. அவர் வந்தால் சீறி விழுவேன் என்று கூறினீர்களே; இன்று அவர் வந்தவுடன் மகிழ்ந்திருக்கின்றீர்களே" என்று கேட்க, "எல்லாவற்றையும் எனக்கே தந்துவிட்டு, ஏழையாகி விட்ட அவரை இன்னமும் வருத்துதல் தகுமா? போன முறை வந்தபோது "எம் மனை வராதீர்" என்று வெருட்

"மாசி"

டினேன். அவர் சென்றுவிட்டார். நேற்று விருந்துடன் என்னைக் காண வந்தார். விருந்தாளியை ஏற்று உபசரிப்பது கடமை என்பதனாலே, நான் அவர்களை ஏற்றுக் கொண்டேன். பின்னர் நாங்கள் இருவரும் சமாதானமானோம் எனக் கூறினான்.

பெண் பெருமையுடன் வாழ்ந்தாள் தமிழகத்தில். தன்னுடைய குறைகளைக் கணவனிடம் தவிர மற்றவர்களிடத்தில் கூறுவதும் தவறு எனக் கருதினாள். இதனால் தான் கண்ணகி, தன் கணவன் தனக்கு வேண்டுமென்று கேட்கவும் பூதகணத்திடம் செல்லவும் மறுத்து விடுகிறாள். தெய்வமாயினும் கணவனுக்குப் பிறகுதான் என்ற கருத்து மலிந்தது, அந்நாவிலே.

கோவலன் செல்வக் குடும்பத்தில் பிறந்தவன். பின்னர், தானே தேடிய பொருளைக் கொண்டு அரசியலில் தனியான ஒரு புகழைப் பெற்று அரசரிய வாழ்ந்து வந்தான். தான் தேடிய பொருளை யெல்லாம் மாதவி என்னும் கணிகைக்கே தந்துவிட்டான். அவளிடம் கருத்து வேறுபாடு ஏற்பட்டவுடன் பிரிந்தான். தன் தந்தை சிறந்த செல்வராக விளங்கிய போதிலும் அவரிடம் சென்று பொருள் கேட்க விரும்பவில்லை அவனுள்ளம். வாழுதல் வேண்டி மதுரை சென்றான் அங்கே கொலை செய்யப்பட்டான். இதனால் அறியப்படுவது என்னவென்றால் தமிழன், திருவள்ளுவர் குறளுக்கு ஏற்பப் பசுவிற்கும் தண்ணீர் வேண்டுமென்று பிறரிடம் போய்க் கேட்க மாட்டான் என்பதுதான். உழைத்து முன்னேற வேண்டும்; இன்றேல் சாதலே நலம் என்ற குறிக்கோளுடையவனாக வாழ்ந்தான். ஆனால் இன்றோ உழைக்காமல் இச்சகம் பேசி இரந்துண்ணும் இழிந்த வாழ்வை வேண்டி நிற்கிறது. பிறருடைய கலை, பண்பு, மொழி என்று கூறி அவைகளைப் புகழ்ந்து அடிமை வாழ்வு வாழ நினைக்கிறது. தமிழர்கள் தங்களுடைய மொழி, கலை, பண்பாடுகளைக் காப்பாற்றி, அடிமை மனப்பான்மையை மறந்தாலன்றி, பொங்கல் திருநாளின் குறிக்கோளை நாம் அறிந்தவர்களாக மாட்டோம். பொங்குக தமிழர் பண்பாடு! பொங்கலோ பொங்கல்! ★

ஸ்தாபிதம் : 1930 போன் 120

சேலம் நெசவாளர் உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிமிடெட்

No. S. 362

49. காஸ்வே ரோடு, குகை, சேலம்.

சங்கத்தின் சொந்த சாயப்பட்டறையில் சாயம் துவைக்கப்பட்டு நல்ல முறையில் கை தேர்ந்த உறுப்பினர்களால் தயாரிக்கப்பட்ட சில ரகங்கள் 40-ம் நெம்பர் முதல் 80s நெம்பர் வரையில் எல்லா கெஜங்களில் கிடைக்கும். மேலும் 20s. 40s. 80s. நெம்பர்களில் வேஷ்டிகளும் துண்டுகளும் தயாரிக்கப்படுகின்றன.

சாயத்தின் கெட்டிக்கும் துணியின் உறுதிக்கும் உத்தரவாதமானது

சங்கம் துவங்கி 25 வருடம் பூர்த்தியானதை முன்னிட்டு 20—8—55க் தேதியில் சங்கத்தின் வெள்ளி விழா சிறந்த முறையில் கொண்டாடப்பட்டது.

வியாபாரிகளுக்கு நல்ல வாய்ப்பும் வசதியும் உண்டு.
விபரங்களுக்கு மேற்கண்ட விலாசத்துக்கு எழுதவும்.

T. P. நாகி செட்டியார்
பிரசிடெண்ட்

ஆதிக்க மொழி!

நூற்றுக்கு மேற்பட்ட மொழிகளைப் பேசும் முப்பத்தாறு கோடி மக்கள் வாழும் இந்தத் துணைக் கண்டம், ஒரே மத்திய அரசின் ஆட்சியில் உள்ள காரணத்திற்காகவே, ஒரே நாடு என்று கருதப் படுகிறது. ஒரே அரசு—ஒரே நாடு என்பதாலேயே ஒரே மொழி தேசிய மொழியாகக் கொள்ளப்படவேண்டும் என்ற கருத்தும் தோன்றலாயிற்று.

இந்தியா ஒரு நாடுதானா? ஒரே ஆட்சியில் சிக்கிய பகுதிகளெல்லாம் சேர்ந்து ஒருநாடு ஆகுமா? ஒரே ஆட்சியில் 'இந்தியா' இடம்பெற்ற வரலாறு யாது? அடிமைப்படுத்தப்பட்ட முறையினால் ஏற்பட்ட அமைப்பு, உரிமை எழுச்சி ஏற்பட்ட பின்பும் நிலைக்குமா? அந்நியரின் ஆதிக்கத்தின்போது ஏற்படுத்திய "கட்டுப்பாடு"—ஆதிக்கம் அகன்ற பின் இயல்பாகவே தகராதா? அடிமைத் தனத்தின் அடையாளமாக ஏற்பட்ட இணைப்பு—விடுதலையின் பின்பும் பொருந்துமா?—என்பவற்றை எல்லாம் எண்ணிப் பாராத தேசியத் தலைவர்கள், விடுதலைக்குப் போராடிய காலத்திலேயே, வெள்ளையனோடு ஆங்கிலத்தையும் வெளியேற்றவும் இந்தியமொழி ஒன்றைத் தேசியமொழியாகக் கொள்ளவும் தீர்மானித்தனர். தேசிய இயக்கத்தில், வடநாட்டார் பெற்றிருந்த அளவுமீறிய செல்வாக்கும், தேசிய மொழியைத் தீர்மானிக்கப் பெருந் துணையாயிற்று.

பெரும்பான்மையான மக்களால் பேசப்படுவது என்ற காரணங்காட்டி இந்தியே தேசியமொழி என்று தீர்மானித்தனர். அக்காலத்தில் 'தேசியவெறி' மிகுந்திருந்த காரணத்தால், பொது மக்கள் தம்தம் மொழி உரிமைபற்றி எண்ணக்கூட வில்லை. ஆனால் அறிவு முதிர்ந்த சிலர் அப்பொழுதே தம் எதிர்ப்பைத் தெரிவிக்கத் தவறவில்லை.

இந்தியாவிற்கு 'இந்தியே' தேசிய மொழி என்றால் மற்ற மொழிகளின் நிலை என்ன? 'இந்தி' ஒன்று மட்டுமல்லவே பேசப்படும் மொழி? ஒரு நிலத்திற்குரிய மக்கள், அந்நிலத்தில் பேசும் மொழி எதுவாயினும் அது தேசிய மொழியன்றோ? அவ்வாறாயின் தொன்று தொட்டு இந்தியாவில் வாழும் மக்கள் பேசும் மொழிகள் அனைத்தும் (சம) உரிமை பெறவேண்டுமல்லவா? இந்நிலையில், ஒரு மொழிமட்டும் 'தேசியமொழி' என்ற சிறப்புரிமை பெறுவது எப்படி நியாயமாகும்?

இப்படிப்பட்ட கேள்விகள் எழுந்ததாலேயே, இந்தியாவின் அரசியல் சட்டத்தில், இந்தி மட்டுமேயன்றி மற்றும் 13 மொழிகளும் இந்தியாவின் தேசிய மொழிகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. பேச்சு வழக்கொடு வரிவடிவும் பெற்று வளர்ந்துள்ள மொழிகள் 13-ம் பேச்சு வழக்கிறந்து, ஏட்டிலே மட்டும் இடம் பெற்றுள்ள வடமொழியும் (சமக்கிருதமும்) ஆகும். ஆகவே இந்திக்குள்ள உரிமை, இங்குக் குறிப்பிடப்பட்ட பிறமொழிகளுக்கும் உண்டு என்பது தெளிவு.

முடி இழந்த மன்னர்கள் குடியாட்சியில், இராசப்பிரமுகராகவோ, அமைச்சராகவோ இடம் பெறும் செய்திபோல, தேசியமொழி என்ற தனித் தகுதிக்கு இடமில்லை என்பதைக் கண்டதும், இந்தியைப் பொது மொழி—அல்லது ஆட்சி மொழி என்ற நிலைபெறச் செய்தனர். தேவநாகரியில் எழுதப்படும் இந்தி இந்தியாவின் ஆட்சி மொழி என்று அரசியல் சட்டமும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்தியாவில் உள்ள பலமொழி வட்டாரங்களை இணைக்கவும், மாநில அரசுகள் தமக்குள்ளும் மத்திய அரசுடனும் தொடர்பு கொள்ளவும், மத்திய ஆட்சி நிகழவும் ஒரு பொது மொழி தேவையாதலின் இந்தியைப் பொதுமொழியாகக் கொண்டதாகக் கூறுவர்.

அதற்குச் சான்றாக, தொன்று தொட்டே இந்தியாவில் ஏதேனும் ஒரு பொதுமொழி வழங்கி இருப்பதாகவும், படித்தவர்களிடையே முன்னாளில் சமக்கிருதமும்; பின்னர் முகலாயர் ஆட்சியில் பார்சியும் இறுதியில், ஆங்கிலமும் பொது மொழியாக இருந்ததாகவும் கூறுவர். இவைமட்டுமேயன்றி பிராக்கிருத பாலி மொழிகளுங்கூடத் தான், இவைபோன்று படித்தவர்களிடையே வழங்கியுள்ளன. ஆனால் இவற்றுள் ஆங்கிலந் தவிர்த்த வேறெதுவும், "இந்தியா" முழுவதற்கும் பொதுமொழியாக வழங்கப்படவில்லை. பெரும்பாலும் வட நாட்டிற்கும், தெக்காணத்தில் சில பகுதிகளுக்குமே அவை பொது மொழிகளாக வழங்கியுள்ளன.

தென்னாட்டிலோ தமது சமயத்தைப் பரப்ப வந்தவர்களாலும், குடியேறிய சில வகுப்பினராலும் மட்டுமே அம்மொழிகள் கையாளப் பட்டனவேயன்றி அவை பொது மொழியாகவில்லை. அப்படிக் குடியேறிய சில வகுப்பார் பெற்ற ஆதிக்கத்தால், அவை பொது மொழியாகத் தென்னாட்டிலும் வழங்கப் பட்டதாகக் கருதப்படுகிறது.

அந்த மொழிகளுள்ளும், சமக்கிருதம் ஆரிய மதக் கருத்துக்களோடும், பாலி புத்தமதக் கொள்கையோடும், பாரசீக மொழி இஸ்லாமியர் ஆட்சியோடும், பரவின. தென்னாட்டில் பாரசீக மொழி பரவ

க. அன்பழகன் எம். ஏ.

வில்லை. சமக்கிருதமும், பாலியும், மதத்துறையோடு நின்றனவேயன்றிப் பொது மொழியாகவோ, ஆட்சி மொழியாகவோ கொள்ளப்படவில்லை.

படித்தவர்களிடையே, சிறப்பாக வடநாட்டில் அவை பொது மொழியாக வழங்கியதற்குங்கூட, அவற்றின் இலக்கியக் கலைவளமும், அங்கு வழங்கிய பிற வட்டார மொழிகளின் இலக்கியக்கலை வறுமையுமே காரணமாகும். வடக்கேயுங்கூட, ஆட்சிப் பீடத்தைக் கைப்பற்றிய ஆதிக்கவாதிகளின் மொழியாகவோ, மத நெறி பரப்பும் மொழியாகவோ அமைந்ததாலே மட்டுமன்றி அவை பெற்றிருந்த தனிச் சிறப்புக்களாலேயே படித்தவர்களால் பொது மொழியாகக் கொள்ளப்படலாயின.

தமிழ் மொழியொடு ஒப்புநோக்கின் அவற்றுள் எதுவும் தமிழை விட உயர்ந்ததன்று. தென்னாட்டில், அவற்றுள் ஒன்றும் ஆட்சிமொழியும் ஆகவில்லை. மதவழியில் கால்கொண்டு, தமிழ் நாட்டில் புரோகித மொழியாக இடம்பெற்ற வடமொழியைப் பொதுமொழியாகக் கருதுவது இழுக்கேயாகும்.

உண்மையில் ஆரியம் நுழையுமுன், சமக்கிருதம் வரிவடிவம் பெறும்வரையில், தமிழின் மிகப் பழைய வடிவமே இந்தியா முழுவதும் பரவி இருந்ததாக ஆராய்ச்சியாளர் கருதுவர். அப்பொழுது வேற்று மொழிக்கே இடமின்மையால், 'பொது மொழி எது' என்ற கேள்விக்கே இடமில்லை. எனவே தென்னாட்டைப் பொறுத்தவரையிலாவது, தமிழே பலகாலம், தனியாட்சி நடத்திய மொழி என்பதை எவரும் மறுக்கவியலாதன்றோ?

எனவே, தென்னாட்டிற்கும், வடநாட்டிற்கும், வெள்ளையர் ஆட்சிக்கு முன், பொது மொழியாக வழங்கிய மொழி ஏதும் இல்லை என்பது தெள்வு. ஆங்கிலம், பொது மொழியாகவும் ஆட்சி மொழியாகவும் வழங்கியதைக் கண்டதாலேயே பொது மொழி எண்ணம் வரலாயிற்று. மேலும், 'ஆங்கிலம்' கூடாது என்பதைவிட, இந்திக்கு அந்த "இடம்" வேண்டும் என்ற ஆசை மிகுதியினாலேயே—இந்தியே பொது மொழி என்ற கொள்கை வலுப்பெற்றதாகும். ஆனால், ஒருமொழி பொது மொழியாகப் போற்றப்படவேண்டுமெனில், அதுவும் படித்தவர்களிடையே வழங்க வேண்டுமெனில், அதற்கு எத்தகைய 'தகுதி' வேண்டும், என்பது எண்ணப்படவே இல்லை. ஒரு பொது மொழி என்ற பெயரால், அதற்கு வேண்டிய எந்தத் தகுதியும் சிறப்பும் வளமும் பெறாத இந்தி, இன்று ஆட்சி மொழியாக்கப்பட்டுவிட்டது.

படித்தவர்களிடையே அரிய, நுண்ணிய கருத்துக்களையும் கொள்கைகளையும் பரிமாறிக்கொள்ளத் துணை செய்யும் தகுதியுடையதே பொது மொழியாகக்கூடும். இன்று அந்தப்பணியை முழு அளவிற்கு இந்தியாவைப் பொறுத்தவரையில் நிறைவேற்றிவருவது ஆங்கிலமே. வருங்காலத்திலும், பொதுமொழி என்று பெயரளவில் கொள்ளப்படாவிடினும் ஆங்கிலமே அப்பணியை நிறைவேற்றுவதாக இருக்கும். எனினும் 'இந்தி'யே பொதுமொழி என்று பறை சாற்றப்படுகிறது. "ஆட்சிமொழி" என்று மட்டுமேகூறின் ஆதிக்கம் தெளிவாகப் புலனாகி, எதிர்ப்பும் வெறுப்பும் வளரும் என்பதைக் கருதியே பொதுமொழி இந்தி என்று பேசப்படுவதாகும்.

ஆதிக்கக் கருத்தை மறைத்து, இந்தி பொது மொழி என்று காட்டுவதற்காகக் கூறப்படும் காரணங்களும் முற்றும் உண்மையாகாது.

இந்தியாவில் உள்ள மக்களின், பெரும்பாலோர் பேசும் மொழி இந்தி என்பது உண்மையன்று. 'இந்தி' பெரும்பான்மையினர் மொழியுமல்ல. இந்தி பேசுபவர்களாகக் கணக்கெடுத்துக் காட்டப்படும் மக்கள் அனைவரும் ஒரே மொழி பேசுபவர்களுமல்லர். இந்தி பேசுபவர்களாகக் கணக்கெடுக்கப்பட்டோர் 13 கோடியே 10 லட்சம் பேர். மற்ற மக்களான 23 கோடி பேர் பேசும் மொழிகளும் வேறு வேறு தனி மொழிகளே. எனவே இந்திய மக்களில் 3-ல் 1-பகுதியினரே—'இந்தி' மொழியினர் என்று கூறப்படுபவர். அவர்களது மொழியே இன்று ஆட்சி மொழியாகியுள்ளது.

உண்மையில் அந்த 13 கோடி பேர்களுள்ளும் ஒரு மாநிலத்தவர் பேசும் இந்தி மற்றொரு மாநிலத்தவருக்கு விளங்குவதில்லை. "இந்தியில் ஒரு வட்டாரத்தினர் வழங்கும் சொல் மற்றொரு வட்டாரத்தினருக்கு விளங்குவதும் இல்லை, வேறு பொருளைத்தந்து குழப்புவதும் உண்டு" என்று சென்னை கவர்னரே ஒருமுறை குறிப்பிட்டுள்ளார்.

இந்தி—மேற்கு இந்தி, கிழக்கு இந்தி, பிகாரி என்னும் தனித்தனி

கண்டெடுத்த டிக்கட் !

பிரபல எழுத்தாளர் ஒருவர் ரயிலில் பிரயாணம் செய்து கொண்டிருந்தார். அந்தப் பெட்டியில் ரயில் டிக்கட் ஒன்று கிடந்தது. எழுத்தாளர் அதை எடுத்துக்கொண்டு 'இது யாருடையது' என்று எல்லோரையும் கேட்டார். அப்போது நடுத்தர வயதுடைய ஒருவர் ஓடிவந்து 'டிக்கட் என்னுடையது' என்றார். இரக்க மனம் படைத்த அந்த எழுத்தாளர் அவரிடம் அந்த டிக்கட்டைக் கொடுத்துவிட்டார்.

வண்டி பத்து மைல் தாண்டிவிட்டது. டிக்கட் பரிசோதகர் வண்டிக்குள் நுழைந்தார். எல்லோரும் அவரவர் டிக்கட்டுகளை எடுத்துக் காண்பித்தார்கள். எழுத்தாளரும் பைக்குள் கையை விட்டார். பாவம்! அவரது டிக்கட்டைக் காணவில்லை. டிக்கட் பரிசோதகர் மிரட்டினார். எழுத்தாளர், கண்டெடுத்த டிக்கெட்டைப் பெற்றுக்கொண்டு போன அந்த நபரைத் தேடினார். அவரா அகப்படுவான்?

வளர்ச்சியுள்ள மூன்று பெரும் பிரிவுகளைக் கொண்டது. மேற்கு இந்தி—பங்காரி, கானேஜ், பந்தேலி, பிரஜ்பாஷா, முதலிய வட்டார மொழிகளையும் கிழக்கு இந்தி—அவதி, பகேலி, சத்தீஸ்கரி ஆகிய வட்டார மொழிகளையும், பிகாரி—மைதிலி, போஜபுரி, மக்கி ஆகிய வட்டார மொழிகளையும் கொண்டவையாகும். எனவே இந்தி பத்து வட்டார மொழிகளைக் கொண்ட மூன்று வகைப்பட்ட ஒரு மொழிக் குடும்பத்தின் பெயராகவே உள்ளது.

மேலும், இந்தி எழுத்து நடை, பேச்சு நடையோடு ஒத்து இயங்காததால், மக்களுக்குப் புரிவதில்லை. படித்தவர்கள் இந்தி தனியாகவும், பாமரர் இந்தி தனியாகவும் வழங்குகின்றது. பிரதமர் நேரு இதை அண்மையில் குறிப்பிட்டுள்ளார். படித்தவர் மொழி ஒன்றாகவும் பாமரர் மொழி வேறாகவும் அமைந்து, அந்தந்த வட்டாரத்திற்கு ஏற்றபடி தனித்தனியாகவும் பேசப்படும் 10-க்கு மேற்பட்ட பிரிவுகளைப் பேசுவோரையும் சேர்த்தே 13 கோடி பேர் ஆகின்றனர். எனவே ஆட்சிப் பீடத்தினரால் கொள்ளப்படும்இந்தி எதுவானாலும், எப்படிப்பட்டதானாலும், அதை முற்றும் புரிந்து கொள்ளக் கூடியவர்கள் சில கோடியினரே உள்ளனர் என்பது விளங்கும். மற்றவர்கள் முக்காலும், பாதியுமே புரிந்துகொள்ளக்கூடும். அல்லது பண்டிதர்கட்கு மட்டுமே விளங்குவதாக அமையும்.

இந்தியின் கிளைகளும், இனமொழிகளுமாகியவை—தனித்தனி இலக்கியக்களை வளர்ச்சி பெறாத காரணத்தாலேயே—அவை ஒரே மொழியாகக் (கணக்கிற்கு) கொள்ளப்படுகின்றன.

தோன்றிச் சுமார் 400 ஆண்டுகளே ஆகும் இந்தியிலோ அதன் இனமொழிகளிலோ—இலக்கிய வளர்ச்சி ஏற்பட இன்னும் சில நூற்றாண்டுகள் கழியும், அதற்குள் பேச்சு மொழி வேறு, இலக்கிய மொழி வேறு என்ற நிலை பிறந்து அதன மூல மொழியான சமக்கிருதத்தைப் போன்றே—இந்நாள் இந்தியும் அன்று பேச்சு வழக்கற்று எழுத்திலே மட்டும் இடம் பெற்றதாயினும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இந்த உண்மைகளைக் கருதாது, 'இந்தி' மொழி பேசுவோர் கணக்கிடப்படும் முறையிலேயே கணக்கிடுவதாயின், திராவிட மொழிகளைப் பேசுவோரையெல்லாம் ஒரேமொழி பேசுவோராகவே கொள்ளினும் தவறாகாது. இவற்றினின்றும் 5, 6-கோடி பேர் விளங்கும் மொழியாக வழங்கும் இந்தியைத்தான் 13 கோடி மக்களின் பெயரால், 36 கோடி பேருக்கும் பொது மொழி என்று கூறி, ஆட்சி மொழியாக்கியுள்ளமை விளங்கும்.

எவ்வாறோ ஆங்கிலத்திற்கு இருந்த ஆட்சிப்பீடம் இந்திக்கு உரியதாக்கப்பட்டுள்ளது. ஆனால் ஆங்கிலத்தை அறவே விலக்கிவிட்டு, இந்தியைக் கொண்டே இந்தியா செயலாற்ற முடியுமா? இந்தியாவில் உள்ள மக்களின் எல்லாத் தேவைகளையும் கடமைகளையும்—ஆங்கிலத்தின் துணையின்றி இந்தியைக்கொண்டு நிறைவேற்றிக் கொள்ள இயலுமா? இந்தியாவில் வாழும் மககள், இந்தியாவிற்குள் இந்தியினாலேயே தொடர்பு கொண்டாலுங்கூட வெளி நாடுகளோடும், உலக நாடுகள், ஐக்கிய மன்றம் முதலியவற்றோடும் எம்மொழியால் தொடர்புகொள்வது?

நாளும் வளரும் விஞ்ஞான நுணுக்கங்களையே அறிய அறிவியல் வளர்ச்சியில் பங்குகொள்ள, அரசியல் கொள்கைகளைத் தெளிவுபடுத்த, முற்போக்கு எண்ணத்தை வளர்க்க, உலகின் ஒவ்வொரு கோடியிலும் வெவ்வேறு மொழிகளில் உள்ளதும் வளர்வதுமான இலக்கியச் செல்வங்களையெல்லாம் ஒருமொழி அறிவின் துணையாலேயே நுகர, எந்த மொழி துணை செய்வதோ, அதை எப்படி மக்கள் கைவிட முடியும்? அம்மொழி நிறைவேற்றும், இந்த அரிய தேவைகளை பொதுமொழி எனப்படும் 'இந்தி' நிறைவேற்றுமா? இந்தியாவிற்கு ஒரு பொதுமொழி கொள்வதற்காக, உலகப் பொதுமொழி என்று கூறத்தக்க அளவிற்கு வளர்ந்துள்ள ஆங்கிலத்தைக் கைவிட்டு எப்படி நல்வாழ்வு பெற முடியும்?

எனவே, இந்தியாவில் உள்ள மக்கள் அவரவர்களுடைய தாய்மொழியான வட்டார மொழியையும், ஆட்சிமொழியான இந்தியையும்,

ஜலால்புரு,

சேலம்.

அறிவியல் மொழியும் உலகப் பொது மொழியுமான ஆங்கிலத்தையும் கற்கவேண்டியவர்களாகின்றனர்கள். இந்தியைத் தாய்மொழியாகப் பெற்றவர்கட்கோ, அதுவே ஆட்சி மொழியுமாக அமைவதால், மும்மொழி கற்கும் துன்பம் இல்லை. மூன்றாவது மொழி கற்கும்படிச் செய்யப்படினும், அதில் கவனம் செலுத்தவேண்டிய இன்றியமையாமை இல்லை. இந்திய மக்களில், பெரும்பாலானோர், 100க்கு 64 பேர் அளவிற்கு, தம்முடைய தாய் மொழியுடன், இந்திய ஆட்சிக்காக ஒரு மொழியும், உலகத் தொடர்பிற்காக ஒரு மொழியும் ஆக மூன்று மொழிகளைப் பயிலவேண்டியவர்களாகியுள்ளனர். இந்தி மொழியினர்க்கோ, தாய்மொழியோடு ஆங்கிலம் மட்டுமே பயின்றால் போதும் என்பதோடு, தாய் மொழியே இந்தியாவை ஆளும் மொழியாக அமைந்திருப்பது என்னும் பெரும் இலாபமும் சேர்கிறது. மற்றவர்கட்கோ—மும்மொழி பயிலும் துன்பத்தோடு தம்தம் மொழி உரிமையை இழந்து, வேற்றுமொழி ஆட்சிக்கு அடிமைப்படும் வேதனையும் விளைந்துள்ளது.

இங்கிலாந்தின் முதலமைச்சரையோ, அமெரிக்கத் தலைவரையோ கண்டு பேசும், இந்தியத் தலைவரோ அமைச்சரோ ஆங்கிலத்தில் உரையாடலாம். 'ஆங்கிலம்' வெளிநாட்டுத் தொடர்புக்குக் கைக்கொள்ளப்படலாம். ஆனால் இந்திய முதல்வரிடத்தில் சென்னை-ஆந்திரா அமைச்சர்கள் இந்தியில்தான் உரை நிகழ்த்த வேண்டும்.

இலண்டன், நியூயார்க், பாரிஸ், ஷாங்காய், கெய்ரோ முதலியவற்றோடு தொடர்புகொள்ள, டில்லி ஆங்கிலத்தை மேற்கொள்ளலாம். சென்னை, பம்பாய், கர்நூல், பெங்களூர் ஆகியவற்றோடு இந்தியில்தான் தொடர்புகொள்ள வேண்டும் என்பதுதான் ஆட்சியாளர் திட்டம்.

இனி இலண்டனோடும், நியூயார்க்கோடும் தொடர்பு கொள்ளக்கூட 'இந்தியையே' கொள்ளவும் ஒருவேளை தீர்மானிக்கலாம். பயன் என்னவாகும்? கருத்து விளக்கமும் தெளிவும் குறைந்து, இந்தியா வன்றோ பயனை இழக்கநேரும்? இந்நிலையில், ஆங்கிலத்தையும், இந்தியையும்—"இந்தி மொழியினர்" அல்லாதார் பயிலவேண்டும் என்பது கேலிக்கூத்தாகவே தோன்றுகிறது. சிந்தனையற்ற சிங்காரம், சிறுவன் ஒருவனை அழைத்து, கைக்கு ஓர் அணாவாக இரண்டு கையிலும் தந்து இந்த அணாவிற்குப் பொரி, அந்த அணாவிற்கு அவல் வாங்கிவா என்று சொல்லியனுப்பினானாம்! சிறுவனோ பாதி வழியில் எந்த அணாவிற்கு எது வாங்குவது என்ற சந்தேகம் மேலிட்டுத் திரும்பிவந்து கேட்டானாம், எந்த அணாவிற்குப் பொரி, எந்த அணாவிற்கு அவல என்று. அந்தச் சிங்காரத்தைப் போலத்தான், ஆளவந்த சிங்கார மனிதர்களும் அறிவுக்கு ஒருமொழி, ஆட்சிக்கு ஒருமொழி என்று இரண்டையும் கைக்கொண்டுள்ளனர்.

அறிவியல் வளர்ச்சிக்கு மட்டுமேயன்றி, இந்தியாவின் தேசியமொழிகளின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்குமேகூட ஆங்கிலம் இன்றியமையாது வேண்டப் படுவதால்தான்—தாய்மொழியின் மூலமே கல்வியளிப்பதற்கான புதிய திட்டங்களிலும் கூட, ஆங்கிலம் அவசியம் பயிலவேண்டிய மொழியாக இடம் பெற்றுள்ளது.

எனவே, இந்தியத் துணைக் கண்ட மக்கள் அனைவரும் கற்க வேண்டியதாகவும் கற்றால் பயன் தருவதாகவும், இன்றுவரை ஆட்சி மொழியாகவும், இனியும் இயல்பான பொது மொழியாகவும் தகுதி பெற்றுள்ள ஆங்கிலத்தையே—தகுதியற்ற இந்திக்குப் பதில் ஏன் பொது ஆட்சி மொழியாகக் கொள்ளக்கூடாது?

அதை ஏற்க மறுப்பது அறிவுக்குப் பொருந்தாது. ஆளவந்தாரின் வீணான இந்திவெறியின் விளைவு.

மற்ற மொழியினருக்கோ ஆங்கிலத்தை நீக்கி இந்தியைப் பொது மொழியாகக் கொள்வது, வெய்யிலைத்தடுக்க, வெளிநாட்டுக் குடை கூடாது என்று கூறித் தலையிலே கருங்கல்லைத் தூக்கி வைத்துக் கொள்ளச் செய்யும் கொடுமையாகும்! அடிமைகளுங்கூட நெடுங்காலம் இதனைத் தாங்கார்!

இந்தி பொது மொழியாதல்-அம்மொழியினருக்கோ-தலையிலே ஆட்சி முடியாகும். மற்றவர்க்கோ கருங்கல்லாகும். இந்த உண்மையை யாரும் மறைக்க முடியாது.

கொடுமை வளர வளரக் குமுறும் எரிமலையாவர் மக்கள். எரிமலை குமுறும்போது-இந்த ஆட்சி அமைப்பு, சட்டம், திட்டம் யாவும் மாறத்தான் செய்யும். இந்தத் தெளிவோடும் துணிவோடுமே-திராவிடம் தமிழ்த் திருநாள்தோறும் உரிமை முழக்கம் செய்கிறது! விடுதலை முரசு கொட்டுகிறது!

இத் திருநாளிலேனும்—தேசியத் தோழர்கள் இவற்றை எண்ணிப் பார்க்க முன்வரவேண்டும். தமிழ்காக்க, திராவிடத்தை மீட்க, ஆதிக்க மொழியை வீழ்த்த நாட்டினர் எல்லோரும் உறுதிகொள்ள வேண்டும்.

வீழ்க ஆதிக்கம்!
வாழ்க திராவிடம்!

(49-ம் பக்கத் தொடர்ச்சி)

வரும் வேகத்தை அவளுக்கு நினை ஊட்டுகின்றன. அந்த மங்காத ஒளி வந்து சேரும் நேரம் நெருங்க நெருங்க அவள் நெஞ்சு துடித்தது.

அதற்குமேல் அன்று அவளால் பாடம் சொல்லித்தர முடியவில்லை. அவளுடைய நினைவு சுழன்று அடிக்க ஆரம்பித்தது.

அந்தப் புதிய மாணவி; தன் பக்கத்தில், இருந்த மாணவியிடம் மெதுவாகச் சொன்னாள், "இனி, இன்று வாத்தியாரம்மாவினால் பாடம் சொல்ல முடியாது. இன்றைய பாடம் நம் வாத்தியாரம்மா கதை மாதிரியே இருக்கிறது"—

அவ்வளவு மெதுவாகத்தான் சொன்னாள். அது அந்த வகுப்பு முழுதும் கேட்டது. வாத்தியாரம்மாவுக்கும் கேட்டது. கேட்டு என்ன செய்வது ?

வகுப்பு முடிந்தது: வாத்தியாரம்மா வெளியே வந்தாள்: புதிய மாணவியும் கூடத்தான் வெளியே வந்தாள்.

வாத்தியாரம்மாவை நெருங்கி வந்தாள் புதிய மாணவி. 'அவன்' தன்னோடு வருவது போலவே அவளுக்குத் தோன்றியது. எல்லா மாணவிகளும் வாத்தியாரம்மாவைச் சுற்றிக் கொண்டார்கள். 'ஏன், இன்று பாடம் இப்படிப் போய்விட்டது—' என்றாள் ஒருத்தி. 'உடல் நலமில்லையா அம்மா?' என்றாள் இன்னொருத்தி பரிவுடன். 'ஏதோ, ஒரு மாதிரியாக இருக்கிறீர்களே!' என்றாள் குறும்புடன் வேறொருத்தி. வாத்தியாரம்மா யாருக்கும் பதில் சொல்லவில்லை. அவளுடைய எண்ணங்கள் வானத்தில் பறந்து திரிந்தன. காணாததைக் கண்டுவிட்ட ஆனந்தத்தில் மிதந்தாள்.

அந்த நினைப்பில் —

வானத்து விண்மீன்களையும் மேகக் கூட்டங்களையும் பார்த்துக் கொண்டு, நெஞ்சோடு நெஞ்சாகப் பதிந்துபோன அவன் வந்துவிட்டான் என்ற மகிழ்ச்சிப் பெருக்கில் ஆனந்தத்தில் சிக்கி மூச்சுத்திணறி, போதை ஊட்டும் அவன் உருவத்தை நினைத்து நிழலோடு நிழலாக நின்று வாய் திறவாமல் பேசி மகிழ்ந்தாள்.

மிதந்துவந்த மென் ஓசை கேட்டு, வெடுக்கென்று எழுந்து நின்றாள். விரலோடு விரல் சேர்த்து, தோளோடு தோள் சேர்த்து...

மேகக் கூட்டங்கள் விண்மீன்களைக்கூட மறைத்துவிட்டன. ★

லேடஸ்டு சைன்டிபிக் முறையில் தயாரித்த

பாரதி ஸ்பெஷல் பார்

சிக்கனமாக உபயோகிக்கலாம்
பருத்தி, சில்க், ரேயான் மற்றும்
எல்லாவித ஆடைகளையும்
சலவை செய்ய மிகவும் சிறந்தது

பாரதி சோப் ஒர்க்ஸ்
82-B, மெயின் ரோட்
செவ்வாய்ப்பேட்டை, சேலம்.
ஸேல்ஸ் டிப்போ :
A-34, காந்தி மார்க்கெட், திருச்சி.



பாற்கடல்

சி.பி.சிற்றரசு

அறிவு விளக்கத்துக்கும், நமது முன்னாளைய நாட்டு நிலைக்கும் களங்கமற்ற கண்ணாடிபோல் விளங்குவது வரலாறாகும். அதை ஓர் வற்றாதபாற்கடல் என்று கூறினாலும் மிகையாகாது. கடலில் எப்படி சிறிய மீன்களைப் பெரியமீன்கள் விழுங்கி விடுகின்றனவோ, அதேபோல் சிறிய சிறிய அரசுகளைப்பேரரசுகள் விழுங்கியிருக்கின்றன. நீரைக் கிழித்தோடும் மரக்கலங்களைக் கற்பாறைகள் தடுத்து உடைப்பதைப்போல், செருக்கோடு ஆண்ட மன்னர்களைத் தடுத்து நிறுத்தியிருக்கின்றது மக்கள் சக்தி என்பதை வரலாற்றின் தொடக்கமுதல் இறுதிவரை காண்கின்றோம்.

திமிங்கிலங்களும் சுறா மீன்களும் நடமாடும் கடலில் நல்முத்தும் உண்டல்லவா? அதேபோல் சரிந்த சாம்ராஜ்யங்களுக்கிடையே தத்துவ ஞானிகளும், சமரசத் தூதுவர்களும், சிறந்த விஞ்ஞானிகளும் தோன்றினர்கள். இருண்டுகிடந்த உலகை—அறியாமையில் ஆழ்ந்துவிட்ட அகிலத்தை, உள்ளத்தாலும் ஒப்புயர்வற்ற சேவையாலும் ஒளிமயமாக்கியவர்கள் தோன்றினார்கள். தோன்றுகிறார்கள், தோன்றிக்கொண்டே இருக்கின்றார்கள். அவர்களது வாழ்க்கைக் குறிப்புகள் அவர்களது கல்லறையில் மாத்திரம் எழுதப்பட்டிருக்கவில்லை. இன்று நாம் காணும் எல்லாவித அறிவியல் பொருள்களிலும், அரசியல் ஞானத்திலும், சமூக சீர்திருத்தங்களிலும் காணப்படுகின்றன.

அந்தப் பேராளர்கள் உலகத்துக்களித்துச் சென்ற பல பொருள்களையும் கருத்துக்களையும் சேர்த்துத் தொகுத்து வைக்கப்பட்டிருக்கிற களஞ்சியத்தைத்தான் நாம் வரலாறு என்கிறோம். அதைப் படிப்பதால் நமக்கென்ன பயன் என்று நம்மில் சிலர் ஐயுற்றால் கீழே தரப்பட்டிருக்கும் சிலபல உதாரணங்கள் மூலம் நாம் தெளிவடையலாம்.

ஒன்று!—நெப்போலியன் வாழ்க்கையைப்பற்றிப் படிக்கிறோம். போர்க் காலங்களில் ஒரு மணி நேரம்தான் குதிரை மல் ஏறி குதிரையை மெதுவாக நடத்தி அதன் மேலிருந்தபடியே தூங்கி விழுந்து கொண்டே வந்து இறங்கி விட்டால், நெடு நேரம் தூங்கி காலையில் விழித்தெழுபவன் எப்படி சுறு சுறுப்போடு காணப்படுவானோ, அதைப்போலக் காணப்படுவான் நெப்போலியன் என்று படிக்கிறோம்.

தேர்வுக் காலங்களில் விடியற்காலையில் படிக்க வேண்டுமென்று நினைத்து கடிகாரத்தில் காலை 4 மணிக்கு அலாரம் அடிக்கவேண்டிய ஏற்பாடுகளைச் செய்துவிட்டு கடிகாரத்தைத் தலைமாட்டில் வைத்துக்கொண்டு தூங்குகின்றோம் நாலு மணிக்கு அலாரமும் அடிக்கிறது. தூக்கக் கலக்கத்தில் அந்த அலாரத்தின் தொல்லை பொறுக்க முடியாமல் அதன் தலையிலே ஒரு அடி அடித்துவிட்டுப் பழையபடி தூங்கிவிடுகிறோம். இந்த இடத்தில் விழிப்போடிருந்த நெப்போலியனுக்கும் விழிக்கவே மனமில்லாத நமக்கும் எவ்வளவோ கால இடைவெளியிருந்தாலும், தூக்கம், தூங்காமை ஆகிய இரண்டையும் சுட்டிக்காட்டுகிறது வரலாறு.

அதேபோல், தத்துவத்தைப் பற்றி இன்று பேசுகிறோம். இதே தத்துவத்தைப் பற்றிய நினைவுகள் கிரேக்கத்தின் பேரறிஞன் சாக்ரடீஸ் காலத்துக்கு முன்பு இருந்ததாகத் தெரியவில்லை. அன்று தர்க்கஞானி சாக்ரடீஸ் கிரேக்க மொழியில் பேசிய தர்க்கவாதத்தை உடனே ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வைத்துக் கொண்டது ஆங்கிலக் களஞ்சியம் (**Encyclopaedia Brittanica**). அதனால், நாம் என்ன உணர்கிறோம்.

நீதி என்றால் ஒரே பொருளைக் கொடுத்துக் கொண்டிருந்த உலகத்தை எதிர்த்துக் கேட்டவன் சாக்ரடீஸ். சொல்லலங்காரத்தில் மயங்கிவிட்ட சமூகத்தைத் தட்டி எழுப்பி ஒவ்வொரு வார்த்தையின் நுண் பொருளைக் காணவேண்டுமென்று தூண்டிய

தால் நஞ்சருந்தி மாண்டவன் சாக்ரடீஸ். நான் கல்லுக்குப் பிறந்தேன் (ஆண்டவன்), நான் மண்ணுக்குப் பிறந்தேன் (தேவதை) என்று ஏதென் நாட்டில் பலர் பிதற்றிக் கொண்டிருந்த போது, நான் கல்லுக்கும் மண்ணுக்கும் பிறக்கவில்லை. ஒரு பெண்ணுக்குத்தான் பிறந்தேன் என்று நீதிமன்றத்தின் முன் மார்தட்டிச் சொல்லிய அச்சொற் செல்வனை நஞ்சூட்டிக் கொன்றனர். சீர்த்திருத்தம் பேசிய செம்மல் சாய்ந்தான். சிந்தை சிதறி நிற்போருக்குச் சிந்திக்கும் ஆற்றலைத் தந்தவன் வீழ்ந்தான். எனினும் மக்கள் இனத்தின் உதட்டசைவு இருக்கும்வரை சாக்ரடீஸ் இருந்தே தீருவான் என்பதைக் காட்டுகிறது வரலாறு.

இதுவரை ஒரு வீரனைப்பற்றியும், ஒரு தர்க்க ஞானியைப்பற்றியும் எழுதினோம். இனி மதமேறிய சில மன்னர்களைப்பற்றி ஆராய்வோம்.

மக்கள் சிந்திய துயரக்கடலில் துணிந்து குதித்து நீந்தத் தெரியாமல் மூச்சுத் திணறத் திணற முடிசாய்ந்து போனவர்கள், வாள் வீச்சால் இந்த வையத்தை யடக்க வேண்டுமென்று புறப்பட்டுஒரு வனிதையின் வேல்விழி வீச்சால வீழ்ந்துவிட்ட சாம்ராஜ்யாதிபதிகள், மண்ணாசையால் தனக்கென்றிருந்த மண்ணையும் விட்டு மண்ணைக் கௌவிய மன்னர்கள், உலகம் முடியுமட்டும் எமது செங்கோல் சாயாது என்ற இறுமாப்போடு எரிந்த கண்ணராய் எதிர்த்தோரை இரண்டு துண்டாக்கிய இரும்பு நெஞ்சினர் இருபதாம் நூற்றுண்டின கேலிச் சித்திரங்களாக அமர்ந்துவிட்டனர் என்பதை வரலாறு நமக்குக் காட்ட மறந்துவிடவில்லை. அவர்களில் மிக முக்கியமாகக் குறிப்பிடவேண்டியவர்கள், பிரான்சு நாட்டை இரத்தக் காடாக்கிய லூயி மன்னர்கள், மாதர்களைத் தம் விளையாட்டுப் பொம்மைகளென நினைத்து அவர்தம் கற்பை, கத்தியைக் காட்டிக் கெடுத்த அந்தக் கயவர்களின் செயலை எண்ணி எண்ணி மாதர் குலம் உலகம் முடியுமட்டும் தீராது என வரலாற்றுவரிகள் சோகக் குரலால் சொல்கின்றன. அவ்வளவு பெரிய மமதை என்ற மலையுச்சியில் வீற்றிருந்த மன்னர்களை ஒரே நொடியில் துள்ளாமல் துடிக்காமல, கத்தாமல் கதறுமல், கொஞ்சம் கொஞ்சமாக சாகாமல் கண்மூடிக் கண் திறப்பதற்குள் கொன்றுவிட்டது ஆள்கொல்லும் வாள் (Gillettine). இந்த மாபெரிய புனித கைங்கரியத்தைச் செய்து முடித்தவர்கள் புரட்சித் தலைவர்கள்.

எனினும் பிரான்சில் அமைதி நிலவியபாடில்லை. எந்த டாக்டர் கில்லட்டின் அந்தப் புரட்சிக்குக் காரணமாக இருந்தானே, எந்த ரோபஸ்பியர் லூயிமன்னர்கள் சந்ததியை ஒழிக்கப் புரட்சிக்கொடி ஏந்தினுே அவர்களும் தணியாத ரத்தத் தாகத்தால் அலைந்ததால், பிரான்சின் அமைதியை வேண்டி அந்தப் புரட்சி வேந்தர்களையும் கொன்றுகுவித்தார்கள்! வெட்டுண்டவன் மாண்ட பிறகு வாளைக் கடலில் வீசி எறிவதைப் போல் யாரைக் கொண்டு மன்னர்களை ஒழித்தார்களோ அவர்களையும் அடுத்தபடியாக ஒழித்துவிட்டார்கள். இந்த நிகழ்ச்சியைப் பார்த்து சாகாவரம்பெற்ற சரிதம் சிரிக்கிறது.

'நானே ஆண்டவன் பிரதிநிதி' என்றான் சார்லெஸ். அலைகடலெனத் திரண்டனர் மக்கள். முற்றுகையிட்டனர் சிங்காதனத்தை. முடியை உருட்டினர். உருண்டோடியது சார்லெஸ்ஸின்தலை. ரத்தத் தடாகத்தில் கலகலவெனச் சிரித்தான் கிராம்வெல். அவனுடைய உருவச்சிலை பிரிட்டிஷ் கணகாட்சியிலே வைக்கப்பட்டிருக்கிறது. சம்பவங்கள் நடநதது நெடுநாட்களுக்குமுன். எனினும் அந்தக் காட்சியை இன்றும் நம் கண்முன் காட்டிக் கொண்டே இருக்கின்றது வரலாறு.

மாரிக்கால அரண்மனையிலே ஆரோகணித்திருக்கின்றுன் ஜார். மாளிகையின் வாயலிலே இரண்டாயிரம்பேர். அந்த ஏழைகளுக்கு தலைவன் ராபர்ட் லீத், இரண்டாயிரம் மக்களைக்கொல்ல நாலாயிரம் துப்பாக்கிகளை ஏந்திய எண்ணுயிரம் கைகளையுடைய ஈரிரண்டாயிரம் போலீஸ்காரர்கள். மக்கள் சிந்திய ரத்தம் மாளிகையைச் செந்நிறமாக்கியது. எனினும் ஜார் பிறகு—ரத்தப் புரட்சி வேகத்தால் துண்டு துண்டாக வெட்டப்பட்டு நார் நாராகக் கிழிக்கப்பட்டான். இன்று நாம் ருஷ்ய நாட்டு அரசில் அகராதியில் காணும் செஞ் ஞாயிறு (Red Sunday) அதுதான்.

சமுதாய ஒப்பந்தத்தையும், கல்வியைப்பற்றிய எமிலி என்ற நூலையும் இன்னபிறவற்றையும் எழுதியவன் ரூஸோ. இவன் தான் முடியாட்சிக்கும் குடியாட்சிக்கும் உள்ள வேறுபாடுகளை தெள்ளத்தெளிய எடுத்துக் காட்டியவன் உலக முழுதுக்கும் ஓர் ஒப்புயர்வற்ற அரசியலை வகுத்துத்தந்தவனும், மக்கள் உள்ளத்தில் மலரும் குடியாட்சியை வரவேற்றுக் கொடுமையோடுகூடிய ரத்தவெறியேறிய கோலாட்சியை அறவே வெறுத்தவனை இவன்தான்! இவன் எழுதிய சமுதாய ஒப்பந்தத்தில் கண்ட உரிமைச் சொற்கள் முதலில் அமெரிக்கக் குடியரசுப் பிரகடனத்திலும், இரண்டாவதாக பிரான்சுப் பிரகடனத்திலும், இறுதியில் இந்தியப் பிரகடனத்திலும் காணபபடுகிறது.

குடியாட்சியைத் தலைமேல் வைத்துப் போற்றி அதன் பிறப்பிடமான சமுதாய வளர்ச்சியைச் சுட்டிக்காட்டி அத்தகு மேன்மை பொருந்திய குடியரசு ரோம், ஸ்பார்ட்டா என்ற இரு நகரங்களிலும் தோல்வியுற்றது உண்மைதான் என்றாலும் முடியாட்சியை மாத்திரம் அனுமதித்து விடாதீர்கள் என்கிறான். ஏனெனில், குடியாடசி கெட்டுவிடுமானால் திருத்தி அமைத்துக்கொள்ள வாய்ப்பு இருக்கிறது. முடியாட்சியை அனுமதித்து விட்டோமானால் அதை நீக்குவதோ மன்னனை அரியாசனத்திலிருந்து போக்குவதோ எளிதில் முடியாத காரியம் என்கிறான். ஏனெனில், அரசனுக்கு மக்களைக் காப்பாற்ற வேண்டிய கடமையைவிட தன் பதவியைக் காப்பாற்ற வேண்டுமே என்ற கவலைதான் அதிகம். அதற்காக அவன் கையாளும் முறைகளை வரலாற்றில் ரத்த எழுத்துக்களால்தான் பார்க்க முடிகிறது.

உதாரணம் வேண்டுமானால் அண்மையில் எகிப்தில் நடந்த பருக் மன்னனின் முடியாட்சி துறவாத்தை எடுத்துக்கொண்டால் போதும்.



அவள் : கட்டி மாம்பழம் கையிலிருக்குது!
கண்ணுக்கு வேலையில்லை!

அவன் : —ஒரு
பெட்டி மாம்பழம் எதிரிருக்குது
பேச்சுக்கு நேரமில்லை!

புகைப்படம் : விதாகன், பெங்களூர்.

★ ★ ★

மதத்தால் மாண்ட சாம்ராஜ்யங்கள்

புண்ணிய நீரென்று கையில் கமண்டலமேந்தி பாபிகளெனப் பலரை ஒதுக்கி, அந்தப் பாமரர்கள்மேல் நீரைத் தெளித்து, புண்ணத்தைக்குவித்து, பட்டத்தை சம உரிமையாக்கிப் பாராண்ட மன்னர்களைத் தம் சேவடியில் பணியவைத்த போப்பாண்டவர்களைப்பற்றி கவனிப்போம். மன்னன்—மதகுரு, இந்த இருவரும் சமுதாயத்தின் உயிராகவும் உடலாகவும் இயங்கிய காலம் உண்டு. ஏன் இந்த இருசாராரும் கூட்டாயிருந்தார்கள்? மக்கள் மன்னனுக்குப் பணிந்து நடக்க வேண்டியது மாதேவன் கட்டளை என்றனர் மதகுருக்கள். மதகுருக்களுக்கு மக்கள் பணிந்து நடக்கவேண்டியது சமம் என்றான் மன்னன். செங்கோலைக் காப்பாற்றினான் போப். ஜெபமாலையைக் காப்பாற்றினான் மன்னன். அந்த இருட்குகையில் பல நாட்கள் சிக்கித் தவித்தனர் மக்கள். அந்த அந்தகாரக் கதவுகளைத் திறந்து மக்களைத் தைரியமாக வெளியே அழைத்து வந்தான் மார்ட்டின் லூதர். அதே வழியைத் தேடிய இதாலிய இளைஞன் சவனரோலா, ஹெஸ், ஜான் பாட்லி, ஈவிரக்கமில்லாமல் கொல்லப் பட்டனர்.

மார்டடின் முன் நிற்கமுடியாமல் பாவமன்னிப்புச் சீட்டுகளை விற்றுவந்த ஜான்டெட்சால் ஓட்டமெடுத்தான். பகிரங்கமாக வாதாட போப்பாண்டவர்கள் அறைகூவல் விடப்பட்டனர். மடாலயங்களை மூடிக் கொண்டனர். அப்படியும் விடாமல் 95 கேள்விகளை எழுதி அந்த மடாலயத்தின் கதவிலே ஒட்டினான். பதில் இல்லை. அன்று முதல் தோன்றியது புராடெஸ்டெண்ட் (**Protestant**) மதம். இதைப் போலஎண்ணற்ற நிகழ்ச்சிகளைக் காட்டுவதாலேயே வரலாற்றை ஓர் வற்றாத பாற்கடல் என்கிறோம். ★

நம்மைச் சுற்றி நடக்கின்ற எதுவும் நன்மை பயப்பதாகத் தோன்றவில்லை. வானமும் கடலுங்கூட நம்மை வம்புக்கிழுத்து வரிந்து கட்டி நிற்கின்றன. இயற்கையின் சீற்றத்துடன் போராடும் அனுபவமும் நமக்கு முன்பின் ஏற்பட்டதில்லை அதனால் நிலை கலங்கி நின்றுவிடுவதும் சரியானதாகத் தோன்றவில்லை. நடந்தவை வெறும் கனவுகளாக மறையட்டும்; இனி நடப்பவைகளை ''வருவது வரட்டும்'' என்ற வைர உறுதியுடன் தாங்கிக்கொள்ளத் தயாராவதுதான் மிகச் சிறந்த தற்காப்பெனப்படுகிறது.

பார்க்கப்போனால், புயலும் பூகம்பமும், வெள்ளமும் எரிமலைக் குழம்பும் மனித இனத்துக்குப் புதியனவல்ல எத்தனையோ தலைமுறைகளின் வளர்ச்சி இவை மூலமாக உலகுக்கு இழப்பாகி இருக்கிறது. இயற்கையின் சீற்றத்தை மனிதன் எப்படிச் சமாளிக்கிறான் என்பது தெரிய வேண்டுமானால், ஜப்பானிய சரித்திரத்தையும், ஹோ நதிக்கரையில் வாழும் சீன மக்கள் வாழ்க்கையையும் பார்த்தாலே போதும் இயற்கையின் செல்லப்பிள்ளை என்று புகழப்படும் இங்கிலாந்தில்கூட ஊழிப்புயல் அடித்து நாட்டையே அமளிதுமளி பண்ணிவிட்டது. என்றைக்குமே இயற்கையானது மனித குலத்தை அரியணையில் அமர்த்தி ராஜோபசாரம் செய்ததில்லை. மனிதனும் அதற்காகக் கவலைப்பட்டதில்லை. இப்படிச் சொல்வதாலேயே நம் மனம் சமாதானம் அடைந்துவிட்டதென்றும் காட்டிக்கொள்வதற்கில்லை. ஏனென்றால், மேற்கொண்டுள்ள அழிவு நமக்குப் பழக்கமில்லாதது.

நம்மைப் புயல் சோதித்துவிட்டதென்பதற்காக, அதன் சரித்திரத்தைக் குறை கூறக்கூடாது. அப்படியும் ஒரு சரித்திரத்தை அது உண்டாக்க நினைத்தது; அதன்படியே வீசி மறைந்தது - அவ்வளவுதான். காற்றெழுத நினைக்கும் பயங்கர சரித்திரம் ஒருபுறம் இருக்கட்டும்; மனிதன் எழுத நினைக்கும் சரித்திரம் எவ்வளவு வேடிக்கையாக அமைகிறது என்பது நமக்குத் தெரியாததா என்ன? புதிதான சரித்திரம் எழுதுகிறேன் என்ற நினைப்பில - ஒருவரை ஒருவர் மிதித்துத் துவைத்துக்கொண்டு ஓடுவதே முன்னேற்றம் என்கிற இலக்கணத்தை வகுத்து வைத்துக்கொண்டு இன்றைய அரசுகள்- குறிப்பாக வல்லரசுகள் ஓட்டப்பந்தயம் நடத்திப் பார்க்கின்றன.

அவைகளின் ஓட்டத்திலே மிதியுண்டு உயிருக்கு மன்றாடும் தேசிய இனங்களின ஓலம் ஒரு மாபெரும் ஊழிப்புயலாக-பிரளய வெள்ளமாக உருவாகிக் கொண்டு வருவதை அவைகள் சிந்தித்துப் பார்க்க அவகாசம் எடுத்துக் கொள்வதாகக் காணோம் உருவாகி வரும் ஊழிப் புயலும் பிரளய வெள்ளமும எத்தகைய விளைவுகளை உண்டாக்கும் என்பதும் ஒரு புறமிருக்கட்டும்; உலக அரசுகள தற்போது ஓடிக்கொண்டிருக்கும் அருவருக்கத்தக்க பாதை எதுவரையிலே நீளும்?

''நிறை நிலையில் இருந்துகொண்டு சுற்றிலும் நடப்பவைகளைப்பற்றி நெடுந்தூரம் சிந்தனை செய்து பார்ப்பதும் ஒரு தவறாகும்'' என்று சர்ச்சில் துரை ஒரு சமயம் திருவாய் மலர்ந்திருக்கிறார். அவர் கூற்றிலும் ஓரளவு உண்மை இருக்கத்தான் செய்கிறது.

நெடுந்தூரக் கண்ணோட்டம் என்பதே 'ஒரு மதில்மேல் பூனை.' இடப்புறமும் குதிக்கலாம வலப்புறமும பாயலாம். குதிக்காமலும் கூசி அடித்து உட்கார்ந்துவிடலாம் - ஒரு வேளை நம் மீதே பாய்ந்து பிடுங்கினும் பிடுங்கலாம்!

'மதிலமேற் பூனை' என்ற உவமானம் இன்றைய அரசுகளுக்கு ஓரளவு பொருத்தமான பெயர்தான். அதைவிட 'கொலரோடா வனாந்திர மணல்' என்ற 'நாமகரணம்' முற்றிலும் ஏற்றதாகும்.

இந்தக் கொலரோடா வனாந்திர மணல இருக்கிறதே, அது ஒரு விசித்திரப் படைப்பு! பார்ப்பதற்கு சகாராப்பாலையின் மணலைப்போல் தான் அதுவும் இருக்கும்; ஆனால் குணதோஷங்களோ, பிரமாதமானவை; பிரபலமானவை. சுழற் காற்றடித்தால், மணி

ஒலிப்பதுபோல் ஓசையிடும்; கையில் எடுத்துப் பிசைந்தால் எலிபோல் கிரீச்சிடும், மூட்டையில் கட்டி எறிந்தால் தமிழ்நாட்டு கர்நாடக சங்கீத வித்வான்கள் பாணியில் அதே வகையான குரலில் அலறிழையும். இந்த மணலையொட்டி எழுந்த குட்டிக்கதைகள் அநேகம். சிலவற்றில் வேடிக்கைமட்டுமல்ல 'தத்துவப் புதிரும' அடங்கியிருக்கும்.

உண்மையிலேயே புரியாமல் இருக்கும விஷயங்களைப்பற்றிய ஆராய்ச்சி ஒரு புறம் நடநது கொண்டிருநதாலும, தேர்நது தெளிந்த உண்மைகளைப் புதிதாக ஆக்கிக் காட்டும் வேலையைக் கன கச்சிதமாகச் செய்துவரும் இன்றைய அரசியல் வாதிகளின போக்கைப் பார்த்தால் ஜேக் லண்டன் எழுதிய 'வாழ்வு ஆசை' கதாநாயகன்கூட உடனே செத்துத் தொலைக்க முடிவு செய்துவிடுவான்.

'வாழ்வு ஆசை'யின் மையப்புள்ளி, மாவீரன் லெனினுக்குப் பிடித்தமானகதாபாத்திரம். லெனின் மூச்சு நிரந்தரமாக நின்று போவதற்குச் சற்று முன்னால், அவனுடைய மனைவி குருப்ஸ்காயா, 'ஆங்கில ஜாமபவான்' சார்லஸ் டிக்கின்ஸ் எழுதிய 'கிருஸ்துமஸ் கரோல்' எனும் நகைச்சுவை நூலைப் படித்துக் காண்பித்தாளாம்; லெனினுக்கு அது கொஞ்சம்கூடக் 'கிச்சுககிச்சு' மூட்டவில்லையாம்; இனிப்பதற்குப் பதிலாக இடித்த புளி போல மனிதன் அசைவற்றுக் கிடந்தானும். குருப்ஸ்காயாவும் விஷயத்தைப் புரிநதுகொண்டு, ஜாக் லண்டனின் 'வாழ்வு ஆசை' கதையை வாசித்தாள். மகிழ்ச்சியுடன் கேட்ட பிறகு மயான ஊர்வலத்துக்குத் தயாராகிவிட்டாராம், லெனின்.

மக்களை வாழவைக்கப் பிறந்த அந்தப் பிறவித் தலைவனுக்கு சாகும்போதுகூட வாழ்வுக்காகப் போராடும கதா பாத்திரத்தின் படப் பிடிப்பிலே தான களிப்புத் தோன்றியது அவன் வாழ்நாள் முழுவதும் போராடினன்; அநதப் போராட்டங்களால் தனக்கு நேர்ந்த அனுபவச் செல்வத்தை மனித குலம் அனைத்துக்கும் பொதுவானதாக ஒபபுக் கொடுத்துவிட்டான். அநேக கோடி மக்களை அவன் போராட்டத்தில் புடமபோட்டெடுத்தது மட்டுமல்ல, வாழவும வகை செய்து வைத்துவிட்டான்.

மு. சண்முகம்

நாசிசத்தையும் பாசிசத்தையும் எடைபோட்டுக் காட்டும் துலாக்கோலாக அமைந்திருக்கிறது இந்தக் கட்டுரை. கட்டுரையாளர் தோழர் சண்முகம் அவர்கள் பொருள் செறிந்த அரசியல் கட்டுரைகள் மூலமும் தத்துவம் செறிந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் மூலமும் இயக்கப்பணி புரியும் இளைஞர்.

போராட்டம், புது வாழ்வு என்ற வார்த்தைகளெல்லாம, லெனினுடைய வெற்றிக்குப் பிறகு புதுக்களை பெற்றுவிட்டன. இனிமேல் நாமும் கொஞ்சமநல்ல வாழ்க்கையைப்பற்றிச் சிந்திந்துப் பார்ப்போமே என்று சீனச் சமுதாயம தீர்மானம் செய்துகொண்டது; இத்தாலிய நாட்டின் புராதன மாளிகைகளிலே போராட்டம்-நல்வாழ்வு என்ற வார்த்தைகள் முட்டி மோதி திக்குமுக்காடித் திணறின; ஜெர்மானிய தொழிற்சாலைகளின புகைக் கூண்டிலே வெளியேறும் புகைகூட கொஞ்சம் சூடாகவே வெளிவரத் தொடங்கிற்று.

கூட்டிலே புகை கலந்திருப்பது சாதாரணம. புகையிலே சூடு தெறிக்க ஆரம்பித்துவிட்டால் வீட்டுக்கு வீடு ஏரி குளங்களை வெட்டினல் தான் மானிடக் கண்களின் நீர்த்தேக்க அளவை ஏறக்குறையக் கணக்கெடுத்துப் பார்க்க முடியும. விவகாரமும் இப்படிததான் வந்து முடிந்தது.

உலக மக்கள் கண்களையெல்லாம நீர் மல்குமபடிச் செய்துவிட்டு நீளத துயில் கொண்டுவிட்டன பாசிசமும் நாஜிசமும். போராடடத்துக்குப் புது மெருகைக் கொடுததான் லெனின். அதன் நல்ல பலன்களைப் புதைகுழிக்கு அனுப்பிவிட்டனர் இடலரும முசோலினியும். அன்றே பிறந்து துள்ளிக் குதிக்கும் கன்றுக் குட்டியின் நாலுகால்ப் பாய்ச்சலைப்போலப் போராட்ட வெறிகொண்டு அலைநதான், முசோலினி. அவன ஓடிய ஓட்டத்தில் உதிர்த்துவிட்டுச் சென்ற மணிமொழிகளிலே ஒரு சில நல்ல கருத்துக்களும் இடம் பெற்றிருப்பதை மறுக்காமல் ஒப்புக்கொள்ளத்தான வேண்டும.

"போராட வேண்டிய சந்தர்ப்பத்தை மிகத் துணிச்சலுடன் வரவேற்கத் துணிந்த இனமதான் மனித குலத்தின் மேலான அம்சங்களை வெளிக் கொணர்ந்து தனக்கென அழியாத பெருமபுகழைச் சமபாதித்துக் கொளளும" முசோலினியின் இநதக கருத்துக்கு மிகச் சரியான உதாரணமாக அமெரிக்க மக்களைக் குறிப்பிடலாம. அவர்களுக்கு மூன்றும் ஜார்ஜ் மன்னனிடம் போராட வேணடும என்ற எண்ணம் இருந்ததில்லை போராட்டத்துக்குரிய முஸ்தீபுகள் எதனையும் செய்யவில்லை. திடீரென ஒரு நாள் போராடத்தான் வேண்

டும்போல் உணர்ந்தார்கள். மிகத் துணிச்சலுடன் அந்தச் சந்தர்ப்பத்தை வரவேற்றார்கள். போராடியும் வெற்றி பெற்றுவிட்டார்கள். அவர்கள் போரில் ஈடுபட்டபோது மரணத் துணிச்சலைத் தவிர, குறிப்பிடத்தக்க பக்கபலம் ஏதும் இருக்கவில்லை. தங்களுக்கென அமைத்துவிட்டதனியானதொரு நாகரிகத்தை என்ன விலை கொடுத்தாகிலும் காப்பாற்றிக் கொள்ள அவர்கள் காரியத்தில் இறங்கினார்கள்.

போரினால் காத்துக்கொண்ட அவர்கள் நாகரித்தைப் போலவே உலகின் மற்ற நாகரிகங்களும் போர்புரிந்தே பெற்ற ''வரப்பிரசாதமாக'' நினைக்கத் தொடங்கி விட்டனர். பாவம், அவர்கள் சுதந்திரமாக எழுதிய ஆரம்ப வாசகமே போரையும் நாகரிகத்தையும் பிரிக்க முடியாத பொருளாகச் சித்தரித்துக் காட்டிற்று. பரம்பரையாக அவர்களுக்கிருக்கும் இந்த எண்ணத்தைப் பிரதிபலிப்பது போலவே, 1912-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 5-ந் தேதி கூடிய அமெரிக்கக் காங்கிரஸ் சபையில் இப்படி ஒரு பிரதிநிதி வெளுத்து வாங்கினார்.

''...நாகரிகம் என்று எதை நாம் அழைக்கிறோமோ அதனுடைய ஒவ்வொரு அங்குல முன்னேற்றமும் போரின் விளைவுதான் ... நீண்ட காலமாகக் கடைப் பிடிக்கப்பட்டு வரும் இந்த நியதி நமது மதிப்புக்குரியதே ஆகும்.''

இந்தப் பேச்சு அமெரிக்காவின் போர் வெறிக்குச் சாட்சி கூறி நிற்பது வேறு விஷயம், ஆனால், இன்று உயர்ந்த 'இதோபதேசம்' செய்யும் நாடுகள் கடந்த காலத்திலே நாகரிகத்தை அளந்து பார்த்த

பூவும், வண்டும்

நல்லியல் நிரம்பிய
மெல்லியல் தோழி,
அல்லல் நெஞ்சம்
அருந்துயர் உறும்படி
நல்லகம் நீங்கும்
நலங்காண் ஆடவர்
வல்லவர் சொல்லிடும்
வண்டே,
அவ்வண்டு விரும்பிடும்
அரும்பூ யாமே.

— நாகமுத்தையா, பி. காம்

விதம் அதுவாகத்தானிருந்தது.

இத்தாலியும் ஸ்பெயினும், போர்ச்சுகலும் பிரான்சும், இங்கிலாந்தை வெறும் காட்டுமிராண்டிகள் வாழும் அதிசய பூமியாக நினைத்து வந்தது. ''ஸ்பானிஷ் ஆர்மாடா'' வை இங்கிலாந்து முறியடித்த பிறகே நம்மைப்போல் இதுவும் நாகரிகம் உள்ள நாடுதான் என்று அன்றைய நாகரிக நாடுகள் ஒப்புக்கொண்டன.

'ஸ்பானிஷ் ஆர்மாடா' வெற்றிக்குப் பிறகே, ஷேக்ஸ்பியர் தோன்றினான். மார்லோ பிறந்தான்; இங்கிலாந்தின் சரித்திரத்திலே 'பொற்காலம்' என்கிற புகழ் பொறித்து எலிஸபெத் ராணி ஜாம் ஜாம் என உலகைத் தன் பக்கம் ஈர்த்தாள்.

அமெரிக்காவின் நாகரிகத்தை அட்டியின்றி ஒப்புக்கொண்டதும், ஸ்பெயின் கடற்படையை அமெரிக்கப் பாய்மரக் கப்பல் பொடிப் பொடியாக்கி, புறமுதுகிட்டு ஓடச் செய்த பிறகுதான். ஜப்பான் நாகரிகம் அங்கீகரிக்கப்பட்டதும் அதனுடைய சிறிய படை ரஷ்யாவின் பெரும்படையை சின்னாபின்னமாக்கிய பிறகுதான் இவைகளைப் பார்க்கும்போது

போர்தான் நாகரிகத்தைப் பிறர் நம்பும்படிச் செய்கிறது என்று நினைப்பதிலே தவறு என்று சொல்ல முடியுமா?

தன்னுடைய நாகரிகத்தைப் பிறர் அறிந்துகொள்ள வசதி ஏற்பட்டது போரினால்தான் என்று சாதிக்கும் ''பெருந்தலைகள்'' கிடக்கட்டும், இன்றைய நாகரிகம் பிறந்ததே போரினால் தான் என்கிற கசப்பான உண்மையையும் நாம் தெரிந்துவைத்துக்கொள்வோம்.

கி. மு. 490-ம் ஆண்டில் ஏதன்ஸ் குடியரசின் வீரம் செறிந்த மக்கள் சமுதாயம் பெரும் பலமிக்க பாரசீக ஏகாதிபத்தியத்தை எதிர்த்து மராத்தூன் எனும் இடத்திலே நடத்திய மகத்தான போர்முனையில்தான் இன்றைய நாகரிகம் ''குவா குவா'' என்ற அழுகையுடன் பிறந்தது. சிந்து நதிக்கரையிலிருந்து டைபர் நதியைத் தொட்டு நின்ற பாரசீக ஏகாதிபத்தியத்தின் இடுப்பொடித்த வீரர்கள்தான - மராத்தூன் போர்முனையிலே உயிர் நீத்த 192 தியாகிகள்தான் - நாம் போற்றிப் புகழும் மனித நாகரிகத்தின் முன்னோடிகள்!

மயிர்க் கூச்செறியும் இந்தப் போருக்குப் பின்னால் பாரசீக ஏகாதிபத்தியம் தனது இரும்புப் பிடியைத் தளர்த்திக் கொண்டதற்கப்பால் - ஏற்பட்ட சுதந்தரச் சூழ்நிலையில்தான் சாக்ரடீஸ் அறிவுப் பிரச்சாரம் செய்தான் - பிளாட்டோ எழுதினான் - அரிஸ்டாடல் நீதி நூல்களை வரைந்து குவித்தான் - ஹெரடாடஸ் சரித்திரம் தீட்டினான் - சோபாக்ளிசும் யூரிபிடிசும் கலையுலக பிரம்மாக்களாக உருவெடுத்தனர் - பிடியஸ் ஞான ஒளி வீசும் மோனச் சிற்பங்களைச் செய்து அடுக்கினான்.

பெரிகின்ஸ் உலகின் முதன் முதலான வாசாலகஞக வளர்க்தான்! இவர்களுடைய ஆற்றலைச் சுற்றி வலம வருவது தானே இன்றைய நாகரிகம்? இவ்வளவு ஏன்? மதங்களை நிறுவிய மகானகள்கூட மராத்தான் போர்முனை இட்டபிச்சை தான்!

இத்தகைய மகத்தான திருப்பத்தை உண்டாக்கிய மராத்தான் போர்கடந்துஇன்றைக்கு ஏறக்குறைய 2500 ஆண்டுகள் ஆகினறன- புத்தர் பிறந்ததும் கிட்டத்தட்ட அதே காலத்தில் தான்

"புத்தருக்குப் பின்னல் மூட நம்பிக்கைகளைக் களைந்தெறியப் பாடுபட வேண்டி ஒரு கூட்டு அடிப்படையில் இயக்க அமைப்பாகத் தோன்றியிருப்பதுபெரியாரின் பெரு முயற்சியால் கட்டப் பெற்ற சுயமரியாதை இயக்கமே!'

திராவிடத்தின் மிகப் பெரிய அரசியல் வாதி தோழர் ஈ.வெ.கி. சமபத் இப்படி ஒருமுறை குறிப்பிட்டார். இது மிகவும் துணிச்சலான காரியந்தான "காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு" என்பதுபோல தோழர் சமபத் அவர்களும் தான சார்ந்துள்ள இயக்கத்தைப்பற்றி பிரமாதமாகப் புகழ்கிருர் எனறு பலர் நினைத்ததுண்டு. ஆனல், சுயமரியாதை இயக்கத்தில பயிற்சி பெற்று அரசியல விடுதலையையும் தன லட்யசிமாக்கிக் கொண்டிருக்கும் தி. மு. கழகத்தின் வீர மிக்க சாதனைகள், அத்தீனிய சமுதாயத்தின நெஞ்சுரத்தைப் பிரதிபலிக்கின்றன புத்தருக்குப் பின்னல கூட்டு அமைப்பாக ஓர் இயக்கம் இந்தத் தென்னட்டில உருவானது போலவே, மராத்தான் போர்முனைக்குப் பின்னல, அதன் சாயலை எதிரொலிக்கும் பாணியில் ஓர் போர்முனை ஏன் இந்த இடத்திலேயே உண்டாகக் கூடாது?

ஏதன்ஸ் விடுதலை நமக்களித்த மேலான பண்புகளைப் போலவே, திராவிடத்தின் விடுதலையும் உலகுக்குப் பயனுள்ள நாகரிகத்தைப் பரப்பும் பணியினைச் செய்ய முடியுமென்பதை யாராவது மறுக்க முடியுமா?

ஏதன்ஸ் எதிர்த்தது ஆரியக் கலப்புள்ள - பொய்மை நிரம்பிய வாழ்வு வாழ்ந்த பாரசீகரை.

திராவிடம் எதிர்ப்பதும் பாரசீகர் பெற்றுப் போட்ட அதே இனத்தவரை.

அத்தீனியர் எதிர்த்து நின்ற ஏகாதிபத்தியம் சிநது நதியிலிருநது டைபர் நதிவரையில் நீணடது.

நாம் எதிர்க்கும் ஆதிபத்தியமும் சிநது நதியிலதான் தொடங்குகிறது.

பாரசீகர் தோற்றேடிய பிறகே உண்மைக் கலைகள் மலிநதன. டெல்லிப் பிடிப்பு அகன்ற பிறகும் உலகுக்குப் புதியதொரு நாகரிகம் கிடைக்கும்.

காலம் இதனை மெய்ப்பிக்கும்; நாம் அதனைச் சாதிப்போம். ★



உணவுதர முடியாத ஊராள்வோர் தம்மிடையே
உணபதறகுத் தாமபாள உருக்கோண்ட பேதை!
புகைப்படம் : த. மு. தென்றலரசு, பெங்களூர்.

அழகி

த. சுந்தரேசன், பி. ஏ. ஆனர்ஸ்.

நீலநிற வான்விளிம்பில் மூலாம்பூச மாலை
நெருங்கிவரும் போழ்தினிலே; நிலவென்ற அழகி
கோலமிட விண்மீனாலே புள்ளிவைத்துப் பார்த்துக்
கோடிழுக்க வந்தவளும் தனைமறந்து விட்டு,
வாலைப்பெண் சுனைத்தான் வரல்கேட்டுக் கிணற்றில்
வாளியொடு கயிற்றைவிட்டு மெய்ம்மறத்தல் போலே
பாலமுதக் கதிர்கொட்டிப் போகுமொழி லினிலே
பார்த்திருந்தேன் நானஉன்னை : பார்த்தாய்நீ இல்லை !!

ஓடையிலே அதுகண்ட தேன்காதல் கனவின்
உருக்காட்டும் மலர்க்காட்டின் எழிற்கூட்டத் தினிலே,
த டையிலே கைவைத்துக் காதலனமேல் நெஞ்சம்
சதிராடத் தனக்குள்ளே வருஞ்சிரிப்பை விழிகள்
சாடையிலே காட்டுகின்ற வேளையிலே எல்லாம்
தனைமறந்து பார்த்துநிற்பேன் ! வாடுகின்ற பயிரும்
கோடையிலே மழைக்கேங்கி மழைபெற்ற துண்டு;
கொஞ்சமும் நான் உனக்கேங்கி உனைப்பெற்ற தில்லை !!

உனைக்காண்போம் என நினைந்து வான்முட்டும் கோயில்
உட்சென்றேன்; இருக்கின்ற தெய்வமெலாங் கண்டேன் !
இணுக்கிணுக்காய்த் தேடினேன் உனைமட்டும் அங்கே
எங்குங்கண டேன் இல்லை; அங்குள்ள வற்றை
மணிக்கணக்காய்ப் பார்த்துநிற்பேன் அவைஎன்ன செய்யும் ?
மலைக்கற்கள் கடவுளராய் மாறுகின்ற விந்தை
தனைச்சொல்வேன் ! ஒருபாதி நம்பிக்கை; இன்னும்
சரிபாதி சிற்பியின்கை வேலை-இவை கடவுள் !!

இப்படியாய்ப் பலஎண்ணி இருக்கின்ற வேளை
எதிர்வந்து அவள் நின்றாள் என்மாமன் கரும்பு !
கொப்புப்பூஞ் சிரிப்பள்ளிக் கொட்டி 'என்ன ?'' என்றாள்.
''கூறழகுத் தெய்வமெது ?'' என்றிட்டேன் அவளோ
ஒப்புககுச் சிந்திப்பாள் போலிருந்து விட்டு
உதட்டைவெளிப் பிதுக்கிஇதழ் பதுக்கிவைத்த சிரிப்பை
அப்பாவி போற்சிந்தித் ''தெரியா''தென் றுரைத்தாள்
அங்கழகுத் தெய்வமாகி 'அவள்'நிற்கக் கண்டேன் !!

★



காவியத்தில் உழவு

ம.ரா. பூபதி, M.A.

இலக்கியம் வாழ்வோடு இணைந்தது; வாழ்க்கையை எதிர் ஒளி செய்வது; வாழ்க்கையின் விளக்கம்—இலக்கியத்தைச் சுவைக்கும் ஆற்றலில் இம்மி அளவேனும் ஒருவனுக்கு இருக்குமானல், அவன் மேற்கண்ட முடிவுக்கே வருவான். ஆனல், இலக்கியம் செயலுக்கு உதவாச் சோம்பேறிகளின் போதைப் பொருள் என்றும் சிலர் பிதற்றுகின்றனர். இவர்களைக் கருத்தில் வைத்துக்கொண்டு, ஏற்கனவே ஒரு புலவர் ஒரு வரி எழுதி இருக்கிருர்.

"தண்டாமரையின் உடன் பிறந்தும்
தண்டேன் நுகரா மண்டுகம்"

என்பதே, பித்தேறிப் பிதற்றும் இப் பேதையர்களுக்கு அவர் ஒதுக்கி வைத்துள்ள பட்டம்! இம் மண்டுகங்களின் வறட்டுக் கூச்சல் இருட்டில்தான்; விடிந்து, பகலவன் ஒளி விரியும்போது, இருந்த இடம் தெரியாமல் மறைந்து விடும்!

ஆகவே, இந்த வறட்டுக் கூச்சலைப் புறத்தே ஒதுக்கிவிட்டு, இலக்கியத்தின் ஒரு பிரிவான காவியத்தில் கருத்தூன்றுவோம். இலக்கியம் மணிமாலை என்ருல், காவியம் அதன் நடுவே தொங்கும் மாணிக்கப் பதக்கம். இலக்கியத்தின் இதயம்—உயிர்நாடி காவியத்திலேயே இருக்கின்றது. ஆகவேதான், இலக்கியம் என்றவுடனே, சிலம்பு, மணிமேகலை, கம்பராமாயணம், சிந்தாமணி, கந்தபுராணம் போன்ற காவிய நூல்கள் நம் கண் எதிரே நிற்கின்றன. இவற்றுள் சிலம்பும், மணிமேகலையும் காலத்தால் முந்தியவை; அளவால் சுருங்கியவை. இவற்றின் தொடக்கத்திலேயே காவியக் கதையும் துவங்கி விடும். ஆனல், சிந்தாமணி, கம்பராமாயணம், பெரிய புராணம், கந்தபுராணம், முதலிய பிற்காலப் பெருங் காவியங்களில் துவக்கத்திலேயே காவியக் கதை தோன்ருது. ஆற்று வருணனை, நாட்டு வருணனை, நகர வருணனை என்று சில பிரிவுகள் தொடக்கத்தில் இருக்கும். அதன்பிறகே காவியக் கதை முகிழ்க்கும்.

ஆற்று வருணனை, நாட்டு வருணனை ஆகிய பிரிவுகளில் காவியத் தலைவனுடைய நாட்டின் நீர் வளமும், நில வளமும், தொழில் வளமும் புகழ்ந்து கூறப்படும்; நாட்டு மக்களுடைய தொழில்கள் எல்லாம் சிறப்பிக்கப் படும். மக்கள் செய்யும் தொழில்களுள் மிகமிக ஏற்றம் பெற்ற தொழில் உழவுத் தொழில்.

பெருங் காவியங்கள் எங்ஙனம் இருக்கவேண்டும் என்று கூறி, அவற்றிற்கு எல்லைகட்ட பிற்காலத்தில் எழுதப்பட்ட தண்டி யலங்காரம்,

"பெருங்காப் பியநிலை, பேசும் காலை,
வாழ்த்து, வணக்கம், வரும்பொருள்
இவற்றின் ஒன்(று)
ஏற்புடைத்(து) ஆகி, முன்வரவு
இயன்று,
நாற்பொருள் பயக்கும் நடை
நெறித்(து) ஆகி,
தன்னிகர் இல்லாத் தலைவனை உடைத்
தாய்,
மலை கடல் நாடு வளநகர்ப் பருவம்
இருசுடர்த் தோற்றம் என்(று) இனை
யன புனைந்து

என்று நீளக் கூறிக்கொண்டு போகின்றது. இந்த இலக்கணப்படி காவியங்கள் மலையைப் பாடவேண்டும்; கடலைப் பாடவேண்டும்; நாட்டைப் பாடவேண்டும்; நகரைப் பாடவேண்டும். இவற்றைப் பாடிவிட்டால், காவியம் தன் வேலையை முடித்துவிட்டதாகிறது, இவ் விலக்கணப்படி.

ஆனல், நல்ல வேளையாக, இந்த இலக்கணத்தை வைத்துக்கொண்டு எந்தக் கவிஞனும் காவியம் இயற்றவில்லை. கவிஞர் சில மரபுகளை வைத்துக்கொண்டு, தங்கள் விருப்பம்போல், காவியங்களை உருவாக்குகிருர்கள். அதனுல்தான் புராணக் காவியங்கள்கூடப் படிக்கப் படிக்கத்தெவிட்டாத இன்பத்தைக் கொடுக்கின்றன.

பெருங்காவிய இலக்கணம் கூறவந்த தண்டி அலங்காரம், உழவைப் பாட வேண்டும் என்று சொல்லவே இல்லை. நாட்டைப் பாடவேண்டும் என்று சொன்னதன் மூலமே, உழவையும் பாடவேண்டும் என்பது உணர்த்தப் பட்டுவிட்டது என்று ஒரு சிலர் தம் மன ஆறுதலுக்காகக் கூறிக் கொள்ளலாமே ஒழிய, அஃது ஏற்றதொரு விடை ஆகாது.

நாட்டைப் பாடுகின்ற காவியப் புலவன், நாட்டில் நடைபெறும் மக்கள் தொழில்களைப் பாட வேண்டியவன் ஆகின்ருன். மக்கள் ஒரு தொழிலில் மட்டுமா ஈடுபட்டுள்ளனர்? இல்லை. ஆகவே, பல தொழில்களையும் அவன் பாடவேண்டியவன் ஆகின்ருன். உண்மையில், காவியப் புலவர் அனைவரும் பல்வேறு தொழில்களைத் தம் காவியங்களில் பாராட்டியே பாடி யிருக்கின்றனர். என்ருலும், அவர்கள் அனைவரும், ஒருவர்கூட விதி விலக்காக இல்லாமல், மற்ற எல்லாத் தொழில்களையும்விட, உழவுத் தொழிலையே மிகவும் சிறப்பித்துப் பாடி யிருக்கின்றனர்; வேறு எந்தத் தொழிலுக்கும் தராத தனிச் சிறப்பை உழவுத் தொழிலுக்குத் தந்துள்ளனர். காரணம் என்ன?

உலக மக்கள் உயிர் வாழ உணவு இன்றியமையாதது. காற்றும் நீரும் உணவைவிட இன்றியமையாதவையே. ஆனல், உலகத்தில் உள்ள காற்றையும், நீரையும் இயற்கை எல்லோர்க்கும் பொதுவாக்கிவிட்டது. இல்லையேல், உணவைப் பதுக்கிவைத்தும், சேர்த்து வைத்தும், நாட்டு மக்களைப் பட்டினி போட்டுப் பணம் சுருட்டும் ஓநாய்கள், காற்றிலும் நீரிலும்கூடத் தம் கை வரிசையைக் காட்டியிருக்கும்! மக்கள் எந்தத் தொழிலைச் செய்தாலும், உழவுத் தொழிலுக்கே தலைகுனிய வேண்

டியவராக உள்ளனர். உழவு இன்றேல், உலகம் இல்லை. ஆகவேதான், காவியப் புலவர்கள் உழவுத் தொழிலைச் சிறப்பித்துத் தம் காவியங்களில் பாடியுள்ளனர் என்று ஒருவாறு காரணம் கூறலாம்.

மேலே கூறிய காரணம் பொருத்தமானது என்றாலும், இன்னும் சிறிது ஆழ்ந்து நோக்க வேண்டும். உழவுத் தொழில் உணவைக் கொடுக்கின்றது என்பதற்காக மட்டுமா காவியங்கள் அத்தொழிலை அவ்வளவு பெருமையாகக் கூறுகின்றன ?

காவியங்கள் தாம் எழுந்த காலத்து நாட்டு நிலையை எதிரொளி செய்து காட்டும் கண்ணாடி என்று முன்பு கூறப்பட்டது. மக்கள் வாழ்க்கையிலிருந்தே காவியம் பிறக்கின்றது. ஆகவே காவியத்தை வாழ்க்கையின் குழந்தை என்று சொல்லலாம். என்றாலும், இலக்கியம் என்றும் பச்சைக் குழந்தையாகவே இருந்து விடுவதில்லை. அதனை ஒரு சீர்திருத்த வெறிகொண்ட சிறு குழந்தை என்று செப்பவேண்டும். வாழ்க்கைக்குப் பிறந்த அந்தக் குழந்தை, தன்னைப் பெற்றெடுத்த வாழ்க்கையையே திருத்தி அமைக்க முற்படுகின்றது. நாட்டு மக்கள் வாழ்க்கை எப்படி இருக்க வேண்டும் என்பதை அது வெளிப்படையாகவோ, குறிப்பாகவோ விளக்கத் தொடங்குகின்றது.

தொழில் என்பது ஆண் பெண் இருபாலார்க்கும் பொதுவானது. உழைக்க வேண்டியவன் ஆண், உட்கார்ந்து உண்ணவேண்டியவள் பெண் என்ற கொள்கை பழங்காலத் தமிழகம் மோந்தறியாத ஒரு சாக்கடை நாற்றம். உழைக்கும் உரிமையில் ஆணுக்கு எவ்வளவு பங்குண்டோ, அவ்வளவு பங்கு பெண்ணுக்கும் உண்டு. பெண்ணுக்கு இருந்த இந்த உழைப்பு உரிமைக்குச் சிறிதும் கேடுவராமல் பேணி வந்தது பழந்தமிழகம். ஆகவேதான், அந்தப் பழந் தமிழகத்தில், பெண், ஆணோடு உரிமை பூண்டு வாழ முடிந்தது. அக்காலத்தில் பெண்கள் ஆண்களின் அடிமைகளாக, இன்பத்துக்குரிய இயந்திரங்களாக வாழவில்லை என்றால், அதற்கு முக்கிய காரணம் அவர்களுக்கு உழைப்பு உரிமை இருந்ததே.

காலப் போக்கில் பெண்களுக்கிருந்த உழைப்பு உரிமை சிறிது சிறிதாகப் பறிக்கப்பட்டு விட்டது. அல்லது, ஆண்கள் தொடும்போது துவண்டு கொடுத்து, அவர்கள் இச்சைக்கு இணங்கி விட்டுச் சொகுசு வாழ்வு நடத்துவதே சிறந்தது என்ற சோம்பல் கொள்கைக்குச் சிறிது சிறிதாக இந்த நாட்டுப் பெண்கள் இறங்கிவிட்டனர். இதன் விளைவாக, ஆண்களின் காம உணர்ச்சியின் மேலேயே, பெண்கள் வாழ்வு நகர வேண்டியதாக மாறியது. காதல் என்பது ஆண்களின் வாழ்வில் ஒரு பகுதி, ஆனால் பெண்களுக்கு அதுவே முழுவாழ்வு என்ற போலிக் கொள்கையும் நாட்டில் முளைவிடத் தொடங்கியது.

இடைக்காலத் தமிழகத்திலும், இன்றும் பெண்கள் ஆண்களுக்கு அடிமையாகி விட்டார்கள் என்றால், அவர்கள் தமக்கு இயற்கையில் ஏற்பட்டிருந்த உழைப்பு உரிமையை இழந்ததே, அதற்குக் காரணம். பெண்கள் வீட்டு

வாயிற்படியை விட்டுத் தாண்டக் கூடாது என்ற அழிவு எண்ணம் என்று இந்த நாட்டில் தலை நீட்டியதோ, அன்றே இந்நாட்டுப் பெண்களின் உரிமை வாழ்வுக்குச் சாவுமணி அடித்தாய் விட்டது. இன்றுள்ள தமிழ் நாட்டு நகரங்களில் சில பெண்கள் தம்முடைய உழைப்பு உரிமையை இழக்காமல், வீட்டை விட்டு வெளியில் சென்று தொழில் செய்கின்றனர். இதனால், அவர்கள் ஆண்களுக்கு அடிமைகளாக இருந்து உள்ளத்தை வளைத்துக் கொள்ளாமல், அவர்களோடு உரிமைவாழ்வு நடத்தும் வாய்ப்பைப் பெற்றுள்ளார்கள். ஆனால், நகரத்தில் வாழும் பெண்களில் பெரும்பாலோர் உழைப்பு உரிமை இல்லாதவர்கள்; தம் உயிர் வாழ்க்கைக்கு ஆண்களின் ஊதியத்தையே எதிர் நோக்கி இருப்பவர்கள். உயிர் வாழ்க்கைக்குப் பிறர் கையை எதிர்நோக்கி இருப்பவர்கள், எப்படி உரிமை வாழ்வு வாழ முடியும்? ஆகவே, "கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை" என்ற போலிப் பழமொழியைப் பாடிக்கொண்டு, தம் உள்ளத்தை ஆண்களின் உள்ளத்துக்கும் உணர்ச்சிக்கும் அவர்கள் அடிமையாக்கி விடுகிறார்கள்.

ஆனால், நகரங்களில் உள்ள இந்தப் பிற்போக்கு அவல நிலைமை நாட்டுப் புறங்களில் காண்பது அருமை. ஊர்ப் புறங்களிலும் சிற்சில இடங்களில் நகர வாசனை வீசத் துவங்கியுள்ளது. அந்த வாசனை வீசும் இடங்களில் எல்லாம், நகர்ப்புறப் பெண்கள் போலவே, நாட்டுப்புறப் பெண்களும் சோம்பேறிகளாகச் சோற்றுக்கு ஆணின் கையை எதிர் நோக்குபவராக உள்ளனர். ஆனால், நாட்டுப்புறப் பெண்களில் பெரும்பாலோர் உழைப்பு உரிமையைச் சிறிதும் இழக்காதவர்கள். தம் வாழ்வு நடைபெற ஆண்களின் கையில் இன்பப் பொருளாக இருந்தேயாக வேண்டும் என்ற இழிநிலை அவர்களுக்கு இல்லை. எந்தக் கணத்திலும் ஆண்களின் தொடர்பை அறுத்துக் கொண்டு அவர்களால் வாழ முடியும், வீட்டு வாயிலை விட்டு வெளியில் சென்று வேலை செய்யும் உரிமை இருக்கின்ற காரணத்தால். நாட்டுப்புறப் பெண் உரிமையோடு ஆணோடு சரிநிலையில் வாழும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறாள்.

இங்ஙனம், உழைப்பு உரிமையைச் சிறிதும் இழக்காமல் இருக்கும் பெண்தான் உண்மையில் காதல் வாழ்வு நடத்த முடியும். மற்ற பெண்டிர் அனைவரும் காதல் வாழ்வு நடத்துவதாகக் கூறிக்கொண்டு, அடிமை வாழ்வில் இறங்கிவிட்ட ஏமாளிகளே!

இயற்கையை நுனித்து நோக்குவதிலும், மனித உள்ளத்தில் இணையற்று விளங்கிய தமிழ்ப் புலவர்களுக்கு மேற்கூறிய செய்தியும் நன்றாகத் தெரிந்திருக்கும். ஊர்ப்புறங்களில் மக்கள் இயற்கையோடு இயைந்து வாழும் வாழ்க்கையை அவர்கள் துருவித்துருவி ஆய்ந்திருப்பார்கள். நகரங்களில் வாழும் பெண்களைவிட, ஊர்ப்புறப் பெண்கள் இன்பமாக வாழ்வது அவர்கள் உள்ளத்தைத் தொட்டிருக்கும். ஊர்ப்புறப் பெண்களின் வாழ்வு இன்பமாக ஓடவேண்டிய காரணம் என்ன என்று அவர்கள் சிந்தித்திருப்பார்கள்.

இத்தகைய சிந்தனையில் ஈடுபட்ட புலவர்களில் தலை சிறந்தவனாகச் சிந்தாமணியைச் செய்த திருத்தக்க தேவனைக் கூறவேண்டும்.

திருத்தக்க தேவன் இளமையிலிருந்தே துறவு வாழ்க்கையை மேற்கொண்டவன். அவன் துறவு நெறியனே என்றாலும், ''துறவு வெறியன்''ாக அவன் மாறவில்லை. துறவு வாழ்க்கையில் அடையக்கூடிய பயனை எல்லாம் வாழ்வாங்கு வாழும் இல்லற வாழ்க்கையில் இருந்துகொண்டே அடைய முடியும் என்ற கொள்கை உடையவனாகவே அவனைக் கருதவேண்டும். திருத்தக்க தேவன் மேற்கொண்ட துறவு, விசுவாமித்திரன் துறவு போன்று, தன் நன்மை ஒன்றையே கருதி மேற்கொள்ளப்பட்ட தன்னலத் துறவு அன்று. மாறாக, சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோ மேற்கொண்ட துறவு போன்று உலகநலத்துறவே அது. உலக நலத்துறவு என்ற உயர்ந்த மணிமுடியைத் திருத்தக்க தேவனுக்குச் சூட்டச் சிலர் தயங்கினாலும், தமிழ் நலத் துறவு என்ற மலர் மாலையையாவது கழுத்தில் அணிவிக்க வேண்டும்!

இத்தகைய சிறந்த புலவன் நாட்டுப்புற மக்கள் வாழ்க்கையை ஆழ்ந்து நோக்கியபோது, அதில் பெண்களுக்குள்ள சிறப்பையும் உரிமையையும் கண்டான்; இவற்றிற்குக்காரணம் பெண்களுக்குள்ள உழைப்புஉரிமையே என்பதை உணர்ந்தான். அத்தகைய உழைப்பு உரிமையும் உழவுத் தொழிலில், பரந்த வயல் வெளிகளில், தெற்றெனத் தோற்றுவதைப் பார்த்தான். ஆடவரும் பெண்டிரும் எவ்வித வேறுபாடும் இன்றி, இணைந்து உழைக்கின்ற காட்சி அவன் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. நாட்டு வளம் உயர, வயல் வளம் காரணமாக இருப்பது போன்று, நாட்டு மக்களின் மகிழ்ச்சி வரம்புக்கு, உழவர் உழத்தியரின் மகிழ்ச்சி வாழ்வு காரணமாக இருப்பதை எண்ணி வியந்தான்; பிறகு, சிந்தாமணி என்ற சிறந்த காவியத்தை இயற்றத் துவங்கியபோது நாட்டுப்புறப் பெண்களுக்குள்ள உழைப்பு உரிமையைப் பாராட்ட வேண்டும் என்ற எண்ணம் அவன் உள்ளத்தில் தானாகவே எழுந்தது. எப்படிப் பாராட்டுவது? பெண்களின் உழைப்பு உரிமை எந்த இடத்தில் விளங்கித் தோன்றுகின்றது? வயல் வெளியில்! ஆகவே, முதல் முதல் விருத்தக் காவியம் செய்த அப்பெரும் புலவன், நாட்டு வளம் கூறுகையில், உழவுத் தொழிலைச் சிறப்பாகப் பாராட்டத் துவங்கினான்.

வயல்களில் நாற்று நடுவது சிறப்பாகப் பெண்களுக்குரிய தொழில். சிந்தாமணியில், ஏமாங்கத நாட்டு வயல் வெளியில், அழகுமிக்க மகளிர் நாற்று நடுகிறார்கள். அவர்கள் கால் பெயர்ந்து அசையும்போதெல்லாம், அவர்கள் வனப்பு மிக்க மார்பகத்தில் சேற்றுத் துளிகள் தெறிக்கின்றன. வயலில் உள்ள கயல் மீன்கள், பெண்கள் நாற்று நடுகின்ற பகுதியைவிட்டு, நடாத பகுதிக்குக் குதிக்கின்றன; அங்கும் நடுவதற்குப் பெண்கள் நெருங்குவதால், கயல்கள் வேறு போக்கிடத்தைத் தேடுகின்றன. அப்போது, வயலுக்கு அருகில் கவரிமான் ஒன்று தன் கன்றுக்குப் பாலூட்டிக்கொண்டு இருந்தது. கன்று உண்டது போக, எஞ்சிய பால் தரையில் இழிந்து குளமாகக் காட்சியளித்தது. அந்தப் பால் குளத்தில், வயலில் இருந்த கயல்கள் பாய்ந்து அங்கே பிறழ்கின்றன.

'' முலைத்தடம் சேதகம் பொறிப்ப,
மற்(று) அவர்
குலைத்(து), உடன்பதித்தலின்,
குதித்த வாள்கயல்
புலத்திடைக் கவரி கன்(று) ஊட்டப்
போந்த பால்
நிலத்திடைப் பாய்ந்(து), அவை
பிறழும் நீரவே ''

[அவர் - பெண்கள்; சேதகம் - சேறு; குலைத்து - நாற்றுக் கட்டுக்களை அவிழ்த்து; வாள் - ஒளிமிக்க; நீர - தன்மையை உடையன.]

ஆடவர்கள் நெற் பயிருக்கு இடை இடையே முளைத்துள்ள களைகளை எடுக்கிறார்கள். குவளை மலர்களும் வயல்களில் பூத்துள்ளன; தாமரை மலர்களும் காட்சியளிக்கின்றன. குவளையும், தாமரையும் அழகானவையே என்றாலும், நெல் வயலில் இருக்கக் கூடாதவை. அவற்றையும் களைந்தே ஆகவேண்டும். களை பறிக்கும் உழவர்கள் குவளை மலரைக் களையப் போகிறார்கள். அப்போது அவர்களுக்கு எதிரே, அவர் தம் அன்புக்குரிய மனைவியரின் இருண்ட அழகிய கண்கள் தோன்றுகின்றன. ஆகவே, அப்பெண்களின் கண்களைப் போன்றுள்ள குவளைகளைக் களைந்தெறிய அவர்கள் விரும்பாமல், மயங்குகின்றனர். அப்படியே, தாமரை மலர்களைப் பறிக்கச் செல்கையில், அவர் தம் மனைவிரியன் மகிழ்ச்சி அலை ஓடும் முகங்கள் அவர்கள் நினைவில் தோன்றுகின்றன. ஆகவே, அவற்றையும் களையாமல் மயங்குகின்றனர்.

'' கண் எனக் குவளையும் கட்டல்
ஓம்பினார்;
வண்ண வாள் முகம் என மரையின்
உள்புகார் ''

[ஓம்பினார் - தவிர்த்தார்; வாள் - ஒளிமிக்க, மரை - தாமரை மலர்கள்]

பெண்கள் நிலை அமெரிக்காவில் அப்படி உயர்ந்துள்ளது, இங்கிலாந்தில் இப்படி மேம்பட்டுள்ளது என்று வெளிநாட்டுப் புகழ்பாடும் பெரியோர்கள், இந்த நாட்டில் பழங்காலத்தில், பெண்கள் நிலை எப்படி இருந்தது, அதற்குக் காரணம் என்ன, இன்று ஏன் தாழ்ந்துவிட்டது என்பவற்றையெல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஆண் இன்றேல் பெண் இல்லை, பெண் இன்றேல் ஆண் இல்லை என்ற அரும் பெருங் கொள்கையைக் கடைப்பிடித்து வாழ்க்கை நடத்திய தமிழர்கள்—ஆண் கடவுளும் பெண் கடவுளும் இருந்தால் மட்டும் போதாது,

—72-ம் பக்கம் பார்க்க—

தேர்தல் விவகாரம்

நாரண. துரைக்கண்ணன்

நரசிம்ம மூர்த்தி, மல்லிகார்ஜுன மணியக்காரருக்கு எதிராகத் தேர்தலில் வேலை செய்வதைக் கண்டு எல்லோருக்கும் ஆச்சரிய முண்டாயிற்று. நரசிம்ம மூர்த்தி சிறந்த தேசபக்தர். காங்கிரஸ் பிரபலஸ்தர்களில் முக்கியமானவர். நாட்டில் சுதந்திரப் போராட்டம் நடக்கும் சமயங்களிலெல்லாம் தமது ஜில்லாவிலுள்ள மக்களைச் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபடுத்தித் தீவிரமாகத் தேச சேவை புரியும் தலைவர்களில் ஒருவர். அப்பேர்ப்பட்டவர், இப்போது காங்கிரஸ் பார்லிமெண்டரி போர்டார் தமது ஜில்லா நிலச்சுவான்தார் தொகுதிக்குக் காங்கிரஸ் அபேட்சகராக நிறுத்தியிருக்கும் மல்லிகார்ஜுன மணியக்காரரை எதித்து நிற்கும் சுயேச்சை அபேட்சகர் சத்தியானந்தத்தின் சார்பில் வேலை செய்கிறார் என்றால் அதை யாரால் நம்ப முடியும். முதலில் இச்செய்தி வதந்தியாக வந்தபோது எவரும் நம்பவே இல்லை. வதந்தி உண்மையென ஊர்ஜிதப்படுத்தும் நிகழ்ச்சிகள் பல நிகழ்ந்ததைக் கண்ட பிறகு அவநம்பிக்கை ஆச்சரியமாகமாறியது.

நரசிம்மமூர்த்தி எதிர்க் கட்சியாரை ஏன் ஆதரிக்கிறார்? காரணம் புரியாமல் பலர் பலவிதமாகப் பேசிக்கொள்ளலாயினர். நரசிம்ம மூர்த்தி தனிப்பட்ட வாழ்க்கையில் எப்படியிருந்தாலும் காங்கிரஸ்காரர் என்ற முறையில் இதுவரை கண்ணியக் குறைவாக நடந்துகொண்டதில்லை. அப்படியிருக்க, திடீரென்று இப்போது ஏன் இவ்விதம் தவறான செய்கையில் ஈடுபட்டிருக்கிறார்? சத்தியானந்தம் இவருக்கு உறவினரும் இல்லை; நண்பராகவும் இருந்ததில்லை. அல்லது இவர் ஆதரிக்கும் கோஷ்டியைச் சேர்ந்தவருமில்லை. அவர் தேசபக்தர் கூட்டத்தில் சேர்ந்திருக்க எந்நாளும் விரும்பியதுகூட இல்லை. அவர் சமீபகாலம் வரை தீவிர நீதிக் கட்சிக்காரராயிருந்தவர். மக்களிடையே எவ்வகையிலும் செல்வாக்கில்லாத நீதிக்கட்சியின் பேரைச் சொல்லிக்கொண்டு நின்றால் தனக்குத் தனிப்பட்ட முறையில் அபிமானம், செல்வாக்கு காரணமாகக் கிடைக்கும். ஆதரவுகூட இல்லால் போய்விடும் என்று அஞ்சியே அவர் சுயேச்சைவாதி எனச் சொல்லிக்கொண்டு நின்றிருக்கிறார். அத்தகைய ஒருவரை நரசிம்ம மூர்த்தி ஆதரிப்பதற்குச் சிறிதும் நியாயமேயில்லை.

ஒருவேளை மல்லிகார்ஜுன மணியக்காரர் தம் கோஷ்டியை எதிர்க்கும் கூட்டத்தாரைச் சேர்ந்தவராயிருப்பதால், மாச்சரியங் காரணமாக, அவரைத் தோற்கடிக்கக் கருதி நரசிம்ம மூர்த்தி எதிர்க்கட்சி அபேட்சகரை ஆதரிக்கிறார்போலும் என்றால், அப்படி சொல்வதற்குமில்லை. மணியக்காரர் எந்தக் கட்சியையும் சேர்ந்தவரில்லை.

மல்லிகார்ஜுன மணியக்காரரின் உள்ளத்திலும் இக்கேள்விதான் எழுந்தது. 'நரசிம்மமூர்த்தி நமக்கு எதிராக வேலை செய்வதற்குக் காரணமென்ன? என்று அவர் நீளயோசித்தார். காங்கிரஸ் பார்லிமெண்டரி போர்டார் இச்சட்டசபைத் தேர்தலில் நரசிம்ம மூர்த்தியை அபேட்சகராக நிறுத்தாமல் தம்மை மட்டும் நிறுத்தியிருந்தாலும், அவர் தம்மீது பகைமைகொண்டு எதிர்த்து வேலை செய்வதற்கு ஓரளவு காரணமிருக்கிறது. ஆனால் போர்டார் அவரைக் கிராமத் தொகுதிக்கு நிறுத்தியிருக்கிறார்களே? அதில் அவர் போட்டியில்லாமலும் வந்து விட்டாரே! அப்படியிருக்க ஒரு வேளை அவர் தம்மை நிலச்சுவான்தார் தொகுதிக்கு அபேட்சகராக நிறுத்த வேண்டுமென்று விண்ணப்பித்துக் கொண்டிருக்க பார்லிமெண்டரிப் போர்டார் அதில் நிறுத்தாமல் கிராமத் தொகுதியில் போட்டார்கள் என்ற கோபமாயிருக்குமோ என்று மணியக்காரர் எண்ணினார். 'சே! அப்படியிருக்காது; இம்மாதிரி அற்ப விஷயங்களுக்கெல்லாமா நரசிம்மமூர்த்திபோன்ற மனிதர் அசூயை கொள்வார்? இவையெல்லாம் காரணமில்லையானால் அவர் நம்மை எதிர்த்து வேலை செய்வதற்கு வேறுகாணம் தான் என்ன? இத்தேர்தலில் நிற்கலாமா? வேண்டாமா? என்று யோசனையுடன் தயங்கி கொண்டிருந்த சத்தியானந்தத்தை நரசிம்ம மூர்த்திதான் நிற்கும்படி தூண்டித் தைரியமளித்திருக்கிறார் என்றுகூடச்சொல்லிக் கொள்கிறார்களே! அவ்வளவுக்கு அவர் நமக்கு எதிராக வேலை செய்வதற்குக் காரணம்......? நம்மீது விரோதங் கொள்வதற்கு எவ்விதக் காரணமுமில்லையே! நாம் இதுவரை அவருடன் நட்பு முறையிலே தான் பழகி வந்திருக்கிறோம். நம் ஜில்லாவில் நடைபெற்று வரும் காங்கிரஸ் வேலைத்திட்டங்களை இருவருஞ் சேர்ந்துதான் நிறைவேற்றி வருகிறோம். ஜில்லா, தாலுக்கா, நகரக்கமிட்டிகளில்கூட ஒருவருக்கொருவர் பரஸ்பரம் விட்டுக் கொடுத்துத் தான் ஸ்தானம் வகித்து வருகிறோம். இது போன்ற விஷயங்களில் எங்களிடையே சிறு சச்சரவுகள்கூட நேர்ந்ததில்லையே! என்றெல்லாம் தீவிரமாக அவர் சிந்திக்கலானார். நரசிம்மமூர்த்தியின் இவ்விபரீதப்போக்கு மற்றக் காங்கிரஸ் தலைவர்களுக்கும் தொண்டர்களுக்கும் பெருவியப்பையும் ஆத்திரத்தையும் உண்டு பண்ணியதைக் காட்டிலும் மல்லிகார்ஜுன மணியக்காரருக்குத் தான் அதிகமாக உண்டாயிற்று. அவர் இவ்விகற்பத்துக்குரிய காரணத்தை அறிய தம் மனத்தை வெகுவாக அலட்டிக்கொண்டார். அவர் மனம் சென்றகால நிகழ்ச்சிகளையெல்லாம் துருவித்துருவியாராய்ந்தது.

* * *

மல்லிகார்ஜுன மணியக்காரர் நீதிக் கட்சியே தமிழ் மக்களுக்கு நீதியும் நன்மையும் வழங்கும் ஸ்தாபானம் என்று பூரணமாக நம்பி அதன் சார்பில் பொதுநலச் சேவை செய்து வந்த காலம். அவர் அச்சமயம் ஜில்லா போர்டில் தலைவராயிருந்து வந்தார்.

ஒருநாள் காலை அவர் தம் மாளிகையின் மேன் மாடியில் உள்ள ஓர் அறையில் சோபா வொன்றின்மீது சாய்ந்தவாறு ஏதோ செய்தித் தாளைப் படித்துக் கொண்டிருந்தார். அவருடைய ஆப்த நண்பர்கள் சிலர் சுற்றிலும் அமர்ந்து அவர் முகத்தையே பார்த்தவராக இருந்தனர். வெளிவராண்டாவில், அவரைப் பேட்டி காணப் பலர் காத்திருந்தனர். இந்நிலையில், காவலன் ஒருவன் வந்து ஒரு விஸிட்டிங் கார்டை மணியக்காரர்முன் பணிவாக நீட்டினான். அதை வாங்கிப் பார்த்ததும் அவர் முகத்தில் பேராச்சரியம் உண்டாயிற்று. ஒருகணம் ஏதோ சிந்தித்துவிட்டு, 'அவரை அழைத்து வா' என்று கூறிக் காவலாளை அனுப்பினார். அடுத்தபடி அவர் நண்பர்களை நோக்கி "சற்று, நீங்கள் வெளியே போயிருங்கள். ஜில்லா காங்கிரஸ் கமிட்டித் தலைவர் நரசிம்மமூர்த்தி என்னைப் பார்க்க வந்திருக்கிறார். என்ன விஷயம் என்று தெரியவில்லை" என்று கூறினார்.

அவர்களுக்கும் நரசிம்மமூர்த்தியின் வருகை ஆச்சரியத்தைத்தான் தந்தது. ஆயினும் அவர்கள் ஒன்றும் சொல்லவில்லை. மணியக்காரரின் குறிப்பறிந்து அடுத்த அறைக்குப் போய்விட்டனர்.

"நமஸ்காரம்" என்று கூறிக்கொண்டே உள்ளே நுழைந்தார் நரசிம்மமூர்த்தி.

மணியக்காரர் ஆசனத்தை விட்டு எழுந்தவாறு, "வணக்கம்; வாருங்கள்; இப்படி அமருங்கள்" என்று கூறி உபசரித்தார்.

நரசிம்மமூர்த்தி எதிரேயுள்ள சோபா வொன்றின்மீது அமர்ந்தார். மணியக்காரர் தம் ஆசனத்தில் உட்கார்ந்துகொண்டே, "சாக்ஷாத் நரசிம்மமூர்த்தியே எனக்குத் தரிசனம் தரப் பிரசன்னமாயிருக்கிறார் என்றாலும் இவ்வளவு ஆச்சர்யமடைந்திருக்க மாட்டேன். நீங்கள் வந்திருக்கிறீர்கள் என்று கேட்டதும் என்னால் நம்பவே முடியவில்லை" என்று புன்சிரிப்போடு கேட்டார்.

நரசிம்மமூர்த்தி, "அதென்ன! அப்படிச் சொல்லுகிறீர்கள்...?" என்று இழுத்தார்.

மணியக்காரர், "வடமுனையும் தென்முனையும் ஒன்று சேர்ந்தாலும் சேரலாம். காங்கிரஸ்காரர்களும் நீதிக் கட்சிக்காரர்களும்—" என்று கூறி வருகையிலேயே, நரசிம்மமூர்த்தி இடைமறித்து, "கட்சி வேறாயிருந்தால், அதற்காக ஒருவரை யொருவர் பார்க்கக் கூடாதென்றோ, பேசக் கூடாதென்றோ ஏதாயினும் இருக்கிறதா? கட்சிக் கொள்கை, அபிப்பிராயபேதம் வேறு; சிநேகம் வேறு;" என்று சொன்னார்.

"இவ்வளவு பரந்த மனோபாவம் உங்களைப்போல் எல்லோருக்கும் ஏற்பட்டுவிட்டால் நம் சமுதாயம் க்ஷேமமடைந்துவிடுமே!" என்று மணியக்காரர் கூறி, "அதிருக்கட்டும்; நீங்கள் வந்த விஷயத்தை விசாரிக்காமல் வீண் கதை பேசுகிறேன். நீங்கள் என்னைக் காண வந்தது......" என்று கூறி நிறுத்தினார்.

"ஒன்றுமில்லை சும்மா"...என்று நரசிம்மமூர்த்தி இழுத்தார்.

"இருக்கும் இருபத்திநான்கு மணி நேரமே காணவில்லை என்ற அங்கலாய்ப்போடு அல்லும் பகலும் தேசசேவை செய்துவரும் உங்கள் போன்றோர் சும்மா ஓரிடத்துக்கு வரமுடியுமா? நீங்கள் பொழுதுபோக்க இடமில்லையென்றோ இங்குவரப் போகிறீர்கள்? அதுவும் என்னிடம்? ஏதோ முக்கிய காரியமாகத்தான் வந்திருக்கிறீர்கள். வந்த விஷயத்தை என்னிடம் தாராளமாகச் சொல்லலாம். தயங்கவேண்டாம்" என்று மணியக்காரர் வற்புறுத்தும் முறையிலேயே சொன்னார்.

நரசிம்மமூர்த்தி சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, "வேறொன்றுமில்லை. தங்களிடம் ஒரு சிறு உதவியைப் பெற......" என்று இழுத்தார்.

மணியக்காரர், "உங்களைப் போன்றோர் கூடவா என்னிடம் இவ்வளவு தூரம் பீடிகை போடவேண்டும். விஷயத்தை மனம்விட்டுச் சொல்லுங்கள். என்னால் செய்யக்கூடிய உதவியாயிருந்தால் கட்டாயம் செய்வேன்" என்றார்.

நரசிம்மமூர்த்தி "சென்றவாரம் தாங்கள் ஒருமாற்றல் உத்திரவு போட்டிருக்கிறீர்கள்! அதை ரத்து செய்துவிடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்" என்றார்.

மணியக்காரர், "மாற்றல் உத்தரவா? எது? தினம் எத்தனையோ மாற்றல் உத்தரவுகளை நான் எத்தனையோ உத்தியோக விஷயங்களில் போடுகிறேன். இன்னதென்று குறிப்பிட்டுச் சொன்னால்தானே தெரியும்?" என்றார்.

நரசிம்மமூர்த்தி, "திருச்சங்காவூரில் பெண்கள் பாடசாலையில் ஆசிரியையாயிருக்கும் ஜெயமணி என்பவளுக்குப் போட்டிருக்கும் மாற்றல் உத்தரவைத்தான் ரத்து செய்யவேண்டுமென...." என்று கூறி வருகையிலேயே மணியக்காரர் குறுக்கிட்டு, "ஏன்? எதற்காக?" என்று வியப்போடு கேட்டார்.

ஏன்?

நச்சரவம் பூண்டதில்லை
நாதரே! தேவரீர்
பிச்சையெடுத்துண்ணப்
புறப்பட்டும் உச்சிதமாம்
காளமேன்? குஞ்சரமேன்?
கார்க்கடல் போல்முழங்கும்
மேளமேன்? ராசாங்கமேன்?

—காளமேகர்.

நரசிம்மமூர்த்தி அதற்குப் பதில் சொல்லமுடியாமல் மௌனஞ் சாதித்தார்.

மணியக்காரர், "அந்த வாத்தியாரம்மாளின் சார்பில் அவள் கணவர் வந்து கேட்டுக் கொண்டதால்தானே நான் மாற்றல் உத்தரவுபோட்டேன்......" என்றார்.

நரசிம்மமூர்த்தி, "இருக்கலாம். ஆனால் அது அந்த அம்மாளுக்கு விருப்பமில்லை. அவளுடைய விருப்பத்தை அறிந்து கொள்ளாமலே, ஏன்? அவளுக்குத் தெரியாமலே, அவள் கணவன் சவரிநாதன் மாற்றல் உத்தரவைத் தங்களிடம் கேட்டு வாங்கிவிட்டான்" என்று கூறினார்.

மணியக்காரர், அப்படியா! ஆமாம்; அந்த ஆசாமி ஏன் தன் பெண்டாட்டியைக் கேளாமல், அவளுக்குத் தெரியாமல், அவளை வேற்றிடத்துக்கு மாற்றிவிடவேண்டுமென்று என்னைக் கேட்டுக் கொண்டான்? அதற்குக் காரணமென்ன என்று உங்களுக்குத் தெரியுமா?" என்று ஆழ்ந்த யோசனையோடு கேட்டார்.

நரசிம்மமூர்த்தி இதற்கும் பதில் சொல்லமுடியாமல் தலைகுனிந்து கொண்டார்.

மணியக்காரர் அவரை ஒருவிதமாகப் பார்த்தவாறு, "அதிருக்கட்டும். இந்த விவகாரம் உங்களிடம் எப்படி வந்தது? யார் மூலமாக வந்தது? திருச்சங்காவூரிலிருந்து வேற்றிடத்துக்குச் செல்ல விருப்பமில்லை என்றால், அந்த வாத்தியாரம்மா அல்லவா எனக்கோ அல்லது கமிஷனருக்கோ எழுதிக் கேட்டுக்கொள்ள வேண்டும்? நீங்கள்-எவ்வளவோ மகத்தான காரியங்களைக் கவனிக்கவேண்டிய நீங்கள்-அவளுக்காக-அதுவும்—இச்சிறு விவகாரத்துக்காக வருவானேன்?" என்று வினவினார்.

நரசிம்மமூர்த்தி, 'அந்த அம்மாள் தனக்காகத் தங்களிடம் சொல்லும்படி என்னைக் கேட்டுக்கொண்டாள்' என்று

கூறி முடித்தவர் மீண்டும், ஏதோ நினைத்துக்கொண்டு, ''எங்க வீட்டுக் குழந்தைகளுக்கு அந்த அம்மாள் 'டியூஷன்' சொல்லித் தருகிருள். அதனுல் தான் அவள் மாற்றலாகிப் போவதை நானும் விரும்பவில்லை'' என்று தாம் அவளுக்காக அவரிடம் வந்ததற்குக் காரணஞ் சொல்ல முயல்வதுபோல் பதில் சொன்னுர்.

மணியக்காரர், ''பொதுநல சேவைக்காக உங்கள் வாழ்க்கையையே அர்ப்பணம் செய்திருக்கும் நீங்கள் கேவலம் சிறு சுயநலங்கருதி அந்த வாத்தியாரம்மாவுக்காகப் பரிந்து வந்திருப்பது எனக்கு ஆச்சரியத்தைத் தருகிறது. அதிலும் தனிப்பட்ட ஒருவரின் தாம்பத்திய வாழ்க்கை விவகாரத்தில் உங்களைப் போன்ருேர் தலையிடுவதென்பது எனக்கென்னவோ உசிதமாகத் தோன்றவில்லை. கட்டின கணவன் தனக்கு இந்த இடம் பிடிக்கவில்லை: வேறு ஊருக்குப் போய்விட்டால் நன்ருயிருக்கும் என்று எண்ணி மாற்றலுக்கான முயற்சி செய்தால் அதில் தனக்கு விருப்பமில்லை என்று ஒரு மங்கை சொல்வது; அவளுடைய இந்த ஏறுமாருன செய்கைக்கு உங்களைப் போன்ருர் உதவி செய்ய முன்வருவது; வெகு நன்ருகத்தான் இருக்கிறது. இல்லையா நியாயம்?'' என்று ஆணித்தரமாக அடித்துக் கேள்வி கேட்டார்.

மணியக்காரர் இப்படியெல்லாம் நியாயவாதம் பேசுவார் என்று நரசிம்மமூர்த்தி எதிர்பார்க்கவே இல்லை. தாம் போய் மணியக்காரரிடம் விஷயத்தைச் சொன்னதுமே வராதவர் வந்தாரென்று எண்ணியும், தம் பெரிய மனுஷத்தனத்தை உத்தேசித்தும் தாட்சண்யங் காட்டி உடனே மாற்றல் உத்திரவை ரத்து செய்து விடுவதாகச் சொல்வாரென்று அவர் நம்பிக்கை கொண்டுவந்தார். ஆனுல் மணியக்காரரின் குறுக்குக் கேள்விகளும், வாதங்களும் அவருடைய நம்பிக்கையைக் குலைப்பனவாயிருந்தன. ஆனுலும், தாம் மேற்கொண்டு வந்த காரியத்தை எப்படியாயினும் சாதித்துக்கொண்டு போய்விடவேண்டுமென்ற எண்ணத்தோடு அவர் மணியக்காரரைப் பார்த்து, ''தயவுசெய்து இந்த விஷயத்தைப் பலவிதமாகச் சர்ச்சை செய்து பார்க்கவேண்டாம். அந்த வாத்தியார் அம்மாளுக்காக நான் தங்கள் உதவியை நாடிவந்திருக்கிறேன். எனக்காக இந்த உதவியைத் தாங்கள் அவசியம் செய்ய வேண்டும். நான் மிகவும் மன்ருடிக் கேட்டுக் கொள்கிறேன்'' என்று கெஞ்சாக்குறையாகக் கேட்டார். நரசிம்மமூர்த்தி வாத்தியாரம்மாள் ஜெயமணிக்காகப் பரிந்து பேசப்பேச மணியக்காரருக்கு ஆச்சரியமும், ஆழ்ந்த யோசனையும் உண்டாயிற்று. 'இவ்வளவு பெரிய மனிதன் சாதாரண வாத்திச்சிக்காக வந்து மன்ருடுகிருன் என்ருல், இதில் ஏதோ விஷயமிருக்கவெண்டும்' என்று அவர் எண்ணினுர். இதே சமயத்தில் ஜெயமணியின் கணவன் சவரிநாதன் மாற்றல் உத்தரவு போடவேண்டுமென்று கேட்டுக்கொண்டபோது, இங்கிருப்பதில் சில சங்கடங்களிருப்பதாகக் கூறியது அவருடைய நினைவுக்கு வந்தது. அத்துடன் அவன் வாழ்க்கையில் ஏமாற்றமுற்றவன் போலவும், பச்சாத்தாபப்படக்கூடிய நிலையிலுள்ளவன் போலவும் இருந்ததாக அவர் உணர்ந்தார். ஆகவே எக்காரணத்தைக் கொண்டும் தாம் அவனுக்குக் கொடுத்த வாக்கை மாற்றுவதில்லை என்று அவர் தமக்குள் தீர்மானித்தார்.

அனுமான்

இவன் ஒரு சாதாரணமான ஆள். புத்திசாலித்தனமான காரியம் ஒன்றும் செய்து விடவில்லை. இவனது பெருமை யெல்லாம் பகுத்தறிவுக்கு ஒவ்வாததும், அசாத்தியமானதுமான காரியங்கள் பல செய்ததாக சொல்லப் படுவதேயாகும். ஒரு நல்ல பரிசுத்தமான அடிமைபோல் நடந்துகொண்டு இருக்கிருன். மற்றும் நீதிக்கு ஒவ்வாததும், தகுதிக்கு ஒவ்வாததுமான காரியங்கள் பலவும் செய்திருக்கிருன்.

—பெரியார்.

''உங்கள் வேண்டுகோளை நிறைவேற்றிவைக்க முடியாததற்காக நான் வருந்துகிறேன். ஜெயமணி விஷயத்தில் நான் போட்ட மாற்றல் உத்தரவை ரத்து செய்வதற்கில்லை....'' என்று அவர் அழுத்தந்திருத்தமாகக் கூறினுர்.

நரசிம்ம மூர்த்தியின் முகத்தில் அசடு வழிந்தது. ''நான் வந்து கூடவா, தாங்கள் இவ்விதம் பதில்சொல்வது'' என்று அவர் தம்மைச் சமாளித்துக்கொண்டு கேட்டார்.

மணியக்காரர், ''இம்மாற்றல் உத்தரவை வாபஸ் வாங்கிக்கொள்வதற்காக நியாயமான காரணம் காட்டப்படும் வரை, நான் அதை ரத்து செய்வதற்கில்லை. வேண்டுமானுல், ஜெயமணியம்மாளும் அவள் கணவன் சவரிநாதனும் ஒன்று சேர்ந்து வந்து சொல்லட்டும், ஊர் மாற்றம் வேண்டாமென்று, நான் உடனே இவ்வுத்தரவை ரத்து செய்து விடுகிறேன்'' என்று கூறினுர்.

நரசிம்ம மூர்த்தி இதற்கு ஒன்றும் பதில் சொல்லவில்லை.

சில விநாடிகள் அவ்விடத்தில் அமைதி நிலவியது. மணியக்காரர் தான் மௌன நிலையைக் கலைத்தார். ''ஐயா, நாட்டுப் பிரச்னைகளைத் தீர்க்கும் விஷயத்தில் தீவிர கவனஞ் செலுத்திவரும் நீங்கள், இந்த அநாவசியமான அற்ப விஷயத்தில் மூளையைப் போட்டுக் குழப்பிக்கொண்டு வீணுக மனம் வருந்துவானேன்! போய் உங்கள் தேச சேவையைக் கவனியுங்கள்'' என்று கூறினுர்.

நரசிம்ம மூர்த்தி, ''அப்படியானுல் நீங்கள் இவ்விஷயத்தில் சிறிதும் தயை காட்டமாட்டீர்கள்?'' என்று சபலத்தோடு கேட்டார். ''நான் வந்துங்கூட....'' என்று தம் ஜம்பத்தை விடாமல் பேசத் தொடங்கினுர்.

மணியக்காரர் ஆத்திரமாக, ''நீங்கள் — அல்ல—சாக்ஷாத் நரசிம்ம மூர்த்தியே வந்து கேட்டால்கூட முறை தவருன காரியத்துக்கு ஒழுக்கக் கேடான விஷயத்துக்கு......நான் உதவியாக இருக்கமாட்டேன்'' என்று உரத்த குரலில் கூறினுர்.

நரசிம்ம மூர்த்தி சோர்வுடன், ''சரி, அப்படியானுல் நான் போய்வருகிறேன்'' என்று கூறியவாறு எழுந்துவைத்தவர், மணியக்காரரைத் திரும்பப் பார்த்து, ''மணியக்காரரே, நீங்கள் இவ்விதம் சொல்லிவிட்டதைப் பற்றிப் பரவாயில்லை, ஆனுலும் நீங்கள் என் விஷயத்தில் தயை தாட்சண்யமின்றி நடந்துகொண்டதற்காகப் பின்னுல் வருந்த நேரும் என்றுமட்டும் கூற விரும்புகிறேன்'' என்று கூறிவிட்டு, வணக்கங்கூடச் செலுத்தாமல் வீரென்று போய்விட்டார்.

மணியக்காரர் ஏளன நகை செய்து, ''அடே., ஐயாவை ஆயாசப்படவைத்து விட்டோமே என்று நான் வருந்தப் போகிறேனுக்கும். பொதுஜன நன்மைக்கு முட்டுக்கட்டையாயிருந்தார்களென்று எங்கள் கட்சித் தலைவரையும் சர்க்காரையும்கூட உதாசீனப் படுத்திவிட்டுக் காரியம் செய்தவன் நான். எங்கள் தலைவரின் கோபதாபத்துக்கு ஆளாய் விட்டோமே என்ருே கவர்னரின் கருணு கடாட்சத்துக்குப் புறம்பாய்விட்டோமே என்ருே நான் இதுவரை வருந்தியதே இல்லை. அப்பேர்ப்பட்டவனு இந்தப் பட்டை நாமத்

துக்காகப் பச்சாத்தாபப் படப்போகிறேன்?'' என்று கூறிக் கொண்டார்.

பின்னர் அவர் வெளிப்பக்கம் வந்து பார்த்து, "தர்மராஜ், சிதம்பரம், நாகப்பா'' என்று கூப்பிட்டார்.

அடுத்த கணமே பக்கத்து அறையிலிருந்த அவருடைய நண்பர்கள் அவர் முன் வந்தனர். மணியக்காரர் அவர்களிடம் நரசிம்மமூர்த்தி வந்த விஷயத்தையும், அவருக்கும் தமக்கும் நடந்த பேச்சையும் விவரமாகக் கூறினார்.

சிதம்பரம், 'ஓ! அப்படியா' என்றார்.

"சோழியன் குடுமி சும்மா ஆடுமா! அந்த ஐயன் நம்ம தலைவரைப் பார்க்க வந்திருக்கிறானென்றதுமே முக்கிய காரியம் எதுவுமில்லாமல் வரமாட்டான் என்று நினைத்தேன். அது சரியாய்ப் போயிற்று'' என்று கூறினார்.

நாகப்பா புன்சிரிப்பாக, 'அந்த வாத்திச்சிக்காக நரசிம்மம் ஏன் வந்தார் தெரியுமா?'' என்று கேட்டு நிறுத்தினார்.

"அவர் வீட்டுக் குழந்தைகளுக்கு அவள் பாடஞ் சொல்லி வருகிறாளாம். அதற்காக....' என்று மணியக்காரர் கூறினார்.

தர்மராஜ் சிரித்துக்கொண்டே "வெளுத்தது எல்லாம் பால் என்று நினைப்பவராயிற்றே, நீங்கள்? அவன் சொன்னதை உண்மையென நம்பிவிட்டதைக் கண்டு நாங்கள் ஆச்சரியப்படவில்லை. ஆனால், விஷயம் வேறு'' என்று கூடமாகச் சொல்லி முடித்தார்.

மணியக்காரர் அவரை யோசனையோடு பார்த்தார்.

"நரசிம்மத்துக்கும் ஜெயமணிக்கும் உள்ள சம்பந்தம் ஊர் அறிந்ததாயிற்றே!'' என்று சிதம்பரம் விஷயத்தை விடுவித்தார்.

"அப்படியா!'' என்றார் மணியக்காரர். நரசிம்மமூர்த்தி ஜெயமணிக்காகப் பரிந்து பேசிய போக்கைக் கண்டு இவ்வித மிருக்கலாமோ என்று சந்தேகித்தாலும், நண்பர் உறுதியாகக் கூறியபோது அவருக்கு ஆச்சரியமே உண்டாயிற்று.

நாகப்பா, "காந்தி பக்தனாச்சே என்று நினைக்கிறீர்களா? எல்லாம் வெளிவேஷம். அவனுடைய அயோக்கிய நடத்தைக்கும், அவன் சேர்ந்திருக்கும் ஸ்தாபனத்தின் பரிசுத்தத்துக்கும் சிறிதும் சம்பந்தமேயில்லை.'' என்று கூறினார்.

சிதம்பரம், "ஸ்திரீலோலத்தனத்தில் அவனைப்போல் தூர்த்தனை உலகத்தில் பார்க்கவே முடியாது'' என்றார்.

"சிவா சிவா! அந்தப் பரம சண்டாளன் பேச்சை அத்துடன் விடுங்கள்'' என்று வெறுப்புடன் கூறிவிட்டு எழுந்தார். மணியக்காரர்.

*   *   *

"மணியக்காரரே! நீங்கள் என் விஷயத்தில் தயை தாட்சண்யமின்றி நடந்துகொண்டதற்காகப் பின்னால் வருந்த நேரும்'' என்று நரசிம்மமூர்த்தி கூறிய வார்த்தைகள் மணியக்காரர் காதுகளில் இச்சமயம் ரீங்காரம் செய்தன. இதை நரசிம்மமூர்த்தி சொல்லிப் பத்து வருடங்களுக்கு மேலானாலும், இப்போதுதான் சொல்வதுபோல் மணியக்காரர் செவியில் எதிரொலித்தது. நீண்ட காலமானாலும், யானை செஞ்சத்தில் வஞ்சத்தை வைத்துப் பழி வாங்குவதுபோல் நரசிம்மமூர்த்தி சமயம் பார்த்துப் பழிவாங்க முயல்கிறார் என மணியக்காரர் உள்ளத்தில் தோன்றியது.

நீதிக்கட்சியில் இருந்துகொண்டு நாட்டு மக்களுக்கு நன்மை செய்வதற்குப் போதிய வசதியில்லை என்று மணியக்காரர் உணர்ந்து தேச மகாசபையாகிய காங்கிரஸில் சேர்ந்தபோது அவரை வெகுவாகப்பாராட்டியவர் நரசிம்மமூர்த்தியேதான். தங்கள் ஜில்லாவைப் பொறுத்தவரையில் காங்கிரஸ் நிர்மாண வேலைத் திட்டங்களை நிறைவேற்றி வைப்பதில் மணியக்காரரும் நரசிம்மமூர்த்தியும் ஒற்றுமையாக வேலை செய்து வந்திருக்கின்றனர். ஜில்லா போர்டு நகரசபைத் தேர்தல்களில் நரசிம்மமூர்த்தி மணியக்காரருக்கு உதவியாகவே இருந்துவந்திருக்கிறார். இவ்வளவு காலம் நரசிம்மமூர்த்தி தமது மனமாற்சரியத்தை வெளிப்படுத்தாமல் தாம் சட்டசபைத் தேர்தலில் நின்றிருக்கும் இச்சமயம் பார்த்து வஞ்சத்தை வெளிப்படுத்தியிருக்கிறாரே என்று மணியக்காரர் ஆச்சரியப்பட்டார். ஆனால் அவர் அதற்காக வருந்தவில்லை.

இரங்கா ரங்கன்

தென்னரங்கன் அரங்கனென்பார்
வாய்திறவான்; கண் விழியான்;
திரும்பிப்பாரான் !
என்னரங்கன் ! தூங்கரங்கன்
ஏழையர்க்குக் கருணையினால்
இரங்காரங்கன் !

—சுப்ரதீபன்

நரசிம்மமூர்த்தியின் மனோபாவம் இன்னதெனத் தெரிந்து போயிற்று. இனி, அதற்குத் தகுந்தபடி நடந்து கொள்ள வேண்டுமென்று தீர்மானித்து மணியக்காரர் தீவிரமாக வேலை செய்யலானார். நரசிம்மமூர்த்தி மணியக்காரருக்கு எதிராக வேலை செய்யத் தொடங்கியதால் அவருக்குக் கட்டுப்பட்ட காங்கிரஸ் தொண்டர்கள் சிலரும் அவருடன் வேலை செய்யலாயினர். ஆனால் ஜில்லாக் காங்கிரஸ் கமிட்டியிலுள்ள பெரும்பான்மை அங்கத்தினர்களும் மற்றும் காங்கிரஸ்காரர்களும் மணியக்காரருடைய வெற்றிக்காக அல்லும் பகலும் வேலைசெய்தனர். மணியக்காரரும் அவர்களுக்கு நன்றி செலுத்தும் முறையில் பலவகையிலும் உற்சாகப்படுத்தி, "என்ன ஆனாலும் சரி, இந்தத் தேர்தலில் 'தனி மனிதன் செல்வாக்கைவிட, காங்கிரஸ் ஸ்தாபனத்தின் பலமே பெரிது' என்று காட்டிவிட வேண்டும்,'' என்று கூறி மும்முரமாகவேலை செய்யலாயினர்.

நல்லதோ கெட்டதோ ஒரு கொள்கையைக் கடைப்பிடித்தால், அதில் கடைசிவரை உறுதியாக நின்று வேலை செய்வதென்ற மணியக்காரரின் பிடிவாத குணம், அவருக்கு வெற்றியையளித்தது. நரசிம்மமூர்த்தியின் விஷமப் பிரசாரமும் வஞ்சக வேலைகளும் சத்தியானந்தரின் பணச் செல்வாக்கும் தடபுடல்களும் ஜனங்களை அசைக்கவில்லை. வாக்காளர்கள் பெரும்பான்மையோர் காங்கிரஸ் அபேட்சகர் மல்லிகார்ஜுன மணியக்காரருக்கே ஓட்டளித்தனர். தேர்தல் முடிவு எதிரிகளுக்கே ஆச்சரியத்தை யளித்தது.

மணியக்காரருக்கு —17,530
சத்தியானந்தருக்கு —3250
செல்லுபடியாகாதவை—111

ஆகவே, சத்தியானந்தர் கட்டிய ஜாமீன் தொகையைக்கூட இழந்துவிட்டார்.

தேர்தல் வேலைகளெல்லாம் முடிந்ததும், காங்கிரஸ் கமிட்டியார் தாங்கள் காங்கிரஸ் சார்பில் நிறுத்திய அபேட்சகருக்கு எதிராக வேலை செய்ததற்காக, நரசிம்மமூர்த்திமீதும் அவருடன் சேர்ந்து வேலை செய்த சில தொண்டர்கள் மீதும் ஒழுங்கு நடவடிக்கையெடுத்துக்கொண்டனர்.

நரசிம்மமூர்த்தி ஏதோ சமாதானம் சொன்னார் அதைக் காங்கிரஸ் கமிட்டியினர் ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் காங்கிரஸிலிருந்து அவரை மூன்று வருடம் விலக்கி வைத்தனர்.

காங்கிரஸ் சார்பில் பெற்றுள்ள சட்டசபை ஸ்தானத்தையும் ராஜிநாமா செய்துவிட வேண்டுமென்று உத்தரவு இட்டனர். ★

—67-ம் பக்கத் தொடர்ச்சி—

ஆணும் பெண்ணும் இணைந்த "அர்த்த நாரீசுவர'ரையும் கடவுளாகக்கொண்டு வணங்க வேண்டும் என்ற எண்ணத்தில் ஊறிய தமிழர்கள்—நாளடைவில் இப்படிப் பெண் இனத்தைத் தாழ்த்தத் தொடங்கிவிட்டார்கள் என்பதை ஆராய்தல் வேண்டும். ஆணைவிடப் பெண் தாழ்ந்தவள் என்ற அழிவு எண்ணம் தமிழன் இதயத்தில் இயற்கையில் தோன்றாத ஒன்று. இந்த எண்ணத்தின் விதை வடக்கே இருந்து கொண்டுவரப்பட்டுத் தமிழன் இதயத்தில் ஊன்றப்பட்டது. வடநாட்டில், ஆண் பேசுகின்ற மொழியைக் கூடப் பெண் பேசக்கூடாது என்ற கட்டுப்பாடு ஒரு காலத்தில் இருந்தது. பெண் இழிந்தவள், ஆகவே அவள் தேவ மொழியாகிய வடமொழியில் உரையாடக்கூடாது என்ற விதி ஏற்படுத்தப்பட்டது.

இத்தகைய வடநாட்டு ஆண் இன வெறியர்கள் தமிழ் நாட்டில் சிறப்புப் பெற்றபோது, அவர்கள் தமிழ் நாட்டில் வாழ்ந்த ஆண்களின் உள்ளங்களிலும், ஆண் உயர்ந்தவன், பெண் ஆணுக்கு அடங்கவேண்டியவள் என்ற நச்சு எண்ணத்தைக் கலந்துவிட்டனர்.

இதன் விளைவாக, பெண் குழந்தைப் பருவத்தில் தந்தைக்கு அடங்கவேண்டும்; தந்தை இறந்தால் அண்ணனுக்கு அடங்கவேண்டும், அண்ணன் இறந்தால் தம்பிக்கு அடங்கவேண்டும். மணமானபின் கணவனுக்கு அடங்கவேண்டும், கணவன் இறந்தால் கணவன் அண்ணனுக்கு அடங்கவேண்டும், அவன் இறந்தால் கணவன் தம்பிக்கு அடங்கவேண்டும், அவனுக்குப்பின் மகனுக்கு அடங்கவேண்டும், மகன் இல்லை என்றால், மருமகனுக்கு அடங்கவேண்டும், அவனும் இல்லை என்றால், குடும்பத்தில் உள்ள எந்த ஆணுக்காவது அடங்கவேண்டும், என்ற கட்டுப்பாடு ஏற்பட்டுவிட்டது. இப்படி இளமையிலிருந்தே, உளம் அடங்கி, உயிர் அடங்கி, உடல் அடங்கி, உணவடங்கி, வாழ்ந்துவிட்ட காரணத்தால்

" அடங்கி ஒளித்தலே
அரிவையர்க்கழகு "

என்ற பல்லவியைப் பாடிக்கொண்டு, ஆணுக்கு உட்பட்டு ஆடவேண்டிய இழி நிலை இந்த நாட்டுப் பெண்ணுக்கு ஏற்பட்டுவிட்டது.

தமிழ்நாட்டின் சில பகுதியில் வேரூன்றத் துவங்கிய இத்தகைய அவல நிலையையும் திருத்தக்க தேவன் அறிந்திருக்கவேண்டும். இந்த நிலையை ஒழித்துக் கட்டவேண்டும் என்ற உறுதி அவன் உள்ளத்தில் முளைத்திருக்கவேண்டும். ஆகவேதான், உழவைப்பாடினான்.

எனவே, நாட்டு மக்களின் சோற்றுக்குக் காரணமாக இருக்கின்றது என்பதற்காகமட்டும் காவியங்கள் உழவுத் தொழிலைப் பாராட்டவில்லை. ஒடுங்கி வாழும் பெண்ணின் அடிமை மனப்பான்மை ஒழியவேண்டும், இயற்கையில் ஏற்பட்ட உழைப்பு உரிமையை அவள் இழக்கக்கூடாது, எந்தத் துறையிலும் பெண் ஆணுக்குப் பின் வாங்காமல் இணைந்து உழைத்து ஏற்றம் பெறவேண்டும் என்ற கருத்துக்களை எல்லாம் குறிப்பாகப் புலப்படுத்தித் தமிழ்நாட்டு வாழ்வு முறையிலும், தொழில் முறையிலும் மறைமுகப் புரட்சி ஒன்றை விளைவிக்கவே காவியங்கள் உழவுத் தொழிலைப் புகழ்ந்து பாடுகின்றன என்று கொள்ள வேண்டும். ★

வாழ்க உழவு !

நவீன ஆடை அமைப்பு நிலையம்

நீலகிரி டைலரிங் ஹவுஸ்

செரி ரோடு

(பேலஸ் தியேட்டர் எதிர்புறம்)

சேலம்

★ சிறந்த தையல்

★ குறித்த காலம்

★ நேர்த்தியான அமைப்பு

உரிமையாளர்: T. S. நடராஜன்

பொங்கல் தினத்தில் எங்கள் நல் வாழ்த்து

பொடிகளில் சிறந்தது

உமா பட்டணம் பொடி ஒன்றே!

காரம், குணம், மணம் நிறைந்தது

சென்னையில் எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

★

குறிப்பு:

உமா பட்டணம் பொடி காரியாலயம்

காளியப்ப நாடார்

அத்திப்பேடு, அம்பத்தூர் போஸ்ட்

மனிதன் எப்பொழுது சிந்திக்க ஆரம்பித்தானோ அப்பொழுதே, அவன் உள்ளத்தில் பொருளியல் எண்ணங்களும் முளைவிட ஆரம்பித்திருக்க வேண்டும். ஆனால், அவ்வெண்ணங்களைப்பற்றித் தெளிவான ஓர் முடிவுக்கு நாம் வருதல் இயலாது.

உலகம் தோன்றிய வரலாற்றைக் கணக்கிடும்போது, மனித வரலாறு குழவிப் பருவத்தில்தான் இருக்கிறது. வரையறுக்கப்பட்ட மனிதப் பகுத்தறிவுச் சிந்தனையை, அடிப்படையாக வைத்துக் கணக்கிட்டால், பொருளியல் சிந்தனை, இன்னும் தவழும் பருவத்தில்தான் உள்ளது.

இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன், மனிதனைச் ''சமுதாய வாழ்வு மிருகம்'' என அரிஸ்டாட்டில் சித்தரித்தான். அவன் கருத்து இன்று வரையில் உண்மையாக இருக்கிறது.

ஆனால் பேரறிஞர்கள் எனப்பட்டோர், கூறிய உண்மைகள் அனைத்தும் எல்லாக் காலத்திற்கும் பொருந்தும் என்று, உறுதி கூறிவிட முடியாது.

உலகத்தினர்க்கெல்லாம் பொதுவான உண்மை என்று கூறப்படுகிற கருத்தைக் கூட, எங்கும் ஒரே மாதிரிப் பயன் படுத்த முடியாது.

அதுபோன்றே, பொருளியல் விற்பன்னர்களின் கருத்துக்களையும், எக்காலத்திற்கும், எவ்விடத்திற்கும் பொருந்திவரும், என்று அறுதியிட்டு, உறுதி கூறமுடியாது.

"வாழ்வதற்காக உழைத்தாக வேண்டும்; நமக்கிருக்கின்ற நேரம், சக்தி, செல்வம் இவைகளுக்கேற்றவாறு, நம் தேவைகளைத் தேர்ந்தெடுத்தாக வேண்டும்''

இது, இன்றைய பொருளியல் நூலின் அடிப்படைக் கருத்தாகும். இதுகூட என்றென்றைக்கும் பொருந்தி வருமென்று நம்மால் உறுதி கூற முடியாது.

தமிழகத்துப் பேரறிஞன் வள்ளுவன் சொல்லிப்போந்த, பொருளியல் கருத்துக்களைப்பற்றி, தமிழகத்திலேயே இன்றுவாழும் தமிழராகிய பொருளியல் பேராசியர்கள் எத்தனை பேர், அறிந்திருப்பர் ? சந்தேகமே! தமிழகத்திலே, இரண்டாயிரம் ஆண்டுகட்குப் பின், இன்றுதான் மறுமலர்ச்சிபெற்ற இளைஞர் சமுதாயம், பழம்பெரும் அறிஞர்களின் கருத்துக்களைச் சிந்திக்கத் தொடங்கியுள்ளது.

ஐரோப்பியநாடோ, கிரீஸ் தேசத்து அறிஞர்களான பிளாட்டோ, அரிஸ்டாட்டில் முதலியவர்களின் உயர் கருத்துக்களைப் பதினைந்து நூற்றாண்டுகட்குப் பின்புதான் சிந்திக்கத் தொடங்கியது.

அந்த இடைக்காலத்தில், இங்கு மத இருள் மண்டிக் கிடந்ததுபோலே, அங்கும், — மேலைநாட்டிலும் — மதம் சமுதாய மக்களைச் சிந்திப்பதிலிருந்து தடுத்து, அறியாமைக் கடலில் ஆழ்த்தியது. அந்த இடைக்காலத்தில், வானுறையும் தேவர்பற்றி, பேசுவது, எழுதுவது, பாராட்டப்பட்டது. பொருளியல் பற்றி சித்திப்பதே, குறுகிய நோக்கமாக, சிதைந்த சிந்தனையாகக் கருதப்பட்டது.

'பிரஞ்சுப் புரட்சி' எழுந்து, புதிய தத்துவங்களை உலகத்திற்குத் தந்து, குடிஅரசு தழைக்க ஆரம்பித்த நேரத்தில் வாழ்ந்த, ஆங்கில இலக்கியாசிரியன் ஜான் ரஸ்கின், பொருளியலை 'அஞ்ஞான விளக்கம்' எனக் கேலி பேசினான்.

இந்த இடுக்கித் தாக்குதல்களினிடையே, வளர்ந்த பொருளியல்தான், இன்று உலக நாடுகளின் பிரச்சினைக்கெல்லாம், வழிவகை காண முயல்கிறது.

க. அறிவழகன், எம். ஏ.

டேனியல் டீபோ எழுதிய ''ராபின்சன் குருசோவின் வீரச்செயல்கள்'' என்ற கதை, ஆங்கில இலக்கியமறிந்தவர்கட்கெல்லாம் தெரிந்த கதையாகும். அதன் கதைத் தலைவன், இராபின்சன் குருசோ, ஒரு தீவில் தனியாகச் சிக்கிக்கொள்ளுகிறான். பொன்னும், பொருளும் அந்தத் தீவில் குவிந்து கிடக்கின்றன. பசிக்கும்போது, புசிக்கிறான்! குளிரும்போது, கொன்ற மிருகங்களின் தோலைப் போர்த்திக் கொள்ளுகிறான். ஆடையில்லாமல் அலைந்தால்கூட, அவனைக் காண்பாரில்லை!

அங்கே, ராபின்சன் குருசோவைப் பொறுத்தவரையில், பொருளியல் பிரச்சினை எதுவும் எழவில்லை. அது போன்ற, நாகரிகம் இன்றி அலைந்த, கற்கால மனிதனுக்கும் பொருளாதாரப் பிரச்சினை எதுவும் இல்லை.

மனிதன் எப்போது சமுதாய வாழ்வியல் பிராணியாக மாறினானோ, அப்போதுதான் பொருளியல் பிரச்சினையே எழுந்தது.

சமுதாயம், எவ்வளவுக்கெவ்வளவு வேகமாக முன்னேறுகிறதோ, அவ்வளவுக்கவ்வளவு வேகமாக, பொருளாதாரப் பிரச்சினைகள் வளர்கின்றன. இருபதாம் நூற்றாண்டில், 'பொருளியல்' சம்பந்தப்படாத சமுதாய அரசியல் நிகழ்ச்சிகள் உண்டா, என்று கேட்குமளவுக்கு அதன் முக்கியத்துவம் வளர்ந்துள்ளது.

பொருளியல், இன்றுவரையில், முழு நிறைவு பெற்ற இயலாக, வளர்ந்து விட்டது, என்று கூறமுடியாது. கடந்த காலத்தில் வாழ்ந்த, பொருளியல் அறிஞர்களின் கருத்துக்கள், முடிந்த முடிபுகள் அல்ல. ஒரு பொருளியல் ஆசிரியனின் கருத்துக்கள் அவன் உலவிய சமுதாயம், அவன் கொண்ட வாழ்வியல்

எண்ணங்கள், அவன் வாழ்ந்தகாலம் இவற்றைப் பொறுத்தே அமைகின்றன.

பகுத்தறிவு வாதத்தை முழுக்க முழுக்கக், கைக்கொள்ளும் சமுதாய, வாழ்வியல் ஆராய்ச்சியே, பொருளியல் ஆகும்.

ஆகவே, பொருளியல், சமுதாய விளக்கமாகும். சமுதாயமோ நாளுக்கு நாள் மாறுகிறது. அந்தச்சமுதாய மாற்றத்தோடு, பின்னிப்பின்னி, வளரும் கொடி போன்றதாகும் பொருளியல்.

நம்நாட்டு சங்க காலப் பெரும் புலவர், கிரீஸ் தேசத்துச் சிந்தனையாளர்கள், ரோம் அறிஞர்கள், மத்தியகால மறுமலர்ச்சி ஆசிரியர்கள், அத்தனை பேரும் தங்கள் காலத்துச் சமுதாய முறையை, அடிப்படையாகக் கொண்ட, பொருளியல் கருத்துக்களைச் சொல்லத்தான் செய்திருக்கிறார்கள்.

நம்முடைய (பொருளியல்) பிரச்சினையெல்லாம், கடந்தகால அறிஞர்களின் உயர்ந்த கருத்துக்கள் மாத்திரமல்ல! இன்றைய சமுதாயத்திற்கு, நடைமுறைக்குகந்த கருத்துக்களை, எப்படி உருவாக்குவது என்பதுங்கூட.

பொருளியலுக்குப் பெரும் அறிவுச் செல்வம் தந்தவர்கள், தாங்கள் வாழும் சமுதாயத்தின் மாற்றங்களை உணர்ந்து எழுதியவர்களாகும். நம்மால் பாராட்டப்படுகிற பொருளியல் அறிஞன், எவனை எடுத்துக் கொண்டாலும், அவன், தான் வாழும் சமுதாய மாற்றங்களைஉணர்ந்து, அறிந்து எதிர்கால நிலையைவிளக்கும் திறன் பெற்றவனாக இருப்பதைக் காண்கிறோம்.

அரிஸ்டாட்டில்தான், முதன் முதலில் 'பொருள் மதிப்பு' என்றால் என்ன என்பதை விளக்க முயன்றவனாகும்.

தனி மனிதர்கள், குழுக்களாக மாறி, சமுதாயமாக உருவெடுத்தபோது அவனவன் விருப்பத்திற் கேற்றவாறு பொருள்களை மாற்றிக்கொண்டார்கள். சமுதாயத்தின், தேவைகள் வளரவளர பண்டமாற்றுதல் கொண்டே, தன் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள முடியாத மனிதன், 'பொருள் மதிப்புக்குரிய ஓர் உலோகத்தை' வசதிக்காகப் பயன்படுத்தினான். அதுதான் ''நாணயமாக'' உருவெடுத்தது. அந்த நாணயங்களை—உயர் உலோகங்களைக் கருமித்தனத்தால் சேர்த்துவைப்பதை அரிஸ்டாட்டில் வன்மையாகக்கண்டித்தான்.

உண்மையா ?

சுதந்தரம் - விடுதலை-என்றால், சட்ட சம்பந்தமான சொற்களின் மாற்றம் என்றல்ல வாலிபன் எண்ணுவது. புதிய நிலை-புது அழகு-புது உருவம்-புதிய மகிழ்ச்சி-நாடு புதுக்கோலம் கொள்வது என்றே கருதுகிறான். உண்மையும் அதுதான்.

—அறிஞர் அண்ணா

அரிஸ்டாட்டிலின் ஆசிரியனான பிளாட்டோ, பொருளியற் கருத்துக்களைச் சொல்லியிருந்தபோதிலும், அரசியலுக்கும், இலக்கியத்திற்கும் தந்த அளவுக்கு முக்கியத்துவம் ஒரு சிறிதும் பொருளியலுக்குத் தரவில்லை.

சமுதாயத்தின் உடைமைகள் பொதுவாகவும், அரசாங்கம் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்கிற முறையிலும், அமையவேண்டும், என்ற பொதுவுடைமைத் தத்துவத்தை முதலில் எடுத்துக் கூறியவன் பிளாட்டோ ஆகும்.

இவற்றைவிடத் தெளிவான அறிவு நுட்பம் வாய்ந்த, பொருளியல் கருத்துக்களை வள்ளுவர் மொழிந்துள்ளார். சங்ககால இலக்கியங்கள் பொருளியலின் உயர்கருத்துக்களை எடுத்து இயம்புகின்றன. உலக மக்கள் சமுதாய பொருளியல், கருத்து வளர்ச்சியை எழுதப் போந்த மேலைநாட்டு ஆசிரியர்கள் மறந்தோ தெரியாமலோ அல்லது வேண்டுமென்றே தமிழ் இலக்கியம் தந்த பொருளியல் கருத்துக்களைவிட்டு விட்டனர்.

பொருளியல், கருத்து வளர்ச்சியின் முதன்மையில் வள்ளுவரும், பழங்காலத் தமிழ்ப் புலவர்களும் உலகமறிய இடம்பெறும் காலம் நீண்டதூரத்தில்லை. அவர்களது கருத்துக்கள் புத்துயிர்பெறும் காலம் இனிவரும் காலம்.

பிளாட்டோவினுடைய பொதுவுடமை வாதத்தை அரிஸ்டாட்டில் மறுத்தான். மனிதன் தனக்கென சொத்தைச் சேர்ப்பது ''இயற்கைத் தன்மை'' என வாதிட்டான்.

'ஒரு செருப்புக்கு இரண்டுவித மதிப்பு உண்டு; அதை அணியும் போது ஏற்படும் மதிப்பு. அதை விற்கும்போது ஏற்படும் மதிப்பு.'' என்று ஒரு பொருளின் மதிப்பில் இருவகை கண்டான் அரிஸ்டாட்டில்.

ஆனால், அவன் இறந்து பதினைந்து நூற்றாண்டுகள் வரையில், 'பொருளியல்' வளரவில்லை. மதவாதம் இடைக்காலத்தில் அறிவு வளர்ச்சியைத் தடுத்த போதிலும், ''மக்கள் தேவை'', வாணிபத்தை மிகவும் வளர்ச்சியுறச் செய்தது.

மத்திய காலத்தை, (1500) உலகம் கடந்து கொண்டிருந்தபோது, ''வாணிபக் கொள்கை, உருவெடுத்தது.'' இந்தக் கொள்கை ஏறக்குறைய கி. பி. 1500 முதல் 1800 வரை, ஐரோப்பிய நாடுகளில் நிலவியது.

இதுவரை, நிலவழியே நடந்துவந்த வாணிபம், கடல் மூலம் நடக்க ஆரம்பித்தது. பெரிய நாவாய்கள் கட்டவும், அதைச் சிறந்த மாலுமிகள் ஓட்டவும் ஆரம்பித்தகாலம்! நிலப்பிரபுத்வத்தின் கீழ், விவசாயத்தையே நம்பி நசுங்கிய சமுதாயம், அந்த அடிமைத் தளையிலிருந்து விடுதலைபெறத் துடித்தகாலம். மற்ற தொழில் துறைகள் வளரவும் அதில் புதிய கண்டுபிடிப்புகளை புகுத்தி, உற்பத்தியைப் பெருக்கவும் முயன்ற காலம்! தூங்கிக்கொண்டிருந்த உலக சமுதாயத்தின் தோள்களை, 'அறிவியல்' தட்டியெழுப்ப முயன்றது. அப்போதுதான் ''வாணிபக் கொள்கை'' என்ற பெயரில் வாணிப முதலாளித்துவம் தலைகாட்டத் தொடங்கியது.

அறுபதாம் ஆண்டு வரையில் வைத்தியத்தொழில்செய்த, 'குஸ்னே' என்பான் தன் அந்திய காலத்தில், ஒரு பொருளியல் நூலை எழுதினான். அவனை, முதலாவதாகக் கொண்டு எழுந்த கொள்கைதான், 'இயற்கையின் கட்டளை'க் கொள்கை என்பதாகும்.

''நிலமே உண்மையான செல்வம்; அதன் விளைவே உண்மையான பயன்; அதன் பயனால்தான் வாணிபமும், தொழில்களும் நடைபெறுகின்றன. அரசின் வருமானம் வாணிபத்தினால் அல்ல விவசாயத்தினாலேயே''. என்பதுதான் ''இயற்கையின் கட்டளை''க் கொள்கையாகும். இக்கொள்கை வாணிபக் கொள்கையை, மறுக்க எழுந்ததாகும். இதே கருத்தை வள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே மிகத் தெளிவாக

''உழுவார் உலகத்தார்க் காணி
அஃதாற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து''

என்று முழக்கியுள்ளார்.

மனித சமுதாய சரித்திரத்தில், சிந்தனைக் கருவூலங்கள், புரட்சி எண்ணங்கள் எழுந்த நேரத்தைப் பார்ப்பீர்களானால், சமுதாயத்தில் பெரியதோர் மாற்றம் ஏற்பட்டபோதோ, அல்லது அதற்கு ஒரு சிறிது முன்னே பின்னே முகிழ்த்திருப்பதைக் காணலாம்.

விவசாயத்தையே நம்பியிருந்த சமுதாயம், வாணிப வளர்ச்சி காரணமாக, தொழிற்சாலை மிகுந்த சமுதாயமாக மாறிற்று. வணிகர்கள், கச்சாப் பொருளை, வாங்கி, அதைத் தொழிலாளர்களின் உழைப்பைக் கொண்டு உரு பொருளாக்கி, தாங்களே விற்றனர். ஆகவே வணிகர்கள் முதலாளிகளாயினர். கி.பி. 1700-ம் ஆண்டிலிருந்து இருநூறு ஆண்டுகள் இந்த நிலை இருக்கத்தான் செய்தது.

புதிய விஞ்ஞான பொறியியல் கண்டுபிடிப்புகள் தொழிற்சாலைகளில் புக ஆரம்பித்த இயந்திரப் புரட்சிக் காலத்தில், புதிய முதலாளிகள், சமுதாயத்தில் தோன்றினர். வணிகர்களே முதலாளிகளாக உலவும் முறை பெரிதும் நிலைக்க முடியவில்லை. ஆலைத் தொழிலாளிக்கும், அதன் முதலாளிக்கும் இடையில் புதிய தொடர்புகள் ஏற்பட்டன.

பொருளாதார அமைப்பில் ஏற்பட்ட இந்த மாற்றம் அரசியலில், சட்ட இயலில், சமூக வாழ்வியலில் பெரியதோர் மாற்றத்தை ஏற்படுத்தியது.

‘‘சுதந்தரம்! சமத்துவம்! சகோதரத்துவம்!’’ பிரஞ்சுப் புரட்சியின் முழக்கமே, காரல்மார்க்சின் புதிய தத்துவங்கள் உருவாகிற வரையில், பொருளியலின் அடிப்படைத் தத்துவமாக இருந்தது.

பிரஞ்சுப் புரட்சியின் அரசியல் கொள்கைகளின் ரேகைகள் ஆடம்ஸ் மித்தினுடைய பொருளியல் கோட்பாட்டிலும் படிந்திருப்பதைப் பரக்கக் காணலாம்.

“ஒவ்வொரு மனிதனும், வாழ்வின் உயர்ந்த இன்பத்தைப் பெறுவதற்காக, சுதந்தரத்தோடு வேலைசெய்ய அனுமதியுங்கள்”

‘‘தொழில் துறையில் அரசாங்கம் தலையிடுவது தவறாகும். நீதியை நிலை நிறுத்துவது, ஒழுங்கை வலியுறுத்துவது, நாட்டைப் பாதுகாப்பது, கல்வி போதிப்பது இவைகளில் தவிர மற்றவற்றில் அரசாங்கம் தலையிடக் கூடாது.”

‘‘சுவையுள்ள உணவு நமக்குப் பரிமாறப்படுவதின் காரணம் சமையல்காரனின் பெருநோக்கமல்ல! அவன் நல்ல சம்பளம் பெற நமக்கு நன்கு சமைத்துப் போடுகிறான்’

இவை தான் ஆடம்ஸ்மித்தினுடைய சுதந்தரமான உழைப்பு, பொருள்மாற்றம் ஆகிய சிந்தாந்தங்களின் விளக்கமாகும்.

அறிவுக் கூர்மை உடையவன், வெளியில் குறைந்த விலைக்குக் கிடைப்பதை, வீட்டில் அதிகச் செலவில் செய்ய மாட்டான். இதே கொள்கை ஒரு நாட்டின் செல்வத்தை வளர்க்கவும் பயன்படும்.

வாணிபம், ஒரு நாட்டின் செல்வத்தை வளர்க்கும் வழியல்ல. உற்பத்திதான், உருபொருளைச் செய்வது தான் நாட்டின் உண்மையான செல்வம். ஒரு நாட்டின் மக்கள், வாழ்க்கை வசதிகளையும் தேவைகளையும் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாகப் பெற்றிருக்கின்றனரோ, அவ்வளவுக்கவ்வளவு அந்த நாடு பொருளாதாரத்தில் உயர்ந்ததாகும்.

எந்நாடும் தனது தேவைகளையெல்லாம் தானே பூர்த்திசெய்து கொள்ள முடியாது. ஆகவே ஒவ்வொருநாடும் தன்னால் திறமையாக உருவாக்கக் கூடிய பொருள்களைச்செய்து, மற்ற நாடுகட்கு அனுப்பி, தனது தேவைகளை வெளிநாடுகளிலிருந்து பெற்றுக் கொள்வதே பயன் தருவதாகும்.

உழைப்பு, நிலம், முதல், முதலீடு செய்வோன் திறமை இவை நான்கும் உற்பத்திச் சாதனங்கள் ஆகும். உழைப்புக்குக் கூலி, நிலத்திற்குக் கூலி (குத்தகை), முதலுக்கு வட்டி, முதலீடு செய்வோன் திறமைக்கு லாபம் என்று உற்பத்தியின் பலன் பிரித்துக்கொடுக்கப்படுகிறது. உழைப்பிற்குக் கூலி தரப்படுகிறது. ஆனால் அந்த உழைப்பு, உருபொருள்களையும் உற்பத்தி செய்கிறது. உற்பத்திக்கான கருவிகளையும் செய்கிறது. கட்டாந்தரையாகக் கிடந்த நிலத்தை, விளைநிலமாகவோ, ஆலைக்குவேண்டிய கட்டிடமாகவோ ஆக்கித்தருவது உழைப்பு ஆகும்.

ஆகவே, கரம்பைக் கழனியாக்கியது உழைப்பு. உற்பத்தியையும் செய்து, உற்பத்தி செய்யும்கருவிகளையும்செய்து தந்து ‘‘முதலா’’கிற்று உழைப்பு. ஆகவே, உறுபலன் அத்தனைக்கும் மூல காரணம் உழைப்பேயாகும்.

மேற்கண்ட பொருளியல் கொள்கைகள், ‘‘பொருளியல் பேரறிவுக் காலத்தைச்’’ சேர்ந்த ஆடம்ஸ்மித், ரிக்கார்டோ முதலியவர்கள் உருவாக்கியதாகும்.

உழைப்பே ‘‘முதல்,’’ உழைப்பே ‘‘விலை மதிப்பு’’ என்ற கருத்துக்களை ஆடம்ஸ்மித் எடுத்துக்கூற ரிக்கார்டோ, அதை விளக்கியபோதிலும், அதைவிஞ்ஞான முறையில் விளக்கி நிலைநிறுத்திய பெருமை காரல்மார்க்ஸையே சாரும்.

நிலப்பிரபுத்வத்தின் கீழ், பண்ணையாட்கள் ஆண்டைக்காக பலமணி நேரம் உழைத்தாலும், தங்களுக்காக ஒரு சிலமணி நேரம் உழைக்க அனுமதிக்கப்பட்டனர்.

ஆனால், புதிய முதலாளித்துவமோ தொழிலாளர்களிடமிருந்து எப்படியெல்லாம் உழைப்பை உறிஞ்சலாம் என்பதையே, திட்டமாகக் கொண்டுள்ளது.

புதிய முதலாளித்வம் மக்களை இரு பெரும் பிரிவுகளாக்கிற்று. ஒன்று, உற்பத்திச் சாதனங்களைச் சொந்தமாகக், கொண்டுள்ள முதலாளிகள்; இரண்டு உழைப்புச் சக்தியைத் தவிர வேறு எவற்றையும் சொந்தமாகப் பெறாததால், அந்த உழைப்பை விற்றே வாழ வேண்டிய நிலையிலுள்ள தொழிலாளர்கள்.

வாணிபத்தில், உறு பொருள்கள் (பண்டங்கள்) என்ற பெயரில் உழைப்புச் சக்திகள்’தான் ஒன்றை ஒன்று மாற்றிக் கொள்கின்றன. சமமான உழைப்புச் சக்தியால் உருவான பொருள்களின் பண்டமாற்றுதல்தான் வியாபாரம் என்ற பெயரில் நடைபெறுகின்றன.

மனித சமுதாய சரித்திரத்தைப் பார்த்தால், உழைப்புச் சக்தியானது அது செலவழிக்கும் சக்தியின் பெறுமானத்தைவிட, அதிக பெறுமானம் உடைய பொருள்களை உருவாக்குகிறது என்பது நன்கு தெரியும்.

உலகத்தின் பெரும்பகுதியில் வாழ்கிற மக்கள் தாங்கள் உயிர்வாழ, தங்கள் முழு உழைப்புச் சக்தியையும் செலவழித்து உழைக்கவேண்டும் என்கிற அவசியம் இல்லை.

ஆனால் புதிய முதலாளித்துவம், மக்களில் பெரும்பான்மையரான உழைப்

தமிழர்கள் மாவீரர்கள்

பிறரை எதிர்பார்த்து வாழாதவன் தமிழன்; பிறர்க்குப் புறமுதுகுகாட்டி ஓடாதவன் தமிழன்; முடியுடை வேந்தரின் சந்ததியில் வந்தவன் தமிழன்; பல தூர அயல் நாடுகளோடு சிறப்பாக வாணிபம் நடத்தியவன் தமிழன்; கடல் கடந்தவன் தமிழன்: கடல் கடந்து சென்று பர்மா தேசத்தைக் கைப்பற்றி ஆண்டவன் தமிழன்.

—அறிஞர் அண்ணா

பாளர்களின் முழுச் சக்தியையும் பயன்படுத்துவதன்மூலம், கொழுக்கிறது.

தொழிலாளர்களின் உழைப்பிற்கு ஓரளவு கூலி கொடுத்துவிட்டு, பெரும் பகுதி உழைப்பை, வட்டி, குத்தகை (வாடகை), லாபம் என்ற பெயரில் சுரண்டி, முதலாளித்துவம் நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக வளர்கிறது.

சிறுமீன்களை பெரிய மீன்கள் விழுங்குகின்றன. அதைப்போல் சிறிய முதலாளிகளை பெரிய முதலாளிகள் ஆக்ரமித்துக் கொள்கிறார்கள். இவ்வாறு முதலாளித்துவம் வளர வளர முரண்பட்ட இருவர்க்கங்களின் ஏற்றத்தாழ்வும் வளர்ந்துகொண்டே போகின்றது. தொழிலாளியின் கூட்டுறவு இன்றி முதலாளித்துவம் வாழ முடியாது. மனித சக்தி பெருகப் பெருக, தொழிலாளர்கள் ஒற்றுமை கொண்டு சுரண்டலை எதிர்க்க ஆரம்பிக்கின்றனர். கடைசியில் முதலாளித்துவம் சிறுகச் சிறுக தானே தோண்டிய சவக்குழியில், தன்னைத்தானே புதைத்துக் கொள்கின்ற விசித்திர நிலை ஏற்படுகின்றது.

மேற்கண்ட, காரல்மார்க்ஸின் கொள்கைகளையும் பொருளியல் பேரறிவுக்கால, 'உழைப்பே முதல்' என்ற வாதத்தையும் மறுக்குமுகத்தான் 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் புதிய பொருளியற் கருத்துக்கள் எழுந்தன.

ஒரு பண்டத்தின் மதிப்பை (விலையை) அதை உருவாக்கிய உழைப்பின் சக்தியைக்கொண்டு கணக்கிடுவது தவறு; அதை வாங்கி உபயோகிப்பவனின் தேவை, விருப்பம், அப்பண்டம் விற்குமிடம், காலம் இவைகளைக் கொண்டுதான் விலை நிர்ணயிக்கப்பட வேண்டும்.

ஆழ்கடலில் மூழ்கி மனிதன் முத்தெடுப்பதால், முத்து, விலையுயர்ந்ததாகிவிடவில்லை. முத்து விலையுயர்ந்ததாயிருப்பதால்தான் மனிதன் ஆழ்கடலில் மூழ்குகிறான்.

மனிதன் ஒரு பண்டத்தை வாங்கும்பொழுது அந்தப் பண்டம் தரக்கூடிய திருப்தியை (உபயோகத்தை)க் கணக்கிட்டு, அந்த அளவுதான் 'விலை' தருகிறான். பண்டத்தின் உபயோகத்தின் அடிப்படையில்தான், 'தேவையும் பூர்த்தியும்' அமைகின்றன. அதன்மூலம் 'விலை' நிர்ணயமாகிறது.

இவ்வாறு 'உபயோகிப்பவனை'', அல்லது பயனை நோக்கிப் பண்டத்தை ''வாங்குபவனை'' அடிப்படையாகக் கொண்ட பொருளியல் வாதம், ஒரே நேரத்தில் வெவ்வேறு நாடுகளில் வாழ்ந்த மூன்று அறிஞர்களின் உள்ளத்தில் தோன்றியது! அந்த மூவர், ஆஸ்டிரியாவில் வசித்த ''மெஞ்சர்'', இங்கிலாந்தில் வாழ்ந்த 'ஜீவான்ஸ்'' சுவிஸர்லாந்தில் உறைந்த வால்ரஸ் ஆவர்.

இம்மூன்று பொருளியல் அறிஞரும், வாங்குவோரின் விருப்பத்தைக் கொண்டே பொருளின் மதிப்பு, விலை கணக்கிடப்படுகிறது என்றனர்.

ஆனால், ''வாங்குவோனெல்லாம் வாங்கும் பண்டத்தின் உபயோகத்தை, கணக்கிட்டு, அதற்கேற்ப விலை கொடுக்கின்றானா? கொடுக்கத்தான் முடியுமா?''

'' 'உபயோகம்' என்றால் என்ன? அதை எவ்வாறு கணக்கிடுவது?''

''ஒரு பண்டத்தின் உபயோகத்தை மற்றொரு பண்டத்தின் உபயோகத்தோடு ஒப்பிட்டு விலை நிர்ணயிக்க இயலுமா?''

என்பன போன்ற கேள்விகட்கு. வாங்குவோனைக் கொண்டு பொருள் மதிப்புக் கணக்கிட முயன்ற பொருளியல் வாதத்தை ஆதரிக்கின்ற இன்றைய பேராசிரியர்கள் கூட, சரியான பதில் தேடிக்கொண்டுதான் உள்ளனர்,

பொருளியல் பற்றி, தெளிவான கருத்துச் செறிந்த நூலை, இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பகாலத்தில் தீட்டியவன் ஜான் மார்ஷல் என்ற பேராசிரியனாகும்.

இன்றைய பொருளியல் தத்துவங்கள் சமீபகால உலகப் போர்களும், புரட்சிகளும் தந்த பாடத்தையே அடிப்படையாகக் கொண்டதாகும்.

பேரறிஞர்களிடம், பொருளியல், கற்றுக்கொண்ட பாடத்தைவிட 1930-ம் ஆண்டில் ஏற்பட்ட—பெரிய தோர்—திடீர் விலை இறக்கம் மிகச் சிறந்த பாடத்தைக் கற்றுத்தந்தது.

பொருளியல் தத்துவத்திற்கு, அந்தத் திடீர் விலை இறக்கம், ''குமரிக் கண்டம் கடலில் மூழ்க இமயம் எழுந்தது'' போன்ற ஆச்சரியப் படத்தக்க உண்மைகளைத் தந்தது.

அந்த நிகழ்ச்சி, உலகத்தில் பண்டங்களின் விலை எப்போது இறங்கும், அல்லது ஏறும் என்பதை ஏறக்குறைய பத்தாண்டுகட்கு முன்பே கூறக்கூடிய திறமையை, பொருளியல் நூலுக்குத் தந்தது.

அத்திறமையைப் பயன்படுத்தி, உலகில் நடைபெறப் போகும் பல பொருளாதார நிகழ்ச்சிகளைச் சுட்டிக்காட்டி, சிறப்புப் பெற்றவர் 'ஜான் கெயின்ஸ்' என்னும் பொருளியல் அறிஞராகும்.

வேலையில்லாத் திண்டாட்டம் ஒரு நாட்டில் எப்போது ஏற்படும் என்பதை எடுத்துக்காட்டி, அரசாங்கம் அந்த அவலநிலை ஏற்படாமலிருக்க என்ன செய்யலாம் என்பதையும் 'ஜான் கெயின்ஸ்' விளக்கினார்.

ஒரு நாட்டின் பொருளாதார நிலை தாழ்ச்சியுறுமுன்னே, எடுத்துக்காட்டி, தடுத்து நிறுத்தும் வன்மை பெற்றவனாக, வரும் பொருள் உரைக்கும் அமைச்சனாக, அரசின் இன்றியமையாத ஆலோசகனாக, இன்று பொருளியல் அறிஞன் வளர்ந்து விட்டான்.

தெரிதலும், தேர்ந்தறிதலும், துணிந்து சொல்லும் திண்மையையும் பொருளியல் இன்று பெற்றுவருகிறது.

ஆகவே மனித சமுதாயத்திற்கு பொருளியல் தந்த 'புத்துயிரை' நல்ல முறையில் பயன்படுத்தி, நாடு செழிப்பதற்கான நல்ல காரியங்களை அரசியல் பீடம் ஏறியோர் செய்தாகவேண்டும்.

★

படித்துப் பாதுகாக்க வேண்டிய அரிய நூல்கள்

சொல்லின் செல்வர்
ஈ. வி. கே. சம்பத் எழுதிய
முடிசாய்ந்தது ரூ. 1 4 0

சிந்தனைச் செல்வர்
வி. சிவப்பிரகாசம் பி. ஏ. எழுதிய
முசோலினி ரூ. 0 10 0

தென்னரசு எழுதிய புதிய நாடகம்
அத்தான் ரூ. 1 0 0

கோ. இறைமுடிமணி எழுதிய நாடகம்
மதிவதனன் ரூ. 1 0 0

பேராசிரியர்
தி. வை. சொக்கப்பா, எம். ஏ. எழுதிய
தமிழர் பண்பாடு (அச்சில்)

சொல்லின் செல்வர்
ஈ. வி. கே. சம்பத் எழுதிய
மக்களும் ஆட்சியும் (அச்சில்)

தமிழ்ப்பித்தன் எழுதிய சுவைதரும் காவியம்
மங்காத ஒளி (அச்சில்)

'திரை' நாகராஜன் எழுதிய நாடகம்
வைர நெஞ்சம் (அச்சில்)

★

விபரங்கட்கு :
நீலா நிலையம்
சென்னை - 6

நீரோவின் தாய்

காட்சி : 1

[ரோம் நாட்டு அரண்மனை. நீரோ மன்னன் தாய்—அழகி அக்ரீப்பானு ஏதோ சிந்தித்த வண்ணமாக வருகிருள். அங்கு ஆக்டே—ரோமாபுரியின் நடமாடும் அழகோவியங்களுள் ஒன்று—நீரோமன்னனின் நெஞ்சம் புகுந்த நீள்விழியாள்—ஒரு அடிமையிடம் ஏதோ கட்டளை பணித்துக் கொண்டிருக்கிருள். அவள் தொடைகளை அவன் அமுக்க ஆயத்தமாகிருன். இந்தக் காட்சி அக்ரீப்பானுவுக்கு ஆத்திரத்தைக் கிளப்புகிறது. அவள் அதிகாரத்தை அங்கு அவிழ்த்துவிட ஆசைப்படுகிருள்.]

அக்ரீப்பானு :—(தனக்குள்) அக்ரீப்பானுவின் மருமகள், ஆணவத்தின் திருமகள். ஏ, அதிகாரமே! இப்போது நீ, ஆக்டேவின் மெல்லிய மேனியைத் தடவிக்கொண்டிருக்கிருய்! அக்ரீப்பானுவின் ஸ்பரிசம், உனக்கு அகால மரணத்தை உண்டு பண்ணிவிட்டதா? ரோம் நாட்டு மினுக்கிகளின் ரோமத்திற்கு ரோமம் நஞ்சு கலந்திருப்பதை நீ யறிந்தும், நீரோவின் இரும்புக்கரம் உன் நிதானத்தை நிர்மூலமாக்கி இருக்கிறது. அக்ரீப்பானுவின் அலட்சியம், ஆபத்துக்கு விருந்து வைப்பதுபோல் என்பதை நீயறிவாய். ஆனல், அறிந்து கொள்ளத்தவறியவர்கள் அறிவிழந்த ஆக்டே; நிதானமிழந்த நீரோ! அதையும் தான் பார்த்துவிடுகிறேன்.

[அக்ரீப்பானு, ஆக்டேவை நெருங்குகிருள். ஆக்டே அவளை அலட்சியப் பார்வையில் பார்க்கிருள். அக்ரீப்பானு அடிமையை நோக்கி அழைக்கிருள்.]

ஏடே, லூஷி! இப்படி வா (காலைத் தூக்கிக் காட்டி) பாதத்தில் ஊறல் எடுக்கிறது—பக்குவப் படுத்திச்செல்.

[அடிமை லூஷி விழிக்கிருன். ஆக்டே உறுமுகிருள். அவன் அந்த இடத்தைவிட்டு நகராமல் தன் வேலையைக் கவனிக்கத் தொடங்குகிருன்]

லூஷி! அக்ரீப்பானுவின் குரல் உன் காதுகளை அலறச் செய்யவில்லை? அவள் என்னடா உனக்கு அத்தனை பெரிய எஜமானி? இந்த நாட்டு ஏக போகி அழைக்கிருளடா. அந்த அழைப்பை அலட்சியம் செய்தால், உன் வாழ்வு அஸ்தமனம்! வா இப்படி! வந்து என் பாதத்தை வருடு! இம் ......

[அடிமை மீண்டும் அதிர்ச்சியடைகிருன். ஆக்டே உறுமுகிருள். அக்ரீப்பானுவின் கோபம் இன்னும் அதிகரிக்கிறது.]

அக்ரீப்பானுவின் நாவசைத்தால் இந்த அழகிய ரோம் அசையும்; இந்த அடிமை ஆணவக்காரி ஆக்டேவின் ஆலவட்டக் காரனுக மாறி, என் நாவுக்குக் களங்கம் கற்பிக்கிருன். லூஷி! மரியாதையுடன் வந்து என் கட்டளைக்கு மண்டி இடு! கிளாடியஸ் மன்னன் காலத்திலே என் கிறுக்கேறிய உடலுக்கு முறுக்கேறச் செய்த உன் முழுப்பலத்தின் காரணமாக மீண்டும் சந்தர்ப்பம் தருகிறேன். வா, வா, லூஷியஸ்—வா இப்படி, இம் .... வந்துவிடு.

[அக்ரீப்பானுவின் இந்தப்பேச்சு அடிமைக்குப் போதையூட்டிவிடுகிறது. அவன் மெல்ல ஆக்டேவை அமுக்கும் கரங்களை எடுக்கிருன். ஆக்டே மீண்டும் உறுமுகிருள். இம்முறை, லூஷி ஆக்டேவின் உறுமலுக்கு அடிமையாக மறந்துவிடுகிருன். ஆக்டே கோபத்தின் காரணமாக அவன் கன்னத்தைப் பதம் பார்த்துவிடுகிருள்.]

ஆக்டே :—இம்......! அழுக்கடா அடிமை நாயே! வேரறுந்த மரத்திற்கு வேலையாள் ஒன்றுதான் கேடு. அந்த வெட்டி அழைக்கிருளாம்; இந்தப் பட்டி பதைக்கிருன்.

[ஆக்டேவின் இந்த வார்த்தைகள் அக்ரீப்பானுவின் கோபத்தைத் தூண்டிவிடுகின்றன.]

அக்ரீப்பானு :—விவேகம் கெட்டவளே! விதரணையற்றவளே! வேசைத்தனத்தின் பள்ளிச்சிறுமியே! வேரறுந்தமரமென்றும், வெட்டி மென்றும் யாரையடி சொன்னுய், சூறையாடும் ரோம் நகரின் சூதுக்காரியே! சுக்கு நூருவாய் நான் இப்போது நினைத்தாலும்.

ஆக்டே :—'சூதுக்காரி!' (சிரிக்கிருள்) இரகசியக் கட்டிலறைக்குப் பகிரங்கப் படுக்கையறை பத்தினிப் புராணம் பேசியதாம். அப்படித்தானிருக்கிறது அக்ரீப்பானு உன் அலறல்! என்னை நீ நினைத்து ஏதும் நடவாது. இப்போது நீரோ மன்னன் ஆட்சி. அந்த ஆட்சியின் சட்டங்கள் என் அழகிலேதான் உதயமாகின்றன. நீரோ உன்வயிற்றுப் பிள்ளையாக இருக்கலாம்; ஆனல், என் கயிற்றின் பம்பரம்! என் கண்ஜாடை ஒன்று போதும்; உன் மேல் மண்மேடை எழும்பிவிடும்! போ, அக்ரீப்பானு, போய்விடு. உன் முதுமையடைந்த எண்ணத்திற்கு, இளமைக் கர்வம் இருப்பதாக எண்ணுகிறேன். தனிமையில் சென்று அதற்குத் தக்கபோதனை செய்.

அக்ரீப்பானு :—ஆக்டே! போதுமடி உன் அகங்காரச் சொல்லடுக்கின் அலங்கார ஜாலங்கள். அக்ரீப்பானுவின் அழகிற்குள்ள அந்தஸ்து—செல்வாக்கு அத்தனையும் நீயறியத்தான் போகிருய் பார். அதுவும் கூடிய சீக்கிரத்தில்.

ஆக்டே :—அப்போது ஆக்டேவின் கண்கள் மையிட மறந்துவிடாது என்பதை எச்சரிக்கிறேன். நீ ஒரு ஊசிய பண்டம்; உன் அலங்காரத்தின் உஷ்ணம் படுவதாலேயே, அது உயர்ந்துவிடாது. ரோமர்கள் எந்தக்காலத்திலும் புதுப்பண்டத்தை வரவேற்கத் தயங்கியது கிடையாது, கிழ அக்ரீப்பானு, தயங்கியது கிடையாது!

அக்ரீப்பானு :—அரண்மனையுள் புகுந்ததுமல்லாமல் நாய் அளவுக்கு மீறிகுலைக்கத் தொடங்கிவிட்டது.

[இச்சமயம் நீரோ மன்னன் வந்து விடுகிருன். இருவர்

கோவி. மணிசேகரன்

பேசுவதையும் மறைவில் கவனிக்கிறான்.]

குப்பைத் தொட்டியில் இருந்தவளைக் கோபுரத்தில் கொண்டு வந்து வைத்தானே, அந்தக் குடி கேடனைச் சொல்லவேண்டும்.

ஆக்டே:—காலிலே உதைபடும் கற்கள் இன்று ரோம் நாட்டுக் கலோஸியம் என்று புகழப்படுகின்றன.

அக்ரீப்பானு:—சங்கீதக்காரனின் சகதர்மினியல்லவா, சாமர்த்தியமாகப் பேசுவதாக ஓர் எண்ணம். சாக்கடையில் புரளும், போக்கற்ற சொறிநாய்!

[ஆக்டேவின் கோபம் அக்ரீப்பானுவின் கன்னத்தைப் பதம் பார்த்து விடுகிறது.]

ஆக்டே:—அசுத்தத்தின் ஆரம்பப்பள்ளியே! யாரையடி சொன்னாய் அப்படி? வீதிக்குவீதி வெறிகொண்டலைந்த பச்சை வேசியாம் மெசாலினாவின் பரம்பரைக் காரியே! பதட்டமுடன் யாரையடி சொன்னாய் அப்படி? ஜூலியாவும், லிவியாவும் செய்யாத சூழ்ச்சியின் பிரதிபிம்பமே! கொண்டவனும் டொமிடஸ்—ஒரு மகனைத் தந்தான். பிறகு கிளாடியஸ் கிரீடம் உன்னை வரவேற்றது. வரவேற்றவனுக்கு வையம் நகைக்கப்போகும் நஞ்சாம், நீ தந்த பரிசு! நிமிஷத்திற்கொரு வாலிபனுக்கு நீச்சல் குளமாக அமைந்த வெறி நாயே! யாரையடி சொன்னாய் சொறி நாயென்று?

[ஆக்டேவின் அறையும், பேச்சும் அக்ரீப்பானுவுக்கு ஆத்திரத்தைக் கிளப்பவே, அறையக் கையை நோக்குகிறாள். அப்போது நீரோ பெருத்த சத்தமிட்டு அருகே வருகிறான்.]

நீரோ:—அம்மா! ஆக்டேவை அறையாதே. அது என் கன்னத்தை வீங்கவைத்து விடும். (தாயின் காதருகில்) உன் வாழ்வுக்கும் உலை வைத்து விடும்.

அக்ரீப்பானு:—நீரோ, என்மகனே! நீயாடா இப்படிச் சொல்லுகிறாய்? வானத்தை நோக்கி வயற்காடு இப்படியா வார்த்தை கூறும்?

நீரோ:—குளிர் நீரைக்கொப்பளிக்க வேண்டிய வானம், கொதி நீரை வாரி இறைத்தால்......? (ஆக்டேவை நோக்கி) ஆக்டே! என் அழகுத் திருவுருவே! அம்மா ஏதோ அலட்சியப் பாணியில் அப்படிக் கூறிவிட்டாலும், நீ அதை அளவுக்கு மீறி ஜீரணித்து விடாதே என் ஆசைக்குரியவளே!

அக்ரீப்பானு:—நீரோ! நேற்று வந்தவளுக்காகவாடா உன் நிதானத்தைப் பணயம் வைத்துவிட்டாய்? அக்ரீப்பானுவின் கடந்த கால அத்தியாயங்களைக் கொஞ்சம் புரட்டிப் பாரடா! அங்குத் தெரிவதெல்லாம், டொமிடஸ் நீரோவான வரலாறுகள் தாம்! ஆயிரமாயிரம் ஆக்டேக்கள் கிடைக்கலாம்.... ஒரு அக்ரீப்பானு......

நீரோ:—கிடைப்பதரிது — கிடைத்தாள். அதற்காகக் கிரீடம் என்தலையிலும், அதிகாரம் உன் கையிலும் இருக்க நான் ஆசைப்படவில்லை. என் அருமை அன்னையே! (ஆக்டேவை நோக்கி) அழகின் முதற் காவியமே! அம்மாவுக்குக் கொஞ்சம் பைத்தியம். அதை நீ, அதிகமாக மேற்கொள்ளாதே. இனி ஆட்சியின் அமைப்பு முறையே உன் அதரத்துடிப்பில் தானடி அடங்கியிருக்கிறது, அலங்கார ரூபியே!

அக்ரீப்பானு:—மகனே! தாயை அலட்சியப் படுத்துவது, வாயை ரணமாக்கிக்கொள்ளும் செய்கை. இவள் வடிவத்தில் என்னடா, உலகின் கண்ணுடியையா காண்கிறாய்? அப்படித்தான் அதில் என்ன தெரிகிறது?

நீரோ:—நேரத்தை வீணுக்கும் என் தாயின் கோரத்தின் உருவம் தெரிகிறது. நிலைமையை, மோசத்தின் ஆயுதசாலைக்கு அழைக்கிறாய்! (ஆக்டேவைநோக்கி) கொஞ்சும் அஞ்சுகமே! கொஞ்சம் நாளாகவே அம்மாளுக்குக் கோணல்புத்தி குறுக்கிட்டிருக்கிறது. கோபப்படாதே கோதையர் திலகமே! வா ஆக்டே! மஞ்சம் அழைக்கிறது; மனம் காமகீதம் பாடுகிறது!

[ஆக்டேவை அழைத்துக் கொண்டு நீரோ மஞ்சத்தினருகில் செல்கிறான். அக்ரீப்பானு புருவங்களை நெளித்தவளாய் மிடுக்கிக்கொண்டு செல்கிறாள்]

காட்சி 2.

[ரோம் அரண்மனை. அக்ரீப்பானு அறையினுள் தன்னை அலங்கரித்துக் கொண்டிருக்கிறாள். அப்போது அவள் வாய், 'ஆக்டே, ஆக்டே' என்று முணு முணுத்துக் கொண்டிருக்கிறது. கண்ணுக்கு மையிட்டு ஒருமுறை கண்ணாடியில் பார்த்துக் கொள்கிறாள்.]

அக்ரீப்பானு:-'மையிட மறந்து விடாது'என்று எச்சரிக்கிறாள் மமதைக் காரி! அடி, அற்ப ஆக்டே! நீ இடும் மை நீரோவைத்தான் நிலைமை தடுமாற வைக்கும். ஆனால் நான் இட்ட மை, இடும் மை, இடப்போகிற மை இந்த ரோமாபுரி வாலிபர்களையே மயக்கியது-மயக்குகிறது-மயக்குமென்றால்-மதியற்றவளே, எனக்குமுன் நீ எம்மாத்திரம்? காமக்கலைக் கூடத்தின் பேராசிரியை நான் என்பதை அறிந்தும், பாலபாடத்தின் பள்ளிச் சிறுமி பகட்டுப் பேசுகிறாள்.

[இச்சமயம் அக்ரீப்பானுவின் தோழி பேமியா வருகிறாள்.]

பேமியா:—அரசியார் கோபத்திற்கு ஆளான அந்த அபாக்யவதிதான் யாரோ?

அக்ரீப்பானு:—(ஓயிலாகத்திரும்பி) ஆணவக்காரி, ஆக்டே.

பேமியா:—ஆக்டே ....

அக்ரீப்பானு:—ஆக்டே என்றதும் ஏனடி பேமியா, அத்தனை அதிர்ச்சி கண்டுவிட்டாய்?

பேமியா:—அவள் பெயரைக்கூட, அருகே இருக்கும் அரண்மனைத் தூண்களுக்குக் கேட்குமளவில் சொல்லக் கூடாது என்பது பிரபுவின் உத்தரவு!

அக்ரீப்பானு:—யார்....? நீரோ பிறப்பித்திருக்கிறானா இந்த நீசச் சட்டத்தை? நன்றி கெட்டவன். அது கிடக்கட்டும். அடி, பேமியா! இப்போது நான் எப்படி இருக்கிறேன்?

பேமியா:—(மேலும் கீழுமாகப் பார்த்து) அலங்காரத்தின் ஆசிரியையாகத் திகழ்கின்றீர்!

அக்ப்ரீனா:—அப்படிச் சொல்லடி அருமைத் தோழியே! உனக்குத்தானடி பேமியா, உண்மையிலேயே ஊடுருவிக் கண்கள் அமைந்திருக்கின்றன. நீரோவுக்குமிருக்கிறதே குருட்டுவிழி!

பேமியா:—இதற்கும், பிரபுவுக்கும் என்னம்மா சம்பந்தம்?

அக்ரீப்பானு:—இருக்கிறதடீ, இருக்கிறது. இந்த அலங்காரமே அதற்குத் தானே! இதைப் பிறகு தெரிந்துகொள்ளலாம். என் சிகை அலங்காரம் எப்படியடீ இருக்கிறது உன் சிந்தனைக்கு?

பேமியா:—'பகைவனென்றாலும் அவனைப் பாதத்தில் விழச் செய்வேன்' என்கிறதம்மணி!

அக்ரீப்பானு:—சபாஷடீ, பேமியா, சபாஷ்! எடுத்த எடுப்பிலேயே என் எண்ணத்திற்குத் திலகமிட்டுவிட்டாய். இனி என் காரியம் எளிதில் தன் படுதாவை விரித்துவிடும். அதனுள் நீரோ அகப்பட்டு அல்லல்படுவான்; ஆக்டே வெளியில் நின்றுகொண்டு, பென்னல், கொலம்பின்ஸ், டெய்ஸி மலர்களைத் தூவி சோகப் பண்ணிசைப்பாள். அது அவனின் ஒடிந்த யாழ்ச் சுருதிக்கு ஒத்துவராது. பிறகு...பிறகு...ஹஹ் ஹஹ்ஹா!

பேமியா:—அம்மணீ... உடல் நிலை சரியாகத்தானே இருக்கிறது!

அக்ரீப்பானு:—போடீ......உதவாக் கரையே! உடலுக்கென்ன உலை மாந்தை? உற்சாகத்தின் உயிர்நாடி

ஓடிக்கொண்டிருக்கிறது இப்போது! அதையும் உணராமலே போய்விடப் போகிருய்? இம்... அது சரி, என் நய னங்களும், புருவங்களும் சயன அறை யின் சல்லாபப் பாஷை பேசுகின் றனவா?

பேமியா:—வாலிபர்களை வசியப் படுத்தும் வரலாறே, அரசியார் அக்ரீப் பானுவின் வளைந்த புருவங்களிலிருந்து தானே ஆரம்பமாயிற்று!

அக்ரீப்பானு:—என் கன்னலுடல்—மின்னலிடை—பின்னல் சடை?

பேமியா:—அந்தத் தித்திக்கும் மின் வெட்டிலே, பின்னப்பட்ட எவரும் மீள முடியாது என்பதைக் காட்டுகின்றன தேவி....!

அக்ரீப்பானு:—நீதானடி பேமியா, நிச்சயமாக அழகின் நிகண்டுகளைப் புரட்டிப் பார்த்தவள். பேமியா, இத் தனையும் எதற்கு என்றுதானே எண்ணமிட்டிருக்கிருய்?

பேமியா:—ஆம், அரசி!

அக்ரீப்பானு:—ஆக்டேவை நீரோ தன் அகத்திலிருந்து எடுத்தெறிய...

பேமியா:—அப்படி என்ருல்....?

அக்ரீப்பானு:—அந்தப் பீடத்திலே அக்ரீப்பானு அரசு செலுத்தவேண் டும். பேமியா:—ஆ....!

அக்ரீப்பானு:—ஏண்டி ஆச்சரியம்? ஆக்டே இருக்கும்வரை நமக்கு அதி காரமில்லை; அதிகாரம் இல்லாதவரை வாழ்வும் இல்லை!

பேமியா:—அதற்காக மகனைத்—

அக்ரீப்பானு:—தாய் மருவ வேண் டும்!

பேமியா:—(காதுகளைப் பொத்தி) அருவருக்கத்தக்க விஷயம் அம்மணி! எண்ணினுலே நெஞ்சம் எரிகிறது. தாயை மகன் தாரமாள்வதா? ரோம் சாம்ராஜ்யத்தின் சரித்திரமே புதிய பாடம் போதிக்கிறதே!

அக்ரீப்பானு:—புதிய பாடம்மட்டு மல்ல; புதுமையான பாடமும்கூட பேமியா!

பேமியா:—மன்னர் நீரோ, தன்னை மனிதன் என்று புரிந்துகொண்டிருக் கும் வரை இந்த மட்டரகச்செயலுக்கு உடன்படமாட்டார் தேவி! இது விஷ யத்தில் உம் முயற்சி முக்காடணிந்து கொள்ளும்.

அக்ரீப்பானு:—(உடலைக் குலுக்கி) இம்..! முயற்சிக்க வேண்டாமென்று எண்ணினுலோ, முட்டாளே, நீயும் நானும் கட்டிப்போட்ட கழுதைகள். ஆக்டேவின் அகங்கார அழுக்கு மூட்டைகளைச் சுமக்க நேரிடும். தன் னெதிரே தாயைத் தாறுமாருகப் பேசு கிருளே என்றும் பாராமல், என்னையே ஏளனமாகப் பேசினுனே அந்த ஏதுங் கெட்டவன்! சாதாரண டொமிடஸ் மகனுகக் கிடந்தவனை 'நீரோ' பட்டம் சூட்டி இந்த நீண்ட சாம்ராஜ்யத் தையே ஆளச் செய்தேனே, கிளாடி யஸ் நீரோவைக் கொன்று...கிறுக்கன் இதுவும் பேசுவான்—இன்னமும் பேசு வான். சாம்ராஜ்யங்கள் பலவற்றை என் அங்க நெளிவின் ஒரே அசைவில் சரணுகதியடையச் செய்திருக்கிறே னென்ருல், நான் பார்த்து உலகைத் தெரிந்துகொண்ட நீரோ சாதாரணம். அவன் பேச்சும், மயக்கமும், அவள் ஏச்சும் ஏளனமும் இன்னும் கொஞ்சம் நாட்களில் எந்த நிலைமையடையப் போகின்றன வென்பதைப் பாரடி பாங்கி, பார்!

[அக்ரீப்பானு விரைந்து செல்கி ருள்]

பேமியார்:—அழிவுகாலம் வரும் போது மனிதர்கள் தம் தன்மையி லிருந்து விலகிவிடுகிருர்கள் போலும்!

[அவளும் போகிருள்]

காட்சி 3

[ரோம் அரண்மனைப் பூங்கா. மன் னன் நீரோ யாழ் வாசித்துக் கொண் டிருக்கிருன். அப்போது அவன் ஆசையை ஆட்சி செய்யும் ஆக்டே அன்னநடை போட்டுவருகிருள். அவ ளைக் கண்ட நீரோ இசை போதையி லிருந்து விடுபட்டு இன்பவல்லியை நாடு கிருன்.]

நீரோ:—யார்....! ஆக்டேவா? வந்து விட்டதா என் வண்ணப்பதுமை? ஆஹா! என்ன சௌந்தர்யம்! எத்தனை புது அலங்காரம்? ரோம் சாம்ராஜ்யத் தின் மூலைமுடுக்கு, சந்து பொந்து, ஓரம் ஒதுக்கு அத்தனையுமே அதோ, (அவள் போர்வையைக்காட்டி) அந்த மெல்லிய சல்லாத் துணியில்தான் தெரிகின்றன. காலச் சிற்பியின் கைத்திறனே, கண் மணி, உன் பளிங்கு மேனியில் தான் காட்டியிருக்கிருன். எதிர்பார்த்து, எதிர்பார்த்து நீ வரவில்லையாம்; எனவே என் கண்கள் சோர்வையால் பார்வை தர மறுத்தன. நேரம் செல வாகிறதே! நேர்த்தியின் பசியைப் பூர்த்தி செய்யும் பூங்கொடி எங்கே?'—இது நெஞ்சத்தின் துடிதுடிப்பு! 'வெல் லச் சதையானை வேயாது காயவைக் கும் வீணனே!'—இப்படி எழுப்பு கிறது கேள்வியை என் ஏமாந்த உடல்! இறுதியில் இசையை அவைகளுக்குப் பரிசாகத் தந்துபார்த்தேன். ஊஹூம்! இப்போதைய போதைக்கு ஏற்றவள் ஆக்டேதான் என்றன; எழிலே! இதோ நீயும் வந்துவிட்டாய்!

ஆக்டே:—ஊ(ங்)...?

நீரோ:—ஆ(ங்)...!

ஆக்டே:—பிரபோ! என் கரங்கள் யாழிசைக்க வேண்டுமாம்.

நீரோ:—அந்தத் தங்கக் கரங்களுக் குத் தன்னம்பிக்கை கிடையாதோ?

ஆக்டே:—ஏன் பிரபோ?

நீரோ:—யாழின் உயர்ந்த இசை அங்குதானே பிறக்கிறது, அமுதமே! ஏன், தம் பெருமை தெரியாமல் தாவ வேண்டும் யாழின்மேல்?

[ஆக்டே யாழெடுத்துத் தாறு மாருக வாசிக்கிருள். அதன் நரம்புகள் அறுபட்டு விடுகின் றன. அப்போது அக்ரீப்பானு அங்கு வந்து மறைவில் கவனிக் கிருள்.]

நீரோ:—உண்மையிலேயே தம் பெரு மையை, உணர்த்திவிட்டன உன் கரங் கள்!

ஆக்டே:—கேலி செய்யாதீர் பிரபோ!

நீரோ:—ஆக்டே! என் ஆசைநாயகி! உன் கரங்களின் இனிமைக்கு முன்னே, அந்த நாதமெழுப்பும் பேதையாழ் அறுபட்டுவிட்டது.

ஆக்டே:—பிரபோ! இதோ, நான் சென்று வேறு நரம்புகள் கொண்டு வருகிறேன்.

(போகிருள்)

நீரோ:—வேண்டாம் ஆக்டே! இப் போது அதற்கு அவசரமில்லை.

ஆக்டே:—இதோ வந்துவிட்டேன் பிரபோ!

[ஆக்டே மறைந்ததும், அக்ரீப் பானு ஒயிலாக வருகிருள். அவள் பார்வை, நடை, பாவம் அத்தனையும் மகனை மயக்க முயல்கின்றன.]

நீரோ:—யார்?

அக்ரீப்பானு:—என்னைத் தெரிய வில்லை? தெரிந்தாலும் பழைய கண் கள் கொண்டு பார்க்காதே பருவராஜா! ஆக்டேவைக் கண்ட அதே கண்களால் என்னைப் பார். நான் யார், ஏன் வந் தேன் என்பன நன்ருகத் தெரியும்.

நீரோ:—அம்மா! உனக்கென்ன அறிவு சூன்யமாய் விட்டதா?

அக்ரீப்பானு:—அம்மா என்றழைக் காதே வாலிபனே! அறிவு சூன்யமாக வில்லை. அது இப்போதுதான் ராஜ பாதையில் புதுமை நடை பழகுகிறது!

நீரோ:—அப்படி ஒரு புதுமை இருக் கிறதென்ருல், அது பொசுங்கட்டும். போய்விடம்மா. நீரோ நிதானமிழக்கு முன் உன் நீசத் தனத்தைத் திருத்திக் கொள்.

அக்ரீப்பானு:—இதில் தவறில்லை இளைஞனே! நான் உன் அன்னையென்று

நான் சொல்லித்தானே உனக்குத் தெரியும்?

நீரோ:—விளக்கம் கூற இது வேளை யல்ல. ஆக்டே வந்துவிடுவாள். பிறகு அவமானத்தை விலைக்கு வாங்க நேரிடும். அவள் துச்சத்திற்கு ஆளாகாதே

அக்ரீப்பானா:—திறந்த வீட்டில் புகுந்த நாய், துச்சமாக மதிப்பாளாமே! துரையே! என் மேனியைப் பார், இன்னும் இளமை மெத்தையில் தான் சயனித்திருக்கிறது! அழகுக்கு வயதானாலும் பேசுவது காமக்கதை தான்! வா, நீரோ, வா! வந்து என்னை அணைத்து ஆசைக்குப் புதுப்போதனை செய்! அப்போது தெரியும் அக்ரீப்பானாவின் உடல் ரகசியம். வா, நீரோ...

[அக்ரீப்பானா அருகே நெருங்குகிறாள். நீரோவின் கோபம் அதிகமாகவே ஏதும் பேசாமல் தள்ளிவிட்டுச் சென்றுவிடுகிறான்.]

அக்ரீப்பானா:—முதல்படியில் நான் விழுந்தேன். ஆனால் இரண்டாம், மூன்றாம்படியில் இவன் விழுவது நிச்சயம்

(அவள் போகிறாள்)

காட்சி: 4

[ரோம் நகரின் தைபர் நதிக்கரையில் ஒரு பெரிய விருந்து நடைபெறுகிறது. அன்று நீரோவின் பிறந்த தின விழா. எல்லாப் பிரபுக்களும் விருந்துண்ட வண்ணமாக இருக்கிறார்கள். நடனம் எல்லோரையும் கவர்ந்திருக்கிறது. நீரோமட்டும் யாரையோ எதிர்பார்த்த வண்ணமாக உலவிக்கொண்டிருக்கிறான். அவன் முகம் வினாடிக்குவினாடி வேதனையைச் சுமந்துகொண்டிருக்கிறது. ஒரு பணியாளை அழைக்கிறான்.]

நீரோ:—(மெதுவாக) வால்யூம்னியஸ்! படகுக்காரனிடம் எல்லாவற்றையும் பக்குவமாகத்தானே எடுத்துரைத்திருக்கிறாய்?

வால்யூம்னியஸ்:—பிரபோ! படகைத் தைபர் நதியின் ஆழமான இடத்தில் கவிழ்த்துவிடத் தவறவே மாட்டான். அவன் தலைமேல் அவனுக்கு நம்பிக்கையுண்டு.

நீரோ:—படகில் யார், யார் வர ஏற்பாடு செய்தாய்?

வால்யூர்னியஸ்:—அதிகாரிகள் மனைவிமார் ஐவரோடு, அன்னையார் அக்ரீப்பானாவும்.

நீரோ:—நேரம் கடந்தும், இன்னும் நமக்குச் செய்தி கிடைக்கவில்லையே!

[விருந்து முடிகிறது. எல்லோரும் விடைபெறுகின்றனர். ஆக்டேவும் அங்கு வருகிறாள்.]

ஆக்டே:—பிரபோ! நேரமாகவில்லை?

நீரோ:—நான் பலரை வழியனுப்பிவிட்டு வரவேண்டும் கண்ணே! வால்யூம்னியஸ்! ஆக்டேவை அஜாக்கிரதையில்லாமல் அரண்மனைக்குக் கொண்டுபோ, இதோ வந்துவிடுகிறேன்.

[வால்யூம்னியஸ் ஆக்டேவை அழைத்துச் செல்கிறான்.]

நீரோ:—பெற்றவள், பேணி வளர்த்தவள்—பெரும் சாம்ராஜ்யத்துக்கே மன்னனாக்கியவள்; அதே தாய்-இன்று மகனை மணாளனாக்க மார்க்கம் தேடுகிறாள். இப்பேற்பட்ட மானங்கெட்ட உருவங்களைத் தண்டிக்க எந்த மகன் தான் பாவத்தின் சுமையைச் சுமக்கும் கழுதையாக மாறுவான்?

[படகுக்காரன் ஓடிவருகிறான்.]

படகோட்டி:—பிரபோ! தங்கள் கட்டளைப்படி தைபர் நதி ஐவரைப் பலியாக்கிக்கொண்டது. ஆனால் தங்கள் அன்னைமட்டும் தப்பித்துக்கொண்டு அரண்மனையை நோக்கி ஓடுகிறார்கள்.

நீரோ:—ஆ....! அநியாயக்காரி மாளவில்லை; ஆனால், அப்பாவிகள் ஐவர் பலி! ஏ, சூழ்ச்சியே! நீ ஏன் சமயத்தில் நல்ல காரியத்தை ஜீரணித்து ஏப்பமிடத் தொடங்கி விடுகிறாய்? இதோ, நானே கொலைகாரனாக மாறுகிறேன். அவளிருந்து துன்பத்தை அனுபவிப்பதைக் காட்டிலும், துண்டித்துப் பழியைத் தாங்கிக் கொள்கிறேன்,

[நீரோ விரைந்து செல்கிறான்].

காட்சி: 5

[ரோம் அரண்மனையில் தனி அறை. ஆக்டே ஆடை மாற்றிக் கொண்டிருக்கிறாள். அப்போது அங்கே அக்ரீப்பானா கோபக் கண்களுடன் கையில் கட்டாரியோடு நுழைகிறாள். அக்ரீப்பானாவின் பயங்கரச் சிரிப்பொலி கேட்டு, ஆக்டே திரும்பிப் பார்க்கிறாள்.]

அக்ரீப்பானா:—அடி ஆக்டே! உன் அலங்காரம், அகங்காரம் அனைத்தும் இன்னும் கொஞ்சம் நாழிகைக்குள் அவல கீதம் பாடப் போகின்றன. இதோ, இந்தக் கட்டாரி, அந்தத் திருப்பணிக்காகத்தான் தன் அகண்ட வாயைப் பிளந்துகொண்டிருக்கிறது. அதன் தொங்கிய நாவு உன் ரத்தத்தை ருசிக்க துடித்துக் கொண்டிருக்கிறது.

ஆக்டே:—(பயந்து) நான் என்ன செய்தேனென்று இப்படிப் பழி வாங்கத் திட்டமிட்டிருக்கிறாய்?

அக்ரீப்பானா:—அழகைப் பிடித்துக் கொண்டு ஆட்சி செய்கிறாயே, அந்தக் குற்றத்திற்காகத்தான்! அக்ரீப்பானாவுடன் போட்டியிட அரண்மனையுள் நுழைந்தாயே அந்தக் குற்றத்திற்காகத்தான்! என் அதிகாரப் போதைக்குச் சதிகாரியாக வந்தாயே, அந்தக் குற்றத்திற்காகத்தான்! புரிந்துகொண்டாயோடி, போக்கற்றவளே—பொல்லாங்குக்காரியே! என்ன செய்தேன் என்று என்னிடமே கேட்கிறாய், தைபர் நதி கொக்குகள் தாவியோடும் மீனினத்தைக் கேட்பது போல! நான் என்ன செய்தேன் என்று இப்போது உன்னிடமே கேட்கிறேன். உல்லாசப் படகில் வரும்படி உலுத்தன் நீரோ ஏற்பாடு செய்தான்; அதை ஆழமான இடத்தில் அப்படியே கவிழ்த்துவிட, ஆணவக்காரியே, நீ ஏற்பாடு செய்திருக்கிறாய், அப்படித்தானே?

[உருவிய வாளுடன் நீரோ அங்கு நுழைகிறான், கேட்டுக் கொண்டே]

நீரோ:—அப்படித்தான். அதில் சந்தேகமேயில்லை. அநியாயக்காரி. அக்ரீப்பானா வாழ்வதைவிட, தைபர் நதிக்கு இரையாவது சொர்க்கத்தின் கதவுகள் திறந்தது போலாயிற்றே என்று நான்தான் ஏற்பாடு செய்தேன்.

அக்ரீப்பானா:—நீரோ....'

நீரோ:—ஏன்? நெஞ்சம் வெடிக்கிறதோ? நிதானம் தடுமாறுகிறதோ? நினைவு சுழல்கிறதோ? எங்கே அந்த ஏகபோக ஆணவம்? எங்கே அந்த மயக்கும் மாயஜாலம்? எங்கே அந்த கிழவயதில் தலை தூக்கிய இளமை எண்ணம்?

அக்ரீப்பானா:—எல்லாக் கேள்விகளுக்கும், அதோ நீ வைத்திருக்கும் வாளில் பதில் அடங்கி இருக்குமானால், இதோ இந்தப் பெற்ற வயிற்றுள் முதலில் பாய்ச்சு! பதில்களை இந்த வயிறு ஜீரணித்துக் கொள்ளும்.

நீரோ:—அதற்காகத்தானே ஓடோடி வந்தேன். அந்தக் குறி தவறவே தவறாது.

[நீரோ வாளைப் பாய்ச்சுகிறான் தாயின் வயிற்றுள்]

அக்ரீப்பானா:—(கீழே விழும்போது) நீரோ என்மகனே! மன்னித்துவிடு!

[அவள் உயிர் நீங்குகிறது. நீரோவின் கண்களில் இரண்டு சொட்டு நீர்த் துளிகள் உதிர்கின்றன.]

[கற்பனையல்ல - நடந்தது]

★

நாத்திகன்

இசையமுது

எரிந்து கொண்டிருந்த ஒளி விளக்குகள் அணைந்து போயின. தெரிந்துகொண்டிருந்த உலகம்—இனி அவனுக்குத் தெரியாது. ஆமாம்-அவன் குருடன்.

''சிலந்திவலை''—சிற்றூர்தான்—கல்லக்குடிக்குத் தென் கிழக்கில் இருந்த அந்த ஊரில்தான்...... அவனின் ஏனையசைந்ததும்—ஏறு நடை பயின்றதும்......!

சிங்காரவேலு — தனிப்பறவை. தாய், தந்தையிடம் ஒப்புவித்துப் போக, தந்தையும் சென்ற ஆண்டு தன் தொழிலில் 'அவனை' ஒப்புவித்து மாண்டார். மாரியம்மன் கோயில் பூசாரி-சிங்காரவேலு, பெரும் புள்ளியல்ல. ஆனாலும் அவன் தொழில் அவனுக்குத் தந்திருந்த பெயரும் - மதிப்பும் சிறிது என்று கூறமுடியாது; சுற்றியிருந்த சிற்றூரிலும் அவனை அறிவர்-சமயங்களில் பட்டணத்துப் பக்கங்களில் இருந்துகூட அவனுக்கு அழைப்பு வரும். இத்தனைக்கும் காரணம் 'சிலந்திவலையில்'—சிலை வடிவமாக இருந்த மாரியம்மன்... மக்களிடம் பேசியது இவன் மூலமாகத்தான்...குறிப்பாகக் கூறினால் மாரியம்மனின் இரவல் குரல் என்றே காரியதரிசி என்றே கூறிவிடலாம். மாரியம்மன் இவன்மீது குடி கொண்டிருந்தாள். மாடுபலி கேட்டாலும்-மழலைதேடிக்கு வரம் தந்தாலும் எல்லாம் சிங்காரவேலு மூலமாகத்தான்!

சிங்காரவேலு இல்லையென்றால் அந்தச் சிலையே பேசியிருக்காது என்றுகூடக் கூறலாம்! அப்படிப்பட்ட சிங்காரவேலுதான் இன்று குருடனாக இருந்தான். பிறவிக் குருடனல்ல அவன்...பெற்றிருந்த விழிவிளக்குகள் அணைந்தது இப்போதுதான்.

எரிந்து கொண்டிருந்த அந்த விளக்குகள் அணைந்தா போயிற்று-இல்லை! அணைக்கப்பட்டது!

என்ன ?......ஆமாம் அணைக்கப் பட்டவைதான்! அவனும் அதை ஒப்புக்கொண்டான். ஆனால் ஊரார் எண்ணியதை - உரைத்ததை-எழுந்துள்ள வதந்திகளைத்தான் அவன் நம்ப மறுத்தான்!

மாரியம்மனின் கோபம்-அந்த உலக மாதாவின் கரம்தான் சிங்காரவேலுவின் விழிகளைப் பறித்ததாக ஊரார் கூறினர். ஆனால் அவனோ!

என்ன! மாரியின் கரமா? அந்த மகேஸ்வரியின் கோபமா அவன் கண்களை அவித்தன ?

பூசாரி-சிங்காரவேலுவிற்கு விழி தெரியாது.எந்தச் சிலைகுத் தூதுவனாக-தொண்டனாக இருந்தானோ அந்தச் சிலையா அவனைக் குருடனாக்கியது ? காரணம் ?

தாயா மழலைக்கு நஞ்சு ஊட்டுவாள்? தவறு புரிந்தாலும் தாய்மையா செய்யும் அச்செயலை ? மாரியா பூசாரியின் விழியைப் பறித்தது...?

அவளுக்கு அனுதினமும் கட்டியங்கூறி-காட்சிப் பொருளாக்கி-காணிக்கையும் பெற்றுத்தந்த அவன் விழிகளையா அந்தத் தெய்வம் எடுத்துக்கொண்டது ?

ஆமாம்-ஆமாம்! அந்த மாரிதான் எடுத்துக்கொண்டது. மாபாதகன்! ஏதோ பிழைத்தான்......!

மாபாதம் புரிந்தானா! ஆண்டவனின் சின்னமாக இருந்த அவன், செய்த கூடாத செயல்தான் யாது ? ''அருக்குமங்கையர்'' திருக்கோயிலில் திருப்புகழ் படித்தானா? இல்லை திரிசூலத்தை உதைத்தானா? வெள்ளிக் கவசத்தை விற்றானா? அன்றி வெண்பட்டாடையை எடுத்து மறைத்தானா?...தவறேது செய்தான்-அந்தத் தருக்கன் ?

இதெல்லாம் அல்ல அவன் செய்தது. பேசினான்-பகுத்தறிவு வாதம் பேசினான்.

என்ன ?

ஆமாம்! அவன் நாத்திகன். 'நா'தடித்தவன், நல்ல பூசாரித் தொழிலைப் புரியமாட்டேன் என்று கூறி, புதுமைப் பித்தனாகிப் போனவன்! பொல்லாங்கு பல பேசினான். அதனால்தான் பார்வையைப் பறிகொடுத்தான், மாரியின் பகையைத் தேடிக்கொண்டான்.

ஊராருக்குப் புதிராக இருந்தது. 'யோக்கியமானவன் — தங்கமானவன் ஏதோ அவன் தலைவிதி! இப்படி' யெல்லாம் பேசினான். பேசியதின் பலன் கண்டுவிட்டான்...! இனியாகிலும் அவன்...!" ஊராரில் சிலர் கூறுவது உண்டு இதுபோல்.

அவனோ புன்னகை புரிவான். ஊராருக்குப் பொருள் தெரிந்தால் தானே!

வேண்டும் - வேண்டும்- இன்னும் பாரேன் எவ்வளவு மண்டைக் கொழுப்பு என்றபடி நடப்பர்.

அன்று...,!

'அவன்' குடித்திருந்தான் பொழுது போக்கிற்காக அல்ல, மாரியின் பெயரால்—புனிதத் தன்மையின் நிழலில்!

போலீஸார் என்ன, பூசாரியாயிற்றே என்று விட்டுவிடுகின்றனர்? அவனைக் குற்றக் கூண்டிலேற்றி 'கள்ளச் சாராயம் கடத்தினான் - குடித்திருந்தான்' என்ற குற்றசாட்டைச் சுமத்தி, திருச்சி மத்திய சிறையில் 'ஒருமாத கடுங்காவல்' தண்டனையையும் வாங்கித் தந்தனர்.

சிலந்தி வலையில் - அணைந்து போகும் மாரியம்மன் கோயில்

தோழர் இசையமுது தமிழகத்து எழுத்துலகிற்கு புதிதாகக் குடியேறிவர். என்றாலும் தென்றல் இலக்கியப் போட்டியில் பெருங்கதைப் பிரிவில் முதற்பரிசு பெற்ற இருவரில் ஒருவராகிச் சிறப்பெய்தினர். 'நாத்திகன்' அவரது கற்பனைத் திறனுக்கு இங்கே சான்று பகர்கிறது.

விளக்கைத் தூண்டிட சிங்காரவேலு இல்லை. அவன் விடுதலை பெற்ற பின்னரும் அணைந்துபோன அந்த விளக்குகளை மீண்டும் 'எற்றிட' அவன் தயாரில்லை.

மாற்றம்-அவனு மாறிப் போனுன்? ஒருக்கால் மாரியின்மீது கோபமா? தான் சிறையில் தள்ளப்படுவதைப் பார்த்துக்கொண்டிருந்தும், சிலை யாவே இருந்துவிட்ட 'மாரி' மீது கோபமா?

இல்லை....!

சிறையில் இவன் நுழைந்த நேரம்-இரும்புக் கம்பிகளில் இவன் முகத்தைப் புதைத்துக்கொண்ட நேரத்தில்தான்.....'பெயர் மாற்றப் போர்-அது எங்கள் மானம் காக்கும் போர்' என்றபடி டால்மியாபுரத்தைக் கல்லக்குடியாக்கிடக் களம் அமைத்து அதன் காரணமாக, காளையர் பலர் சிறை புகுந்த நேரம்....!

சிங்காரவேலு சிந்தை நொந்தபடி 'சிலந்திவலை' மாரியம்மனை எண்ணி உருகியபடி ''விடுதலை கிடைத்தால், எங்கே போவது? ஊராரின் முகத்திலே எப்படி விழிப்பது?'' என்றெல்லாம் எண்ணி விழியைக் குளமாக்கிக் கொண்டிருந்தான்.

இரண்டொரு நாள் நகர்ந்தது. காளையர் பட்டாளத்தின் பார்வை இவன் மீது விழுந்தது. கருத்துக்கள் இவன் இதயத்தில் புகுந்தன. கழகத் தோழர்கள் இவன் உள்ளத்தைப் பண்படுத்தினர்! புத்துணர்ச்சி-புது இரத்தம்-இத்தனையும் விரைவில் அவன் உடலில் பாய்ந்தது.

அழுதபடி சிறையுள் புகுந்தவன், சிரித்தபடி சென்றுன். 'போதையோடு வந்தேன். கள்போதையல்ல. நான் குறிப்பிடுவது! என் மனத்தில் இருந்த மயக்க போதையைக் குறிப்பிடுகிறேன். இன்று தெளிந்து விட்டேன். தெளிவடையச் செய்தீர்கள். விரைவிலேயே சிலந்தி வலையில் மன்றம் ஒன்றை நீங்கள் திறந்திட, தங்களை அழைத்திட வருவேன் வணக்கம்'' என்றபடி அவன் விடுதலையடைந்தபோது, விடைபெற்று, சென்ற காட்சியைச் சிறையில் இருந்தவர்கள் யாரும் மறக்க முடியாது. அவன் பேச்சு அத்தனை பேரையும் உணர்ச்சி மயமாக்கியது!

பூசாரியாக சிறைக்குப் போனவன்-புதுமைப் பித்தனுக வெளியில் வந்தால்......சித்து ஆடும் சிங்காரவேலு, சிந்தனைச் சிற்பி சிங்காரவேலுவாகி விட்டான்!

ஊருக்கு இது புதிராக இருந்தது! வந்தவன் மாரி கோயிலுக்குப் போகவில்லை. மன்றம் அமைத்திட முயன்றுன்!

மாரியம்மன் தாலாட்டு மறந்து போனுன்—மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை—எமை மாட்ட நினைக்கும் சிறைச்சாலை'—அவன் வாய் மெல்லிய குரலில் இப்போது இதை முணுமுணுக்கத் தொடங்கியது. செயல் வீரனுக மாறிக் கொண்டிருந்தான்! சிற்றூரிலே சீர்திருத்தக் கருத்துக்களைத் தூவிக் கொண்டிருந்தான். பயனை எதிர் பார்க்காமல்-பயந்து சாகாமல்! எதிர்ப்பைக் கண்டு புன்னகை புரிந்தான் எடுத்த பணியைத் தொடர்ந்து முடிப்பேன்-என்றுன்!

ஊர் மிரண்டது-மிரட்டியது- வியப்பு-வினுவாகி, வினு-வேதனையாகி, வேதனை-வேலாகி, இவனைத் துளைத்திடச் செய்தது!

அன்பாக அழைப்பர்-பின் ஆணையிட்டுப் பார்ப்பர்! பரிதாபக் கண்ணேடு அழைத்து, பழிச்சொல் கூறியனுப்புவர்! அத்தனைக்கும் அவன் புன்னகை புரிந்தான்! மக்கள் மனம் இன்னும் புழுதிமேடாக உள்ளதே என்று தனிமையில் வருந்தி, சந்திக்கும்போது, எண்ணத்தை ஏற்ற முறையில் வெளியிடுவான்!

மூடநம்பிக்கை! பல உருவங்களில், பல வழிகளில், பலவிதமான நிறங்களில் இவனை வந்து தாக்கின!

அவனு! அத்தனையையும் தாங்கிக் கொண்டான். எதையும் தாங்கும் இதயம் உண்டென்றுன். ஊர்க் கட்டுப்பாடு—சாதிப் புறக்கணிப்பு—இவையெல்லாம். செல்லாக் காசாகின அவனிடத்தில்! அவன் குடிசை, ஊருக்குப் புறத்தே. சேரி தாண்டிச் சென்றது. தனிமை! எனக்கு அது இனிமை என்றுன் அவன்!

மாரியின்சித்து அத்தனையும் பித்தலாட்டம்! வேண்டுமானுல் இப்போது கூட அதுபோல் நடிப்பேன்-என்பான். ஆத்திரமடைவர் மக்கள்-நடித்துக்காட்டுவான்! பின் நகைப்பர் மக்கள்! டீ கடையில் தொடங்கி தெரு தோறும் பரவி பலர் உள்ளங்களையே சிங்காரவேலு வசமாக்கிக் கொண்டான்!

அவன் சீர்திருத்தப்பணி பல பாதைகளில் பல துறைகளைப்பற்றி நடக்கும். சுருக்கமாகச் சொன்னுல் சிலந்திவலையில் அவன் ஒரு சாக்ரடீசாகி விட்டான்.

'மாரி கோயிலும்-பாஞ்சாலி கோயிலும் ஒரு காலத்தில் பத்தினி கண்ணகி கோயில்களாக இருந்தவை' என்பான். புரியாது திகைப்பவருக்கு விளக்கவுரை தருவான்!

காயத்திரி ஜபத்திற்கும்-காளி பூஜைக்கும் உள்ள வேற்றுமை கூறுவான்-என் அப்படி என்று

உயர்தரமான தையல் வேலைகளுக்குச் சிறந்த இடம்

★ டிரஸ் ஹவுஸ் ★

வெலிங்டன் டாக்கீஸ் எதிர்புறம்

பெரிய கடை வீதி, - - திருச்சி.

கேட்பான்-விடையையும் அவனே கூறுவான்!

இப்படி இவன் கருத்துரை நிகழ்த்திய நேரத்தில், வியப்பால் வரும் மக்கள்-விழியைச் சிவப்பாக்கிக் கொண்டவர்கள் - அத்தனை பேரும் ''எப்படிக் கற்றுக்கொண்டான் இப்படிப் பேச'' என்று எண்ணுவர்.

''கடவுள் - மதம் - அவசியமற்ற சொல். அவனன்றி ஓரணுவும் அசையாதென்றால் என் மாற்றம் கண்டு என் சீற்றமடைகிறீர்கள்?'' என்பான். சிந்தை குழம்புவர் மக்கள்.

அவனோ, ''போகவேண்டிய பாதை மிக நெடிது! நெடிது! செய்ய வேண்டிய பணியோ மிக அதிகம்'' என்று நினைப்பான். அவன் இதயத்தில் பல கற்பனைகள். எதிர்காலத்தில் சிலந்திவலை எப்படி இருக்கும்-இருக்கவேண்டும் என்பன போன்ற செயல்-கற்பனைகள் தோன்றும்!

அராபியக் கதைகளை அவன் படித்தது கிடையாது. அதைவிட அதிகக் கற்பனைகள் மனதில் உருக் கொண்டன!

சமுதாய சீர்திருத்தம் என்ன, அலாவுதீனின் தீபத்தை வைத்துக் கொண்டு செய்யும் செயலா? கோயில் விளக்கை ஏற்றிக்கொண்டிருந்தவன் உள்ளத்தில் அலாவுதீனின் தீபம் தோன்றியது!

கோயில் விளக்கு இருண்டது—நிரந்தரமாகக் குமுறியது சிலந்திவலை. வரப்போகும் வைகாசியில் விழா நடக்கவேண்டுமே! வேறு பூசாரியாவது கிடைக்க மாட்டானா? வேதனைப் பட்டனர் மக்கள்!

அழைப்பு விடுத்தனர். தேன் சொட்டப் பேசி, பின் தேனீ போலக் கொட்டியும் பார்த்தனர்—பலன்? பூஜ்யம்தான்!

ஊரார் அவனை நாத்திகன் என்றனர்! தமிழ்ச் சொல் அல்ல என்றான் அவன்! ''செய்கின்ற பணி தவறு என்றால், மாரியல்லவா கேட்கவேண்டும்? நீங்கள் என் அலறுகிறீர்கள்'' என்றான் மக்களைப் பார்த்து!

சித்திரை மாதம்-நெல் வயலில் புழுதி பறந்தது! ஊரிலும் 'அம்மை நோய்' வந்தது.

மாரியின் சீற்றம் என்றனர் மக்கள்! அவனோ ''தொத்து நோய்-வேனிற் காலத்தில் வழக்கமாக வரும் தொத்து நோய்-சென்ற ஆண்டு கூட வந்ததே!'' என்றான்!

துடித்தனர் பெரியவர்கள்! இவனோ சுத்தம் தேவையென்றான்.

''அழிந்து போகாதே! அப்படிப் பேசாதே! அணைந்து போகும் கண்கள் - வெந்து போகும் வாய்'' ஊராரின் மிரட்டலும் உருட்டலும் இவை!

அடைத்துக் கிடக்கும் கதவைத் திறந்து வை, அணைந்துபோன



விளக்கை ஏற்றிவை, மணி ஒலிக்கட்டும்! உடுக்கை ஓசை தாட்டும்!—வேண்டுதல் தந்தனர், அதே மக்கள்!

அவனோ! அத்தனையும் மூட நம்பிக்கை-அறியாமை யென்றான்! அப்படிச் செய்யத் தன்னால் முடியாதென்றான்!

நாட்கள் ஓடின! பலர் அம்மை நோயால் பாதிக்கப்பட்டனர்! அவனும் அவர்களில் ஒருவனானான்! ஊராரின் உள்ளத்தில் மகிழ்ச்சி. இனியாகிலும் புத்தி வரும் என்றனர்!

அவனோ, 'இது சர்வ சாதாரணமானது. ஊரே தீப்பற்றி எரியும் போது என் குடிசை மாத்திரம் என்ன எரியாமலா போகும்? நோய் வருகிறது, போகிறது! இதிலென்ன வியப்பு? என்றான்.

இரண்டொரு நாள் ஓடியது. அவன் 'விழிகளை' இழந்தான். பார்வை போயிற்று என்ற சேதி ஊராருக்கு எட்டியது!

பார்த்தாயா, மாரியின் கோபத்தை! இப்போதாகிலும் மன்னிப்புக்கேள்! பாபத்தைப் போக்கிக்கொள் என்றனர்.

அவன் சிரித்தான்!

அவர்கள், 'நாத்திகன் - ஆண்டவனைப் பழித்துப் பேசிய அற்பன் - அதனால்தான் விழியை இழந்தான்' என்றனர்.

'நாத்திகன்-அதனால் விழியை இழந்தான்'-சேதி சுற்று வட்டாரத்தில் பரவியது. பலர் அனுதாபத்தோடு வந்து பார்த்தனர். ஏதேதோ கூறினர். இறுதியில் கடவுள் விளக்கம் தந்தனர்! ஆனால் அவனோ, அத்தனைக்கும் புன்னகையைப் பதிலாக்கினான்!

நான் பேசியதற்காக உங்கள் மாரி கோபம் கொண்டாள் என்றால்—அதற்காக விழியைப் பறித்தாள் என்றால், அதற்காக நான் ஆமையாகிவிட முடியாது! அத்தகைய இழிசெயல் செய்யும் கடவுளை நான் ஏற்றுக்கொள்ள முடியாது—என்றான்!

கடவுள் இல்லையென்றான்—அதனால் கண்கள் அவிந்தன!

மாரியின் கோபம்! பார்வை போய் விட்டது. ஊராரின் தீர்ப்பு இது.

ஆனால் அவனோ!

....

குடிசையின் கதவு மெல்லத் திறந்தது. உள்ளிருந்து தட்டுத் தடுமாறி வெளியில் வந்தான். அடிவானத்தில் தோன்றும் திங்களின் மங்கிய ஒளியில் அவனது வடு நிறைந்த முகம் தெரிந்தது - அதில் அணைந்துபோன விழி விளக்குகளும் இருந்தன. விண்ணை நிமிர்ந்து பார்த்தான். என்ன தெரியும்! பழைய பழக்கம்!

— 86-ம் பக்கம் —

இளைஞர் காங்கிரஸ்

இந்தியத் துணைக்கண்டத்தின் தலைவிதியை நிர்ணயிக்கும் அதிகாரத்தை எப்படியோ பெற்றுவிட்ட இன்றைய ஆளும் கட்சி, தன்னைக் காங்கிரஸ் கட்சி என்று பெயரிட்டு அழைத்துக் கொண்டு வருகிறது. அந்த நாள் முதற்கொண்டு. எந்த நாட்டு எந்தக் கட்சியும் தங்களது இயக்கத்தை அழைத்துக்கொள்ள உரிமைபெற்ற 'காங்கிரஸ்' என்ற அந்தச்சொல்லை, இந்தியத் துணைக் கண்டத்தில் கொலு வீற்றிருக்கும் கூட்டத்தார், தங்களது கட்சியின் பெயராக வைத்துக் கொண்டு விட்டார்கள்.

காங்கிரஸ் - இந்தச் சொல்லுக்கு தேசியக் கட்சி என்று பெயர். இந்தியத் துணைக் கண்டத்தின் காங்கிரஸ் கட்சியை தேசியக்கட்சி என்று சொல்லமுடியாமைக்கு, இந்தியா ஒரு தேசமல்ல-பலநாடுகள்கொண்ட ஒரு சிறு கண்டம் என்று நில நூல் கூறுவதே போதிய சான்றாகும். அசைக்க முடியாத இப்படி ஒரு நில நூல் ஆதாரமிருக்கும்போது, காங்கிரஸ் கடசி எப்படியொரு தேசீயக் கட்சியாக வெற்றி முகத்துடன் இயங்க முடிந்தது? ஏக இந்தியா என்பதின் பேரால்ஏகாதிபத்தியஅடிப்படையில் பலவகைப்பட்ட மொழி,கலாச்சாரம், நாகரிகம் கொண்டோரைச் சேர்த்து வெள்ளையர் அடக்கியாண்ட அநீதியை ஒழிக்க எண்ணி, துவைக்கப்பட்டுத் துன்புற்றோர் அத்தனை பேரும் ஒரு எதிர் முகாம் அமைக்க நேர்ந்தது. ஆங்கிலேயர்களுக்கு எதிர்க்கட்சி என்ற முறையில் அந்த எதிர்க்கட்சிக்கு காங்கிரஸ் என்று பெயரிடப்பட்டது. வெள்ளையரின் அட்டகாசங்கள் ஓரளவு காங்கிரசின் ஒற்றுமைக்குத் துணைபுரிந்தது. இந்தியத் துணைக் கண்டத்தின் அத்தனை மொழியினருக்கும், கலாச்சாரத்தினருக்கும் ஆங்கிலேயர்கள் எதிரியாக இருந்த காரணத்தால், அவர்களுக்குச் சமமாக ஒரு தேசீய மகாசபை தேவைப்பட்டது. அது காங்கிரஸ் - மக்கள் கட்சி! அன்று மக்கள் கட்சியாக இருந்த அந்த மகாசபை இன்று தேடுவாரற்றுக் கிடக்கும்போது, சுவைதட்டிய பழம்பெருச்சாளிகள் மட்டும் அதிலிருந்து கொண்டு, சக்தி வாய்ந்த 'காங்கிரஸ்' என்றசொல்லை சுரைக் கூடாக இருக்கும், தங்களது பலவீனக் கட்சிக்கு பட்டப்பெயராக இட்டழைத்துக் கொள்வது எங்ஙனம் நீதியாகும்? மக்கள் ஊக்குவித்தார்கள்-இன்று அவர்களே அதை எதிர்க்கிறார்கள். அப்படி ஒரு கட்சி தேவையில்லை என்கிறார்கள். கட்சியின் பெயரால் அரசாங்கம் ஏன் என்று கணைதொடுக்கிறார்கள். இத்தனைக்கும், கடைசியிலே ஒரு சிறு கும்பல் தங்களைக் காங்கிரஸ் கட்சி என்று அழைத்துக் கொள்கிறது. சட்டப் புத்தகத்தில் காணப்படும் எழுத்துக்களும் அந்தச் சத்புத்ரர்களின் நெஞ்சு அலைகளின் துளிகளாக இருக்கின்ற காரணத்தால் எலும்புக் கூடுகள்கூட ஏறு நடைபோட முடிகிறது. ஆனால். உண்மையில் அரசியல் நீதிப்படிப் பார்த்தால் இந்தியத் துணைக் கண்டத்தின் காங்கிரஸ் கட்சி கலைக்கப்பட வேண்டிய கட்சியாகும், வெள்ளையரை விரட்டிவிட்டு இந்தியத் துணைக் கண்டத்தை விடுதலை பெற வைப்பதுதான் காங்கிரசின் ஜீவ லட்சியமென்று பறைசாற்றிவிட்டு, வெள்ளையனைத் துரத்தி எட்டாண்டுகளுக்குப் பிறகும்- உழைப்புத் தந்தவர்கள்உதறித் தள்ளிய பிறகும் 'காங்கிரஸ்' என்ற நாமத்தோடு ஒரு கட்சி -அந்தக் கட்சிக்கு எதிர்கால வாரிசாக ஒரு இளைஞர் காங்கிரஸ்-இந்த அரசியல் பித்தலாட்டம் எந்த நாட்டிலும் இல்லை - அதுவும் ஜனநாயக நாட்டில் இருக்கவே முடியாது - கூடாது.

காங்கிரஸ் என்ற சொல், அந்தந்த நாட்டின் நலன்களைக் கவனிக்கும் ஒரு இயக்கம் என்ற பொருளைப் பெறும்போது தென்னாட்டைப் பொறுத்தவரை, இன்று தேபரின் தலைமையிலே பணியாற்றும் காங்கிரஸ்கட்சி, தென்னாட்டுக்குஉண்மையான பொருள் கொண்ட காங்கிரஸ் கட்சி என்று எவரும் சொல்லத் துணியமாட்டார்கள். அவ்வளவு அக்கறை(?) அந்தக் காங்கிரசிற்கு தென்னாட்டின்பால்! அதற்காக இந்தியக் காங்கிரசை நாம் குறைகூறவில்லை- குற்றம் சாட்டவில்லை.,ஏன்?

தென்னரசு

எந்த நாட்டுக் காங்கிரசாக இருந்தாலும, அந்தக் காங்கிரசிற்கு மக்கள நலததிலே நாட்டம் இருக்க வேண்டுமானுல், அந்தக் காங்கிரஸ் அந்தந்தநாடடின மோழியில் பிறந்ததாக,கலாச்சாரத்தில் வளர்ந்ததாக இருக்கவேண்டும். இந்தியக் காங்கிரஸ் அபபடிப்பட்டதுதானு ?

காங்கிரசின் தலைமை நிலையம்:—இமயத்தின் மடியில் !

காங்கிரசின் தலைவர் :—தேபர் - வடநாட்டுக்காரர், நடை, உடை, பாவனை, எல்லாவற்றிலும் நமக்கும் அவருக்கும நேர் விரோதம்.

தேபரை ஆட்டிவைக்கும் நேருப் பண்டிதர்:—அததனை வகையிலும் தேபருடன் உறவுகொண்டவர்.

இப்படிப்பட்ட ஒரு கட்சிக்கு தேன்ஞடடில் ஒருகிளை ஸ்தாபனம்-அதற்கோரு அமைப்பு ! எங்ஙனம் வேறறி பேறுமஃ ஒருவேளை, அந்தக் கடசி எதாகாலததில் அழிந்துபடுமோ என்ற அச்சதநிஞல் அவர்களே இளைஞர் காங்கிரசை பிறப்பித்திருக்கிருர்கள்.

காங்கிரஸ் கட்சிதான் தேன்ஞட்டிற்குத் தேவையில்லாத கட்சி என்பது மட்டுமல்ல; அகில இந்திய ரீதியிலே வளர்ந்துள்ள அத்தனை கட்சிகளும்தேன்ஞட்டில் அதிக நாளைக்கு நீடிகக முடியாத ‘சோறப ஆயு’ளைப் பேற்றவைகள்தான. ஏன்? தேனஞடடின பண்பாட்டுக்கு நேர் விரோதமான வடநாட்டுத் தலைமையின்கீழ் அந்தக் கட்சிகள் இயங்குவதுதான் இதற்குக காரணம. அப்படியாஞல் தேன்ஞட்டில், நாட்டு நலன் கவனிக்க ஒரு தேசியக் கட்சியே இல்லையா ?

இல்லாமலில்லை. இருக்கிறது. மிகப பேரிய அளவுக்கு மக்கள சக்தியைப்பேற்றிருக்கும அந்தக்கட்சி, எவரும் எளிதில பினபற்றத் துணிய முடியாத அறிவு சார்ந்த கோளகைகள சிலவற்றைத் தன்னகததே பேற்றிருக்கிற காரணத்தால்,,சோல்லதிகாரம பேற்றிருக்கிறவர்களால், அதுபயங்கர இயக்கமாகப் படம் பிடித்துக் காட்டப்பட்டு வருகிறது. இந்தநாட்டின் காங்கிரஸ்-இளைஞர் காங்கிரஸ் என்று அந்தக்கட்சி ஒன்றைத்தான் சோல்ல முடியும். நாம் சோல்லும் காங்கிரஸ் கட்சியான திராவிட இயக்கத்திற்கு தேன்ஞட்டின் கலாசசாரம காக்கபபடவேண்டுமேன்பதும், தேன்ஞட்டு மக்களின் தமிழ்மோழி புத்துயிர் பேற வேண்டுமேனபதும், எல்லாம் பேற்றிருக்கும் தேன்ஞடு எவரது துணையுமின்றி சுதந்திரமாக இயங்க வேண்டுமேன்பதும்தான் தலையாய கோள்கைகள். காரணம் அநதக் கட்சியைத் தோற்றுவித்தவரும், கட்டிக் காக்கும் கண்ணியமிக்க ஒலைவர்களும் அதே நாகரிகத்தில், அதே மோழியில், அதே பண்பாட்டில் ஊறிப்போனவர்கள். அவைகளுக்கேசோந்தமானவர்கள். அப்படிப்பட்டவர்களுக்குத்தான் நாட்டு நலன் கவனிக்கும் காங்கிரஸ் கட்சியை அக்கறையுடன் நடத்திச் சேல்ல முடியும். தாய்மோழிக்கு ஆபத்து என்கிறபோது தன் நேஞ்சு வேகும. பண்பாட்டுக்கு இழுக்கு என்ருல் களத்திற்குப் பயணப்படக் கால்கள் துடிக்கும். இன்றைய அகில இந்திய காங்கிரஸ் அப்படியல்லவே! மோழிவழி மாநிலம் பிரிவினைப் போரா ? காங்கிரஸ்காரர்கள் அதில் கலந்துகோள்ளக் கூடாதேன்றல்லவா கட்ட ளை இடும் ! அப்படிப்பட்ட ஒரு கட்சியை தேன்ஞட்டு மக்கள் காங்கிரஸ் கட்சி என்று ஒப்புக்கோள்ள முடியுமா? காங்கிரஸ் என்ற புனிதமிகு சோல்லுக்கு மாசு கற்பிப்பதா? தேன்ஞட்டு மக்கள் ஒருபோதும் அதற்கு ஒப்பமாட்டார்கள். ஆகவேதான் அவர்கள் புதியதோர் இளைஞர் காங்கிரசை தட்டி வளர்த்துக் கட்டிக் காக்கிருர்கள். அந்த இளைஞர் காங்கிரஸ்தான்-அந்த அறிவுப்படைதான்-அந்தச் சேயல் வீரர் கோட்டம்தான் திராவிட முன்னேற்றக் கழகம். இதை எவர் மறுப்பர் ?

★



“பட்டாளச் சக்கரவர்த்தி பார்த்தாலும் உன்சிரிப்புக் கட்டாணிமுத்துக்குக் காலில்விழ மாட்டாரோ !”

—புகைப்படம் : பத்மநாபன், ஓமலூர்.

— 83ம் பக்கத் தொடர்ச்சி —

பெருமூச்சு - பின், புன்னகை! 'நாத்திகன்' இந்தச் சொல் அவன் காதருகில் ஒலித்தது. மாரியின் கோபம்-கண்கள் இழந்தான் மாரியின் கோபமா? அவன் சிரித்தான். சொன்னால் நம்புவார்களா? உலகம் உண்மையை அத்தனை எளிதிலா நம்புப! அவன் உதடுகளில் ஏதேதோ ஒலித்தது.

பெரியம்மை வந்தது உண்மை. அப்போது விழியை இழந்தேன்! இல்லை என்று கூறுகிறேன்.

மாரியின் கோபம்தானே?

இல்லை ...அம்மை நோயால்கூட அல்ல என் விழி போனது.

அப்படி என்றால்......

அன்னத்தின் சீற்றம்-அவளுக்கு நான் இழைத்திருந்த கொடுமை... களங்கம்!

அன்று அம்மை நோயால் பீடிக்கப்பட்டு அவன படுத்திருநதான். விழி மூடியிருந்தது, உறககமில்லை. யாரோ வரும காலடி ஓசை! விழியைத் திறக்குமன் விழியில ஏதோ ஊசி போன்றது ஆழப் பதிந்தது. 'அய்யோ அம்மா' என்று அவன் கதறினான்.

வேண்டும்-மிருகமே என் வாழ்வைப் பறித்தவனே வேண்டும். நீ சாகக் கூடாது துடித்துத் துடித்து வாழவேண்டும்.

.....குரல்-பெண் குரல்....முன்பு எங்கோ கேட்ட குரல்....

'அன்னம்' என்றான். எழுந்து அவளருகில் ஓட முயன்றான். அதற்குள் காலடி ஓசை மறைந்தது. இவனும் தள்ளாடிக் கீழே விழுந்தான்!

மிருகம்! இந்தச் சொல் அவன் செவியருகில் ஒலித்தது.

மிருகம்-ஆமாம், அவன் சென்ற ஆண்டு இதே மாதம்தான் மிருகமாக மாறியது- ஒரு முறைதான் - அதுவே கடைசி முறையும்.

பொன்னம்பலத்தின் மனைவி, அன்னம். புதிதாக மணம் நடைபெற்றது. சிலநாளில் அவளைப் பேய் பிடித்துள்ளதாக பொன்னம்பலம் கூறினான். 'ஆலமரத்துக் கருப்பு' என்று சிங்காரவேலு கண்டு பிடித்தான். அதை ஓட்டிட ஒரு மண்டலம் பூஜை நடத்த முடிவு செய்து பூஜை தொடர்ந்தது!

வழக்கமான முறையில் பூஜை நடந்துவந்த ஒரு நாள்தான்-அவன் அவள் விருப்பமில்லாமல்—அவள் நினைவுடன் இருந்தபோதே எதிர்பாராத முறையில் களங்கப்படுத்தினான்.

வளை ஒடிந்து விழுந்ததை பொன்னம்பலம் பார்த்து புழுங்கி, எத்தனை நாள் இப்படி நடந்ததோ என்று எங்கி வெறி பிடித்தவன் போல அன்று ஓடியவன்தான்—வீட்டில் பின் நுழையவே இல்லை. இவளும் பெற்ற இடத்திலும் தூற்றப்பட்டு—புகுந்த இடத்தில் விரட்டப்பட்டு சுற்றியலைந்து சோகத்தைச் சுமந்து திரியும் நிலை பெற்றாள்.

அன்று-அவள் வாழ்வை இருட்டாக்கிய அவனை-அவள் வாழ்வின் விழிகளைப் பறித்த அவனைப் பழி தீர்த்துக்கொள்ள எண்ணிய அன்னம்தான், அந்தப் பெண்ணணங்குதான்-புலியாக மாறி அவன் விழியைப் பறித்தாள்.

அன்னம் பழி தீர்த்துக்கொண்டாள். பூசாரி சிங்காரவேலுவை அல்ல என்றாலும், சிங்காரவேலு புதுமைப் பித்தன் என்றறிந்தாலும் அவள் ஆத்திரம் எப்படியும் நினைத்ததை நடத்தித்தானிருக்கும். அதைத் தவறு என்றும் கூறமுடியாதே!

ஆனால், அவனோ! அன்னம் என்றறிந்தபோது சென்ற சில நாட்களாக அவளைப்பற்றி நினைத்து, நிகழ்ந்த அந்தக் கொடுமையைக் கண்டு மனம் நொந்து என்றேனும் அன்னத்தைக் காணவேண்டும்—அவளிடம் மன்னிப்புக் கேட்கவேண்டும்-விரும்பினால் அவளுக்கு வாழ்வும் அளிக்க வேண்டும் என்றெல்லாம் நினைத்திருந்தவன் சிங்காரவேலு. அதை எண்ணித்தான் விழியைப் பறித்துவிட்டு அவள் ஓடியபோதும் தொடர்ந்து ஓட முயன்றான்.

அவள் போய்விட்டாள்—அவன் உள்ளத்தை அறியுமுன்னரே போய்விட்டாள்! அவனோ இனி அவன் அடிச்சுவட்டைக்கூடக் காண முடியாது!

பார்வை இழந்தது மாரியின் கோபம் என்பவர்கள், அன்னத்தைப்பற்றி அறிவார்களானால், அன்னத்தின் ஆத்திரம் என்று தெரிந்தால்......?

தெரியச் செய்வது எப்படி? ஏன் தெரியச் செய்யவேண்டும்? சொன்னால் என்ன நம்பவா போகிறார்கள்!

அப்படி என்றால் ஊராரின் பேச்சு......

சொல்லிவிட்டுப் போகட்டும்! என் இதயத்தைத் தகர்க்க முடியாது அவர்கள் சொற்களால்!

காற்றிலே கதவு படபடவென்று அடித்துக் கொண்டது. நிலவு வானத்துக் கீழ்திசையில் - தேய்பிறையாக உயர்ந்திருந்தது. அந்த மங்கிய நிலா ஒளியில் அவன் கீழே குனிந்து பார்த்தான்!

எதைப் பார்க்கிறான் - அன்னத்தின் அடிச்சுவட்டையா? ★

ட்ருமன் சொன்னது!

மாஜி ஜனாதிபதி ஹாரி ட்ருமன், வாஷிங்டன் மாகாணத்து மாஜி கவர்னர் மான் வால்க்ரேன இரண்டுபேருக்கும் மிகுந்த நட்பு. வால்க்ரேன் ஸ்வீடன் நாட்டிலிருந்து வந்து குடியேறிய ஒரு வம்சத்தைச சேர்ந்தவர். தம மாகாணமான வாஷிங்டன், தம் பூர்வீக நாடான ஸ்வீடன் இரண்டையும் பற்றி அவர் எப்போதும் பெருமை அடிததுக்கொள்வார். ட்ருமன் மிஸ்ஸௌரி மாகாணத்தைச் சேர்ந்தவர்.

ஒரு சமயம் ஜனாதிபதியின் வோயிட் ஹவுஸ் மாளிகையில் நடந்த ஒரு விருந்துக்கு வால்க்ரேன் வந்திருந்தார். மற்ற விருந்தாளிகளைப் பார்த்துக் கண்ணடித்தபடி, ட்ருமனை நோக்கி, ''ஜனாதிபதி அவர்களே, எனக்கு ஒரு சந்தேகம்: மிஸ்ஸௌரி மாகாணத்துக்குக்கழுதைகளே கிடைத்திருக்கின்றன; வாஷிங்டன் மாகாணத்துக்கு ஸ்வீடிஷ்காரர்களே கிடைத்திருக்கிறார்கள். இது ஏன்'' என்று கேட்டார்.

ஜனாதிபதி ட்ருமன் உதடு நலுங்காதபடி, 'ஏனென்றால், மிஸ்ஸௌரி முதல் முதலில் தேர்ந்தெடுத்துக்கொண்டு விட்டது'' என்றார்.

— 'காரொனெட்'

மங்கா ஒளி!

★

எண்ணக் கனவின் இனிமையிலே-சுவை
எழிலைக் கூட்டும் பேரழகே!
பண்ணோடு தமிழ்க்கவி பாடிடுங்கால்-உளம்
பவழ இதழ்களில் கூடியதே!
கண்ணின் கருவிழிச் சுழற்சியிலே-புவிக்
கனவின் உருவினை மிழற்றும்நீ
மண்ணோடு மண்ணாய் இணைந்தாயே-என்
மனத்தில் துயரைச் சேர்த்திடவோ?

தீயுள் உடலைத் தழுவிடுங்கால்-தீராத்
துயரென் உள்ளம் தழுவியதே!
காயுள் கனியும் சுவையேபோல்-என்
கருத்துள் கனிந்த காவியமே!
போயுள் எங்கே ஒளிந்திட்டாய்?-புகை
புதைத்த உன்னெழில் உருவந்தோ
தோயும் நினைவுச் சிற்றுளியால்-உளந்
தீட்டும் துயரச் சிற்பங்காண்!

படிக்கும் காவியச் சொற்களிலே-உன்
பண்ணின் இனிமை மின்னலிடும்;
துடிக்கும் எந்தன் உளங்கூட-உன்
தூய காதலின் தாளமிடும்;
கடிக்கும் சுவைமாங் கனியுந்தன்-இளங்
கன்னக் கதுப்பின் நினைவூட்டும்;
வடிக்கும் ஓவிய வரியெல்லாம்-உன்
வடிவ அசைவின் எழில்காட்டும்!

பூரண நிலவின் பொற்கதிரில்-மது
பொங்கும் இளமைப் பேருருவாய்
தாரணி மகிழப் பண்மீட்டும்-ஓடை
தாளம் மீட்டும் இசையொலியாய்ச்
சீரணிக் கனவின் கருத்தெனவே-என்
சிந்தனைக் கவியின் உயிர்த்துடிப்பாய்
பாரில் வாழ்ந்த நீஎங்கே-எனைப்
பிரிந்து சென்றாய்? வாராயோ?

முத்துப் பனித்துளி கண்டதுமே-உன்
முல்லைப் பற்கள் முகிழ்த்திடுமே!
முத்தம் பிரிந்தே வாடியதால்-உளம்
பித்தம் கொண்டே இரவெல்லாம்
சித்தம் குழைந்தே அழுததனால்-அது
புல்லில் பனியாய் படிந்ததுதான்!
முத்தமிழ்ச் சுவையே உன்நினைவே-எனை
மாய்க்கும் அணையாப் பெருநெருப்போ?

இருளைக் கண்டே அஞ்சுகிறேன்-உன்
எழிலே இருளில் மிஞ்சுவதால்!
கரிய கூந்தலைக் காட்டுகிறாய்-சுழல்
காவிய விழிகளை மீட்டுகிறாய்!
கருத்த வானைப் பார்த்திட்டால்-என்
கனவுத் துடிப்பின் தாரகையாய்
விரிந்தே கண்ணைச் சிமிட்டியெங்கோ-எனை
"வா"வென் றழைத்தே மறைகின்றாய்!

தங்கும் ஆழ்கடற் பரப்பினிலே-முத்து
தவழா தியங்கும் தன்மையதாய்
மங்கா ஒளியாய் நின்றென்னை-என்
மனத்தைக் கருக்கும் பொன்வடிவே!
பொங்கும் கண்ணீர்க் கடலினிலே-எழில்
பூணும் காட்சிகள் மடிதல்போல்
பொங்கும் காலம் அழித்திடுமோ-உளம்
புவியி லமைதி பெற்றிடுமோ?

—ரவி.

தொல்லையில் ஒற்றுமை

இல்வாழ்வு நடத்துகிற தலைவனும் தலைவியும் தங்கள் இல்லறத்தை இனிதாக நடத்தும்போது சிற்சில சமயங்களில் சிறுசிறு மனத்தாங்கல்கள் ஏற்படுவது இயல்பு. அந்த நேரத்திலெல்லாம் வீட்டிலே இருக்கிற பெரியவர்கள்தான் அத்தகைய மனத்தாங்கல்களைத் தீர்க்கவேண்டும். ஆணை அணுகி அவனுக்கு அறிவுரை, பெண்ணை அணுகி அவளுக்குப் புத்தி சொல்தல் வீட்டிலுள்ள பெரியவர்களின் கடமை. காதல் மணம் செய்துகொண்டு தனியாக வாழும் தலைவன் தலைவியரிடம் - உற்றாரை வெறுத்துவிட்டு வேற்றூர் நாடிவந்து, அங்கு வாழும் தலைவன் தலைவியரிடையே மனத்தாங்கல் ஏற்பட்டால் அதை எப்படித் தீர்ப்பது? அதுதான் பெரிய பிரச்சனை! அந்தப் பிரச்சனையையும் சுலபமாகத் தீர்க்கலாம் என்பதை நற்றிணை காட்டுகிறது.

ஒரு தலைவி! தன் தலைவனுடன் ஊடல் கொண்டுவிட்டாள். வெளியே சென்ற தலைவன் வீட்டிற்குத் திரும்பி வருகிறான். ஊடல் கொண்ட காரணத்தால் தலைவனிடம் உரையாடாமல் மௌனம் காட்டுகிறாள் தலைவி. வண்ணமயிலின் மௌனம் அவனை வாட்டுகிறது. வகையறியாமல் திண்டாடுகிறான் இளவல்.

வீட்டிலே பெரியவர்கள் இல்லாததை இப்போது உணர்கிறான். சொந்த ஊரிலாவது தோழி இருந்தாள். இங்கே அவளும் இல்லை. இதையெல்லாம் நினைத்துப் பார்க்கும்போது தலைவனுக்கு ஒன்றும் புரியவில்லை. வழியொன்று மறியாமல் உள்ளம் துயர்ப்படுகிறான். அவன் உள்ளம் பலவிதமான எண்ணத்திற்கு இடம் கொடுக்கிறது.

அந்த நேரத்திலே வீட்டிற்கு வந்து சேர்கிறார் ஒரு விருந்தினர். விருந்தினரின் வரவு தலைவனின் வேதனையை ஒழிக்கிறது. விருந்தினரை எவ்வாறு உபசரிக்கவேண்டும் என்பதை அந்தத் தலைவி அறிந்திருந்தாள். முகம் திரிந்து நோக்கினால் விருந்து குழைந்துவிடும் என்பதை அத்தலைவி படித்திருந்தாள். வந்த விருந்தினர்க்குமுன் தங்கள் குடும்பத்தில் உள்ள குழப்பத்தை - மனத்தாங்கலைக் காட்டுவது அநாகரிகம் என்பது அவளுக்குத் தெரியும்.

இதனால், சற்று நேரத்துக்கு முன்பு ஊடல் கொண்டிருந்த அவளது உள்ளம், இப்போது ஊடலை மறந்து உவகை எய்துகிறது. தலைவனுடன் பேசாதிருந்த அந்தத் தையல், தற்போது பேசுகிறாள். உணவு சமைக்க மாட்டேன் என்று சண்டைபிடித்த அந்தச் சேல்விழியாள் சமைத்து உணவிடும் கடமையில் ஈடுபடுகிறாள்.

மோதிரமணிந்த மெல்லியவிரல்! அந்த விரல் வாழையிலையின் அடிக் காம்பை அரிகிறது. அதனால் அவ் விரல் சிவக்கிறது. அவளது கயற் கண்களில் புகைபடுகிறது. அதனால் கண் கலங்குகிறது. பிறைபோன்ற அவளது நெற்றி! அந்த நெற்றியில் பற்றிக் கொள்கின்றன வியர்வைத் துளிகள்! வியர்வைத் துளிகளைத் தன் முந்தானையால் துடைத்துக் கொள்கிறாள் அந்த வனிதை!

வேலையறிந்த அவ்வேல்விழி சமையல் வேலையை விருப்புடன் கவனிக்கிறாள். தலைவன் உள்ளம் உவகைக் கடலில் ஆழ்கிறது. சமையல் முடிந்தது. விருந்தினரும் தலைவனும் உண்பதற்கு அமர்கின்றனர். தலைவி உணவு பரிமாறுகிறாள். சமையல் தொழிலின்போது தனக்கு உடன் இருந்து ஒத்தாசை செய்த தலைவன் மீது அவளுக்கு அன்பு அதிகரிக்கிறது. கோபம் பறக்கிறது. உண்ட பின்னர் விருந்தினர் தம் ஊரை நோக்கிச் செல்கிறார்.

வந்த விருந்தினரை வாழ்த்துகிறான் தலைவன். 'ஆபத்து' சமயத்தில் வந்து உதவிய அவரை வணங்கவும் செய்கிறான் அவன். விருந்தினரைக் கண்டு தன் உளக்கிடக்கையை வெளியில் காட்டிக்கொள்ளாது வீட்டு வேலையில் ஈடுபட்ட தலைவியின் நற்குணத்திற்கு விருந்தினரின் வருகைதான் காரணம் என்பதை அவன் உணர்கிறான். எனவே, நாள்தோறும் விருந்தினர் வந்தால், தன் தலைவி ஊடலே செய்யமாட்டாள், குடும்பத்தில் குழப்பமே இருக்காது, வாழ்க்கை வனப்பாக இருக்கும் என்றெண்ணுகிறான். அதனால் செல்விருந்தோம்பி, வருவிருந்தை எதிர்பார்க்கிறான். 'எங்கள் வீட்டிற்கு நாள்தோறும் விருந்தினர் வருக' என்று சொல்கிறான். வருகிற விருந்தினர்க்கு வரவேற்பு நல்குவதே வாழ்க்கை என்பதை அறிந்தவன் அவன். விருந்தினர் வருகையால் தலைவன் தலைவியரது தொல்லையில் ஒற்றுமை ஏற்படுகிறது. இதனை நற்றிணையில் உள்ள மாங்குடி கிழாரின் பாடல் விளக்குகிறது. அந்தப் பாடல்:

சிறுதாழ் செறிந்த
மெல்விரல் சேர்ப்ப
வாழை ஈர்ந்தடி
வல்லிதின் வகைஇப்
புகையுண்டு அமர்த்த
கண்ணள் தகைபெறப்
பிறைநுதல் பொறிந்த
சிறுநுண் பல்லியர்
அந்துகில் தலையின்
துடையினள் நப்புலத்து
அட்டி லோளே
அம்மா அரிவை;
எமக்கே வருகதில்
விருந்தே; சிவப்புஆன்று
சிறியமுள் எயிறு தோன்ற
முறுவல் கோண்ட முகம்காண்
கம்மே.

நற் : 120

தமிழ்ப்பித்தன்

குழந்தைகட்கு மிகச் சிறந்தது
அண்ணா பிஸ்கட்டுகள்

★

வியாபாரிகட்குத் தகுந்த ஊதியத் துடன் தேவையான பிஸ்கட்டுகள் குறிப்பிட்ட காலத்தில் தயார் செய்து கொடுக்கப்படும்.

★

— விபரங்கட்கு —

அண்ணா பிஸ்கட்டு கம்பெனி,
மெயின் ரோடு,
நாமக்கல்

உரிமையாளர் : **R. கண்ணன்**

கிருஷ்ணா காபி மார்ட்,
கடைவீதி, துறையூர், திருச்சி மாவட்டம்.

அசல் நீலகிரி, உருண்டை, தட்டை காப்பிக் கொட்டைகளை நவீன மின்சார யந்திரங்களில் சுகாதார முறைப்படி வறுத்து அரைத்ததும், சுவை, மணம் மிகுந்ததும் சுறு சுறுப்பைத் தருவதும் எல்லோரும் விரும்பி வாங்குவதும் எமது கிருஷ்ணா காபித்தூள்

நாதன் & கோ,

★

காலண்டர் தயாரிப்பாளர்--திருச்சிராப்பள்ளி

அரசியல் தலைவர்கள்—சினிமா நடிகைகளின்
அழகிய காலண்டர்களுக்கும்
உயர்தர அச்சு வேலைகளுக்கும்
— சிறந்த இடம் —

நாதன் & கம்பனி,

காலண்டர் தயாரிப்பாளர்,
திருச்சிராப்பள்ளி.

★

போன் : 394 தந்தி : காலண்டர்

எங்களிடம் 80, 100 நெ. சேலைகள், வேட்டிகள்
நூதன ரகங்களில் குறைந்த விலையில் கிடைக்கும்.
சாயத்திற்கும் நீள, அகலங்களுக்கும்
உத்திரவாதம்.

★

வியாபாரிகளின் ஆர்டர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும். எங்களுடைய சங்கச் சாயப் பட்டரையில் சென்னை மாகிலக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தாரால் நிர்ணயம் செய்திருக்கும் கூலிக்கு சாயங்கள் தீர்த்துக் கொடுக்கிறோம்.

சாயத்திற்கு உத்திரவாதம்.

★

அரிசிப்பாளையம்
கைத்தறி நெசவாளர் கூட்டுறவு
உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிட்,
S. No. 1162.
முத்துசாமி சாஸ்திரி தெரு,
அரிசிப்பாளையம், சேலம்.

S. No. 581

ஜலகண்டபுரம்
கைத்தறி நெசவாளர் கூட்டுறவு
விற்பனைச் சங்கம் லிமிடெட்,
ஜலகண்டபுரம் (சேலம் ஜில்லா)

★

எங்களிடம் 40, 60, 80 நெ நூல்களில் எங்கள் சங்க அங்கத்தினர்களால் தயார் செய்த 6, 7, 8 கெஜங்களில் கலர் சேலைகள் கலர் உத்திரவாதத் துடன் விலை சரசமாய்க் கிடைக்கும்.

வியாபாரிகளுக்கும் கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கும்
விசேஷ சலுகை உண்டு.

அ. மு. தனக்கோடி செட்டியார்,
தலைவர்

ஜலகண்டபுரம் கைத்தறி நெசவாளர்
கூட்டுறவு விற்பனைச் சங்கம் லிமிடெட்

புதிய ரகங்கள்! குறைந்த விலையில்!

★ பென்னி, மேட்டூர்,
★ கட்டாவ் மில் ரகங்களுக்கு
★ தனிச் சிறப்பு வாய்ந்த இடம்!

பாம்பே சில்க் ஹவுஸ்

செவ்வாய்ப்பேட்டை, சேலம்.

★ நாகரிகத்திற்கேற்ற புதிய தினுசு வாயல் சீட்டி சர்ட்டிங் கோட்டிங், பாவாடைக்கான பார்டர் தினுசுகள், சோலிக்கான ரவிக்கைத் துணிகள், வெல்வெட் எம்ப்ராய்டர் ஆறு கெஜம் வாயல் & சில்க் சேலைகள், ★
ஜப்பான் லேடி ஹாமல்டன் சில்க் ரகங்கள்,
ஆர்கண்டி வாயல், புஷ்கோட் லினன்
★ மற்றும் கைத்தறி வேஷ்டி, சேலை, ★
பெட்ஷீட், உல்லன், துண்டு,
லினன் ரகங்கள் நிறைய
வந்துள்ளன.

ஒரு முறை விஜயம் செய்க!

தங்கம் - வெள்ளி நகைகள்

மோதிரம், மைனர் செயின், கடுக்கன், தோடு, டோலக், வெள்ளி டம்லர், சந்தனக் கும்பா, கேண்டி மற்றும் பட்டை கோலுசு தினுசுகளுக்கு எங்களிடம் விஜயம் செய்யுங்கள்.

◉

A. சோமசுந்தரம்

ஷராப் வியாபாரம்

நே. 360, பெரிய கடை வீதி, — திருச்சி.

◉

குறிப்பு: ஆர்டரின்பேரில் குறித்த காலத்தில் உத்திரவாதத்துடன் நகைகள் செய்து கொடுக்கப்படும்

வாடிக்கைக்காரர்கட்கும் வியாபாரிகட்கும்
எங்கள் மனமார்ந்த

பொங்கல் வாழ்த்து

சுவை, மணம், குணம் நிறைந்தது

"அசோகா தேயிலை"

◉

அசோகா டீ கம்பெனி,

98, பெரிய கம்மாளத் தெரு, திருச்சிராப்பள்ளி.

கிளைகள் :

வேலூர், வட ஆற்காடு, திருக்கோவிலூர்,
தென் ஆற்காடு.

◉

ஸ்டாக்கிஸ்ட் எங்கும் தேவை!

சேமிப்புக்குச் சிறந்த இடம்

லீகல் சிட் பண்டு லிமிடெட்

லால்குடி

[ரிஜிஸ்தர் நெ. 3.]

தினசரி - வார - மாதாந்திர

ஏலச் சீட்டுகள் நடத்தப்படும்

L. P. தங்கவேல்
மானேஜிங் டைரக்டர்

தி ஜவஹர் மில்ஸ், லிமிடெட்,

சேலம் ஜங்ஷன்

தந்தி : ஜவஹர் டெலிபோன் : 44

மானேஜிங் ஏஜெண்ட்ஸ் :
உமையாம்பிகா அண்டு கோ.

அங்கீகரிக்கப் பெற்ற மூலதனம்	ரூ 16,00,000
வெளியிடப் பெற்றதும் செலுத்தப் பெற்றதுமான மூலதனம்	ரூ 9,40,000
காப்புத் திரவியங்கள்	ரூ 6,86,000

மொத்தம் கதிர்கள் ; 33,472

ரெஜிஸ்டர்ட் ட்ரேட் மார்க்: உமையாம்பிகா

20-ம் நெம்பர் நூல் முதல் 80ம் நெம்பர் வரை மிகவும் உயர்ந்த முறையில் தயார் செய்யப் பெறுகிறது.

தொழிலாளர்களுக்கு வேண்டிய குடியிருப்பு வசதியும், ரெஸ்ட் ஷெட்டும், கோவாப்பரேடிவ் ஸ்டோரும், காண்டீனும் வைத்திய உதவியும், தொழிலாளர்கள் குழந்தைகளுக்குப் பராமரிப்பும் போஷணை சாலையும், ஆரம்பப் பள்ளிக்கூடமும் இதர வசதிகளும் கொடுக்கப் பெறுகிறது.

எங்கள் வாடிக்கைக்காரர்கட்கும் மற்றவர்கட்கும் எங்கள் பொங்கல் வாழ்த்துக் கூறுகிறோம்.

★

அ. வே. அருணசலம் செட்டியார் அன் சன்ஸ்

ஜவுளி வியாபாரம்

ஜலகண்டபுரம், சேலம் மாவட்டம்.

★

எங்களிடம் உயர்ந்தரகக் கைத்தறிச்
சேலைகள் 80, 60, 40ம் நம்பர்
நூலில் தயார் செய்தவை
மொத்தமாகவும் சில்லரை
யாகவும் கிடைக்கும்.

Tel : **BULLION** போன் நி. 146

ஸ்தாபிதம் 1928

நாணயமானதும் உத்தரவாதமுமுள்ள எல்லாவிதமான பவுன் நகைகள், கல் பதித்த நகைகள், வெள்ளிச் சாமான்களும் சேலத்தில் கிடைக்கும் இடம்

கும்பகோணம் வெள்ளிப் பாத்திரக்கடை

ஸ்வர்ண மாளிகை

கடை வீதி, :: சேலம்.

மெத்தை, தலையணைகள் (பிர்லா, சிங்கம் ஸ்பைடர்) பனியன்கள் மற்றும் உல்லன் சரக்குகள்.
உங்கள் தேவைக்கு
எங்களிடம் விஜயம் செய்யுங்கள்

உங்கள் மேலான வருகையை எதிர்நோக்கும்

அ. வெ. குமாரசாமி சன்ஸ்,

(A. V. K. Sons)

58. பெரிய கடை வீதி (சவுக்) திருச்சி.

★

குறிப்பு: மொத்தமாக வாங்குவோருக்குச் சலுகை உண்டு.

தந்தி : ராஜா

போன் நிர் 268

வைரம், தங்கம், வெள்ளி நகைகள்

நாணயத்தோடும் நம்பிக்கையோடும்
கிடைக்கும் இடம்

பி. எ. ராஜு செட்டியார் & பிரதர்

சுவர்ணமாளிகை

கோயமுத்தூர்.

ஸ்ரீ ராஜேந்திரா

மில்ஸ் லிமிடெட்,

சேலம்.

★

தபால் பெட்டி : 1.

போன் : 45. தந்தி : ராஜேந்திரா.

★

29,328 கதிர்கள்

★

கைத்தறிகளுக்கும், விசைத்தறிகளுக்கும், ஏற்ற ஒத்தை,
மடக்கு, இரட்டை கோன் ஸ்டேபிள், பைப்பர்
நூல்களையும் தயாரிக்கிறோம்.

ஸ்ரீ மீனுக்ஷி மில்ஸ்

லிமிடெட்

மதுரை & மணப்பாறை.

★

மூலதனம்

அதிகாரம் பெற்றது	ரூ.	60,00,000
கையொப்பமாகி வசூலானது	ரூ.	48,81,240

மொத்தம் கதிர்கள்	66,988
விசைத் தறிகள்	144

16 நெம்பர் முதல் 40 நெம்பர் வரை
கைத்தறிகளுக்கும், இயந்திரத் தறிகளுக்கும்,
பனியன் பாக்டரிகளுக்கும் தேவையான
நூல்களும், மற்றும் மல், லாங்கிளாத்துகளும்
தயாரிக்கப்படுகின்றன.

★

நிருவாக கருத்தர்கள் :

தியாகராஜ செட்டி & கோ.,

திருப்பரங்குன்றம் ரோடு, மதுரை.

தந்தி விலாசம் : 'கருமுத்து' டெலிபோன் நெ. 1,347
தபால்பெட்டி நெ. 1

குறைந்த சார்ஜ்!   சிறந்த போட்டோ !!

ரத்னு ஸ்டுடியோ,

சேலம் ரோட்,   நாமக்கல்.

உரிமையாளர் : R. சுப்பு

போட்டோ, என்லார்ஜ்மெண்டு, சினிமா சிலேடுகள் சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும்.

ரோல்பிலிம் விற்கப்படும்

இங்கு வாங்கும் ரோல் பிலிம் இலவசமாகக் கழுவித்தரப்படும்.

ரத்னு ஸ்டுடியோ,
நாமக்கல், சேலம் மாவட்டம்.

ஸ்ரீ கமலா பற்பொடி

பல்வலி, பல்லில் சீழ் வடிதல், ரத்தம் கசிதல், வாய் துர்காற்றம், பல் கறைதல், எகுரு கரைதல், முதலியவைகளைக் குணப் படுத்தி, பற்களை முத்துப்போல் பிரகாசிக்கச் செய்யும்.

தற்போது எல்லோரும் விரும்புவது
ஸ்ரீ கமலா பற்பொடியே!

★

வியாபாரிகட்குத் தனிச் சலுகை உண்டு.

— தயாரிப்பாளர் —

டாக்டர்
R. R. நாகைய்யர் & பிரதர்
ஆத்தூர் ரோடு, இராசீபுரம் (சேலம் ஜில்லா)

அண்ணு தையல் நிலயம்

பெரிய கடை வீதி
துறையூர்   (திருச்சி மாவட்டம்)

ரெடிமேடு நிலயம்

எங்களிடம் விலை சகாயமாகத் தைத்த எல்லாவித மாதிரிகளும் கிடைக்கும்.

தங்கள் வரவை விரும்பும்
அன்புள்ள,
அ. சித்தி

அழகிரி உணவு விடுதி

நாமக்கல், சேலம் வழி.

★

நாமக்கல்லுக்கு வருகை தரும் அன்பர்கட்கும் நகரிலுள்ளோருக்கும் நல்லுணவு, நாவிற்கு அளிக்க என்றும் விரும்புகிறோம்.

வாடிக்கைக் காரர்கட்கும் மற்ற தோழர்கட்கும் எங்கள் மனமுவந்த பொங்கல் வாழ்த்துக்கள்.

- உரிமையாளர் -

பி. காளியப்பன்,
நாமக்கல், சேலம் மாவட்டம்.

தமிழ்நாட்டின் தலைசிறந்த காதல் காவியம்

ஒப்பற்ற திரை ஓவியமாகத்

தயாராகிறது

ஏ எல் எஸ் புரொடக்ஷன்ஸ்

பெருமையுடன் அளிக்கும்

அம்பிகாபதி

சிவாஜி கணேசன்..... பானுமதி.

கண்ணாம்பா. ராஜசுலோசனா. எம்.கே.ராதா.

நாகையா. நம்பியார். தங்கவேலு.

கிருஷ்ணன். மதுரம்.

மற்றும் பல நட்சத்திரங்கள்...

தயாரிப்பு....
பி.ஆர். பந்துலு.

டைரக்ஷன்....
ப. நீலகண்டன்

பூரண உரிமையாளர்: ராமநாதன் பிக்சர்ஸ்

12. லலிதாபுரம் தெரு, சென்னை 14. H.O. காரைக்குடி.

பிப்ரவரி வெளியீடு!
நாடு காத்த நல்லவன் கதை!
பாடும் தமிழின் பரவசக் கூத்து!
விக்ரம் புரொடக்ஷன்ஸ்
தெனாலிராமன்
நடிகர்கள்:—
சிவாஜி கணேசன். பானுமதி.
N.T.ராமாராவ். ஜமுனா.
நாகையா. பாலசரஸ்வதி.
நம்பியார். சந்தியா.
வசனம்.......
கவிஞர் கண்ணதாசன்.
முருகதாசா.
டைரக்ஷன்......
B.S. ரங்கா.
பூரண உரிமையாளர்....
கோல்டன் பிலிம்ஸ் லிமிடெட் மதராஸ் 17.